வெளியீடு 24-3-2004 Issued 24-3-2004

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, மே 6, 2003–தொகுதி 47–எண் 2

**Tuesday the 6th May, 2003 – Volume 47 – No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

ve Assembly Secretariat, Chennai - 600 009

[Price Rs. 3.00

## 6–5–2003

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. தகவல் கோரல்—** | |
| அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம் | 203-205 |
| **2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| (அ) கோரிக்கை எண் 13 — எரிசக்தித் துறை<br>(ஆ) கோரிக்கை எண் 26 — தொழில் துறை | 205-241 |
| திரு. எச். ராஜா | 205-215 |
| *மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன் | 215-235 |
| (இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு<br>(ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம்<br>(உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன் வளம் | 241-262, 265-357 |
| *மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் | 241,246,328-352,353 |
| மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன் | 243,246,267-268,290-291, 305,317-328 |
| மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன் | 244,246-247, 248-249,250, 251,252-253, 254,255-256, 261,283-284, 285-286,287, 294,296-297, 303,307-317 |

பக்கங்கள்

2. **மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி

திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் 247-257

*திருமதி. எஸ். ராஜம்மாள் 257-262

திரு. ஆர். கிருஷ்ணன் 265-272

*திரு. த. ஆறுமுகம் 272-280

*திரு. டி. மணி 281-290

*திரு. வே. கிருஷ்ணமூர்த்தி 291-298

திரு. ஜெக. வீரபாண்டியன் 299-305

3. **விதி 111-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை**—

*25-4-2003 மற்றும் 29-4-2003* ஆகிய நாட்களில் தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டம் பற்றித் தெரிவித்ததற்குத் திருத்தம் 263

4. **விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை**—

Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல் 264-265

5. **அறிவிப்பு**—

பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம் 306

6. **அரசினர் தீர்மானம்**—

விதி 32-ஐத் தளர்த்தல் 357

7. **பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்**— 358-360

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 23, சுபானு - திருவள்ளுவர் ஆண்டு 2034

## 2003 மே 6, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை *10-00* மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை."

உயர்வு, உறுதியான ஊக்கம் உடையவர்களைத் தேடிக் கண்டுபிடித்து அவர்களிடம் போய்ச் சேரும்.

## 1. தகவல் கோரல்

### அரசு மருத்துவக் கல்லூரி மாணவர்கள் மற்றும் பயிற்சி மருத்துவர்கள் போராட்டம்

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இன்றைக்கு எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. மூன்று மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை, எதுவும் எடுத்துக் கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. *2003-2004* ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களால் *5-5-2003* ஆம் நாளன்று முன்மொழியப்பெற்ற மானியக் கோரிக்கை எண் *13*, எரிசக்தித் துறை, மானியக் கோரிக்கை எண் *26*, தொழில் துறை மற்றும் அவற்றின்மீது முன்மொழியப்பெற்ற வெட்டுத் தீர்மானங்கள் ஆகியவைமீது விவாதமும், வாக்கெடுப்பும். திரு. எச். ராஜா. *(குறுக்கீடுகள்)* இல்லை, இன்றைக்கு எதுவும் எடுத்துக்கொள்ளக் கூடிய நிலைமை இல்லை. *(குறுக்கீடுகள்)* இல்லை, இல்லை. எதுவும் எடுத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இல்லை. மானியக் கோரிக்கைகள்

மூன்று இருக்கின்றன. (குறுக்கீடுகள்) எதுவும் எடுத்துக்கொள்ளக்கூடிய நிலைமையில் இல்லை. திரு எச். ராஜா அவர்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**திரு. சி. ஞானசேகரன்:** Speaker Sir, தயவுசெய்து அமைச்சர் அவர்களைப் பதில் சொல்லச் சொல்லுங்கள். Let the Minister answer this question.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, வேறு எதுவும் எடுத்துக் கொள்வதாக இல்லை. ராஜா பேசுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை. அதேமாதிரி எல்லோரும் சொல்வதும் முக்கியமானதுதான். மணி சொல்வதும் முக்கியமானது; கணேசன் சொல்வதும் முக்கியமானது; பழனிசாமி சொல்வதும் முக்கியமானது. திரு. ராஜா, பேசுங்கள்.

**திரு எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள், வேறு ஏதாவது இது சம்பந்தமாகச் சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். ஒரு சிறிய விளக்கம் ஏதாவது சொல்ல வேண்டுமென்றால் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை. கொஞ்சம் இருங்கள். (குறுக்கீடுகள்) ஞானசேகரன், இதை உங்கள் மகனிடம் சொல்லுங்கள்; மந்திரியிடம் சொல்லாதீர்கள், (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அதிலே என்ன நிலைமை என்பதையாவது இப்போது விளக்கிவிட்டார் என்றால், அதுகூடப் போதுமானதாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, அதை மட்டும் அமைச்சர் அவர்கள் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போராட்டத்திலே ஈடுபட்டிருக்கிற மருத்துவப் பயிற்சி மாணவர்கள், பட்ட மேற்படிப்பு மாணவர்கள் சட்டத்திற்குப் புறம்பாகச் சாலைகளிலே அமர்ந்து போக்குவரத்திற்கு இடைஞ்சல் செய்த காரணத்தினாலே, காவல் துறையினரால் அவர்கள் அப்புறப்படுத்தப்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226056
சென்னை-600 008





பட்டார்கள். நேற்றையதினம் அவர்களை, இராஜரத்தினம் ஸ்டேடியத்திற்குக் கொண்டு சென்று, அவர்களைக் கலைந்து செல்லுமாறு சொல்லியும், அவர்கள் எங்களைக் கைதுதான் செய்தாக வேண்டும் என்று வற்புறுத்தி, கலைய மறுத்துவிட்டார்கள். எனவே, இரவு 12 மணிக்கு மேல் அவர்களைக் கைது செய்ய வேண்டிய கட்டாயம் காவல் துறைக்கு ஏற்பட்டுவிட்டது. அவர்கள் அன்று இரவே Magistrate முன்னாலே ஆஜர்படுத்தப்பட்டு, Magistrate அவர்கள், அவர்களிடம், நீங்கள் உங்களுடைய சொந்த ஜாமீனில் போகலாம் என்று சொல்லி, அதை மாணவர்கள் ஏற்றுக்கொண்டு, அவர்கள் போய்விட்டார்கள். இதுதான் இப்போது இருக்கிற நிலைமை. அதற்கு மேலே இப்போது எந்தப் பிரச்சினையும் இல்லை.

## 2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை

### (ஆ) கோரிக்கை எண் 20—தொழில் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர், போதும், திரு. ராஜா, பேசுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிசக்தி மற்றும் தொழில் துறையினுடைய மானியக் கோரிக்கையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு அனுமதி அளித்த பேரவைத் தலைவருக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா, பேசுங்கள் (குறுக்கீடுகள்) நான் அனுமதிக்கவில்லை. அதற்கு மேலே அனுமதிக்கவில்லை, அவர் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டார். கேட்டதற்கு, என்ன நிலைமை இருக்கிறது என்பதற்கு விளக்கம் சொல்லிவிட்டார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, open the hostel atleast.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....

D
V211,31'P03
P03.47.2.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் வேண்டுமென்று விடுதிகளை மூடவில்லை. இப்போதுகூட, மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு வந்தால் விடுதியைத் திறப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். எனவே, போராடுகிற மாணவர்களுக்காக நாங்கள் விடுதி நடத்த முடியாது. படிக்கிற மாணவர்களுக்காகத்தான் நாங்கள் விடுதி நடத்த முடியும். எனவே, இப்போதுகூட நீங்களெல்லாம் மாணவர்களுக்கு அறிவுரை சொல்லுங்கள். போராட்டத்தைக் கைவிட்டுவிட்டு அவர்கள் வருவார்களேயானால், அவர்களுக்கு எல்லா வசதிகளையும் செய்து கொடுப்பதற்கு நாங்கள் தாயாராக இருக்கிறோம். ஆனால் போராட்டத்திலே இருப்போம், எங்களுக்கு விடுதிகளை நீங்கள் திறக்க வேண்டுமென்று வற்புறுத்தினால், இந்த அரசை நிச்சயமாக நிர்பந்தப்படுத்த முடியாது.

(முற்பகல 10-05

**திரு. ஜி.கே. மணி:** தலைவர் அவர்களே ....

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே ....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், இதிலே விவாதம் எல்லாம் கிடையாது. (குறுக்கீடுகள்) ராஜா பேசுங்கள், (குறுக்கீடுகள்) விவாதம் எதற்கும் நான் அனுமதிக்கவில்லை.

**திரு. எச். ராஜா:** எரிசக்தி நாட்டினுடைய .... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா, நீங்கள் பேசுங்கள். வேறு யாரையும் நான் பேச அனுதிக்கவில்லை. ராஜா பேசுங்கள்.

**திரு எச். ராஜா:** எரிசக்தியானது நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்கு மிகவும் முக்கியமானதொரு விஷயமாகும். மின்சாரப் பற்றாக்குறை பொருளாதார முன்னேற்றத்தைப் பாதிக்கின்றது. இன்றைக்கும்கூட, பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் சுயநிதித் திட்டத்தின் மூலம் மின் இணைப்பிற்குப் பணம் கட்டிய பின்பும் மின் இணைப்பிற்காகக் காத்துக்கொண்டிருக்கின்ற நிலையைப் பார்க்க முடிகிறது. கடந்த 54 ஆண்டுகளில், 1 இலட்சத்து 77 மெகாவாட் மின் உற்பத்தி என்கின்ற நிலையை நாம் எட்டியிருக்கிறோம். ஆனால், இன்றைக்கும்கூட, 80 ஆயிரம் கிராமங்களுக்கு மின் இணைப்பு, தேசிய அளவிலே, தரப்படவில்லை.



வீடுகளுக்கு மின் இணைப்பைப் பொறுத்தவரையில், கிராமப் பகுதிக்கு 31%-- நகர்ப்பகுதிக்கு 45%-- வீடுகளுக்குத்தான் மின் இணைப்பானது தரப்பட்டிருக்கிறது. எனவே, மத்திய அரசு 2007-க்குள் அனைத்து கிராமங்களுக்கும், 2012-க்குள் அனைத்து வீடுகளுக்கும் மின் இணைப்பு கொடுக்க வேண்டுமென்கின்ற குறிக்கோளுடன் செயல்பட்டு வருகிறது. ஆனால், இதற்காக, மேலும் ஒரு இலட்சம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. அதாவது, 50 ஆண்டுகளிலே, நாம் எட்டிய இலக்கை வருகின்ற 10 ஆண்டுகளுக்குள்ளாக நாம் எட்டவேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவேதான், மின் துறை சீர்திருத்தமானது மேற்கொள்ளப்பட்டது. 2001 மார்ச் மாதம் 3 ஆம் தேதி நடந்த முதலமைச்சர்கள் மற்றும் மின் துறை அமைச்சர்களுடைய மாநாட்டிலே ஒரு முக்கியமான தீர்மானமானது போடப்பட்டது. It was agreed that there is an urgent need to depoliticise the power sector reforms and speed up their implementation என்ற தீர்மானம் போடப்பட்டது. அதாவது மின் துறையிலே கொண்டு வருகின்ற சீர்திருத்தத்தை அரசியல் ஆக்காமல் இருக்க வேண்டுமென்று முதலமைச்சர்கள் மற்றும் மின் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே முடிவு செய்யப்பட்டது. ஆனால், நேற்றையதினம் பேசிய மாண்புமிகு மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் மத்திய அரசாங்கத்தை குற்றஞ்சாட்டிப் பேசியிருக்கிறார்கள். மார்க்சிஸ்டுகளைப் பொறுத்தவரையில் எப்பொழுதுமே உற்பத்தியைப் பற்றிக் கவலைப்படாமல் டிஸ்ட்ரிபியூஷனைப் பற்றி மட்டுமே பேசுகின்ற சித்தாந்தத்தை அவர்கள் கையாண்டுக் கொண்டு இருப்பவர்கள். ஆகவே, அதைப் பற்றி நமக்குக் கவலைப்படுவதற்கு ஒன்றுமில்லை ...

**திரு. கே.சி. கருணாகரன்:** தலைவர் அவர்களே...

**திரு. எச். ராஜா:** மின் துறை சீர்திருத்தத்தின் மூலம் (குறுக்கீடு) I am not yielding. (குறுக்கீடு) நேற்று அவர் குற்றஞ்சாட்டும்போது நான் ஒன்றும் குறுக்கிடவில்லை (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, திரு. ராஜா பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு)

**திரு. எச். ராஜா:** I am not yielding, Sir. Hon. Speaker Sir, I am not yielding. I did not intervene yesterday. (குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ராஜா பேசி முடிக்கட்டும். நேற்று ஹேமச்சந்திரன் பேசும்போது அவர் குறுக்கிடவில்லை. எனவே, அவர் பேசும்போது குறுக்கிடாதீர்கள்.

**திரு. கே.சி. கருணாகரன்:** அவர் குற்றச்சாட்டு என்று சொல்கிறார்.

**திரு. எச். ராஜா:** மின் துறை சீர்திருத்தத்தின் மூலம் வெளிநாட்டு கம்பெனிகளுக்கும், பெரும் பொருளாதார முதலாளிகளுக்கும் சாதகமான முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள். இது உண்மைக்குப் புறம்பான ஒன்றாகும். ஏனென்றால், வருகின்ற 10 ஆண்டுகளில் நமக்கு கெபாசிட்டி அடிஷன் 1 இலட்சத்து 7 ஆயிரத்து 70 மெகாவாட் தேவையாக இருக்கிறது. அதில் மத்திய அரசாங்கத்தினுடைய பங்கு 65 ஆயிரத்து 270 மெகாவாட். அதாவது 60.9 சதவிகிதம். மாநில அரசினுடைய பங்கு 18,900 மெகாவாட். அதாவது 17.7%. தனியார் துறையினுடையது, இந்தியத் தனியார் பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் captive power—Captive power-கான Capacity-யே 20 ஆயிரம் மெகாவாட் இருக்கிறது—இவை அனைத்தும் சேர்ந்து 22,900 மெகாவாட். அதாவது, இந்த மின்சார சீர்திருத்தத்தின் மூலமாக தனியாருக்காக நாம் இதிலே பங்களிப்பதற்கு இடமளித்ததிலிருந்து தனியாருடைய பங்கு 21.4%-ஆக 2012-லே இருக்கும். எனவே, இதில் பன்னாட்டு கம்பெனிகளுக்கும், பெரும் முதலாளிகளுக்கும் விட்டுக்கொடுப்பதாகக் குற்றம் சாட்டியதிலே எந்தவிதமான உண்மையும் இல்லை.

அதேபோல மின்மாற்றம்—டிரான்ஸ்மிஷன் மற்றும் மின் விநியோகத்திற்கும் தனியாருக்கு பங்களிப்பிற்காக, 2001 எலெக்ட்ரிசிட்டி பில்லிலே வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது. அதிலேகூடத் தனியாருக்கு அதிகமாக முக்கியத்துவம் தரப்படவில்லை. ஏனென்றால், மின் மாற்றத்திற்காக வரும் 10 ஆண்டுகளில் 1 இலட்சத்து 40 ஆயிரம் கோடி ரூபாய் மூலதனம் தேவை. அதிலே Central Sector Transmission System-க்கு 70 ஆயிரம் கோடி, Power grid-க்கு 41 ஆயிரம் கோடி; Private sector 29 ஆயிரம் கோடிதான். எனவே, எந்தவிதத்திலும் மின்சாரத்திலே தனியார் பங்களிப்பிலே பன்னாட்டு கம்பெனிக்கோ, பெரும் முதலாளிகளுக்கோ பெரிய அளவிலே பங்கு தரப்படவில்லை. ஆனால், ஒன்றை நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. Power sector is capital intensive. வருகின்ற, ஒரு இலட்சம் மெகாவாட் capacity addition-க்கு நமக்கு 8 இலட்சம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆகவேதான்,



மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வதற்காக பாரதிய ஜனதா கட்சியின் தலைமையிலான ஆட்சி மின் துறையில் சீர்திருத்தங்களைக் கொண்டு வந்து இருக்கிறது. ஆனால் என்ன செய்வது? ** (குறுக்கீடு)

முற்பகல் 10-10

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும், அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எச். ராஜா:** ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசி முடிக்கட்டும்.

**திரு. எச். ராஜா:** இல்லை. I am not yielding Sir. (Interruption) Yesterday I did not intervene. I am not yielding. (Interruption)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ராஜா பேசி முடிக்கட்டும்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு Point of Order மட்டும்...

**திரு. எச். ராஜா:** No point of order. ** (குறுக்கீடு)

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அசெம்பிளியில் பேசும்போது ஆதாரம் இல்லாமல் அவ்வாறு சொல்லக்கூடாது.

**திரு. எச். ராஜா:** இல்லை, ஆதாரத்தோடுதான் பேசுகிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ராஜா, மானியக் கோரிக்கைக்குத் தொடர்பில்லாத அந்தப் பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

**திரு. எச். ராஜா:** மேலும்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தப் பகுதி அவைக் குறிப்பிலேயிருந்து நீக்கப்படுகிறது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

**திரு. எச். ராஜா:** மேலும், மேற்கு வங்க அரசு 5-5-2001-லேயே, மத்திய அரசுடன் Memorandum of Understanding-லே கையெழுத்துப் போட்டிருக்கிறது. மேற்கு வங்கத்தைத் தொடர்ந்து நம்முடைய அரசாங்கம் இப்போது State Electricity Regulation Commission-ஐ போட்டிருக்கிறது. ஆனால், மேற்கு வங்க அரசாங்கம், 2001-லேயே போட்டிருக்கிறார்கள். எனவே, 2001 Electricity Bill-லே சொல்லப்பட்ட அம்சங்களை மேற்கு வங்க அரசாங்கமே, 2001-லேயே ஏற்றுக் கொண்டிருக்கிறது. அதுபோல, 2001 Electricity Bill-லே மின் உற்பத்தி, மின் மாற்றம் மற்றும் மின் வினியோகத்தின் மேம்பாட்டிற்காக பல்வேறு சிறப்பான அம்சங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. Captive Power Generation என்பதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது. மரபுசாரா எரிசக்தி உற்பத்திக்காக ஊக்கம் அளிக்கப்படுகிறது. அதோடுகூட மின் கட்டணத்தை நிர்ணயம் செய்கின்ற உரிமையானது Regulatory Commission-க்கு இருந்தாலும், மாநில அரசு, ஏதாவது ஒரு துறைக்கு மானியம் கொடுக்க வேண்டுமென்று சொன்னால், அந்தத் துறைக்கு budgetary allocation மூலமாகக் கொடுக்கலாம் என்கின்ற வழிவகையிலும் மாநில அரசாங்கத்திற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவேதான், தமிழக அரசாங்கம்கூட, விவசாயத்திற்கென 100 கோடி ரூபாய் budgetary backing-லே கொடுத்திருக்கிறது. ஆனால், மற்ற மின் மானியத்திற்கு இன்னமும் தரப்படவில்லை என்பதையும் இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். மேலும், மாநில மின்வாரியத்திற்கு நட்டம் ஏற்படுவதற்கு மிகப் பெரிய காரணமாக இருப்பது மின் திருட்டு. ஏனென்று சொன்னால், தேசிய அளவிலே, 26 ஆயிரம் கோடி ரூபாய்--அனைத்து State Electricity Board-னுடைய annual loss 26 ஆயிரம் கோடி ரூபாயாக--இருப்பதில், 20 ஆயிரம் கோடி ரூபாய் மின் திருட்டின் காரணமாக ஏற்படுகிறது என்று ஆய்வு சொல்கிறது.

தமிழகத்திலேகூட, 2001-2002 revised budget-லே, revenue loss 2308.46 கோடி ரூபாயாகவும், 2002-2003 budget-லே 1638.89 கோடி ரூபாயாகவும் இருக்கிறது. நேற்றையதினம் மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள். Transmission and distribution loss தமிழகத்திலே, 16.2 சதவிகிதமாக இருக்கிறது என்று. ஆனால் transmission and distribution loss 5 சதவிகிதத்திற்குமேல் இருக்க முடியாது. ஏனென்றால், தனியார் உற்பத்தி செய்து, மின்சார கம்பெனிக்கு அதைக் கொடுத்துவிட்டு power grid-க்கு அதை மீண்டும் அவர்களுடைய கம்பெனிக்கே எடுத்துக்கொள்வதாக இருந்தால்கூட,



நாம் 5 சதவிகிதம்தான் இங்கே, Transmission loss-க்காக விட்டுக் கொடுக்கிறோம். எனவே, பெருவாரியாக மின் திருட்டின் காரணமாகவே, State Electricity Boards-க்கு நட்டம் ஏற்படுகிறது. ஆகவேதான், இந்த electricity bill 2001-லே, மீட்டர் பொருத்தப்பட வேண்டும் என்பதானது குறிப்பிடப்பட்டிருக்கிறது. எந்தெந்த மாநிலங்களில் மீட்டர் பொருத்தப்படுவது பூர்த்தியாகி இருக்கிறதோ, அங்கெல்லாம் 20-லிருந்து 30 சதம் கட்டணம் வசூல் கூடியிருக்கிறது என்று நமக்கு ஆய்வு கூறுகிறது. மேலும், தமிழகத்தினுடைய மின் துறை சீர்திருத்தத்தைச் செயல்படுத்துவதில், நாம் தாமதமாகக் களத்தில் இறங்கியுள்ளதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். இங்கு Power Finance Corporation-னுடைய ஆய்விலே, இந்த Power Sector Reforms-லே, நாம் பத்தாவது இடத்திலே இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. எனவே, நாம் தாமதமாக ஆரம்பித்தாலும், வேகமாகப் போவதன் மூலமாக அனைத்து மக்களுக்கும் அதில் ஒரு sustainable power நாம் கொடுக்க முடியும். ஆனால், transformer breakdown rates தமிழகத்திலே குறைவாக இருப்பதும், நல்ல முறையிலே இங்கே revenue collection இருப்பதும் இதிலே வரவேற்கத்தக்க அம்சங்கள். அவை பாராட்டுக்குரியவை. அதேபோன்று, சுய தேவைக்கு மின் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் உள்ளிட்ட உரிமம் பெற்றுள்ள அனைவருக்கும் அவர்களின் விற்பனை செய்யும் எரிசக்தியின் நிகர மதிப்பின்மீது 5-லிருந்து 10 சதவிகிதம் வரி விதிக்கவும், own consumption-க்கு அதாவது சுய பயன்பாட்டிற்கு, யூனிட்டிற்கு 10 பைசாவிலிருந்து 20 பைசா வரி விதிக்கவும் புதியதாக சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அவர்களுடைய own consumption-க்கு இருக்கின்ற இந்த வரியை மறுபரிசீலனை செய்ய வேண்டும், தமிழக அரசு அதை வாபஸ் வாங்கிக்கொள்ள வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கு P.M.G.Y.-யின் மூலமாக மின்சாரம் வழங்கவும், மின்சாரக் கட்டமைப்பை மேம்படுத்தவும், வேலூருக்கு 20 கோடி ரூபாயும், நீலகிரிக்கு 8 கோடி ரூபாயும், திண்டுக்கல்லில் உள்ள கொடைக்கானலுக்கு 14 கோடி ரூபாயும் ஒதுக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதுவும், சென்னையிலே, இப்போது ஒரு Group of Flats இருந்தால், அதிலே ஒரு flat-லே ஒரு professional, practice பண்ணுகிறார் என்று சொன்னால், அதற்கு commercial rate வாங்குகிறார்கள். ஆனால், அந்த flat முழுவதும் commercial rate வாங்கப்படுகிறது. இராஜா அண்ணாமலைபுரத்திலே இம்மாதிரியான புகார்கள் வந்திருக்கின்றன. எனவே, மற்றவர்கள்

குடியிருப்புக்குப் பயன்படுத்துகிற காரணத்தால், ஒரு flat-க்குள்ளே ஒருவர், commercial-க்குப் பயன்படுத்துகிற காரணத்தினாலே, அனைவரிடமிருந்தும் commercial rate வசூலிக்கக்கூடாது, இதில் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, விவசாயிகள் பலரும் அவர்கள் சுய நிதித் திட்டத்தின்கீழ் மனு கொடுத்து பணம் கட்டி அவர்களுடைய நகை நட்டுகளையும் இருக்கின்ற பழைய டீசல் மோட்டார்களையும் விற்றுக்கூட பணம் கட்டியிருக்கின்றார்கள். அவர்களுக்கு உடனடியாக மின் இணைப்புக் கொடுக்கப்படவில்லை. இதேமாதிரி கெலமங்களத்தில் 36 பேர்களுடைய பட்டியல் இருக்கிறது. அதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தருகிறேன். உடனடியாக நீங்கள் அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

அதேபோல மத்திய அரசானது தமிழ்நாடு உட்பட 9 மாநிலங்களில் செயல்படுத்துவதற்காக எத்தனால் எரிபொருள் தயாரிக்கின்ற கொள்கையைச் செயல்படுத்தத் திட்டமிட்டு இருக்கிறது. இதைத் தமிழக அரசு விரைவிலேயே செயல்படுத்துமேயானால் சர்க்கரை ஆலைகளிலே விவசாயிகளுக்குக் கரும்புக்கு நிலுவைக் கூலி பட்டுவாடா செய்வதற்கு அது உதவியாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாங்குனேரியிலே உயர் தொழில்நுட்ப நகரத்தை சிறப்புப் பொருளாதார மண்டலமாக கருத இந்திய அரசு உத்தேசித்து இருக்கிறது என்று கொள்கைக் குறிப்பிலே கூறப்பட்டு இருக்கிறது; வரவேற்கத்தக்கதாகும்.

மானாமதுரையிலே 492.07 ஏக்கரிலே சிப்காட் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட் இருக்கிறது. ஆனால் அதிலே ஜிப் பேக்டரி உட்பட ஓரிரு கம்பெனிகள்தான் செயலாற்றிக் கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருந்த சிமெண்ட் தொழிற்சாலை மூடப்பட்டிருக்கிறது. எனவே அரசாங்கம் தொழில் முனைவர்களை ஊக்குவித்து அங்கு பல்வேறு Infrastructure facilities-ஐ, ஏற்படுத்த உதவி செய்ய வேண்டும். (குறுக்கீடுகள்) எல்லாமே 14 கோடிதான்; வேலூருக்கு 20 கோடியும், நீலகிரிக்கு 8 கோடியும், கொடைக்கானலுக்கு 14 கோடியும், பி.எம்.ஜி.ஒய். மூலம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது.



அதேபோல தமிழ்நாடு கனிம நிறுவனம், டாமின். இது மிகவும் வணிக முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறு கனிமங்களை முறைப்படி அறிவியல்ரீதியாக வெட்டி எடுக்கவும் கிராமப் பகுதிகளில் வேலைவாய்ப்பை உருவாக்கவும் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஏனென்றால், சிவகங்கையில் . . . (குறுக்கீடுகள்)

(இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த ஓர் உறுப்பினர், தொழில் துறை கொள்கை விளக்கக் குறிப்பை உறுப்பினருக்குச் சுட்டிக்காட்டினார்.)

கொடைக்கானலுக்கு 1.4 கோடி ஒதுக்கப்பட்டதாகச் சுட்டிக் காட்டுகிறார். அதைத் திருத்திக்கொள்கிறேன்.

சிவகங்கையில் செழுமைப்படுத்திய கிராஃபைட் தொழிற்சாலையானது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பி.ஜே.பி.-யும், கம்யூனிஸ்ட் கட்சியும் இவ்வளவு நெருக்கமாக இருப்பது பெரிய வியப்பாக இருக்கிறது (சிரிப்பு)

**திரு. எச். ராஜா:** கொள்கையிலே முரண்பாடு; உறவிலே நல்ல உறவு (குறுக்கீடு) அப்புறம் உறவு, நட்பு என்று சொன்னால் சிக்கல் வேறு வந்துவிடும். அதனால் நான் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. (சிரிப்பு)

சிவகங்கையிலே செழுமைப்படுத்திய கிராஃபைட் தொழிற்சாலை இருக்கிறது. அங்கு கிடைக்கும் நல்ல தரமான கிராஃபைட்டைக் கொண்டு மதிப்புக் கூட்டிய பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலை சிவகங்கையில் ஏற்படுத்துவதற்காகத்தான் டான்கிராப் நிறுவனமானது ஏற்படுத்தப்பட்டது. ஆனால் இப்போது இங்கே கொள்கைக் குறிப்பிலே கிராஃபைட் சுரங்கங்களுக்கு அருகில் கிராஃபைட்டை சார்ந்த பொருட்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை அமைக்க சாதகமான இட அமைப்பு இல்லை என்று சொல்லி அந்த டான்கிராப் நிறுவனத்தை தமிழ்நாடு கனிம நிறுவனத்துடன் இணைப்பது என்ற கருத்துருவானது அரசின் பரிசீலனையில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிவகங்கை மாவட்டம் என்பது மிகவும் பிற்படுத்தப்பட்ட மாவட்டம். எந்த ஒரு தொழிற்சாலையும் இல்லை. காரைக்குடியில் இருக்கின்ற சி.எஸ்.ஆர்.ஐ.-யும், கல்வி நிறுவனங்களும் தவிர அந்த மாவட்டத்திலே சொல்லும்படியாக வேலைவாய்ப்புத் தரக்கூடிய எந்த ஒரு நிறுவனமும்

இல்லை என்கின்ற காரணத்தினால், அங்கு கிராஃபைட், நல்ல குவாலிட்டி கிராஃபைட் கிடைக்கின்ற காரணத்தினால், அதை மூலதனமாகக் கொண்டு மற்ற பொருட்கள் தயாரிக்கின்ற தொழிற்சாலைகளைத் தொடங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த கிராஃபைட் தொழிற்சாலையைக் கைவிடுகின்ற எந்த ஒரு முயற்சியையும் அரசாங்கம் செய்யக் கூடாது என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல சதர்ன் ஸ்ட்ரக்சரல் நிறுவனத்திலே ஏற்கெனவே 298 ஊழியர்கள் Voluntary retirement scheme-லே வெளியேறி இருக்கிறார்கள். மீதி உள்ள 461 பேர்களில் 442 பேர் வி.ஆர்.எஸ். கொடுத்து இருப்பதாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதிலே முக்கியமான விஷயம் என்னவென்று சொன்னால், Voluntary retirement scheme-ல் எழுதிக் கொடுத்துவிட்டு, அரசாங்கம் அதை ஏற்றுக்கொள்ளாத காரணத்தினாலே தானாகவே retire ஆனவர்கள் 24 பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏற்கெனவே 2 இலட்சம் ரூபாய்,—1¼ இலட்சமும் அப்புறம் 75 ஆயிரமும் சேர்த்து 2 இலட்சம் ரூபாய்—ஏனென்றால் நான் அப்போது யூனியன் லீடராக இருந்தேன். அப்போது 2 இலட்சம் கொடுக்கப்பட்டது; ஆனால், இந்த 24 பேரும் normal course-ல் retire-ஆகி இருக்கிறார்கள். ஏற்கனவே V.R.S. கொடுத்து இருக்கிறார்கள். எனவே, அவர்களுக்கு அந்தச் சலுகையானது கிடைக்கவில்லை. அதேபோல் 4 பேர் Voluntary retirement scheme-ல் மனு கொடுத்த பிறகு இறந்து போய் இருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சதர்ன் ஸ்ட்ரக்சர்ஸில் இருக்கின்ற--ஏற்கெனவே மனு கொடுத்துவிட்டவர்கள்--அவர்கள் normal course-ல் retire ஆனாலும் சரி அல்லது அவர்கள் இறந்துபட்டிருந்தாலும் சரி, முன்பு கொடுத்த அந்த 2 இலட்சம் ரூபாயைக் கொடுத்து அந்தக் குடும்பத்தினருக்கு நீங்கள் உதவி செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

அதேபோல ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில்.... (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன், ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் இப்போது அதைக் கலைப்பது என்று முடிவு செய்து Official Liquidator-விடம் ஒப்படைக்கப்பட்டு இருக்கிறது. இங்கு இந்த கம்பெனியைக் கலைக்கின்ற அளவுக்கு, dissolution அளவுக்குப் போனதற்கு அங்கு இருக்கின்ற தொழிலாளர்கள் யாரும்



எந்தவிதத்திலும் காரணம் அல்ல. ஏனென்றால் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரங்கள் மற்றும் உதிரி பாகங்களைச் சுங்கத் தீர்வை செலுத்தி வெளிக் கொண்டுவர முடியாமல் நிர்வாகம் திணறிக் கொண்டிருந்தபோதுகூட Employees Provident Fund-லிருந்து அவர்கள் பணம் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். நல்ல எண்ணத்தோடு தொழிலாளர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். எனவே, இந்த ஸ்டாண்டர்டு மோட்டார்ஸ் நிறுவனத்தைத் தமிழக அரசே எடுத்துக்கொண்டு அங்கிருக்கின்ற தொழிலாளர்களுக்கு Voluntary Retirement Scheme-மூலமாக நல்லதொரு தொகையைக் கொடுக்க வேண்டும். ஏனென்றால் 30 ஆண்டுகள் வேலை செய்துவிட்டு, 25 ஆண்டுகள் வேலை செய்துவிட்டு, வெறுங்கையோடு வீட்டிற்குப் போவது என்பது எந்தவிதத்திலும் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாக இருக்காது என்கிற காரணத்தாலே இதிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : மாண்புமிகு மின் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்** ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'வண்மை உயர்வு மனிதர் நலமெல்லாம்
பெண்மையினால் உண்டென்று பேசவந்த ...
........................................................ இப்புவிக்குத்
தாய்என்று காட்டத் தமிழர்க்கு வாய்த்தவரே'

என்ற பாவேந்தர் பாரதிதாசன் வரிகளுக்கு இலக்கணமாகத் திகழும், தமிழகத்தில் நேர்மையான, தூய்மையான நல்லாட்சி தந்து கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழகத்தில் உள்ள தூத்துக்குடி அனல் மின் நிலையம், மேட்டூர் அனல் மின் நிலையம், வடசென்னை அனல் மின் நிலையம் ஆகிய மூன்று அனல் மின் நிலையங்களும் சிறப்பாகச் செயல்பட்டதற்காக 2001-2002 ஆம் ஆண்டிலும், 2002-2003 ஆம் ஆண்டிலும் சிறப்பாக, செம்மையாகச் செயல்பட்டதற்காக மத்திய அரசினுடைய தங்கப் பதக்கத்தைத் தொடர்ந்து இரண்டாவது முறையாக மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் ஆட்சி (மேசையைத் தட்டும்

பலத்த ஒலி) பெற்றிருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, இந்த மூன்று அனல் மின் நிலையங்களும் ஐ.எஸ்.ஓ. 9002 என்கின்ற தரச் சான்றிதழ்களையும் பெற்றிருப்பது இதுவே முதல் தடவை என்பதையும் நான் மகிழ்ச்சியோடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இவையெல்லாம் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களுடைய திறமையான, நேர்மையான ஒரு நல்லாட்சிக்கு எடுத்து வைக்கின்ற ஆதாரங்களாகக் கருதுகிறேன்.

22-4-2003 அன்று முரசொலி பத்திரிக்கையிலே ஒரு செய்தி வெளி வந்திருக்கிறது. அதாவது, 1999-2000 ஆம் ஆண்டில் விவசாயத்திற்காக மானியம் வழங்குவதற்காகக் கிட்டத்தட்ட 1776 கோடி ரூபாய் அவர்கள், அரசாங்கத்திடமிருந்து மின் வாரியத்திற்குத் தந்திருப்பதாகவும், 2000-2001 ஆம் ஆண்டு கிட்டத்தட்ட 1693 கோடி ரூபாய் அரசாங்கத்திடமிருந்து மின் வாரியத்திற்குத் தந்திருப்பதாகவும், ஒரு தவறான செய்தியை வெளியிட்டு இருக்கிறார்கள். அவர்கள், மாறாக 1999-2000 ஆம் ஆண்டு, வெறும் 209 கோடி ரூபாயை மட்டும், 2000-2001-ல் வெறும் 250 கோடி ரூபாயை மட்டுமே வழங்கி இருக்கிறார்கள். ஆனால் அந்த 1776 கோடி ரூபாயும், 1693 கோடி ரூபாயும் வழங்கியதற்காக எந்த அரசாணையும் அவர்கள் இதுவரை வழங்கவில்லை. மாறாக, வெறும் கணக்கிலே வரவு வைத்துக்கொள்ள வேண்டுமென்று அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டதே தவிர, முரசொலி பத்திரிகையிலே விவசாயிகளுக்காகக் கொடுத்ததாக வந்த செய்தி முற்றிலும் தவறான செய்தி என்பதை நான் இந்த சபைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முரசொலி பத்திரிகை, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பத்திரிகை என்பது இங்கே இருக்கிற பத்திரிகையாளர்களுக்கு நன்றாகவே தெரியும் என்பதை நான் இந்தநேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக அரசின் சீர்கேட்டினால் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்க வருகிறபோது கிட்டத்தட்ட 5,000 கோடிக்கு மேலாகவே ஒரு நட்டத்தை எதிர்நோக்க வேண்டிய சூழ்நிலையில் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்றாலும்கூட திராவிட முன்னேற்றக் கழக அரசு காலத்தில் மத்திய, பொதுத் துறை நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட வேண்டிய



1962 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு பொறுப்பு ஏற்ற பிறகுதான் அதையும் கொடுக்க நேர்ந்தது என்பதை இந்தச் சட்டமன்றத்திற்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக, திராவிட முன்னேற்றக் கழக அரசு எந்தக் காலத்திலும் மக்களுக்காகவோ, விவசாயிகளுக்காகவோ, எதையும் செய்யவில்லை. மாறாக பத்திரிகைகளில், முரசொலி பத்திரிகை, அவர்களுடைய சன் டி.வி. குடும்ப டி.வி.யில் மட்டுமே அதைத் தெரிவித்து வருகிறார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-25

அதுமட்டுமல்ல. 1991 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையில் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் எதிர்கால மின் தேவையைக் கணக்கில்கொண்டு 1300 மெகாவாட் மின் உற்பத்தி அமைப்புகளை நிறுவினார்கள். காற்றாலை மூலமாக 532 மெகாவாட் மின் உற்பத்தியை நிறுவினார்கள். அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1996-ல் இருந்து 2001 வரைக்கும் வெறும் 560 மெகாவாட் அமைப்புகளை மட்டுமே அவர்கள் நிறுவி இருக்கின்றார்கள். காற்றாலையில் 256 மெகாவாட் அமைப்புகளை நிறுவி இருக்கின்றார்கள். ஆனால் 2001-ல் மீண்டும் அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு 904 மெகாவாட், இந்த இரண்டு ஆண்டுகால ஆட்சியிலே, மின் உற்பத்தியை மின்சார வாரியத்தின் மூலமாக; காற்றாலைகள் மூலமாக 177 மெகாவாட்; இன்றைக்கு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நிறைவேற்றப்பட்டு இருக்கின்றது. 1995-1996 ஆம் ஆண்டில் மட்டும் 282 மெகாவாட் ஒரே ஆண்டில் காற்றாலை மூலமாகப் பெற்று இருப்பது, இதுவரைக்கும் வேறு எந்த அரசாங்கத்தாலும் எந்த ஆண்டிலும் செய்யப்படவில்லை. அதுபோல 2002-2003-லும் 133 மெகாவாட் மின்சாரம் கிடைக்கும் அளவிற்கு காற்றாலைகள் நிறுவப்பட்டு இன்றைக்குச் செம்மையாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கின்றன என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் உள்ள மின் உற்பத்தி, இன்றைக்கு வாரியத்தில் 8249 மெகாவாட். அதிலும் தனியார் மின் உற்பத்தியில் இருந்து 1058 மெகாவாட் வாங்கப்படுகிறது. மத்திய பொதுத் துறை நிறுவனங்களிடமிருந்து 1903 மெகாவாட்டும் காற்றாலைகளில் இருந்து 971 மெகாவாட்டும், காற்றாலை மின் வாரியத்தில் இருந்து 19 மெகாவாட்டும் கிடைக்கப்பெறுகிறது. தற்போதைய நிலையில் இன்றைக்கு நமக்கு, நமது நாட்டிற்கு 6,960 மெகாவாட் உச்ச மின்

தேவையாகக் கருதப்படுகிறது. ஆண்டு ஒன்றிற்கு 5 விழுக்காடில் இருந்து 6 விழுக்காடுக்கு மேல் நமக்குத் தேவை ஏற்படுகிறது. அந்தத் தேவை 2003-2004 ஆம் ஆண்டிற்கு 600 மெகாவாட் என்று இருந்தாலும் 748 மெகாவாட் உற்பத்தி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் கையில் இருக்கிறது என்பதை நான் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன். அதிலே நாகப்பட்டினம் மாவட்டம் குத்தாலத்தில் இருந்து 101 மெகாவாட்டும், ஒரிசா மாநிலம் தால்ச்சர் இருந்து 270 மெகாவாட்டும், 150 மெகாவாட் நமது பைக்காரா மின் திட்டத்தில் இருந்தும், இப்படியாக மொத்தம் 748 மெகாவாட் நம்முடைய கையில் இருக்கிறது என்பதை நமது உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில் வட சென்னையில் 1000 மெகாவாட் உற்பத்தித் திறனை நிறுவுவதற்கு தேசிய மின் கழகத்தோடு 4000 கோடி ரூபாய் செலவில் ஓர் ஒப்பந்தத்தைப் போட்டு எதிர்காலத்தில் 1000 கோடி மெகாவாட் மின் உற்பத்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஏற்பாடு செய்து இருக்கிறார்கள் என்றால் இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரையிலும் தேசிய அனல் மின் கழகத்தோடு இந்த மாதிரி ஒப்பந்தம் இதுவரையில் யாருமே போட்டதில்லை என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோன்று, நெய்வேலி லிக்னைட் கார்ப்பரேஷனோடு இணைந்து 1000 மெகாவாட் உற்பத்தித் திறனை, தூத்துக்குடியில் நிறுவுவதற்கு வருகிற ஜூன் மாதத்தில் அம்மா அவர்கள் M.o.U. போடுவதற்கு இருக்கிறார்கள் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நெல்லை மாவட்டம், கூடங்குளத்தில் இன்றைக்கு 2000 மெகாவாட் மின் உற்பத்திப் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றது. அதிலிருந்து 1200 மெகாவாட் மின் உற்பத்தியை நாம் பெறுவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி அதுவும் நம்முடைய எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்கின்ற வகையில் நமக்குக் கிடைக்க இருக்கிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல, விரைவுபடுத்தப்பட்ட மின் மேம்பாடு மற்றும் சீரமைப்புத் திட்டத்தின்கீழ், (A.P.D.R.P.) 25 துணை தொடர் மற்றும் மின் பகிர்மானத் திட்டங்கள் மொத்தம் 977 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலம், மின்சார வாரியத்தின் விநியோகம் மேலும்



மேம்படுத்தப்படும். ஊரக வளர்ச்சிக்கான தேசிய விவசாய வங்கியிடமிருந்து -NABARD- 122 கோடி ரூபாய் கடன் உதவி பெற்று மின்சார வாரியத்தின் மின் அமைப்பு மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டம், இராமநாதபுரம், தூத்துக்குடி, தஞ்சாவூர், தருமபுரி, கரூர், சிவகங்கை, திருவண்ணாமலை, விருதுநகர், தேனி, கோபி, திருப்பத்தூர், கன்னியாகுமரி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மின் பகிர்மான வட்டங்களில் தரமுடைய மற்றும் தடையில்லாத மின்சாரம் அளிப்பதற்காக மின் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மின் இருப்பின் பேரிலான கட்டண முறை —availability based tariff— 1-1-2003 முதல் அமலுக்கு வந்து உள்ளது. இதனால் மின் கட்டமைப்பின் அலைவெண் 49.5 Hertz - 50.5 Hertz இடையேயிருந்து வருவதால், மின் கட்டமைப்பின் இடையூறுகள் தடுக்கப்பட்டுள்ளன. மேலும், தரமான மற்றும் தங்குதடையின்றி மின்சாரம், மின் நுகர்வோர்களுக்கு வழங்கப்படுகிறது.

முற்பகல் 10-30

**தமிழ்நாடு எரிசக்தி வளர்ச்சி நிறுவனம்**—தமிழ்நாட்டில் புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் தொடர்பான மத்திய மற்றும் மாநில அரசு திட்டங்களை இது செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டின் மொத்த மின் உற்பத்தித் திறனில் மரபுசாரா எரிசக்தி ஆதாரங்களிலிருந்து 31-3-2003 வரை 1200 மெகாவாட் திறன் உருவாக்கப்பட்டுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் உற்பத்தித் திறன் 261 மெகாவாட் அதிகரித்துள்ளது. தமிழ்நாட்டின் மொத்த மின் கட்டமைப்பின் மொத்த உற்பத்தித் திறனில் இது 14.5% ஆகும். அனைத்திந்திய அளவில் இந்த அளவு 3% மட்டுமே ஆகும். எனவே புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்களை ஊக்குவிப்பதில் தமிழ்நாடு முதல் மாநிலமாக உள்ளது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

சர்க்கரை ஆலைகளில் கரும்புச் சக்கையைப் பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதில் கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் மின் உற்பத்தித் திறன் சுமார் 81 மெகாவாட் அதிகரித்துள்ளது. ஆனால் கடந்தகால தி.மு.க. ஆட்சியில் மின் உற்பத்தித் திறன் மொத்தம் 74 மெகாவாட் மட்டுமே அதிகரித்துள்ளது. இதன்மூலம் 31-3-2003 வரை தமிழ்நாட்டில் மொத்த உற்பத்தித் திறன் 223 மெகாவாட் ஆகும். இது

இந்தியாவின் மொத்த உற்பத்தித் திறனில் 46% ஆகும். இதிலும் தமிழ்நாடுதான் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக இருக்கிறது என்பதும் பெருமைப்படத்தக்க ஒரு சாதனை அம்சமாகும். கடந்தகால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் மொத்தம் 222 தெரு விளக்குகள், 70 வீட்டு விளக்குகள் மட்டுமே வழங்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் சூரிய ஒளி சக்தியால் இயங்கும் 350 தெரு விளக்குகள், 1400 வீட்டு விளக்குகள், 4500 லாந்தர் விளக்குகள் ஆகியவை பல்வேறு பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. மின் வசதி இல்லாத தொலைதூர கிராமங்களுக்கு சூரிய ஒளி சக்தியால் இயங்கும் வீட்டு விளக்குகள் மற்றும் தெரு விளக்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு தமிழ்நாடு அரசு 150 குக்கிராமங்களைத் தேர்ந்தெடுத்து ரூபாய் 15 கோடி செலவில் செயல்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

கழிவுநீரிலிருந்து முதன்முதலாக மின்சாரம் தயாரிக்கும் இரண்டு செயல்விளக்கத் திட்டங்கள் மத்திய அரசு நிதியுதவியுடன் தனியார் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில் தருமபுரி மாவட்டம், பாப்பிரெட்டிப்பட்டியில் ஜவ்வரிசிக் கழிவுநீரிலிருந்து 500 கிலோவாட் மின் உற்பத்தித் திட்டம் நிறைவடைந்து சோதனை இயக்கத்தில் உள்ளது. நாமக்கல் மாவட்டத்தில் கோழி எச்சத்திலிருந்து 1200 கிலோவாட் மின்உற்பத்தித் திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**மின்சார ஆய்வுத் துறை**—மின்சார ஆய்வுத் துறை, அதன் பணியை திறம்பட ஆற்றி வருகிறது. மின் அமைப்புகளைப் பயன்படுத்துவோரின் பாதுகாப்புக்கு உரிய நடவடிக்கைகளை இத்துறை மேற்கொண்டு வருகிறது. மின்சாரத் தீர்வை வாயிலாக கணிசமான வருவாய்க்கு இத்துறை வழிவகுக்கிறது.

**தமிழ்நாடு மின்விசை, நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனம்**—இந்நிறுவனம் கடந்த 1991 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தொடக்கத்திலிருந்தே தொடர்ந்து இலாபம் ஈட்டி வருகிறது. இந்நிறுவனம் கடந்த 8 ஆண்டுகளாக, செலுத்தப்பட்ட மூலதனத்தில் 20% ஈவுத் தொகையாக 1995-96 முதல் தொடர்ந்து வழங்கி வருகிறது. இந்நிறுவனம் நடப்பு நிதியாண்டில் ரூ.129 கோடி வைப்பு நிதியைத் திரட்ட உத்தேசித்துள்ளது. மேலும், மும்பை, பெங்களூர், டெல்லி, ஹைதராபாத் மற்றும் கொல்கத்தா ஆகிய இடங்களிலுள்ள வைப்பீட்டாளர்களுக்கு மின்னணு பிரிப்பு மூலம் வட்டித் தொகையை வழங்க நடவடிக்கை எடுத்து வருகிறது.



இந்நிறுவனம் நடப்பு நிதியாண்டில் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ரூபாய் 600 கோடி கடன் வழங்க உத்தேசித்துள்ளது. மேலும் பிற அரசுத் துறை நிறுவனங்களுக்கும் நிதியுதவி அளிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அவர்கள் குறிப்பிட்டார்கள்; இங்கு வீட்டுவசதி வாரிய வீடுகளில் இருக்கின்றவர்களுக்கும், தொகுப்பு வீடுகளில் இருப்பவர்களுக்கும், மற்றவர்களுக்கும் commercial tariff போடுகிறார்கள் என்று சொன்னார்கள். அது உண்மையானால், கவனத்திற்கு வருமானால், உடனடியாக அதை மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்து தரப்படும் என்பதனை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோன்று transmission loss 5% தான் என்று சொன்னார்கள். transmission loss 6%-8% வரைக்கும் ஆகின்றது. அதிலே L.T. மின் பகிர்மான இழப்பு 10% ஆகும். மொத்தம் 16-18%. எனவேதான் H.T. தொழிற்சாலைகளுக்கு captive power wheeling செய்வதற்கு 15% wheeling charge வசூலிக்கப்படுகிறது. அதேபோன்று காற்றாலை மின்சக்தியில் 5% wheeling charge வசூலிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நேற்றையதினம் பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. கண்ணன் அவர்கள் மின்சாரம் சேமிப்பு பற்றிய குறிப்புகள் இல்லையென்று சொன்னார்கள். ஆனால் மின்சாரம் சேமிக்கப்படுகிறது. ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 175 மில்லியன் மின்சாரம், அதாவது, ஒரு நாளினுடைய மின் தேவை ஒரு ஆண்டில் நாம் சேமித்து வருகிறோம். அதற்காக ஆண்டு ஒன்றுக்கு ஒரு விழா எடுத்து வருகிறோம். டிசம்பர் 14 ஆம் தேதி அதனுடைய நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இனிமேல் வருங்காலங்களில் அவர்களுக்கும் அந்த அழைப்புக் கொடுத்து அவர்களும் அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்ள வேண்டும் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10-35

நமது மாண்புமிகு உறுப்பினர், நமது மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களுடைய அன்புக்குரிய ஹேமா அவர்கள் (சிரிப்பு) நேற்றையதினம் (குறுக்கீடு) திரு. ஹேமாதான், திருமதி ஹேமா அல்ல. (குறுக்கீடு) செல்வன்தான் அதிலே சந்தேகம் இல்லை என்று நினைக்கிறேன்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லாவிட்டால் செல்வர் என்று மாற்றிக்கொ ்ளலாம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** பேரவைத் தலைவர் சொல்கிறபடியே செய்யலாம். அவர் கோகோ கோலா கம்பெனியைப் பற்றி நேற்றையதினம் பேசும்போது, குடிப்பதற்குக்கூட தண்ணீர் இல்லை; அங்கே கோகோ கோலா கம்பெனிக்குக் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். சிவகங்கை மாவட்டத்தில் சக்தி சுகர்சுக்கு 1989 ஆம் ஆண்டிலிருந்து கிட்டத்தட்ட 4,500 கியூபிக் மீட்டர் தண்ணீர் எடுப்பதற்கு அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

சர்க்கரை ஆலை, அந்த அரவைப் பருவத்தில் --crushing period-- இருந்து கிட்டத்தட்ட அவர்களுக்கு 2,500 கியூபிக் மீட்டர் தேவைப்படுகிறது. இப்போது crushing period இல்லாத காரணத்தினால் வெறும் 700 கியூபிக் மீட்டர்தான் அவர்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இருந்தாலும் மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினையைக் கருத்திலே கொண்டுதான் எந்தக் காரியத்தையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு செயல்படுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர்களுக்கு இன்னும் எந்தவிதமான அனுமதியும் அவர்கள் வழங்கவில்லை; அனுமதிக்காக அவர்கள் அப்ளை பண்ணியிருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதற்குப் பிறகு தொழில் துறை; சொல் ஒன்று செயல் ஒன்று என்று இருந்தவர்களை களை எனக் களைந்து, சொல்லே செயலாக, செயலே உருவாக, தொழில் துறையினை முன்னேற்றப் பாதையிலே, முழுமூச்சாய்த் தினம் உழைத்து, முதலிடம் வகிக்க வைத்தவர்கள் மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்திய பொருளாதாரத்தைக் கண்காணிக்கும் மையமான Centre for Monitoring Indian Economy என்ற நிறுவனம் தமிழ்நாடு மற்றைய மாநிலங்களைக் காட்டிலும் உற்பத்தித் துறையில் முதலீடு செய்யப்பட்டுள்ளதில் முதலிடம் வகிக்கிறது என்ற அறிக்கையினை அளித்துள்ளது என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் இம்மாமன்றத்தில் ஏற்கெனவே அறிவித்துள்ளார்கள். குண்டூசியைக் கண்டால்கூட குலை நடுங்கிப் போகின்ற தொடை நடுங்கிக் கூட்டமாம், காகிதப் புலிகள், காகிதக் கப்பல் செய்து கடல் நடுவே ஓடவிட்டாற்போல தொழிற் கொள்கையை ஓட விட்டவர்கள். தொட்ட இடம் எல்லாம் துலங்க வைக்கும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் தொழில் துறைத் திட்டங்கள் பலப்பல. (மேசையைத் தட்டும் ஒலி) பல



வகைப்பட்ட உற்பத்திப் பொருட்கள் தயாரிக்கும் புதுமையான கூட்டு முயற்சி நிறுவனங்களான திருப்பெரும்புதூரில் மகேந்திரா தொழிற் பூங்கா, மாமல்லபுரம் அருகில் கடல்சார் உயிரியியல் தொழில் நுட்பப் பூங்கா, தரமணியில் டைசல் உயிர்தொழில் நுட்பப் பூங்கா ஆகியவை வளரும் தொழில் கட்டமைப்பை எதிர்நோக்கி தொடங்கப்பட்டுள்ளன.

ஏறுமுகமாக இருக்கும் எங்கள் தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியிலே ஏற்றுமதிப் பொருள் வளமும் தழைத்து ஓங்குகிறது.

"கப்பல் கொண்டு போகும் - இங்குக்
காணும் சரக் கெல்லாம்.
சிப்ப மாகச் சாயும் - பல
சீமைச் சரக் கெல்லாம்"

என்ற பாவேந்தர் பாட்டிற்கு ஒப்ப பலரும் போற்றும்வண்ணம் கோவை மாவட்டம், உடுமலைப்பேட்டையில், கோழிக் கறி பதப்படுத்தும் திட்டம் மற்றும் மேட்டுப்பாளையம், ஊட்டியில் உற்பத்தியாகும் உருளைக் கிழங்கைப் பதப்படுத்தி பல்வேறு உணவுப் பொருட்களாக மாற்றும் திட்டம் ஆகிய இரு திட்டங்களும் நூறு சதவீத ஏற்றுமதிக்கான நிறுவனங்களாக அமைக்கப்பட்டு சோதனை அடிப்படையில் உற்பத்தியைத் தொடங்கி ஏற்றுமதி செய்யத் தொடங்கியுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் தமிழகத்தின் தொழில்களைப் பெருக்கி ஏற்றுமதியை அதிகரிக்க, தனியாகச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்-SEZ, Special Economic Zone, சென்னை, எண்ணூர், ஓசூர் மற்றும் தூத்துக்குடியில் அமைத்திட நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். இதுதொடர்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் மாநில சிறப்புப் பொருளாதாரக் கொள்கையை வெளியிட்டுள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் எல்லோரும் கேட்கலாம். அம்மா அவர்கள் வந்த பிறகுதானே SEZ, பொருளாதார மண்டலங்களைத் தோற்றுவித்து இருக்கிறார்கள்? கடந்த கால ஆட்சியிலே பொருளாதார மண்டலங்களைத் தோற்றுவிக்கவில்லையா என்று • கேட்கலாம். கடந்த கால ஆட்சியிலே பொருளாதார மண்டலங்களைத் தொடங்கினார்கள்; சென்னையிலே ஒரு பொருளாதார மண்டலம்; மதுரையிலே ஒரு பொருளாதார மண்டலம்; கோவையிலே ஒரு பொருளாதார மண்டலம். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குப் பெயர் KEZ, K for what (குறுக்கீடு) அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் இந்த ஆண்டு இந்தியாவிலேயே மிகப்பெரியக்

கட்டமைப்பு வசதியுடன் கூடிய பூ வளர்க்கும் பூங்கா ஒன்றினை அமைத்திடும். இத்திட்டத்தினால் பூ வளர்ப்போர் பூக்களை ஏற்றுமதி செய்து பெரும் இலாபத்தினை ஈட்டிட வாய்ப்புகளை அளிக்க மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

முற்பகல் 10-40

அதுமட்டுமல்ல, தமிழ்நாடு கனிம நிறுவனம் 1991 முதல் 1996 வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சி இருந்தபோது கிட்டத்தட்ட 174 கோடி ரூபாய்க்கு மொத்த விற்பனை செய்து 5 ஆண்டுகளில் மட்டும் 74 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியது மாண்புமிகு அம்மா அவர்கள் அரசு. அதாவது, 1991-96-ல் அம்மா அவர்கள் அரசு 174 கோடி ரூபாய் மொத்த விற்பனை செய்து 74 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியது. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு 1996-2001 வரைக்கும் அவர்கள் 258 கோடி ரூபாய் மொத்த விற்பனை செய்து வெறும் 22 கோடி ரூபாய்தான் இலாபம் ஈட்டியது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். ஆனால், 2001-2003-க்குப் பிறகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு 147 கோடி ரூபாய் மொத்த விற்பனை செய்து இப்போது 23 கோடி ரூபாய் இலாபத்திலே தமிழ்நாடு கனிம நிறுவனம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஆக, ஐந்தாண்டுகளில் அவர்கள் 258 கோடி ரூபாய் மொத்த விற்பனை செய்து இலாபம் வெறும் 22 கோடி ரூபாய்தான். 2 ஆண்டுகளில் 147 கோடி மொத்த விற்பனை செய்து அதில் 23 கோடி ரூபாய் இன்றைக்கு இலாபம் ஈட்டப்பட்டது என்று சொன்னால் இதில் யாருடைய ஆட்சி திறமையான ஆட்சி, நேர்மையான ஆட்சி என்பது எல்லோருக்கும் தெரியும். (மேசையைத் தட்டும் ஒலி). இது கடந்தக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைவிட 170 சதவிகிதம் அதிகமாகும்.

2001-2002-ல் நியமனக் கட்டணமாக தமிழக அரசால் ரூ.6 கோடி செலுத்தப்பட்டது.

2002-2003 ஆண்டுக்கு ரூ.7 கோடி 20 லட்சம் ரூபாய் செலுத்தப்படவிருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் ராஜா அவர்கள் இங்கே பேசும்போது சொன்னார்கள், சிவகங்கையிலே கிராஃபைட் தொழிற்சாலை இருக்கிறது, அதைக் கவனத்திலேகொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். அந்த கிராஃபைட் தொழிற்சாலை கடந்தக் கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நட்டத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. இந்த 2 ஆண்டுகளில்



அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தபிறகு கிட்டத்தட்ட 1½ கோடி ரூபாய் இன்றைக்கு இலாபத்திலே இயங்கிக் கொண்டிருக்கிறது என்பதையும் நான் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோன்று சிப்காட் நிறுவனம்; சிப்காட் நிறுவனம், சென்னை சிறுசேரியில் ரூ.85 கோடி செலவில் சேன்சா இந்தியா என்ற நிறுவனத்திற்கு மென்பொருள் தொழில் தொடங்க 27.36 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது. இதன் மூலம் 2 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டம் இம்மாத இறுதியில் செயல்படத் தொடங்கும் என்பதும் எதிர்பார்க்கப்படுகிறது. சிறுசேரிக்கு அருகிலேயே டாடா கன்சல்டன்சி நிறுவனம் ரூ.132 கோடி மதிப்பீட்டில் மென்பொருள் தொழில் தொடங்க 70 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளது. இந்த நிறுவனத்தின் மூலம் 6 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற வகையிலே மிகப்பெரிய திட்டம் துவங்கப்பட இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் ரூ.13 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு மாநில வேளாண் விற்பனை வாரியத்துடன் இணைந்து ஓர் உணவுப் பூங்காவை அமைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

அதேபோன்று தமிழ்நாடு உப்பு நிறுவனம்; தமிழ்நாடு உப்பு நிறுவனத்தில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2 ஆண்டு கால ஆட்சியில், ஆண்டு சராசரி விற்பனை அளவு 10, 12 கோடி ஆகும். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதாவது 1996-2001 வரைக்கும் சராசரி விற்பனை அளவு 5.86 கோடி ஆகும். இவற்றை ஒப்பிட்டுப் பார்த்தால் மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2 ஆண்டு கால சராசரி விற்பனை, தி.மு.க. ஆட்சியின் 5 ஆண்டு கால சாராசரியைக் காட்டிலும் சுமார் 2 மடங்கு ஆகும். அதாவது கிட்டத்தட்ட 340 சதவிகிதம் அதிகமாகும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். மேலும், இந்த நிறுவனம் ஆதாயப் பங்கு, குத்தகை மற்றும் கூடுதல் உரிமத் தொகை மூலம் கடந்த கால தி.மு.க. ஆட்சியில் அதாவது 1996-2001-ல் ரூ.1.38 கோடி மட்டுமே அரசுக்கு அளித்துள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய 2 ஆண்டு கால ஆட்சியில் மட்டும் 3.43 கோடி அரசுக்கு அளித்துள்ளது. இத்தொகை கடந்த கால தி.மு.க. ஆட்சிக் காலத்தில் அளிக்கப்பட்ட தொகையினைக் காட்டிலும் 2½ மடங்கு அதிகமாகும். தண்டமிழ் நாட்டில் மட்டுமின்றி கர்நாடக மாநிலத்திற்கும்

உப்பை அளித்து வரும் தமிழ்நாடு உப்பு நிறுவனம் 2002 ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை ரூ.34 லட்சம் இலாபம் ஈட்டியுள்ளது.

அதேபோன்று T.N.P.L. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் Hi-tech Map Litho என்று அழைக்கப்படும் புதிய உயர்தரக் காகிதத்தை உற்பத்தி செய்து இந்த காகித உற்பத்தி நிறுவனம்தான் தலைசிறந்த நிறுவனம் என்று தன்னிகரற்ற சாதனையாக இந்திய அரசால் முதல் வர்த்தக நிறுவனம் என்ற பெருமையினை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிலே இன்று பெற்றுள்ளது. இதே மாதிரிதான் 1991 முதல் 1996 ஆம் ஆண்டு வரை மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சியில் இருந்தபோது T.N.P.L. நிறுவனம் கிட்டத்தட்ட ரூ.274 கோடி ரூபாய் இலாபத்தில் இயங்கிக் கொண்டிருந்தது. அதற்குப் பின்னாலே வந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 1996-லிருந்து 2001 வரைக்கும் 59,896 மெட்ரிக் டன் உற்பத்தியை ஏற்றுமதி செய்து, வெறும் 132 கோடி ரூபாய்தான் இலாபம் ஈட்ட முடிந்தது.

முற்பகல் 10-45

2001 முதல் 2003 வரைக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் கடந்த இரண்டு ஆண்டு கால ஆட்சியிலேயே 53,651 மெட்ரிக் டன் ஏற்றுமதி செய்து, 137 கோடி ரூபாய் இப்போது இலாபம் ஈட்டியிருக்கிறது என்று சொன்னால் (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் ஐந்து ஆண்டு கால ஆட்சியில் செய்த சாதனைகளை, மாண்புமிகு அம்மா அவர்கள் இரண்டு ஆண்டு காலத்திலேயே செய்து இருக்கிறார்கள் என்பதற்கு இது அத்தாட்சியாக இருக்கிறது என்பதை நான் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல-இலாபமானது கடந்த கால தி.மு.க. ஆட்சியினைவிட 260 சதவிகிதம் அதிகம் என்பது இதிலிருந்து தெரிய வருகிறது.

அதேபோல், தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனம் நைட்ரோ கிளிசரின் உற்பத்தியில், 2002-2003-ல் இதுவரையிலும் செய்ய முடியாத அளவிற்கு 8,073 மெட்ரிக் டன் உற்பத்தி செய்திருக்கிறது. 66 இலட்சம் ரூபாய் கடந்த ஐந்து ஆண்டு காலத்திலே ஏற்பட்ட நஷ்டம். 66 இலட்சம் ரூபாய் நஷ்டத்திலே இருந்தது. இப்போது கிட்டத்தட்ட 11 கோடியே 75 இலட்சம் ரூபாய் இரண்டு ஆண்டு காலத்திலே இலாபத்திலே தமிழ்நாடு வெடிமருந்து நிறுவனம் இயங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக்கும், திறமைக்கும் இதுவும் ஓர் அத்தாட்சி என்பதை நான் மனமகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)



தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்; தமிழகத்தைத் தொழில் துறையில் முதல் மாநிலமாக்க கண்ணும்கருத்துமாக உள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாக, கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 4,083 சிறு தொழில் பிரிவினருக்கு ரூபாய் 364 கோடி நிதியுதவியை அளித்துள்ளார்கள். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே, ஐந்து ஆண்டு காலத்திலேயும் 183 நிறுவனங்களுக்கு மட்டுமே நவீனமயமாக்க உதவி அளிக்கப்பட்டது. ஆனாலும், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 111 நிறுவனங்களை நவீனமயமாக்க நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், தேசிய சம பங்கு நிதித் திட்டத்தின்கீழ் கடந்த கால தி.மு.க. ஆட்சியின் ஐந்து ஆண்டு காலத்தில் 495 நிறுவனங்களுக்கு மட்டுமே நிதியுதவி அளித்துள்ளது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் கடந்த இரண்டு ஆண்டு காலத்தில் மட்டும் 496 நிறுவனங்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், இந்நிறுவனம் காற்றாலைகள் அமைக்க ரூபாய் 11 கோடி நிதியுதவி வழங்கியுள்ளது என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் 1991-1996 ஆம் ஆண்டுகளில், தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாக 10,555 உற்பத்தி நிறுவனங்களுக்கு உதவி அளிக்கப்பட்டது. தொழில் துறையில் மிகவும் பின்தங்கி தமிழகத்தை இருண்ட காலத்திற்குக் கொண்டு சென்ற தி.மு.க. ஆட்சியில், அதாவது 1996-2001 ஆண்டுகளில் 5,696 உற்பத்தி நிறுவனங்களுக்கு மட்டுமே நிதியுதவி அளிக்கப்பட்டது.

பெண்களுக்குச் சம நீதி, சம தர்மம் என்று பெண்களின் முன்னேற்றத்திற்கு அயராது பாடுபட்டு வரும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் புனித ஆட்சியிலே தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் வாயிலாக 543 பெண் தொழில் முனைவோர் ரூபாய் 34 கோடி நிதியுதவி பெற்று உயர்ந்து உள்ளார்கள். ஆனால், கடந்த கால தி.மு.க. ஆட்சியில் 155 பெண் தொழில் முனைவோர் மட்டுமே பயனடைந்துள்ளார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நாடு, மொழி, இனம், எல்லை கடந்து இன்று பல கோடி மக்களுக்கும் தாயாய், தலைவியாய் விளங்குகின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலோடு தொழில் துறை சிறப்பான திட்டங்களைத் தீட்டி தமிழகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்திட அனைத்து முயற்சிகளையும் எடுக்கும் என இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுபோன்று, நேற்றுவரை நடந்த பிரச்சினைகள்; இராணி மேரி கல்லூரி பிரச்சினைகள்; இங்கே மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்கள், திராவிட முன்னேற்றக் கழக இயக்கத்தோடு சேர்ந்து கொண்டு, இராணி மேரி கல்லூரி பிரச்சினையில் வெளிநடப்புச் செய்தார்கள் என்பதற்காக உண்மையிலேயே—ஏற்கெனவே வருத்தம் இருந்தாலும்—என்னுடைய மானியக் கோரிக்கையின்போது வெளிநடப்பு நடந்த காரணத்தால் என்னுடைய வருத்தத்தை இதன் மூலம் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே விதி 110-ன்கீழ் நாமக்கல் கவிஞர் மாளிகையினுடைய பத்து மாடிக் கட்டடத்தினுடைய நிலைமைகளையெல்லாம் விளக்கிச் சொன்னார்கள். ஏற்கெனவே இராணி மேரி கல்லூரியில் கேப்பர் ஹவுஸ் என்கின்ற கட்டடம் இடிந்து விழுந்துவிட்டது; அதற்குப்பிறகு அதைப் புதுப்பித்து, அதே இடத்தில் கட்டித் தருகிறோம், மாணவிகளுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இருக்காது என்று சொன்ன பிறகும், நீங்களும் அவர்களோடு சேர்ந்து வெளிநடப்புச் செய்தது வருத்தமாக இருந்தாலும், நேற்றையதினம் எனது மானியக் கோரிக்கையின்போது வந்தது எங்களுக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. உங்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

முற்பகல் 10-50

திராவிட முன்னேற்றக் கழக அரசு, அவர்கள் எப்போதுமே சுயநலத்திற்காக (குறுக்கீடு) சொல்லிவிடுகிறேன் திராவிட முன்னேற்றக் கழக அரசு எப்பொழுதுமே, நாட்டு மக்களுக்காக, நாட்டிற்காக எதையுமே செய்வது கிடையாது. எந்த ஒரு துறையை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் பொதுவாக அதைக் குடும்பத் துறையாக எடுத்துக்கொள்வார்களே தவிர, நாட்டிற்காக இந்தத் துறைகள் இருக்கின்றன; நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தோடு அவர்கள் செயல்பட்டதே கிடையாது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள்



சொல்வார்கள்; வடக்கே வேங்கடம், தெற்கே குமரி; ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில் தன்னிகரில்லாதத் தலைவன் என்று தன்னைத் தானே பறை சாற்றிக் கொள்கிறாரே தவிர தமிழ் நாட்டிற்காக, தமிழ் மக்களுக்காக இதுவரையும் அவர்கள் எதுவுமே செய்தது கிடையாது என்பதை மட்டும் சொல்லிக் கொண்டு, 'அப்பாவுக்கு ஒரு அண்ணாமலை பல்கலைக்கழகம், மகனுக்கு ஒரு இராணி மேரிக் கல்லூரியா' என்பதை உங்களுக்குக் கேள்வியாக வைக்கிறேன். இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் அரிய பல கருத்துகளைச் சொல்லி இருக்கின்றீர்கள். உங்கள் கருத்துகள் அனைத்தும், வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும், கருணையோடு நிதி நிலைமையை அனுசரித்து பரிசீலிக்கப்படும் என்பதைச் சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்கள் சில அறிவிப்புகளை இங்கே வெளியிடச் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அறிவிப்புகளை வெளியிடுகிறேன்.

**எரிசக்தித் துறை**—ரூபாய் 352 கோடி செலவில் எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட ஒரு புதிய 101 மெகாவாட் திறனுடைய மின் திட்டம் நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள குத்தாலத்தில் மின் வாரியத்தால் நிறுவப்பட்டு வருகிறது. இத்திட்டம் நடப்பாண்டில் தொடங்கப்படும்.

தமிழ்நாடு மின்சார வாரியத்தால் ரூபாய் 383 கோடி செலவில் நிறுவப்பட்டு வரும் 150 மெகாவாட் திறன் கொண்ட பைக்காரா இறுதி நிலை புனல் மின் திட்டம் 2003-2004 ஆம் ஆண்டில் மின் உற்பத்தியைத் தொடங்கும்.

ஆர்.கே. எனர்ஜி லிமிடெட் என்ற தனியார் நிறுவனம், எரிவாயுவை எரிபொருளாகக் கொண்ட 53 மெகாவாட் திறனுடைய திட்டத்தை இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வழுதூரில் 2003-2004-ல் இயக்கி வைக்கத் திட்டமிட்டுள்ளது.

காற்றாலை மூலம் மின் உற்பத்தி செய்வதில் 2002-2003 ஆம் ஆண்டு இறுதியில் 990 மெகாவாட் திறனை உருவாக்கி தமிழ்நாடு தொடர்ந்து இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழ்கிறது. நடப்பு ஆண்டில், அடுத்த ஓரிரு மாதங்களில் 1000 மெகாவாட் அளவை எய்தி இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலமும் செய்யாத சாதனையைத் தமிழ்நாடு படைக்க இருக்கிறது.

தமிழ்நாடு மின்சார வாரியம் மற்றும் நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் ஆகியவற்றின் கூட்டு முயற்சியாக ரூபாய் 4000 கோடி

செலவில், தூத்துக்குடியில் நிலக்கரியை எரிபொருளாகக் கொண்ட 1000 மெகாவாட் திறனுடைய ஒரு புதிய அனல் மின் திட்டம் அமைக்கப்படும்.

சென்னை பெருநகரின் மின் பகிர்மானத்தில் தடையின்றி மின்சாரம் விநியோகிக்க கட்டமைப்பை ரூபாய் 441 கோடி செலவில் வலுப்படுத்தி மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

ரூபாய் 65 இலட்சம் செலவில் மின் நுகர்வோரின் குறைகளை உடனடியாகத் தீர்க்கும்பொருட்டு தமிழ்நாடு மின்சார வாரியம் கணினிமயமாக்கப்பட்ட மின் தடை நீக்கும் மையம் ஒன்றை சென்னை மாநகரில் நிறுவவுள்ளது. இதன் மூலம் மின் நுகர்வோர் மின்தடை பற்றிய புகார்களை ஒரே நான்கு இலக்க எண் கொண்ட தொலைபேசி மூலம் தெரிவிக்கலாம்.

நடப்பு ஆண்டில் வனப் பகுதிகள் மற்றும் தொலைதூர மின் வசதியற்ற 150 குக்கிராமங்களுக்கு மைய அரசின் மானிய உதவியுடன் ரூ.15 கோடி செலவில் சூரிய ஒளி சக்தியால் இயங்கும் வீட்டு விளக்குகள் மற்றும் தெரு விளக்குகள் அமைத்துத் தரப்படும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் தாவரச் சக்தியான விறகு மற்றும் பிற வேளாண் கழிவுகளைக் கொண்டு புதிய மின் உற்பத்தி நிலையங்கள் அமைத்து மின் உற்பத்தித் திறனை 300 மெகாவாட் அளவிற்கு அதிகரிக்க, தனியார் தொழில் நிறுவனங்களை ஊக்குவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

முதல் கட்டமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் மனிதக் கழிவினால் இயங்கும் ஒரு வாயுகலன் அமைப்பதற்கு மானிய உதவி வழங்குவதற்காக ரூபாய் 43.50 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

சூரிய வெப்ப சக்தியினைப் பயன்படுத்தி தேயிலை, பருப்பு மற்றும் பிற வேளாண் பொருட்கள், தோல், மீன் ஆகியவற்றை உலர்த்தவும், பிற வெப்ப சக்தி தேவையைப் பூர்த்தி செய்யவும் அரசு மானிய உதவி வழங்குவதற்காக முதற்கட்டமாக இவ்வாண்டு ரூபாய் 4.61 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதுப்பிக்கவல்ல எரிசக்தி பற்றி விழிப்புணர்வுகள் ஏற்படுத்துவதற்காக ரூபாய் 5.00 இலட்சம் ஒதுக்கீடு செய்து அனைத்து மாவட்டங்களிலும் உள்ளாட்சி மன்றங்களின் பிரதிநிதிகள், தொழிலதிபர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்காக கருத்தரங்குகள் நடத்தி



மாற்றுச் சக்திகளின் பயன்பாட்டை ஊக்குவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

நடப்பு ஆண்டில் அரசு மருத்துவமனைகள், விடுதிகள், தனியார் தொழிற்சாலைகள் மற்றும் நிறுவனங்களில் சூரிய சக்தி சுடுநீர் கலன்கள் அமைப்பதை ஊக்குவிப்பதற்காக அரசு மானிய உதவி வழங்க ரூ.11.94 இலட்சம் ஒதுக்கப்படுகிறது.

நடப்பாண்டில் ரூபாய் 25.07 இலட்சம் செலவில் சென்னை, திருநெல்வேலி, சேலம் ஆகிய இடங்களிலுள்ள நடமாடும் மின்சார சோதனைக் கூடங்கள் மேம்படுத்தப்படும்.

முற்பகல் 10-55

**தொழில் துறை**—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 22-4-2003-இல் அடிக்கல் நாட்டப்பட்டு ரூபாய் 62.50 கோடி முதலீட்டில் உயிரியியல் சார்ந்த நிறுவனங்களை உருவாக்க தற்போது செல்வாக்கிலுள்ள தொழில்நுட்பம் கொண்டு அமைக்கப்படும் தரமணி—டைசல் உயிரியியல் தொழில்நுட்பப் பூங்கா, 2004 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் செயல்படத் தொடங்கும்.

ரூபாய் 450 கோடி செலவில் புதிய தகவல் தொழில்நுட்பப் பூங்காவிற்கான பணி இவ்வாண்டு துவங்கும். இதன் முதற்கட்டப் பணி 18 மாத காலத்தில் முடிவடையும். ஒவ்வொன்றும் 5 இலட்சம் சதுர அடி கொண்டு மூன்று கட்டங்களாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனமும், உள் கட்டமைப்பு குத்தகை மற்றும் நிதி சேவை நிறுவனமும் இணைந்து உருவாக்கிய கூட்டு நிறுவனமான தமிழ்நாடு சாலை மேம்பாட்டு நிறுவனம், சர்தார் பட்டேல் சாலை—மத்திய கைலாசிலிருந்து கிழக்குக் கடற்கரை சாலை வரை ஆறு வழித்தடங்கள் கொண்ட உலகத்தரம் வாய்ந்த தகவல் தொழில்நுட்ப அதிவேகச் சாலை ஒன்றினை அமைக்கும்.

டிட்கோ நிறுவனமும், இந்திய வர்த்தக மேம்பாட்டுக் கழகமும் இணைந்து அமைத்துள்ள தமிழ்நாடு வர்த்தக மேம்பாட்டுக் கழகம் மூலமாக, ஆயிரம் இருக்கைகள் கொண்ட கூட்டம் நடத்தும் மையம் ஒன்று உலகத் தரத்தில் ரூபாய் 26.83 கோடி செலவில் 2003-2004 ஆம் ஆண்டில் செயல்படும்.

*2003-2004* ஆம் ஆண்டில், தூத்துக்குடி, எண்ணூர், ஓசூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில், தனியார்/கூட்டு முயற்சி மூலம் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் உருவாக்கப்படும்.

அன்புக்குரிய ஹேமா அவர்களுக்கு, நாகர்கோவில் அருகில் செண்பகராமன்புதூர் என்ற இடத்தில் இரப்பர் வாரியம் மற்றும் தனியாருடன் இணைந்து இரப்பர் பூங்கா ஒன்றினை டிட்கோ நிறுவனம் அமைக்க இவ்வாண்டு ஒப்புதல்கள் பெறப்பட்டு பணிகள் தொடங்கப்படும். (குறுக்கீடு)

மலர்ச் செடி வளர்க்கும் தொழில்கள் வளர்ச்சி அடைய இந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் பல வசதிகள் கொண்ட டான்ஃபுளோரா பூங்கா ஓசூருக்கு அருகில் டிட்கோ நிறுவனத்தால் இவ்வாண்டு அமைக்கப்படும். இந்தத் திட்டத்திற்கான உள் கட்டமைப்பு முதலீடு ரூபாய் *24.80* கோடியாகும். இத்துடன் இப்பூங்காவில் மலர்ச்செடி வளர்ப்பாளர்கள் ரூபாய் *50* கோடி முதலீடு செய்து தொழில் தொடங்க உள்ளனர்.

தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தால், சென்னைக்கருகில் இந்தியாவிலேயே முதன் முதலாக தனியார் துறை மூலமாக மோட்டார் வாகன சோதனைத் தடம் ஒன்று ரூபாய் *200* கோடி செலவில் உருவாக்கப்படவுள்ளது.

தோல் மற்றும் தேங்காய் நார்த் தொழில்களுக்கான முக்கிய உள் கட்டமைப்பினைப் பொது மற்றும் தனியார் கூட்டுத் திட்டத்தின்கீழ் இந்திய அரசு நிதி உதவியுடன் சிப்காட் உருவாக்கவுள்ளது. ரூபாய் *27* கோடி செலவில் ஆம்பூரில் தோல் தொழில்களுக்கான தொழிற்பிரிவுகள் உருவாக்க நிதி உதவி கோரி இந்திய அரசுக்குத் திட்ட அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. ரூபாய் *40* கோடி செலவில், சேலம் மற்றும் தருமபுரி மாவட்டங்களில் தேங்காய் நார்த் தொழில்களுக்கான தொழில் பிரிவுகள் அமைக்க இந்திய அரசுக்கு இவ்வாண்டு செயற்குறிப்பு அனுப்பப்பட உள்ளது.

முதலீட்டாளர்களை ஈர்க்கக்கூடிய குறிப்பிட்ட சில தொழிற்பேட்டைகளின் மேலாண்மையில் சங்கங்களை ஈடுபடச் செய்ய தொழிற்பேட்டை உள் கட்டமைப்பினை தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம் மேம்படுத்தும். சிப்காட் அமைத்துள்ள அனைத்துத் தொழிற்பேட்டைகளின் உள் நிதியைப் பயன்படுத்தி உள்ளாட்சி



நிர்வாகமும், சிப்காட்டும் *50:50* விழுக்காடு என்ற பங்கீட்டு அடிப்படையில் உள் கட்டமைப்பு வசதிகளைப் புதுப்பிக்கும். மேலும், ஓசூர் மற்றும் இராணிப்பேட்டை தொழிற்பேட்டைகள் ரூபாய் *5* கோடி முதலீட்டுச் செலவில் தரம் உயர்த்தப்படும்.

சிங்கப்பூர் நிறுவனம் ரூபாய் *250* கோடி செலவில் சிறுசேரி தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் ஒருங்கிணைந்த தொழில் நகரியம் ஒன்றை உலகத்தரம் வாய்ந்த வசதிகளுடன் உருவாக்க உள்ளது. இதில் வீட்டு வசதி வளாகம், வணிக வளாகம், தகவல் தொழில்நுட்ப வளாகம் மற்றும் தொடர்புடைய சமூக உள் கட்டமைப்புகளுடன் உருவாக்கப்படும்.

மாசுபடுத்தும் தீங்கு விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைக் கழிவுகளிலிருந்து மக்களைக் காக்கும் பொருட்டு இந்தக் கழிவுகளை சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிமுறைகளுக்கேற்ப அறிவியல் முறையில் அகற்றும் பொருட்டு ரூபாய் *36* கோடி செலவிலான திட்டத்திற்கு காஞ்சிபுரம் மாவட்டம், மேலக்கோட்டையூரில் இடம் ஒதுக்கப்படும்.

ஏற்கெனவே நிதி உதவி பெற்றவர்களுக்கு வட்டியினை *23* விழுக்காட்டிலிருந்து *15.25* விழுக்காடாகக் குறைப்பதற்கு தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் "சுழற்சி முறைச் சலுகை" என்ற திட்டத்தை அறிமுகப்படுத்த உள்ளது. இத்திட்டத்தின் மூலம் *4,900* சிறுதொழில் நிறுவனங்கள் பயனடையும். இக்கழகம் இந்த ஆண்டு முதல் வழங்கும் கடன் தொகை அடிப்படையில் தற்போதைய வட்டி விகிதத்தில் *0.25* விழுக்காடு முதல் *0.75* விழுக்காடு வரை குறைக்க உள்ளது. இதற்கு மேலும் தவணை தவறாமல் கடனைத் திருப்பிச் செலுத்தும் வாடிக்கையாளர்களுக்கு இரண்டு விழுக்காடு வட்டிக் கழிவும் அளிக்கப்படும். ஏற்கெனவே இயங்கி வரும் சிறுதொழில் நிறுவன வாடிக்கையாளர்கள் தரச் சான்றிதழ் (ஐ.எஸ்.ஓ. *9000*) பெற ஏதுவாக இக்கழகம் ரூபாய் *75,000* வரை மானியமாக வழங்க உள்ளது. இத்திட்டத்தின்கீழ் விண்ணப்பிக்கும் தற்போதைய சிறு தொழில் நிறுவனங்கள் அனைத்திற்கும் இம்மானியம் கிடைக்கும்.

**தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம்**—ரூபாய் *750* கோடி மூலதனச் செலவில் தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் நவீனப்படுத்தப்படும். இத்திட்டத்தில் மரக்கூழ் மற்றும் கரும்புச்

சக்கை கூழ் தயாரிப்பதனை நவீனப்படுத்தும் திட்டமும் மூன்றாவது காகித இயந்திரம் நிறுவும் திட்டமும் அடங்கும். இதற்கான விவரமான திட்ட அறிக்கை விரைவில் தயாரிக்கப்பட்டு இரண்டாண்டில் பணிகள் முடிக்கப்படும்.

*முற்பகல் 11-00*

**தமிழ்நாடு உப்பு நிறுவனம்**—ரூ.90 இலட்சம் செலவில் அயோடின் கலந்த உப்பு தயாரிக்கும் தொழிற்சாலையின் உற்பத்தி வசதிகளை மேம்படுத்தவும், இரும்பு மற்றும் அயோடின் கலந்த உப்பு உற்பத்தி செய்யவும், தமிழ்நாடு உப்பு நிறுவனம் நடவடிக்கைகளை மேற்கொள்ளும். தமிழ்நாடு உப்பு நிறுவனம் புரோமின் உற்பத்தி செய்வதற்குரிய தொழிற்சாலையை, இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள வாலிநோக்கத்தில் தனியார் துறை பங்கேற்புடன் ரூ.2 கோடி செலவில் நிறுவும்.• இந்நிறுவனம் உப்புக் கழிவு நீரிலிருந்து வரும் பிட்டனை பயன்படுத்தும். இதனால் ஆண்டு ஒன்றுக்கு ரூ.30 இலட்சம் வரை தமிழ்நாடு உப்பு நிறுவனம் பயன்பெறும். மேலும், இதன்மூலம் மிகவும் பின்தங்கிய இராமநாதபுரம் மாவட்டத்தில் வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**தமிழ்நாடு கனிம நிறுவனம்**—தற்போது செல்வாக்குடன் உள்ள தொழில்நுட்பம் கொண்டு வெட்டி மெருகிடப்படும் கிரானைட் பலகைகள் தயாரிக்கும் தொழிற்சாலையை ரூ.30 கோடி செலவில் கூட்டு முயற்சியில் நிறுவ தமிழ்நாடு கனிம நிறுவனம் உத்தேசித்துள்ளது. இந்நவீனத் தொழிற்சாலை இருங்காட்டுக்கோட்டை சிப்காட் தொழில் வளாகத்தில் அமைக்கப்படும். இத்தொழிற்சாலை, மூலப்பொருட்களுக்கு மதிப்பூட்டுவதோடு நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளையும் உருவாக்கும்.

**தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம்**—வெளிநாட்டின் நேரடி மூலதனத்தைக் கவர்வதற்கு தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் உள் கட்டமைப்பு வசதிகள் வலுப்படுத்தப்படும். முதலீட்டை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கப்படும்.



அசைடு திட்டத்தின்கீழ் உள் கட்டமைப்பு வசதி உதவிக்காகப் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு இணைப்பு முகமையாக தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் செயல்படும். தொழில் மற்றும் சேவைகள் குறித்து உலக வர்த்தக அமைப்பின் கருத்துகள் பற்றி அனைத்து விளக்கங்களையும் வழங்க தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் இணைப்பு முகமையாக செயல்படும். இதற்கென்று ஒரு தனி இணைய தளம் உருவாக்கப்படும்.

**புவியியல் மற்றும் சுரங்கத் துறை**—சுரங்கத் துறையில் வாய்ப்புகளைப் பெருக்குவதற்கு பழுப்பு நிலக்கரி, வெங்கக்கல், பில்லைக்கல், ஜிப்சம் மற்றும் சுண்ணாம்புக்கல் ஆகிய கனிமங்களின் இருப்பை, பொதுத் துறை, தனியார் துறை மற்றும் இந்திய அரசு ஆகியவற்றுடன் கூட்டுசேர்ந்து, புவியியல் மற்றும் சுரங்கத் துறை கனிம வள மறு ஆய்வுகளை மேற்கொள்ளும்.

தமிழ்நாட்டில் தற்போதைய கனிம வளம் மற்றும் இருக்கக்கூடிய ஆதாரங்களை உள்ளடக்கிய தகவல் தொகுப்பினைக் குறியீடு செய்வதற்கான நிலவியல் தகவல் அமைப்புப் பணி இவ்வாண்டில் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவியியல் மற்றும் சுரங்கத் துறையிலான ஒரு செய்தியை விட்டுவிட்டேன். கடந்த கால திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அதாவது 1996-லிருந்து 2001 வரைக்கும் புவியியல் மற்றும் சுரங்கத் துறையில் அவர்களால் வசூலிக்கப்பட்ட seigniorage fees போன்றவற்றிலிருந்து 5 ஆண்டுகளில் மட்டும் 561 கோடி ரூபாய்--அவர்கள் ஆண்டகாலத்திலே வசூலிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், அவர்களுடைய 5 ஆண்டுகளில் 561 கோடி ரூபாய் வரவு வந்திருக்கிறது. இப்பொழுது அம்மாவினுடைய ஆட்சியில் 2 ஆண்டுகளில் மட்டும் 571 கோடி ரூபாய் வசூல் செய்து சாதனை படைத்திருக்கிறார்கள் என்பதை நான் மகிழ்ச்சியோடு தெரிவித்து (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் விவசாயிகள் இதுகாறும் இலவச மின்சாரம் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே இதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவான விளக்கத்தைச் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு). சொல்லுங்கள்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சலுகையாகக்கூட அல்ல, உரிமையாக பல காலமாக அனுபவித்துக் கொண்டிருக்கிற அனைத்துத் தரப்பு விவசாயிகளுக்கும் சிறு, குறு என்றெல்லாம் பாகுபாடு இல்லாமல் விவசாயிகளாக இருக்கின்ற அத்தனை பேருக்கும் பம்ப்செட் மூலம் இறைத்துக்கொண்டிருக்கிற அனைத்து விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்க வேண்டும் என்பதோடு, குடிசையிலே வாழுகின்ற ஏழை மக்களுக்கும் இலவச மின்சாரம் வழங்க வேண்டுமென்று காங்கிரஸ் கட்சியின் சார்பிலே வலியுறுத்திக் கூறிக்கொள்கிறேன். அதை வழங்க அரசாங்கம் முன்வருமா, உடனடியாக அறிவிப்பு வெளியிடுமா என்று அமைச்சரிடத்திலிருந்து அறிய விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஹேமச்சந்திரன், எல்லோரும் கேட்டுவிடட்டும். ஹேமச்சந்திரன், என்ன கேளுங்கள். (குறுக்கீடு) திரு. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகளுக்கு இருந்து வந்த ஒரே சலுகை, உரிமை இந்த இலவச மின்சாரம். இந்த இலவச மின்சாரம் தற்போது அரசாலே மாற்றி அமைக்கப்பட்டிருக்கிற சூழ்நிலையிலே, விவசாயிகளுடைய வாழ்க்கையே கேள்விக்குறியாகி, இனி வாழ்வதா, சாவதா என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆகையால், விவசாயிகளுடைய நலன் கருதி தமிழக அரசு, முதலிலே அறிவித்ததற்கேற்ப, மேலும் ரூ.81 கோடியை ஒதுக்கினாலே எல்லோருக்கும் தொடர்ந்து வழங்கிவிடலாம். ஆகவே, அந்தச் சூழ்நிலையிலே விவசாயிகளுக்கும் இலவச மின்சாரம், குடிசைவாசிகளுக்கும் இலவச மின்சாரம்....



*முற்பகல் 11-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் விளக்கம் சொல்லிவிட்டார்கள். நேற்றைக்கே விளக்கம் சொல்லிவிட்டார்கள். நீங்கள் மறுபடியும், மறுபடியும் அதையே கேட்டு என்ன பயன்? திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்களுக்கு 29 மாத காலம் ஆனதற்குப் பிறகும் ஊதியத்தைப் புதுப்பித்து நிர்ணயிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்ற வேண்டுகோளை நான் நேற்று இங்கே பேசுகிற நேரத்திலே குறிப்பிட்டேன். ஆனால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதுசம்பந்தமாக எந்தக் கருத்தையும் தெரிவிக்காமல் இருந்தது வருத்தத்திற்குரியது. அதுசம்பந்தமாக அரசினுடைய நிலை என்ன என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச். ராஜா, என்ன என்று சொல்லுங்கள்.

**திரு. எச். ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன இது? எல்லோரும் எழுந்திருக்கிறீர்கள்? இரண்டாவது ரவுண்ட் பேச்சா?

**திரு. ஜி. பழனிசாமி:** இரண்டாவது ரவுண்ட் அல்ல. தமிழ்நாட்டிலே கிட்டத்தட்ட 14 ஆண்டு காலமாக இலவச மின்சாரம் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுபற்றி ஏற்கெனவே சொல்லியாயிற்று. (குறுக்கீடுகள்)

**திரு. ஜி. பழனிசாமி:** நம்முடைய மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுடைய இன்றைய அறிவிப்பிலாவது அரசு எடுத்த முடிவினை வாபஸ் பெற்றுக்கொண்டு, விவசாயிகளுக்கு ஒரு மகிழ்ச்சிகரமான அறிவிப்பை அறிவிப்பார் என்று நாங்களெல்லாம் எதிர்பார்த்தோம். அரசாங்கத்தினுடைய பிடிவாதத்திலேயிருந்து இதுவரையிலும் விலகவில்லை. விவசாயிகளுடைய மின்சாரக் கட்டணத்தைத்

திரும்பப் பெறாத காரணத்தினால், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு. *(குறுக்கீடுகள்)*

**(அ) கோரிக்கை எண் 13—எரிசக்தித் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 13, எரிசக்தித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். *(குறுக்கீடுகள்)* பதில் சொல்ல வேண்டுமென்ற அவசியம் இல்லை. *(குறுக்கீடுகள்)* திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன். *(குறுக்கீடு)*

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத்தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. ராஜகோபால்.

**திரு. ஆ. ராஜகோபால்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. லா. சந்தானம். *(குறுக்கீடுகள்)*

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. *(குறுக்கீடுகள்)*

"எரிசக்தித் துறை பற்றிய 13 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.274,47,18,000/- மூலதனக் கணக்கில் ரூ.25,00,00,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.212,25,00,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன. *(குறுக்கீடுகள்)*

**(ஆ) கோரிக்கை எண் 26—தொழில் துறை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 26, தொழில் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம். *(குறுக்கீடுகள்)*

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** எங்கள் கோரிக்கையை ஏற்காததைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

(இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)

[பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகிய கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், இருக்கையில் இல்லை. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. கோவை தங்கம், இருக்கையில் இல்லை, திரு. கோவை தங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை. திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

திரு. ஆ. ராஜகோபால், இருக்கையில் இல்லை. திரு. ஆ. ராஜகோபால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"தொழில் துறை பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.41,32,73,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.4,00,02,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மின்சாரம் மற்றும் தொழில் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு**

**(ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம்**

**(உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன் வளம்**

**(இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று எடுத்துக்கொள்ளப்படவுள்ள மூன்று மானியக் கோரிக்கைகளையும் சேர்த்தே விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துகளை அந்தந்த மானியக் கோரிக்கைகள் மீது தெரிவிக்கலாம்.

மானியக் கோரிக்கை எண் 6, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.176,98,50,000/-மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 5329, திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,98,50,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6316, திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,98,50,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6299, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,98,50,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4677, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறந்தாங்கி தொகுதி, அத்தாணி கிராமத்தில் கால்நடை மருத்துவக் கிளை நிலையம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.176,98,50,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல், ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (ஈ) கோரிக்கை எண் 8 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 8-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.13,15,52,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6304, திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,15,52,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: வெட்டுத் தீர்மானம் எண் 4684, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி நகரில் பால் கூட்டுறவுச் சங்கம் ஒன்று தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- பால்வளம் பற்றிய 8ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.13,15,52,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**(உ) மானியக் கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 7-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.54,61,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.2,96,10,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 6713, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,61,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,96,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6301, திரு. லா. சந்தானம்.



**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,61,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,96,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 480, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் நீலகிரி மாவட்டத்தில் தரமான மீன்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,61,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,96,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4680, திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அறந்தாங்கி தொகுதியிலுள்ள கடலோர மீனவ கிராம மக்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.54,61,91,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.2,96,10,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை-கால்நடை பராமரிப்பு" பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம்" பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம்" பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற

@ 361 முதல் 408 வரையிலான பக்கங்களில் இணைப்பு I-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ 409 முதல் 430 வரையிலான பக்கங்களில் இணைப்பு II-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கான விளக்கங்களை அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, மீன்வளத் துறை மற்றும் பால் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கைகளில் காங்கிரஸ் கட்சியின் சார்பாக எனது கருத்துகளைச் சொல்ல வாய்ப்பினை வழங்கிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியாவின் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியிலே ஏறக்குறைய 25 சதவிகிதம் தமிழகத்திலேயிருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது. தமிழகத்தைப் பொறுத்தமட்டிலே ஏறக்குறைய 591 கடலோர மீனவர் கிராமங்கள் இருக்கின்றன. இந்த 591 கடலோர மீனவர் கிராமங்களும் ஆண்டுக்கு ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலவாணியைப் பெற்றுத் தருகின்றன. இவ்வாறு ஆயிரம் கோடி ரூபாய் அன்னியச் செலாவணியைப் பெற்றுத் தருகின்ற இந்த மீனவ மக்களுடைய மீனவ கிராமங்களுக்கும், மீனவர்களுக்கும் அரசு பல்வேறு நலத் திட்டங்களைச் செய்திருந்தாலும், அவர்களுக்கு இன்னும் பல்வேறு நலத் திட்டங்களையும், பல்வேறு உதவிகளையும் இந்த அரசு செய்ய முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். துறைகளிலே மிகவும் தொன்மை வாய்ந்த துறை இந்த மீன்வளத் துறையாகும். இந்த மீன்வளத் துறையிலே பன்னாட்டு நிறுவனங்கள் தற்போது போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு போட்டி போடுகின்ற இந்த மீன்வளத் துறையிலே தமிழக அரசு இன்னும் கவனம் செலுத்தி, தமிழகத்திற்கு இன்னும் அதிகமான அளவிலே அன்னியச் செலாவணியைப் பெற்றுத்தர வேண்டுகிறேன். அண்மையிலே கொள்கை விளக்கக் குறிப்பிலே மீன்வள ஆதாரங்களைப் பெருக்குவதற்கு முக்கிய வகை மீன்கள் மற்றும் இறால் வகைகளை வளர்த்து கடலில் இருப்பு செய்யும் திட்டத்தினை மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்த இந்த அரசு முடிவு எடுத்ததற்கு தமிழக மீனவர்களின் சார்பாக என் வரவேற்புகளை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-15*

தமிழகத்திலே அண்மைக் காலங்களிலே மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்கின்றபோது இயற்கைச் சீற்றத்தாலும், இயந்திரக்

@ 431 முதல் 455 வரையிலான பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

கோளாறுகளாலும், மீன்பிடிப் படகுகள் மூலம் தமிழக மீனவர்கள், அதிகமான மீன்களைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தொலை தூரங்களுக்குச் செல்கின்றபோது, அங்கே திசை தவறி, கடல் எல்லைக்கு அப்பால் சென்றுவிடுகிறார்கள். அருகிலே இருக்கின்ற இலங்கை அரசும், இலங்கை கடற்படையினரும் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் தமிழகப் பகுதியிலேயிருந்து திசை தவறிய மீனவர்களைப் பிடிப்பதும், அவர்களைச் சுடுவதும், அவர்களுடைய படகுகளைக் கைப்பற்றுவதும், அவர்களுடைய மீன் வலைகளைச் சேதப்படுத்துவதும், என்பன போன்ற நிகழ்ச்சிகள் தொடர்ந்துகொண்டே இருக்கின்றன. இன்று ஆளுகின்ற அரசு இதைத் தடுப்பதற்கு ஒரு சரியான நடவடிக்கையை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன். உதாரணமாக, அண்மையிலே, 3 மாத காலமாக இராமேஸ்வரம் பகுதி, அதுபோல நாகப்பட்டினம் பகுதிகளில் மிக அதிகப்படியான மீனவர்களை மாதாமாதம் 100 மீனவர்கள், 50 மீனவர்கள் என்று இலங்கை அரசு கைது செய்து, அவர்களைப் பல நாட்களாக, பல மாதங்களாகச் சிறையிலே வைத்திருக்கிறார்கள். குறிப்பாக இராமேஸ்வரம் பகுதியிலே இருந்து தற்போது ஒரு வார காலத்திற்கு முன்புதான் 50 மீனவர்களை விடுதலை செய்தார்கள். ஆனால் நாகப்பட்டினம் மாவட்டத்திலே, கீச்சாங்குப்பம் என்ற கிராமத்திலே இருக்கின்ற....

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். கடந்த காலத்திலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்படுகின்றபொழுது, 2 மாதத்திலிருந்து 10 மாதங்கள் வரை சிறையிலே இருந்திருக்கின்றார்கள். இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற உடனேயே மீனவர்கள் கைது செய்யப்படுகின்றபொழுது, பாரதப் பிரதமர் அவர்களிடம் தொடர்பு கொண்டு, இலங்கையிலுள்ள இந்திய தூதரகத்தைத் தொடர்பு கொண்டதனால், வெகு விரைவிலே, சொல்லப்போனால், மாதக் கணக்கிலே என்று சொல்வதைவிட நாள் கணக்கிலேயே மீனவர்கள் வெளிவந்திருக்கின்றார்கள். உதாரணத்திற்கு, இந்த வருடம் மார்ச் மாதத்திலே 3,4 தேதிகளிலே இராமேஸ்வரத்திலேயிருந்து சென்ற மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டபோது, 4, 5 நாட்களில்கூட விடுதலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அதோடு, இலங்கை அதிபர் மாண்புமிகு சந்திரிகா அவர்கள் இங்கு



வந்திருந்தபொழுது, தமிழகத்தினுடைய முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சீக்கிரத்திலே எங்களுடைய மீனவர்களை விடுதலை செய்ய வேண்டுமென்று கூறியபோது அதனை ஏற்று, நேற்றுகூட 26 மீனவர்களையும், 31 படகுகளையும் விடுவித்திருக்கின்றார்கள் என்ற நல்ல செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. இருந்தாலுங்கூட, நாகை மாவட்டம், கீச்சான்குப்பம் என்ற கிராமத்தைச் சேர்ந்த 4 மீனவர்கள் தொடர்ந்து 50 நாட்களுக்கு மேலாக அங்கே சிறையிலே அடைக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய படகுகளை அவர்கள் கைப்பற்றி வைத்திருக்கிறார்கள். இதனால் அந்த கிராமத்திலே தொடர்ந்து ஒரு சோகமான சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தொடர்ந்து இராமேஸ்வரம் மற்றும் பல்வேறு பகுதிகளிலேயிருந்து சென்ற மீனவர்கள் விடுவிக்கப்பட்டிருந்தாலும், இந்த மீனவர்களையும் விடுவிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றேன். இந்தப் பிரச்சினை தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாதந்தோறும் இதைத் தவிர்க்கின்ற வகையிலே கடந்த காலங்களிலே 1976ஆம் ஆண்டு வெட்ஜ் பேங்க் ஒப்பந்தம் என்ற வகையிலே இலங்கை அரசும், இந்திய அரசும் ஓர் ஒப்பந்தத்தை செய்து, அந்த ஒப்பந்தத்தின் வாயிலாக இலங்கையிலே இருக்கின்ற கடல் பகுதியிலே மீன்கள் குறைந்தபொழுது, இலங்கை மீனவர்கள் இந்தியப் பகுதியிலே தொடர்ந்து 3 ஆண்டுகள் மீன் பிடித்திருக்கிறார்கள். அதுபோல, இன்று நமது இந்தியக் கடலோரப் பகுதியிலே மீன் வகை மிகவும் குறைந்திருக்கின்ற காரணத்தினால்தான் தொலைதூரங்களுக்கு இந்த மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அதுபோன்ற ஓர் ஒப்பந்தத்தை இந்திய அரசும், தமிழக அரசும் செய்து இந்திய பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்கு நல்ல பலனை ஏற்படுத்தித் தர வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அதுபோல், தற்போது விசைப்படகு மீனவர்களுடைய நிலை கேள்விக்குறியாக இருக்கின்றது. அவர்களுடைய பொருளாதாரம் மிகவும் தாழ்ந்துகொண்டே இருக்கின்றது. இதற்குக் காரணம், அவர்கள் பிடிக்கின்ற மீன்களுக்குச் சரியான விலை கிடைப்பதில்லை. அதோடு, ஆண்டாண்டு டீசலினுடைய விலை உயர்ந்துகொண்டிருக்கிறது. உதாரணமாக, இன்று மத்தியிலே இருக்கின்ற பாரதிய ஜனதா அரசு பொறுப்பினை ஏற்ற இந்தக் காலக்கட்டத்தில், ஏறக்குறைய 11 முறை டீசல் விலை உயர்த்தப்பட்டிருக்கிறது. ஆனால், அதற்குரிய, டீசலுக்குரிய மானியங்கள் — மத்திய அரசும் சரி, மாநில அரசும் சரி; லிட்டர்

ஒன்றுக்கு 45 பைசாதான் வழங்குகின்றன. இது தொடர்ந்து 10 ஆண்டுகளாக வழங்கப்படுகிறது. இந்த டீசல் உயர்வினால் மீனவர்கள் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால், நமது தமிழகத்திற்கு அருகிலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்திலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மீனவர்களுக்கு டீசல் வழங்குகிறபோது, அந்த அரசு, டீசலுக்குரிய விற்பனை வரி மற்றும் ஏனைய வரிகளையெல்லாம் இரத்து செய்து, அந்த மீனவர்களுக்குக் குறைந்த விலையிலே டீசல் வழங்குகிறார்கள். இதை இந்த அரசும் செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டீசல் மானியத்தைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்கள். டீசல் மானியம் என்பது, மத்திய அரசாங்கம் 80 சதவிகிதமும், மாநில அரசாங்கம் 20 சதவிகிதமும் கொடுக்க வேண்டும் என்பதுதான். அதிலே 28 பைசா மத்திய அரசாங்கமும், 17 பைசா மாநில அரசாங்கமும் கொடுக்கின்றன. மத்திய அரசாங்கம் 80 சதவிகித பணத்தைக் கொடுத்தால், நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு இதைப்பற்றிச் சிந்திக்கும் என்பதை நான் உங்களிடம் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவிலே பல்வேறு மாநிலங்களிலே இருக்கின்ற தனியார் பெரிய மீன்பிடிக் கப்பல்கள் வைத்திருப்பவர்களெல்லாம், இந்தியக் கடலோர, இந்திய எல்லைப் பகுதிகளுக்குச் சென்று, அன்னியப் பகுதியிலேயிருந்து வருகின்ற கப்பல்களிடமிருந்து டீசலைப் பெறுகிறார்கள். அதற்கு இந்திய அரசு அவர்களுக்கு அனுமதி அளித்திருக்கிறது. அவர்கள் டீசல் பெறுவதற்கு விலை ரூ.15/-. ஆனால், நமது தமிழகத்திலே ஏழையெளிய மீனவர்கள் பயன்படுத்துகின்ற, சாதாரண மீனவர்கள் பயன்படுத்துகின்ற விசைப்படகுகளுக்கு டீசலுக்கு நுழைவு வரி, சுங்க வரி, ஏறக்குறைய ஐந்து ரூபாய் அளவிற்கு வரிகள் விதிக்கப்படுகின்றன. அந்த வரியை இரத்து செய்வோமானால், தமிழக மீனவர்களும் முழுஅளவிலே பயனடைவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கின்றேன்.

அடுத்து, தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்திலே, ஆண்கள் மட்டுமே சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள். கடலோரப் பகுதியிலே இருக்கிற பெண்கள், கடலோரப் பகுதியிலே வீச்சு வலைகள் மூலமாக மீன் பிடிக்கின்றார்கள். கடல் பாசிகளை அவர்கள் அள்ள



செல்கிறார்கள். கடலோரங்களிலே மீன் விற்பனையையும் அவர்களே செய்கின்றார்கள். எனவே, இந்தத் திட்டத்திலே மீனவ மகளிரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தாற்போல, கடந்த 15 ஆம் தேதியிலிருந்து, இந்த மாதம் 29 ஆம் தேதி வரை தமிழகக் கடலோரப் பகுதிகளிலே மீன் அபிவிருத்திக்கென்று, மீன் இன விருத்திக்கென்று தற்போது மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். இருந்தாலுங்கூட, தடை செய்யப்பட்டிருக்கின்ற இந்த 45 நாட்களிலே, இந்த மீனவக் குடும்பங்கள் வேலையின்றித் தவிக்கின்றன. அவர்கள் உணவிற்குக் கஷ்டப்படுகின்றார்கள். இதை நிவர்த்தி செய்கின்ற வகையிலே, நமது மாநிலத்திற்கு அருகிலே இருக்கின்ற புதுவை மாநிலத்திலே—அங்கேயும் 45 நாட்கள் தடை செய்யப்பட்டிருக்கிறது—வேலையிழந்து தவிக்கின்ற அங்கே இருக்கின்ற மீனவர்களுக்கு அந்த அரசு இந்த 45 நாட்களுக்கும், ஒரு மீனவக் குடும்பத்திற்கு இலவசமாக தலா 90 கிலோ அரிசியும், 300 ரூபாயும் வழங்குகிறார்கள். அதுபோல, தமிழகத்தின் கடலோரப் பகுதியிலே இருக்கின்ற மீனவ மக்களுக்கும் இச்சலுகையை அரசு கொடுக்க முன்வர வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இந்த மீன்பிடித் தடையுள்ள காலத்திலே நிவாரணம் வழங்க வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இதற்காகத்தான், 8 மாதங்களும் மீன் பிடித்து, 4 மாத காலத்திற்கு இயற்கைச் சீற்றங்களால், அதாவது, மழை, காற்று போன்றவற்றினால் மீனவர்கள் மீன்பிடிப்பு நிறுத்தப்பட்டிருக்கின்ற காரணத்தினாலே, மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாத காரணத்தினாலே, அந்தத் தடைக் காலத்திற்கு, அந்த 4 மாதங்களுக்கு மாதம் ரூ.300/- வீதம், மொத்தம் ரூ.1,200/-ஐ அரசாங்கம் வழங்குகின்றது. அதோடு, இந்த வருடத்திலே ஒவ்வொரு மாதத்திற்கும் தலா 20 கிலோ அரிசியும், அதாவது, பொது விநியோக திட்டத்திலே கொடுக்கப்படுகின்ற விலைக்கே--ரூ.3.50-க்கே--அரிசியும் வழங்கப்படுகிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரிசி கொடுப்பது ஆண் மீனவர்களுக்கு மட்டும்தான்

கொடுக்கப்படுகிறது. கிராமப்புறத்திலேயிருந்து மீன் பிடிக்கச் செல்கின்ற அனைத்து மீனவர்களுக்கும் வழங்கப்படாமல் இருக்கிறது. குறிப்பாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தற்போது சொல்கின்றபொழுது, செப்டம்பர், அக்டோபர், நவம்பர், டிசம்பர் போன்ற மழைக் காலங்களிலே மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்ல முடியாத நிலை இருக்கிறது. அப்பொழுதுதான் ஒவ்வொரு கிராமத்திலும், இராமநாதபுரம், தூத்துக்குடி போன்ற மாவட்டங்களிலே குறைந்த விலையில் ஒரு கிலோ 3.50-க்கு ஒவ்வொரு குடும்பத்திற்கும் 90 கிலோ அரிசி வழங்கப்பட்டு இருக்கிறது. ஆனால், இந்தத் திட்டம் தஞ்சை, நாகை, திருவாரூர் போன்ற மாவட்டங்களிலே தற்போது நிறுத்தப்பட்டு இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அதேபோல, கடந்த கால ஆட்சியிலே மீன்வளத் துறையின் 'டாப்கோ பெட்' மூலம் மீனவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்ற கடன்களிலேயுள்ள முரண்பாடான வட்டி விகிதங்களினால், அக்கால அரசு எடுத்த நடவடிக்கையின் காரணமாக பல்வேறு மீனவர்கள் வாழ்க்கையிலே மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். தற்போது மீன்பிடித் தொழிலில் நலிவடைந்த நிலையில் இருக்கின்ற அந்த மீனவர்களுக்கு 'டாப்கோ பெட்' மூலம் வழங்கிய அனைத்துக் கடன்களையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, ஒவ்வொரு மீனவர் கூட்டுறவுச் சங்கத்திலேயிருக்கின்ற ஒருவர் கடன்பட்டிருந்து, அந்தக் கடனை உரிய காலத்தில் கட்டாமல் சென்றுவிட்டால், அந்தக் கூட்டுறவுச் சங்கத்திலிருக்கின்ற ஏனைய உறுப்பினர்களுக்கும் கடன் வழங்குவது மறுக்கப்படுகிறது. அதைத் தவிர்த்து, யார் கடனைக் கட்டவில்லையோ, அவர் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமேயொழிய, அவரால், அந்தப் பகுதியிலே இருக்கின்ற, அந்தச் சங்கத்திலே இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் பாதிக்கப்படுவதை அரசு தவிர்க்க வேண்டுமென்று....

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறார்கள். 'டாப்கோ பெட்' போன்றவற்றில் கடன் வழங்குகின்றபோது, அந்தப் பணத்தைக் கட்டாத மீனவர்களைத் தவிர, பாக்கிப் பேருக்கு கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். நிதிநிலை மோசமாக இருக்கின்ற நிலைமை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். அரசாங்கம், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு என்ன சொல்கிறது என்றால், பழைய கடனிலே 50 சதவிகித கடனைத் திருப்பிக் கட்ட வேண்டும்.



புதிதாக வாங்குகின்ற கடனிலே 80 சதவீதம் கட்ட வேண்டும். இதுபோன்று கடனைத் திருப்பிச் செலுத்தியிருந்தால்தான், அந்த சொசைட்டிக்கு, திருப்பிக் கொடுக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டு இருக்கிறது. இதுபோன்று சொன்னால், வேறு வேறு பெயரிலே ஒரு குடும்பத்திலே மூத்த ஒருவர் கடன் வாங்கி அவர் கட்டவில்லையென்றால், இளையவர் அந்தக் கடனை வாங்கிக்கொள்வார். இதுபோன்றவை தவிர்க்கப்பட வேண்டுமென்ற நோக்கத்திலேதான், இதுபோன்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி. மீனவர்களுக்கு விபத்துக் குழு காப்புறுதித் திட்டத்தின்கீழ் இறந்த மீனவர்களுக்கு, அவர்களது குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன. அவ்வாறு நிவாரணங்கள் வழங்கப்படுவது, மீனவர் இறந்த காலத்திற்குப் பிறகு இரண்டு, மூன்று ஆண்டுகள் கழித்துத்தான் அந்த நிவாரணம் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. மீனவத் தலைவனை இழந்திருக்கின்ற அந்த மீனவக் குடும்பத்தினர் மூன்று ஆண்டு காலம் வறுமையிலே தவித்துக்கொண்டு இருக்கின்றார்கள். இதைத் தவிர்க்கின்ற வகையிலே மீன்வளத் துறை ஒரு குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து, அந்தக் காலத்திற்குள் முழு ஆய்வு செய்து, மீனவக் கிராமங்களில் பாதிக்கப்பட்டிருக்கின்ற அந்தக் குடும்பங்களுக்கு உரிய காலத்தில் நிவாரணம் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு எனது தொகுதியிலே......(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரண்டு மணித்துளிகளில் பேசி முடித்துக்கொள்ளுங்கள். 15 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள். இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** எனது தொகுதியிலே மல்லிப்பட்டினம் என்ற கிராமத்தில் ஏறத்தாழ 500 விசைப் படகுகள் இருக்கின்றன. இந்த 500 விசைப் படகுகளும் பயன்படுகின்ற வகையிலே கடந்த 25 ஆண்டுகளுக்கு முன்பு மரியாதைக்குரிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலே அங்கே ஒரு மீன்பிடித் தளம் அமைக்கப்பட்டது. அது தற்போது இடிந்துகொண்டிருக்கிறது. அதனால் மீனவர்கள் எல்லாம் விபத்துக்குள்ளாகி இருக்கின்றார்கள். அதைத் தவிர்க்கின்ற முறையிலே, அங்கே ஒரு மீன்பிடித் துறைமுகம் அமைப்பதாக

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையிலே அறிவித்தார்கள். ஆனால், அதுகுறித்து எந்தவித அறிவிப்புகளும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லாதது எனக்கு வருத்தத்தை அளிக்கிறது. இருந்தாலுங்கூட, விரைவிலே இந்த மல்லிப்பட்டினத்திலே, மீன்பிடித் துறைமுகத்தைத் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கடந்த கால ஆட்சியிலே, கடந்த கால அரசிலே தமிழகத்திலே கடலோரப் பகுதியிலே காணாமல் போகும் மீனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக, சென்னை, மல்லிப்பட்டினம், இராமேஸ்வரம், தூத்துக்குடி, கன்னியாகுமரி போன்ற 5 இடங்களிலே 5 விரைவு ரோந்துப் படகுகளை தலா ஒரு கோடி ரூபாய் வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே வாங்கப்பட்டன. அவற்றை வாங்கி எங்கு நிறுத்தினார்களோ, அதே நிலையிலேதான் இன்று வரை நின்று கொண்டிருக்கின்றன. நிறுத்தப்பட்டு இருக்கின்ற அந்தப் படகுகள் மிகவும் மோசமான நிலையிலே பழுதடைந்து, அரசினுடைய 5 கோடி நிதி எந்தவித நடவடிக்கையும் இல்லாமல் வீணாகிக்கொண்டிருக்கின்றது. அவற்றை இந்த அரசு ஒன்று ஏற்க வேண்டும் அல்லது அவற்றை விற்பனை செய்து...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 5 படகுகளை ரிப்பேர் செய்வதற்காக 25 இலட்சம் ரூபாயை புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு கொடுத்திருக்கிறது. அவற்றை ரிப்பேர் செய்து முடித்தவுடன், பெயரளவு குத்தகையிலே விடவேண்டும். அவற்றிற்கென்று நாம் பணம் வாங்க முடியாது. டீசல் மட்டும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு கொடுப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். மற்றவற்றைக் கடலோர காவல் படை இயக்கும். பெயரளவிலே அவற்றிற்கென்று ஒரு பணத்தை வாங்கிக்கொண்டு, அவற்றை இயக்குவதற்கான பணி நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-30*

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அதேபோல, 1996-1997 முதல் 31-03-2001 முடிய தமிழகத்திலே 15164 வீடுகள் மட்டுமே கட்டிமுடிக்கப்பட்டன என்றும், கட்டப்படாமல் நிலுவையில் இருந்த வீடுகளில் 3318 வீடுகள் 31-03-2003 வரை கட்டி முடிக்கப்பட்டுள்ளன என்றும் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருந்தாலும்,



இன்னும் ரூ.239 இலட்சம் நிதி, இந்த நிதியாண்டிலே அவற்றிற்காக ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ளதாகச் சொல்கிறார்கள். தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் இந்த இரண்டு ஆண்டுகளாக எந்தவிதமான மீனவக் கிராமங்களிலும் புதியதாக வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, இந்த மாவட்டங்களுக்கு முன்னுரிமை கொடுக்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு மணித் துளியில் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** அதேபோல சுதந்திரம் அடைந்து இன்றைக்கு ஏறக்குறைய அரை நூற்றாண்டைக் கடந்துவிட்ட சூழ்நிலையில், தமிழகத்திலே இருக்கின்ற மீனவ மக்களுடைய வாழ்க்கை நிலை கேள்விக்குறியாக இருக்கிறது. தரைமேல் பிறந்து, தண்ணீரில் வாழ்ந்து, கண்ணீரில் வாழ்கிற ஓர் அவல நிலையில்தான் மீனவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள்.

மீனவர்களுடைய பிள்ளைகள், கல்வி நிலையிலே இன்னும் பின்னுக்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பிலே முன்னுரிமை வழங்கப்படுவதில்லை. அதேபோல, இன்றைக்கு தமிழகத்திலே மீன்வளத் துறைக்கு ஒதுக்கப்படுகின்ற நிதி, துறையைச் சார்ந்து மட்டுமே இருக்கிறது; மீனவ மக்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே இல்லை. இனி வர இருக்கின்ற காலங்களிலே மீனவ மக்களையும், மீன்வளத் துறையையும் இணைக்கின்ற வகையிலே நல்ல பல திட்டங்களை இந்த அரசு நிறைவேற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தமிழகத்திலே கடந்த கால ஆட்சியிலும் சரி, இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகும் சரி, ஏறக்குறைய 6 ஆண்டு காலங்களிலே கிழக்குக் கடற்கரைச் சாலையிலே இருக்கின்ற அத்தனை மீனவ கிராமங்களுடைய இணைப்புச் சாலைகள் எல்லாம் மிகவும் மோசமான நிலையிலே, பழுதடைந்திருக்கின்றன. எனது தொகுதியைப் பொறுத்தமட்டிலே, ஏறக்குறைய...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலத்திலே ரோடு போடப்பட்டிருந்தால், அது மத்திய அரசாங்கத்தினுடைய நிதியிலிருந்து போடப்பட்டது.

மாதிரி மீனவ கிராமத் திட்டம் என்று ஒரு திட்டம் இருந்து, அதன் அடிப்படையிலே அந்தப் பணம் வழங்கப்பட்டது. ஆனால், கடந்த தி.மு.க ஆட்சியிலே இந்தப் பணத்தைச் செலவு செய்யவில்லை; மத்திய அரசாங்கம் கொடுத்த பணம். இப்போதும் மத்திய அரசாங்கம் அந்த நிதியைக் கொடுத்தால், அந்தச் சாலை வசதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. தமிழகத்திலே இருக்கிற மக்களோடும், விவசாயிகளோடும் ஒன்றிப் பிணைந்து வருவது கால்நடைகள். இந்த கால்நடைத் துறையைப் பொறுத்தமட்டிலே, தமிழகத்திலே..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை; நேரம் இல்லை. திருமதி எஸ். ராஜம்மாள். (குறுக்கீடு) 20 நிமிடங்கள் ஆகிவிட்டன; முடியாது (குறுக்கீடு) முடியாது; இன்னும் ஆறு பேர் பேசவேண்டும்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** 2 நிமிடங்கள் கொடுங்கள். கால்நடைத் துறையிலே பல்வேறு கால்நடை மருத்துவர்கள் பணியிடங்கள் நீண்ட நாட்களாக நிரப்பப்படாமல் இருக்கின்றன. கால்நடைத் துறையில் ஏறக்குறைய 1316 கால்நடை பார்வை கிளை நிலையங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அத்தனை கால்நடை பார்வை கிளை நிலையங்களும் முழுமையாகவும், முறையாகவும் செயல்படாமல் இருக்கின்றன. இதைத் தவிர்க்கின்ற வகையிலே, ஆவன செய்ய வேண்டும். தமிழகத்தில் ஏறக்குறைய 1400 கால்நடை பட்டதாரிகள் இப்போது படித்து முடித்திருக்கின்றார்கள். அவர்கள் இதுபோன்ற கால்நடை பார்வை கிளை நிலையங்களிலே குறைந்த சம்பளத்திலே பணியாற்ற விரும்புவதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்து சொல்லியிருக்கிறார்கள். எனவே, அவர்கள் குறைந்த ஊதியத்திலே பணியாற்ற விரும்புகின்ற காரணத்தாலே, இந்தப் பார்வை கிளை நிலையங்களிலே இவர்களை மருத்துவர்களாக நியமித்து, ஏழையெளிய விவசாயிகள் பயன்படுகின்ற வகையிலே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தற்போது கால்நடை மருந்தகங்களுக்கு ஆண்டுக்கு வழங்கப்படுகின்ற தொகை ரூ.30 ஆயிரமாக இருக்கிறது. அதை ரூ.50 ஆயிரமாக உயர்த்தவேண்டும். அதேபோன்று மருத்துவமனைகளுக்கு வழங்கப்படுகின்ற மருந்திற்கான தொகை ஏறக்குறைய ரூ.50 ஆயிரமாக இருக்கிறது. அதை ரூ.70 ஆயிரமாக வழங்கவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.



இன்றைக்கு தமிழகம் முழுவதையும் வறட்சிப் பகுதியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நேரத்திலே எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். முற்றிலுமே விவசாயத்தை நம்பியிருக்கின்ற தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் விவசாயிகளின் விவசாயம் பாதிக்கப்பட்டு இருந்ததால், அவர்களுக்கு விவசாயக் கடனுக்கான வட்டியை முழுவதுமாக இரத்து செய்ததோடு, நில வரியையும் இரத்து செய்திருக்கிறீர்கள். அதற்காகவும் தஞ்சை மாவட்ட விவசாயிகள் சார்பாக எனது நன்றி கலந்த வணக்கத்தை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்திலே கல்லணைக் கால்வாய் கடைமடைப் பகுதியாக இருக்கின்ற எனது பேராவூரணி, பட்டுக்கோட்டை தொகுதிகள் முற்றிலுமாக விவசாயத்திலே இந்த ஆண்டு பாதிக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த பட்டுக்கோட்டை, பேராவூரணி தொகுதிகளிலே இருக்கின்ற அத்தனை விவசாயிகளுக்கும் முழு அளவிலே நிவாரணம் கிடைப்பதற்கு மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் ஆவன செய்யவேண்டுமெனக் கேட்டு, எனது தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான். திருமதி எஸ். ராஜம்மாள்.

*முற்பகல் 11-35*

***திருமதி எஸ். ராஜம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்ட நெடிய வரலாற்றுச் சிறப்புமிக்க தமிழக சட்டமன்றத்தில் காலத்தை வெல்லும் ஆற்றல் படைத்தவரும், தமிழக மக்களின் இதய சிம்மாசனத்தில் என்றும் வீற்றிருப்பவரும், என்றுமே தமிழக முதல்வர் அம்மாதான் என்பதை நடந்து முடிந்த இடைத்தேர்தல் மூலமாக மக்களே தீர்ப்பளித்தார்கள்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

சாத்தான்குளத்தை தேவன் குளமாக மாற்றுவேன் என வீரச் சபதம் ஏற்று, நம்பிக்கை என்ற ஆயுதம் ஏந்தி மக்களின் ஏகோபித்த ஆதரவோடு வெற்றி பெற்று இன்றைக்கு வீரத் தாயாக அமர்ந்திருக்கிறார்களே அந்த நம்பிக்கை நட்சத்திரம்தான் எங்கள் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அம்மா, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கணினிப் பயிற்சி அளிக்கப்படும் என்று கூறி என் போன்றவர்களையெல்லாம் பயிற்சி பெறச் செய்தீர்களே இது புரட்சி இல்லையா?

தரையில் பிறந்து, தண்ணீரில் மிதந்து, ஆழ்கடலில் மீன் பிடித்து, ஏழ்மைக் கடலில் வாழும் மீனவ சமுதாய மக்களின் வாழ்வு நலம் பெற ஏற்படுத்தப்பட்ட, மீன்வளத் துறை மானியக் கோரிக்கையில் இரண்டாவது முறையாக என்னைப் பேச அனுமதித்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் மீண்டும் நன்றி கூறி எனது உரையைத் தொடர்கிறேன்.

அம்மா, என் தூத்துக்குடி தொகுதியானது கடலோரப் பகுதி. அங்கே மீனும், உப்பும்தான் விளையும். என் தொகுதியில் விவசாயம் என்பது மூன்று பஞ்சாயத்தில் உள்ளது. அதுவும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளது. அன்னியச் செலாவணியை அள்ளித்தரும் பல்வேறு உணவுப் பொருட்களில் மிக முக்கியமானது மீன். மனித வாழ்வுக்குப் புரதச் சத்தைத் தரும் அற்புதமான உணவு வகையும் இதுவே. தமிழகத்தில் 591 கிராமங்களில், 25 வட்டாரங்களில், 13 மாவட்டங்களில் சுமார் 1076 கி.மீ. நீளத்தில் வியாபித்திருக்கும் நமது கடல் பகுதியில் ஆண்டுக்கு 3.7 லட்சம் மெட்ரிக் டன் மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

இத்தனை பெருமைமிக்க இத்தொழில் தற்சமயம் மிகவும் நலிவடைந்து வருகிறது. விளை நிலத்தில் வறட்சி; தொடர்ந்து மழையின்மை; நிலத்தை நம்பி வாழ்ந்த வேளாண் பெருமக்களும் கடலை நம்பியாவது வாழ்ந்தாக வேண்டும் என்ற சூழலுக்குத் தள்ளப்பட்ட நிலையில், ஆண்டு முழுவதும் மீன்பிடிப்பு போன்ற காரணங்களால் மீன்வளம் குறைந்துள்ளது. மேலும் மழை போதுமானதாக இல்லாத காரணத்தால், தமிழ்நாட்டில் உள்ள 53 முகத்துவாரங்களில், சில லேசாக திறக்கப்பட்டும், சில திறக்கப்படாமலேயே தொடர்ந்து அடைக்கப்பட்டும் கிடப்பதால் மீன் உற்பத்தி மேலும் பாதிக்கப்பட்டுள்ளது. இதனையெல்லாம் கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சற்றும் யோசனை செய்யாமல் மீனவ சமுதாய மக்களைப் பொருளாதார ரீதியாக பின்னுக்குத் தள்ளிவிட்டுச் சென்று விட்டனர்.



வறுமைக்கும், வாழ்வாதாரத்திற்கும் இடையிலான இந்தப் போராட்டத்தில் நலிவடைந்த மீனவர்களைக் காப்பாற்றுவது எவ்வாறு, இழந்த மீன்வளத்தை இனி மீட்க முடியுமா, இருக்கின்ற மீன்வளத்தை இனி காக்க முடியுமா, என ஏங்கிக் கொண்டிருந்த மீனவர்களுக்கு அம்மா அவர்களின் எண்ணத்தில் உதயமாகி, அவர்கள் தந்த பரிசுதான் மீன்வள மேம்பாட்டு இயக்கம்.

இந்தியாவிலேயே முதன் முறையாக மீன்வள மேம்பாட்டு இயக்கம் என்ற திட்டத்தை 18-07-2002-ல் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துவக்கி வைத்தார்கள். இத்திட்டத்தின் மூலம் கடல் வளத்தைப் பெருக்க இரால் குஞ்சுகளை வெளியில் வளர்த்து கடலில் விடுதல், கடலில் செயற்கை மீன் உறைவிடம் அமைத்தல், சுகாதாரமான மீன்களைப் பெற கடற்கரையில் மீன் இறங்குதளம் அமைத்தல், மீன் பிடிக்க நவீன இயந்திரங்களைப் பயன்படுத்துதல், கடற்கரையோரப் பகுதியை மேம்படுத்துதல் போன்ற பணிகள் செய்யப்பட்டு மீனவர்கள் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்கள். அதுபோன்று 2003-2004 நிதி நிலை அறிக்கையில், அம்மா அவர்கள் மீன் பிடிக்க இயலாத பருவ காலங்களில் கடல்சார் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்க ரூ.25.13 கோடி நிதியும், மீனவர்களுக்காக வீட்டு வசதித் திட்டத்திற்கு ரூ. 10.21 கோடி நிதியும் ஒதுக்கீடு செய்து மீனவர்கள் வயிற்றில் பாலை வார்த்துள்ளீர்கள்.

தூத்துக்குடியில் முந்தைய தி.மு.க. ஆட்சிக்காலத்தில் மீனவர்களுக்கு 27 வீடுகள்தான் கட்டப்பட்டன. தற்போது அம்மாவின் ஆட்சியில் 2003-2004-ம் ஆண்டு எங்கள் தூத்துக்குடி தொகுதிக்கு 199 வீடுகள்தான் ஒதுக்கியுள்ளீர்கள். அம்மா 500 வீடுகளாவது ஒதுக்கித்தரும்படியாக பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்களுக்கு சுகாதாரமான மீன்கள் கிடைக்கும் வண்ணம், நமது நாட்டு மீன் சர்வதேச அளவில் தரம் வாய்ந்ததாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் 10 இடங்களில் மீன் இறங்கும் தளம் அமைக்க ரூ. 13.23 கோடி நிதி ஒதுக்கீடு செய்து உள்ளீர்கள். அதில் 6 இடங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளதைப் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

அதுபோன்று நவீன மீன்பிடித் தொழில் நுட்பங்களை வழங்கிடவும், மீன்பிடிச் சாதனங்களான வலை, இஞ்சின் போன்றவற்றை, தொடர்ந்து மானிய விலையில் வழங்கிடவும், மானியக் கோரிக்கையில் வழிவகை

செய்து ஒவ்வொரு நாளும் துயரப்பட்டுக் கொண்டிருக்கும் மீனவ சமுதாய மக்களின் விடிவெள்ளியாகத் திகழும் அம்மா அவர்களின் ஆட்சியை மீனவ மக்கள் பெரிதும் பாராட்டி மகிழ்கிறார்கள். மேலும் இந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருக்கும் என் தொகுதி மக்களின் ஒரு சில குறைகளை நிவர்த்தி செய்து தருமாறு பேரவைத் தலைவர் மூலமாக, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

இந்தியாவிலேயே முதல் முதலாக புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். தலைமையில் ஆண்ட அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில்தான் 1983 ஆம் வருடம் மீன்பிடிச் சட்டம் கொண்டு வரப்பட்டது.

*முற்பகல் 11-40*

இதன்படி, விசைப் படகுகள், காலை 5 மணிக்குத் தொழிலுக்குச் சென்று, அன்று இரவே 9 மணிக்குத் திரும்பிவிட வேண்டும். மீன் வளம் நிறைந்த அக்காலகட்டத்தில், இச்சட்டம், விசைப்படகு மீனவர்களைப் பாதிக்கவில்லை. ஆனால், தற்போது, நாட்டுப் படகிலும், விசைப் படகைப் போலவே சக்தி வாய்ந்த மோட்டார் பொருத்தியும், கால நேரம் கணக்கில்லாமல் மீன் பிடிக்கின்றார்கள். ஆகையால், விசைப் படகு மீனவர்களுக்கு அந்த நேரம் போதாமல், அவர்கள் செலவு செய்யும் டீசல் செலவிற்கும், வேலை பார்ப்பவர்களின் சம்பளத்திற்கும் கட்டவில்லை. மேலும், நேரத்தைக் கணக்கிட்டு அதிக வேகமாக வர வேண்டியுள்ளது. பிந்தி விட்டால், சங்கிலி போட்டு விடுகிறார்கள். ரூபாய் 500 அபராதமும் கட்ட வேண்டும். மேலும், மீனும் கெட்டுப் போய், நஷ்டம் ஏற்பட்டுவிடும். மேலும், அந்த இடத்தில் இருட்டாக உள்ளதால், விபத்து ஏற்பட்டு உயிர்ச்சேதமும் ஏற்படுகிறது. அதன் விளைவாக, தூத்துக்குடியில் உள்ள பத்தாயிரம் மீனவ குடும்பங்களின் வாழ்க்கைக்கு, வாழ்வாதாரம் வழங்கிடுமாறு அம்மா அவர்களைப் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் மாவட்டத்தில், மீனவர்களுக்கிடையே உள்ள ஒப்பந்த அடிப்படையில் செயல்படும் வாரத்தில் மூன்று நாட்களுக்கு விசைப் படகுகளும் மூன்று நாட்கள் கட்டுமர மீனவர்களுக்குமாக தொழில் செய்யும் வழியை நடைமுறைப்படுத்தித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அல்லது, சில மணி நேரங்களைக் கூட்டியாவது



தந்து அவர்கள் நிம்மதியோடு தொழில் செய்ய வழிவகுத்துத் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கேட்டதெல்லாம் கொடுத்துப் பழக்கப்பட்ட தாயுள்ளம் கொண்ட அம்மா அவர்கள், இந்த உதவியைச் செய்வார்கள் என்று தூத்துக்குடி தொகுதி மீனவர்கள் நம்பிக்கையோடு காத்திருக்கிறார்கள். மேலும், கடந்த 8 மாதங்களாகத் தொழிலுக்குச் செல்ல முடியாததால், அக்குடும்பங்கள், மிகவும் வறுமைக்குள்ளாகி உள்ளார்கள். கருணை உள்ளம் கொண்ட அம்மா அவர்கள், நெசவாளரின் துயர் துடைத்ததுபோல், விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் கொடுத்ததுபோல், இந்தக் குடும்பங்களுக்கும் கருணை அடிப்படையில் இலவச அரிசியும், அவர்கள் குழந்தைகளுக்கு இலவச சீருடை, நோட்டுப் புத்தகங்களும் வழங்கி உதவுமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். கடந்த வருடம் 2002 பிப்ரவரி மாதத்தில் 131 வீடுகள், தூத்துக்குடி திரேஸ்புரம் பகுதியில் தீக்கிரையாயின. அம்மா அவர்கள், மிகவும் ஏழை மீன்பிடித் தொழிலாளர்களுக்கு 131 வீடுகள் கட்டிக் கொடுக்க உத்தரவிட்டீர்கள். ஆனால், அந்தப் பணிகள் இன்றுவரை நடைபெறவில்லை. இதனை அம்மா அவர்கள் கவனத்திற்குப் பணிவோடு கொண்டுவருகிறேன். தூத்துக்குடி....(குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும், அந்த 131 வீடுகளுக்கு இடம் இல்லை. அவர்கள், அந்தக் கடற்கரை ஓரப் பகுதியிலே C.R. Zone என்று சொல்வார்கள்; அந்தப் பகுதியிலே இருப்பதனால், கலெக்டர், இடம் கொடுக்கமாட்டேன் என்கிறார்கள். நானும், மாவட்ட ஆட்சித் தலைவரிடம் பேசினேன். அவர்களும் இடம் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பின்பு இந்த வீடுகள் கட்ட ஆரம்பிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திருமதி எஸ். ராஜம்மாள்:** அமைச்சர் அவர்கள் பதிலுக்கு நன்றி.

தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகத்தில் விசைப்படகுகள் எளிதில் கரைக்கு வந்து சேருமாறு கரைப் பகுதியைத் தூர் வாரியும், அந்த இடத்திலே வெளிச்சம் தருவதற்கு விளக்குகள் போடவும் அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடந்தகால தி.மு.க. ஆட்சிக் காலத்தில், மீனவர்களின் நியாயமான கோரிக்கையை நிறைவேற்றித் தராமல் ஏமாற்றிவிட்டார்கள் என்பதை

நினைவுகூர விரும்புகிறேன். அம்மா, தி.மு.க. ஆட்சியில் தூத்துக்குடியில், மீனவர்கள் அதிகமாக பாதிக்கப்பட்டார்கள். அம்மா அவர்கள் கருணையோடு பரிசிலனை செய்ய வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தூத்துக்குடி தொகுதியில் உள்ள சிறிய பிரச்சினை ஒன்றைக் கூற விரும்புகிறேன். அம்மா, முந்தைய ஆட்சிக் காலத்தில், பொதுப் பணித் துறையின், 30-07-1993 தேதியிட்ட அரசாணை எண் எம்.எஸ்.1136/பி.டபிள்யூ—எஸ்.என்.-இன்படி, தூத்துக்குடி மாவட்டத்தில், தூத்துக்குடி பஞ்சாயத்து யூனியன் அத்திமரப்பட்டி முதல் புதுக்கோட்டை வரை, குலையன்கரிசல்விலக்கு, சில்பாடு கிராமம் வழியாக கோரம்பள்ளம் குளத்தில் ஊடே பாலம் அமைத்துக் கொடுக்க உத்தரவு இடப்பட்டது. ஆனால், தி.மு.க. ஆட்சிக் காலத்தில், இந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இதனையும் நிறைவேற்றித் தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தூத்துக்குடி நகரத்தில், பக்கிள் ஓடையைத் தூர் வாரி, பாலமாக அமைத்துக் கொடுத்தால் தூத்துக்குடி நகரில் உள்ள அனைத்துக் கழிவு நீரும், பக்கிள் ஓடையின் வழியாகக் கடலில் கலப்பதற்கு வாய்ப்புள்ளது. இதன்மூலம், நெருக்கடி மிகுந்த தூத்துக்குடி நகரத்தில் ஓர் அருமையான சாலை ஒன்று அமைய வாய்ப்புள்ளது. இதனால், தூத்துக்குடி நகரம் அழகிய நகரமாக மாறும் என்பதை அம்மா அவர்கள் கவனத்திற்குப் பணிவோடு கொண்டு வருகிறேன். இதனை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். இதனால், தூத்துக்குடி நகர மக்களின் சுகாதாரச் சீர்கேட்டினைக் களைய வாய்ப்பாக இருக்கும் என்பதையும் அம்மா அவர்களின் கவனத்திற்குப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

என் தொகுதியில் கடுமையான வறட்சியினால், குடிநீர் இல்லாத 3 பஞ்சாயத்துகள், அதாவது மீளவிட்டான், சங்கரப்பேரி, தூத்துக்குடி ஏரல் இவற்றை நகராட்சியோடு இணைத்தால், இந்த மக்களுக்குக் குடிநீர் கிடைக்க வாய்ப்பு உள்ளது. இந்தப் பஞ்சாயத்துகள் தூத்துக்குடி நகரைச் சுற்றி உள்ளது என்பதை அம்மா அவர்களிடம் பணிவோடு வணங்கித் தெரிவித்துக்கொள்கிறேன். எனக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த அம்மா அவர்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றிகூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.



முற்பகல் 11-45

## 3. விதி 111-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

## 25-04-2003 மற்றும் 29-04-2003 ஆகிய நாட்களில் தமிழ்மொழியில் அரசமைப்புச் சட்டம் பற்றித் தெரிவித்ததற்குத் திருத்தம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 111-ன் கீழ் மாண்புமிகு முதல்வர் அவர்கள் திருத்த அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன் கீழ், கீழ்க்கண்ட திருத்த அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

25-04-2003 மற்றும் 29-04-2003 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில், தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது முதலானவை குறித்து, நான் பேசியவற்றிற்கு கீழ்க்கண்ட திருத்த அறிக்கையை இப்பேரவைமுன் அளிக்கின்றேன்:

'தமிழ் மொழியின் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. பொதுவாக, ஒரு உறுதிமொழியை ஏற்கும்போதுகூட, உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கும்போது, "இந்தியக் குடிமகன் ஆகிய நான்" என்று கூறியே இந்த உறுதிமொழியை ஏற்கும் நடைமுறை உள்ளது. "குடிமகள் ஆகிய நான்" என்று கூறி உறுதிமொழி எடுக்கக் கூடாதா என்று போராடி இருக்கிறேன். "குடிமகன்" என்று கூறித்தான் உறுதிமொழி ஏற்க வேண்டும் என்பதே பெண் குலத்துக்கு இழைக்கப்பட்ட அநீதி. "குடிமகள்" என்ற சொல் புழக்கத்திற்கு வருவதற்காக பெரிய இயக்கமே நடத்தத் தீர்மானித்து இருக்கிறேன்.'

இதனை அவைப் பதிவேடுகளில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

[2003 மே 6

## 4. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிக்கை

## Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு பெண்பால் தமிழ்ச் சொல்லாக குடிமகள் என்ற சொல்லைப் பயன்படுத்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிக்கை ஒன்றினை அளிக்க அனுமதி கோரி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110-ன்கீழ், கீழ்க்கண்ட அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்:

25-4-2003 மற்றும் 29-4-2003 ஆகிய நாட்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத்தில் தமிழ் மொழியில் அரசமைப்புச் சட்டத்திலேயே, பெண்களுக்கு ஒரு பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது முதலானவை குறித்து, நான் பேசியவற்றிற்கு ஏற்கெனவே திருத்த அறிக்கையை இப்பேரவைமுன் நான் அளித்துள்ளேன்.

இதுகுறித்து மேலும் சில விளக்கங்களை நான் கூற விரும்புகிறேன்.

பெண்களுக்கு சம உரிமை வழங்குவதுபற்றி, 25-4-2003 அன்று சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற விவாதத்தின்போது, அதைப்பற்றி என்னுடைய நிலைப்பாடு ஒன்றினை நான் தெரிவித்தேன். Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேராக, தமிழில் "குடிமகன்" என்னும் சொல் மட்டுமே கூறப்படுகிறதே ஒழிய, "குடிமகள்" என்ற சொல் கூறப்படுவதில்லை. எனவே, ஒரு பெண்மணி உறுதிமொழி எடுக்கும்போதோ, மற்ற சந்தர்ப்பங்களிலோ, தன்னை Citizen என்று குறிப்பிட நேரும்போது, "குடிமகன்" என்றுதான் கூற வேண்டியுள்ளது. இந்த மரபை மாற்ற வேண்டும்; தன்னைக் குறிப்பதற்கு ஒரு சொல்கூட இல்லாதவள் பெண் என்பது இழிநிலை அல்லவா? இந்த இழிநிலையை மாற்றுவதற்காக இனிமேல் Citizen என்று தன்னை ஒரு பெண் குறிப்பிட வேண்டிய இடங்களில், "குடிமகள்" என்றே குறிப்பிட வேண்டும் என்று குறிப்பிட்டு, அதற்கான அரசாணையையும் வெளியிடச் செய்தேன்.

உறுதிமொழி ஏற்றல், அரசாணைகள், கடிதங்கள், அறிக்கைகள், அரசு அலுவலகங்களின் செயற்பாடுகள், பள்ளி, கல்லூரிப் பாடநூல்கள், தமிழ்நாடு அரசின் வெளியீடுகள், படிவங்கள், ஆகிய அனைத்து நேர்வுகளிலும் Citizen என்ற ஆங்கிலச் சொல்லுக்கு இணையாகத்



2003 மே 6] [செல்வி ஜெ ஜெயலலிதா]

தமிழில் குடிமகன் அல்லது குடிமகள் என்றே, இனி பயன்படுத்த வேண்டும் என்னும் ஒரு பெரு நோக்கில் பெண்குலத்தின் ஒட்டுமொத்த விழிப்புணர்ச்சி கருதி, இவ்வாறு கொண்டுவரப்பட்டது.

காலம் காலமாக உரிமைகள் மறுக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் பெண் இனத்திற்கு நியாயம் கிடைக்கும்வகையில், இந்தச் சொல் மாற்றத்தைச் செய்ய வேண்டும் என்னும் நியாயமான உணர்வே, என்னுடைய நிலைப்பாட்டுக்கும், நான் கொண்டுவந்த அரசாணைக்கும் காரணம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அந்த அரசாணைக்குத் தக்க திருத்தம் செய்யப்பட உள்ளது என்று கூறி அமைகிறேன்.

## 2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு—தொடர்ச்சி

### (ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. ஆர். கிருஷ்ணன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பு அளித்த எங்களுடைய சமூகநீதிக் காவலர் மக்கள் தலைவர் டாக்டர் அய்யா அவர்களுக்கும், பசுமைத் தாயகத்தினுடைய தலைவர் எங்களுடைய சின்னய்யா அவர்களுக்கும், எங்களுடைய கட்சியின் தலைவர் தியாகச் செம்மல் ஜி.கே.எம். அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை, மீன்வளம், பால் வளம் என்பது விவசாயம் சார்ந்த தொழில்கள். ஏழை. மக்கள் வாழ பொருள் ஈட்ட வழிகாட்டும் தொழில்கள். ஆகவே, ஏழை மக்கள் நலன்பெற இந்த அரசு துறைகளின்பால் மேலும் அக்கறை செலுத்த வேண்டுகிறேன். பசுவின எண்ணிக்கை 1951-ல் 102.16 இலட்சமாக இருந்தது. ஆனால் 1997-ல் 90.4 இலட்சமாகக் குறைந்ததற்குக் காரணம் என்ன? அதுபோல செம்மறி ஆடுகளின் எண்ணிக்கை 1951-ல் 80.24 இலட்சமாக இருந்தது

1997-ல் 52.59 இலட்சமாகக் குறைந்ததற்கு என்ன காரணம்? சமீபத்தில் நடந்த 10 நாட்கள் லாரி வேலை நிறுத்தத்தால் நாமக்கல்லில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள கோழிகளும், கோழிமுட்டைகளும் விற்பனை செய்யப்படாமல் அழுகி வீணாகியது மிகப் பெரிய இழப்பாகும். இந்த அரசு விரைவாகப் பேசிப் போராட்டத்தை முடித்திருக்க வேண்டும்.

முற்பகல் 11-50

தமிழ்நாட்டில் பசுமாடுகள் அடிமாடுகளாகக் குறைந்த விலையில் வாங்கப்பட்டு, கேரளா மாநிலத்திற்குக் கறிமாடாக எடுத்துச் செல்லப்படுவதைத் தடுத்திட இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மகளிர் பொருளாதார முறையில் உரிமம் பெற அனைத்து கிராமங்களிலும் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட வேண்டும். இதற்காக இந்த அரசாங்கம் ஒரு நீண்டகாலத் திட்டத்தை வகுக்குமா? பால் பண பாக்கித் தொகை 2001 ஆம் ஆண்டு 35 கோடியாக இருந்தது. நடப்பு ஆண்டில் 12 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டது என்பது மகிழ்ச்சியைத் தரும் செய்தி. நிலுவையிலுள்ள 12 கோடி ரூபாயையும் இந்த அரசு பால் உற்பத்தியாளர்களுக்கு எப்போது பட்டுவாடா செய்யும்?

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 35 கோடி ரூபாயிலிருந்த பால் பணப் பட்டுவாடா பாக்கி 12 கோடி ரூபாயாகக் குறைக்கப்பட்டுள்ளது என்ற ஒரு நல்ல செய்தியைச் சொல்லி இருக்கிறோம். நாள் ஒன்றுக்கு ஏறக்குறைய 18 இலட்சத்திலிருந்து 19 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இந்தக் கணக்குப்படி பார்க்கிறபோது ஒரு வாரத்திற்கு உண்டான பணம் மட்டும்தான் பாக்கி இருக்கிறது என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுகூட, இந்த 12 கோடி ரூபாய்கூட, வருகிற காலங்களிலே சங்கங்கள் மூலமாக உடனுக்குடன் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கு உண்டான அனைத்து நடவடிக்கைகளும் அரசின் சார்பிலே எடுக்கப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்கங்களின் புள்ளிவிவரங்களைப் பார்க்கின்றபோது 1997-98-ல் மொத்த சங்கங்கள் 9582 ஆக இருந்தது. 2002-2003 ஆம் ஆண்டில் 8486 ஆக குறைந்துள்ளதற்கு என்ன காரணம்? அதுபோல 1997-1998-ல் செயல்படும் சங்கங்கள் 7797 ஆக இருந்தது; 2002-2003 ஆம் ஆண்டில் 6980 ஆகக் குறைந்ததற்கு காரணம் என்ன?



**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, அந்த நேரத்திலே, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் தேர்தல் வந்தது. அந்த நேரத்திலே செயல்படாத சங்கங்களுக்குக்கூட, அவர்களுடைய கட்சிகாரர்களுக்குப் பதவி தர வேண்டுமென்ற அடிப்படையிலே அந்தச் சங்கங்கள் எல்லாம் உருவாக்கப்பட்டு பதவிகள் தரப்பட்டன. பின்னாலே, நாம் வந்த பிறகு, அம்மா அவர்களுடைய அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பின்னால், செயல்படாத சங்கங்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு அதிலே ஒரு சில சங்கங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றன என்பதை இங்கே தகவலாகத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** அமைச்சர் அவர்களுக்கு நன்றி. பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றி. எந்த விஷயத்தினால் பால் உற்பத்தி அளவு குறைந்தது என்பதை அறிவிக்க வேண்டும். பால், இறைச்சி போன்ற அன்றாட உணவில் மீனும் சேர்த்துச் சாப்பிடுவோர் பலர். இறால் மீன் ஏற்றுமதியில் நம் நாட்டிற்கு அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கும். இறால் மீன் வளர்ப்புத் திட்டத்தில் அரசாங்கம் என்ன செய்துள்ளது?

தமிழ்நாடு, குளம், குட்டை, ஏரிகள் மிகுந்த மாநிலம். நீர் ஆதாரங்களை ஆழப்படுத்தி, செம்மைப்படுத்துவதால் நீர்வளம் பெருகுவதோடு, இந்நீர்நிலைகளில் மீன் அபிவிருத்தி செய்யலாம். வீராணம், பெருமாள் ஏரி, மதுராந்தகம் ஏரி ஆகியவற்றில் ஏப்ரல், மே மாதங்களில் நீர்ப்பிடிப்பு குறையும்போது சுற்றுப்புற கிராம மக்களுக்கு குறைந்த விலையில் நாட்டு மீன்கள் கிடைக்கும். ஆனால் கடந்த சில ஆண்டுகளாக வீராணம் ஏரி, வறண்டு கிடப்பதால் மீன்வளம் இல்லாமல் போய்விட்டது. மீனவர்கள் ஏப்ரல், மே மாதங்களில் கடலுக்குள் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என அறிவுரை வழங்கப்படுகிறார்கள். இப்படி மீன் பிடிக்கத் தடை செய்யப்பட்ட 40 நாட்களுக்கு, பாண்டிச்சேரியில் தரப்படுவதுபோல மீனவர்களுக்கு கூடுதலாக உதவித் தொகை வழங்கப்படுமா?

முற்பகல் 11-55

மீனவர்கள் தெற்கே இலங்கை இராணுவத்தால் கடத்திச் செல்லப்படுகிறார்கள்; மிரட்டப்படுகிறார்கள். வடக்கே ஆந்திரப்பிரதேச

மீனவ மக்களால் பயமுறுத்தப்படுகிறார்கள்.தொடரும் இத்தகைய நிலைமைகளைத் தடுக்க இந்த அரசு நிரந்தரத் தீர்வு எடுக்க வேண்டும். இவ்வகையில் திட்டமென்ன? தமிழ்நாட்டில் 10 ஆண்டுகளாக தனியார் இறால் பண்ணை அமைத்ததில் காளான் பூத்ததுபோல பெருகி இருக்கிறது. இது சுற்றுப்புறச் சூழலையும், சுற்றியுள்ள விவசாய நிலங்களையும் பாழடிக்கும். இந்திய உச்ச நீதிமன்றம் தனியார் மீன் பண்ணைகளை அனுமதிக்க கூடாது என்று ஆணையிட்டது. தமிழ்நாட்டில் இப்போது தனியார் இறால் பண்ணைகள் எத்தனை செயல்படுகின்றன? இதனால் ஏற்படும் விளைவுகளைக் கட்டுப்படுத்த அரசு என்ன திட்டம் வகுத்துள்ளது? தமிழ்நாட்டில் பசுந்தீவனம் மிகவும் பற்றாக்குறையாக உள்ளது. மாவட்டந்தோறும் தீவனப் புல் வங்கிகள் அமைக்க வேண்டும். நகராட்சிகள், பேரூராட்சிகள், பாதாள சாக்கடைத் திட்டம் தீட்டி நிறைவேற்றப்பட்டால் கழிவுநீரைக் கொண்டு புல்வெளி அமைக்கலாம். இத்தகைய கூட்டுத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்த வேண்டும். சென்னையில் ராயபுரம், காசிமேடு பகுதிகளில் ஏற்படும் கடல் அரிப்பு மீனவ மக்களை மிகவும் பாதிக்கிறது. இதனை நிரந்தரமாகத் தடுக்க அரசாங்கம் என்ன செயல் திட்டம் தீட்டியிருக்கிறது? நிரந்தரத் தடுப்புச் சுவர் அமைக்கப்படுமா? மெரினா கடற்கரை அழகுபடுத்தும் திட்டம் அங்கு குடியுள்ள மீனவத் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்களைப் பாதிக்காத வகையில் திட்டங்கள் தீட்டப்பட வேண்டும். மற்றும் நான் என்னுடைய கன்னடத்திலே உரையாற்றுகிறேன்.

*(கன்னடத்தில் உரையாற்றினார்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணன், நீங்கள் பேசுவது உங்கள் கட்சித் தலைவருக்கு புரியுமா?

**திரு. ஜி.கே. மணி:** 'கன்னடத்தில் உரையாற்றினார்'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி, இவர் கர்நாடகத்தில்...

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(கன்னடத்தில் உரையாற்றினார்) (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** *(கன்னடத்தில் உரையாற்றினார்)*



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்று புரிகிறது. புரட்சித் தலைவி தலைமையில் இருக்கிற இந்த ஆட்சியிலேதான் உண்மையான திராவிட நாட்டின் சட்டசபை நடக்கிறது என்று புரிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)* கிருஷ்ணன் பேசி முடியுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *(கன்னடத்தில் உரையாற்றினார்) (மேசையைத் தட்டும் ஒலி)*

**திரு. ஜி.கே. மணி:** *(கன்னடத்தில் உரையாற்றினார்)*

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்லிமென்டிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஹேமச்சந்திரன், நீங்கள் என்ன மலையாளத்தில் பேசுகிறீர்களா? *(சிரிப்பு)*

நண்பகல் 12-00

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** Parliament-ல் translation-க்கு வகை செய்யப்பட்டிருக்கிறது இப்போது பலர் தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் பேசுகிறார்கள். ஆகவே, தமிழிலே simultaneous translation -க்கு, இங்கே Speaker Sir, ஏற்பாடு செய்வார்களா? *(சிரிப்பு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நாடாளுமன்றமாக ஆக்கிவிடலாம் என்று கருதுகிறீர்கள். *(சிரிப்பு)*

**திரு. ஆர். கிருஷ்ணன்:** ஆகவே நான் தமிழிலே பேசுகிறேன். எங்கள் சமுதாய மக்கள் அருந்ததியின சமுதாய மக்களாக இருக்கிறார்கள். *(மணியடிக்கப்பெற்றது)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணன், இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** முடித்துவிடுகிறேன் பேரவைத் தலைவர் அவர்களே, *(குறுக்கிடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசன், என்ன?

**திரு. ப. அரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணன் அவர்கள் பேசியது, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் பேசியது, மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள் பேசியது எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. நீங்களாவது மொழி பெயர்த்துச் சொல்ல வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எனக்கும் புரியவில்லை. கேட்டுச் சொல்கிறேன். (சிரிப்பு)

**திரு. ஆர். கிருஷ்ணன்:** நானே சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சமுதாய மக்கள் அருந்ததியின மக்களாக இருக்கிறார்கள். அவர்கள் துப்புரவு வேலை செய்கிறார்கள். செருப்புத் தைக்கும் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எந்தப் படிப்பறிவும் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த அருந்ததியின சமுதாய மக்களின் மீது தனிக் கவனம் செலுத்தி, 18 சதவீத இட ஒதுக்கீடு, புள்ளிவிவரப்படி எங்களுக்கு இட ஒதுக்கீடு தர வேண்டுமாய்ப் பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்த அளவுக்கு இந்த அருந்ததியின மக்கள் பாமர மக்களாக, ஒன்றும் அறியாத மக்களாக இருக்கிறார்கள். அதற்காகத்தான் நான் கன்னடத்திலே பேசினேன். இப்போது என்னுடைய தொகுதியைப் பற்றிப் பேசுகிறேன்.

பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் உள்ள எனது தொகுதியில் அரசு அதிக அளவில் விவசாயக் கடன்கள் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், ஆதிதிராவிட மக்கள் மற்றும் பிற்படுத்தப்பட்ட மக்கள் எல்லாம் வறட்சியால் வாடிக்கொண்டிருக்கிறார்கள். அந்த வறட்சியின் காரணமாக அவர்கள் எந்தவொரு வங்கிக்குப் போனாலும், வங்கிக்காரர்கள் பணம் கொடுக்க மறுக்கிறார்கள். ஏனென்றால், வறட்சியாக இருக்கின்றது. நீங்கள் எப்படிப் பணத்தை வங்கிகளில் திருப்பிச் செலுத்துவீர்கள் என்று அவர்கள் கேட்கிறார்கள். அதில் முதல்வர் அவர்கள் கவனம் செலுத்தி, வறட்சியைப் போக்குவதற்கு நல்லதொரு தீர்வைக் காணவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



மேலும் எனது தொகுதி அந்தியூர் வறட்சித் தொகுதியாக இருக்கிறது. அந்தியூரைத் தனித் தாலுகாவாக மாற்றுவதற்கு கருத்துரு ஏற்கெனவே பரிசீலனையில் உள்ளது. அதனைத் துரிதப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அந்தியூர் தொகுதியில் உள்ள பர்கூர் மலைப்பகுதியில் சுமார் 25,000 மலைவாழ் மக்கள் வசித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தியூர் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரைப் பார்க்க வரவேண்டுமென்றால் கிட்டத்தட்ட 30 கி.மீ. தொலைவு வரவேண்டியிருக்கிறது. அந்த 30 கி.மீ. தொலைவில் ஒவ்வொரு ஊரும் கிட்டத்தட்ட ஒற்றையடிப் பாதையிலே 18 கி.மீ., 15 கி.மீ. தொலைவிலே இருந்து வருகிற சூழ்நிலை, அவலநிலை இருக்கிறது. ஆகவே, இந்த அரசு, பர்கூர் மலைப் பகுதியை மையமாக்கி, ஒரு ஊராட்சி ஒன்றியம் அமைத்துத் தரவேண்டுமென்று ஏற்கெனவே பேசியிருக்கிறேன். அதை இந்த அரசு செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, எனது தொகுதியில் பருத்தி அதிகமாக விளைகிறது. விளையும் பருத்தி அனைத்து வெளி ஊர்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. எனவே அங்கு நூற்பாலை ஒன்று அமைத்தால், உள்ளூரிலே விளையும் பருத்தியைப் பயன்படுத்திக் கொள்வதோடு, ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பும் கிடைக்கும். இன்றைக்குப் பல்லாயிரக்கணக்கான இளைஞர்கள் படித்துவிட்டு, வேலை இல்லாமல் தவிக்கிறார்கள். ஆகவே, இதை மனதில் வைத்து அந்தப் பருத்தியைக் கொண்டு ஒரு நூற்பாலையை—என்னுடைய தொகுதியில் எந்த ஒரு மில்லோ மற்ற எதுவுமே கிடையாது— இந்த அரசு ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நாடு சுதந்திரம் அடைந்து 55 ஆண்டுகள் ஆகியும் எனது தொகுதியில், அரசு கலைக் கல்லூரி இல்லை. ஏனென்றால் ஒரு கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 40 கி.மீ. தொலைவு சுற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் அங்கே கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால் அவர்கள் போய்விட்டு வருவதற்கு பஸ் சார்ஜ் கிட்டத்தட்ட 20 ரூபாய், 25 ரூபாய் ஆகும். பல நாட்களாக இதேநிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே இந்த அரசு கவனம் செலுத்தி, இதற்கு நல்லதொரு தீர்வை ஏற்படுத்தி, எனது தொகுதியில் ஒரு கல்லூரியை அமைத்துக் கொடுக்க

வேண்டுமாய் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், அந்த அளவுக்கு இந்தத் தாழ்த்தப்பட்ட மக்கள்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள். இன்னும் ஒரு மணித்துளியில் உரையை முடித்து விடுங்கள்.

**திரு. ஆர். கிருஷ்ணன்:** சிரமத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். ஆகவே இதை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனது தொகுதியில் சாலைகள் குண்டும் குழியுமாக பல்வேறு இடங்களில் இருந்து கொண்டிருக்கிறன. அவற்றையும் சீர்செய்து, சின்னபுதூர் ஊராட்சியிலிருந்து பிரம்மதேசம் ஊராட்சி ஒனறியங்கள் வரையுள்ள சாலைகளைச் செப்பனிட்டுத் தருமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-05*

மேலும், வேம்பத்தி ஊராட்சி ஒன்றியத்தில் கிட்டத்தட்ட 10 ஆயிரம் மக்கள் தொகை இருக்கிறது. அங்கே ஒரு ஆரம்ப சுகாதார துணை நிலையம் ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கு தனியார், ஒரு ஏக்கர் நிலம் கொடுப்பதற்கு உறுதி செய்திருக்கிறார்கள். இதையும் நீங்கள் மனதில் வைத்து, ஆரம்ப சுகாதார துணை நிலையம் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து, என்னுடைய பேச்சை முடித்துக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. த. ஆறுமுகம்.

**• திரு. த. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனளத் துறையின் மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த எங்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியைக் கூறி என் உரையைத் தொடங்குகின்றேன். பொதுவாக பொருட்களை உண்டாக்குவதிலும், பொருட்களைச் சேர்ப்பதிலும், பொருளைக் காத்தலிலும், ஈட்டிய பொருளை நல்வழியில் திட்டமிட்டுச் செலவுசெய்வதிலும் வல்லதான இதனைத்தான் திருவள்ளுவரும்,

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"



என்றார். இத்தகைய ஆற்றல் வாய்ந்த எஃகினை ஒத்த உறுதியினாலும், எதற்கும் தளராத உறுதிப்பாட்டினாலும்தான் இம்மாநிலம் கடும் இடர்ப்பாடுகளை எதிர்நோக்கியுள்ள இந்தச் சூழ்நிலையிலும், வளர்ச்சிக்காக முதலிடம் நோக்கி தமிழகத்தை முன்னேற்ற வேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையுடன், 2003-2004 ஆம் ஆண்டிற்கான புதியதோர் செயல் திட்டத்தினை வகுத்துக் கொடுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, எனது வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்நாட்டின் ஏர்முனை மற்றும் போர்முனையைப் பொறுத்தே அமையும் என்பர். இத்தகைய ஏர்முனையும் போர்முனையும் வளம்பெற இந்த நிதியாண்டில் எத்தனை எத்தனை முத்தான திட்டங்கள்! அவை எண்ணிலடங்கா மகத்தான திட்டங்கள் என்பதை இந்த நாடறியும். இத்தகைய கடுமையான நிதிநெருக்கடியிலும் தமிழக மக்களுக்காக அறிவிக்கப்பட்டுள்ள பல முத்தான திட்டங்களை எண்ணி, சில கூட்டம் இச்சபையில் தினம்தினம் கூச்சலும் குழப்பத்தையும் ஏற்படுத்துகின்றன. அதாவது,

"ஒலித்தக்கால் என்னாம் உவரி எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்"

என்னும் திருவள்ளுவரின் குறளுக்கேற்ப, எலிகள் கடல் அலைபோல் திரண்டு ஓசையிட்டாலும், நாகம் அஞ்சாது. ஆனால் நாகம் மிகச் சிறிதளவில்கூடச் சிலிர்த்து மூச்சுவிடுமானால், எலிகள் கூட்டம் கெட்டு அழியும் என்பதை இந்தக் குறளின் மூலம் எடுத்துச் சொல்லப்படும்.

மேலும், வடசென்னைப் பகுதியிலே, கடலோரப் பகுதியில் வாழ்கின்ற மண்ணின் மைந்தர்களான மீனவர்களின் முக்கிய பிரச்சினையாக இருப்பது தொழிற்சாலைக் கழிவுகள். எண்ணூர், மணலி, மற்றும் திருவொற்றியூர் ஆகிய பகுதிகளில் உள்ள பல்வேறு தொழிற்சாலைகளான எம்.ஆர்.எப்., எம்.பி.எல்., சி.பி.சி.எல்., மற்றும் இ.ஐ.டி. பாரி, அசோக் லேலண்ட், எண்ணூர் பவுண்டரிஸ் ஆகிய தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறுகின்ற கழிவுகள் அங்கிருக்கின்ற பக்கிங்ஹாம் கால்வாய் வழியாகக் கழிமுகப் பகுதியை அடைவதால் பக்கிங்ஹாம் கால்வாயில் மீன்களின் இனப்பெருக்கம் மற்றும் மீன்கள் நடமாட்டம் முற்றிலுமாக அழிந்துவிடுகின்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. வடசென்னைப் பகுதியைச் சுற்றி வாழ்கின்ற மீனவக் குடும்பங்கள்

பக்கிங்ஹாம் கால்வாயை நம்பி வாழ்வதால், தற்பொழுது அவர்கள் வறுமைக்குத் தள்ளப்பட்டிருக்கின்ற சூழ்நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது.

வடசென்னை அனல் மின் நிலையத்திலிருந்து வெளியேறும் சுடுநீரினாலும், குளோரின் கலந்த சாம்பல் இக்கால்வாயில் படிவதாலும், மீன்கள் செத்து மிதப்பதோடு மட்டுமல்லாமல் அதன் உற்பத்தி அடியோடு அழிகின்ற நிலைமை உருவாகிறது. அதுமட்டுமல்லாமல், இதன்பொருட்டு, பழவேற்காடு ஏரியில் கிடைக்கின்ற அரிய வகை இறால் மீன்கள், நண்டு மற்றும் மீன்வகை தற்போது அழிந்து வருகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. இதைத் தடுக்கின்ற வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், **வாடுவோர் வாடியோர் துயர்துடைக்க வந்து ஆட்சி அமைத்த வான்மேகமாய்** விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எங்கள் மீனவர்களின் துயர் துடைக்க பக்கிங்ஹாம் கால்வாயை அகலப்படுத்தவும், கழிவுகளையும் சுடுநீரையும் அகற்றவும் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், மீனில் அதிகப்படியான புரோட்டின் இருப்பதோடு மட்டுமல்லாமல், செலுமியம் என்ற ஒருவகை rare mineral இருப்பதால் அது கேன்சர் வருவதை முற்றிலுமாகத் தடுக்கிறது. மேலும், கண்ணுக்குப் பாதுகாப்புத் தரக்கூடிய கரோடின் சத்தும் இதில் உள்ளது.

*பிற்பகல் 12-10*

இவ்வாறு மனித வாழ்வில் முக்கிய பங்கு வகித்து இயற்கை மருத்துவமாகச் செயல்படும் அரிய வகை உணவான மீன்களின் பிறப்பு அடியோடு அழியும் வண்ணம், நீண்டதூரம் சென்று மீன்பிடித் தொழில் செய்கின்ற விசைப்படகுகள் மற்றும் சிறிய வகையான கப்பல்கள் கடலோரப் பகுதியில் இருக்கிற அனைத்து மீன்களையும் அழித்துவிடுகின்ற நிலைமையில் கடலை ஆழப்படுத்துகின்ற காரணத்தினாலே, சேற்றைக் கிளறி, அதன் மூலமாக அவற்றில் இருக்கிற பிறப்புகளை முற்றிலும் அழிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. அதைத் தடுத்து நிறுத்துகின்ற வகையிலே மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திட்டமாக ஆறு மாதத்தில் வளரக்கூடிய மீன் வகைகளைப் பிடிப்பதற்கான ஒரு திட்டத்தை வகுத்து அவர்களைத் தொடர்ந்து கட்டுமரம் மற்றும் சிறிய



வகைப் படகுகளின் மூலமாக மீன் பிடிக்கிறவர்களுக்கு வழி விடுகிறவகையில் மாற்றுத் திட்டத்தைச் செயல்படுத்துமாறு வேண்டுகிறேன்.

மேலும், கடந்த நிதியாண்டில் எண்ணூர் முதல் வடசென்னைப் பகுதியான இராயபுரம் வரையிலான கடற்பகுதி கடலரிப்பைத் தடுப்பதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள், திருவொற்றியூர் தொகுதிக்கு 2001-2002 ஆம் ஆண்டு ஒரு கோடியே 83 இலட்சம் ஒதுக்கீடு செய்து சாதனை படைத்தார்கள். அதேபோன்று, கடந்த 2002-2003 ஆம் ஆண்டு அந்தப் பகுதியில் பல்வேறு பகுதிகளில் கடலரிப்பைத் தடுப்பதற்காக மீண்டும் ஒரு முறை 10 கோடியே 57 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தப் பணிகள் தொடங்க இருக்கின்றன. இப்படி, மீனவர் நலனுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நலத் திட்டங்களை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

மேலும், மீன்பிடித் தொழில் செய்ய ஏதுவாக எண்ணூர் முதல் நல்லதண்ணீர் ஓடைக்குப்பம் இடைப்பட்ட தூரத்தில் இரண்டு அல்லது மூன்று சிறிய கட்டுமரங்கள் தங்குவதற்காக தங்கு தளங்கள் அமைத்துத் தருமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும்,

> “மங்கையராய் பிறப்பதற்கே—நல்ல
> மாதவம் செய்திட வேண்டுமம்மா”
>
> “மங்கையர் மனம் மலர்ந்தது — எங்கள்
> மாண்புமிகு அம்மா அவர்களால்”

இவ்வாறு மங்கையரின் துயர் துடைக்கும் தாயாக, ஒளி காட்டும் கலங்கரை விளக்கமாக விளங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள், அந்த மகளிருக்காக 20 லட்சத்து 84 ஆயிரம் மகளிரை உறுப்பினராகக் கொண்ட ஒரு இலட்சத்து இருபத்து இரண்டாயிரம் சுய உதவிக் குழுக்களை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 22 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்ததற்கு தமிழக மகளிர் சுய உதவிக் குழுவின் மூலமாக நன்றியையும் பாராட்டையும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மேலும், மீனவ சமூகத்தைச் சார்ந்த மீனவ மகளிர் மீன் வியாபாரம் செய்ய சிறிய சக்கரம் பொருத்தப்பட்ட மற்றும் பெட்ரோல் எரிபொருள் கொண்ட ஐந்து சக்கர வாகனங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், அவர்கள் சரியான முறையிலே ஒன்று அல்லது இரண்டு மீன் கூடைகளைத்தான் அவற்றில் வைத்துச் செல்லக்கூடிய ஒரு நிலைமை இருக்கிறது. அதைத் தவிர்த்து நான்கு சக்கரங்கள் கொண்ட பெரிய வாகனமாக, டெம்போ (Tempo) வாகனமாக ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், வலைகளுக்கு 50 சதவீத மானியம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அதிகமானவர்களுக்கு அந்த மானியம் கிடைப்பது இல்லை. நமது பகுதியில் இருக்கின்றவர்கள் முன்னர் வாங்கிய கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை என்று சொல்லி, இப்போது இருக்கின்ற மீனவர்களுக்கு வங்கிகளில் புதிய கடன் தராமல் வங்கிகள் காலம் கடத்துவதால் மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வங்கிகள் மூலமாகவும், மீனவர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகவும் அவர்களுக்குக் கடன் வழங்க உதவி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், தற்போது மீனவர்கள் பண்ணு வலைகள் Mono planet உபயோகப்படுத்தி மீன்பிடித் தொழில்கள் செய்கின்றனர். மீனவர்களுக்குத் தேவையான வலைகளை முறையான அரசு நிறுவனத்திடமிருந்து வாங்கினால் மட்டுமே மீனவர்களுக்கு 50 சதவீத மானியம் கொடுக்கப்படுகிறது. அவற்றைத் தவிர்த்து தனியாரிடம் இவ்வகையான வலைகள் மற்றும் பல்வேறு வலைகளை வாங்கும் போது அவர்களுக்கு அந்தக் கடனைச் செலுத்துவதற்காக அந்த மானியம் வழங்குவதற்கான சூழ்நிலையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்படுத்தித் தரும்படிக் கேட்டுகொள்கிறேன்.

மேலும், மீனவர்கள் இறந்தால் மீனவர்களுக்கு அரசாங்கத்தின் மூலமாகப் பல்வேறு உதவிகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா" அரசு செய்துகொண்டிருக்கிறது. தேசிய விபத்துக் காப்புறுதித் திட்டத்தின் மூலமாக பிரிமியம் செலுத்தியிருந்தால்



பிரிமியத்திற்குத் தகுந்தாற்போல் இறந்த குடும்பத்தின் வாரிசுக்கு நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மீனவர்கள் இயற்கை மரணம் எய்தினால் அவர்களுக்கு நிவாரணம் வழங்கும் திட்டத்தையும் நடைமுறைப்படுத்தினால் அந்த மீனவர் குடும்பம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மேலும் வாழ்த்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1995 ஆம் ஆண்டு முதலமைச்சராக இருந்தபோது வட சென்னை அனல்மின் நிலையம் தொடங்கும்போது, அதிலிருந்து சாம்பல் கலந்த நீர், சுடுநீர் கடலில் கலந்துக்கொண்டிருந்தது. ஆனால், கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் அவற்றைத் திரும்பவும் அங்கே இருக்கின்ற பக்கிங்ஹாம் கெனாலில் விட்டதன் காரணமாக இந்தப் பகுதியில் இருக்கின்ற பல்லாயிரக் கணக்கான மீனவ மக்கள் பாதிக்கப்படுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காரணம், 30 அடியாக இருந்த அந்தப் பகுதி இப்போது மணல் மேடாகக் காட்சியளிக்கிறது. அதனால், எண்ணூர், திருவொற்றியூர் மற்றும் பழவேற்காடு பகுதிகளில் இருக்கின்ற அத்தனை மீனவ மக்களும் இன்றைக்குப் பட்டினியில் வாடுகின்ற ஒரு நிலைமை உருவாக்கப்பட்டிருக்கிறது. எனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீண்டும் ஆற்றில் விடப்படுகின்ற இந்தச் சுடுநீரைக் கடலில் திருப்பி விடுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் எண்ணூர் அனல் மின் நிலையத்தில் ஒப்பந்தத் தொழிலாளர்களாகப் பணிபுரிந்த 647 மின் வாரியத் தொழிலாளர்கள் 1998 ஆம் ஆண்டு ஜனவரி முதல் மே மாதம் வரையிலான கர்லங்களிலே நிரந்தர ஊழியர்களாகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு முழுச் சம்பளம் வழங்கப்பட்டது. ஆனால், அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே அவர்கள் இடைப்பட்ட காலத்திலே வேலைவாய்ப்பிலே இருந்து விடுவிக்கப்பட்டுவிட்டார்கள். அவர்களில் சிலர் மரணம் அடைந்து விட்டார்கள். அதனால் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்

தலைவி அம்மா அவர்கள் அந்த 647 குடும்பங்களுக்கும் மீண்டும் மின் வாரியத்திலே வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தென் தமிழ்நாட்டில் வாழ்கிற, அதாவது இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் பல்வேறு பகுதிகளில் இருக்கிற மீனவ மக்கள் தினந்தோறும் பெரும் பிரச்சினைகளைச் சந்திக்கின்றார்கள். இலங்கைக் கடற்படையினால் சுட்டுக் கொல்லப்படுகிற நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. அப்படி இறக்கின்ற மீனவர் குடும்பங்களுக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ரூபாய் 1 இலட்சம் அவர்கள் குடும்பத்திற்கு வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. அவற்றை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேலும் 1 இலட்சம் ரூபாயாகச் சேர்த்து 2 இலட்சம் ரூபாயாக அவர்களுக்கு நிவாரணமாக வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்த மீனவ சமுதாய மக்களை இலங்கைக் கடற்படையினர் பிடித்துச் செல்கிற சூழ்நிலை ஏற்படும் போது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒவ்வொரு மீனவ நபர்களுக்கும் தினந்தோறும் 50 ரூபாய் வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதை 100 ரூபாயாக உயர்த்தித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கச்சத் தீவுப் பகுதியில் நமது மீனவர்கள் தொடர்ந்து தொழில் செய்வதற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த மாமன்றத்திலேயே தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறார்கள். அதைத் திரும்பவும் மத்திய அரசை வலியுறுத்தித் தமிழகத்திற்குக் கிடைக்கின்ற வகையிலும், தமிழக மீனவர்கள் அங்கே மீன்பிடித் தொழில் செய்வதற்கும், மீன் வலைகளை உலர்த்துவதற்கும் ஆவன செய்ய வேண்டுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவர்கள் நலனுக்காகப் பல்வேறு நலத் திட்டங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீனவ சமுதாய மக்களுடைய கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் கடல் அரிப்பினால் பாதிக்கப்படும் மீனவக் கிராமங்கள் மற்றும் அந்தப் பகுதிகளுக்கு



2003-2004 ஆம் ஆண்டில் இயற்கைச் சீற்றங்களினால் கடல் கொந்தளிப்பு ஏற்படும்போது கடல் அரிப்பைத் தடுப்பதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மேலும் நிதியுதவி வழங்கியிருக்கிறார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரூபாய் 6.84 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் கட்டப்பட்டு பயன்பட்டு வருவதற்கு மற்றும் இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமேஸ்வரத்தில் ரூபாய் 55.25 கோடி மதிப்பீட்டில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி இருப்பதற்கும், நாகப்பட்டினம் மாவட்டத்தில் பழையாறு மீன்பிடித் துறைமுகம் இரண்டாம் நிலை கட்ட ரூபாய் 10.6 கோடி மதிப்பீட்டில் திட்டமிட்டு மத்திய அரசுக்குக் கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதற்கும், மேலும் நாகப்பட்டினம் மாவட்டம் பூம்புகாரில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க ரூபாய் 40 கோடிக்குமேல் மத்திய அரசுக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்தில் தேங்காய்ப்பட்டினத்தில் மீன்பிடித் துறைமுகம் கட்ட திட்டம் தயாரிக்கப்பட்டு மத்திய அரசின் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதற்கும், தமிழ்நாடு சர்வதேச எல்லையை மீனவர்கள் தெரிந்துகொள்வதற்காக நாகை முதல் கன்னியாகுமரி வரையிலுள்ள 240 கடல் மைல் நீளத்திற்கு 4 கடல் மைல்களுக்கு ஒன்று வீதம் 60 ஒளிதரும் மிதவைகள் அமைக்க ரூ.150 இலட்சம் நிதியொதுக்கீடு செய்ததற்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை மீனவ சமுதாயத்தின் சார்பில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அடுத்து, கால்நடை பராமரிப்புத் திட்டம். தமிழ்நாட்டிலிருந்து கேரளா மற்றும் பிற மாநிலங்களுக்கு இறைச்சிக்காக ஒவ்வொரு வாரமும் கிராமப் பகுதியில் சந்தையின் மூலமாகக் கால்நடைகளை விலைக்கு வாங்கிக் கொண்டு செல்கிறார்கள். அதனால் கால்நடைகள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துவிடுகிற நிலைமை இருக்கிறது. இதுகுறித்து அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், ஒவ்வொரு ஆண்டும் எருது, பசு போன்றவற்றைக் கோமாரி நோய்த் தாக்குதலிலிருந்து, காப்பாற்றும் வகையில் முன்கூட்டியே நோய்த் தடுப்பு ஊசி மருந்துகளைப் பயன்படுத்தும் வகையில் கிராமப் பகுதியில் சிறப்பு முகாம்களை நடத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-20*

டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே, அமைச்சரவையிலே வீற்றிருக்கின்ற நமது கால்நடைத் துறை அமைச்சர் அவர்கள் பற்றி சிறப்பான முறையிலே கடந்த 8-2-2003 அன்று செய்தித் தாள்களில் ஒரு செய்தி வந்ததைக் கவனித்தேன். கோவை மாவட்டம், பல்லடத்திற்கு அருகில் உள்ள அண்ணா நகரில் 7-2-2003, வெள்ளிக்கிழமை அன்று மாலை 5-30 மணியளவில், ஓர் அரசுப் பேருந்தும் தேங்காய் ஏற்றிக்கொண்டு வந்த லாரியும் நேருக்கு நேர் மோதியதால் ஏற்பட்ட விபத்தில், மொத்தம் 27 பேர் பாதிக்கப்பட்டனர். தேங்காய் லாரியில் இருந்த சுப்ரமணி என்ற தொழிலாளர் ஒருவர் உயிர் இழந்தார் என்றும், பஸ்ஸில் இருந்த பல பயணிகள் படுகாயமுற்று அவதியுற்றார்கள் என்றும் செய்தி வந்தது. இதில் என்ன முக்கியம் என்றால், அவ்விபத்து நடந்த ஒரு சில நிமிடங்களில் அவ்வழியாகத் தற்செயலாகச் சென்ற மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் வண்டியை நிறுத்தி நிலைமையை அறிந்தவுடன் பஸ்சுக்குள் தானே ஏறி கை ஒடிந்து இரண்டு சீட்டுக்கு நடுவில் மாட்டிக்கொண்டு தவித்த ஒரு சிறுமியை அவ்விபத்தில் இருந்து மீட்டு தானே தூக்கிக்கொண்டு தனது காரில் ஏற்றியிருக்கிறார். பாதிக்கப்பட்ட மற்றவர்களையும் தானே முன்னின்று பல்லடம் மற்றும் கோவை மருத்துவமனைகளுக்கு அழைத்துச் சென்றிருக்கிறார். ஆம்புலன்சுகளை வரவழைத்து இருக்கிறார். விபத்து நடந்த 10 நிமிடங்களுக்குள் இதை எல்லாம் அமைச்சர் அவர்கள் செய்ததனால்தான் அன்றைக்கு அத்தனை உயிர்களையும் காப்பாற்ற முடிந்தது. அம்மா அவர்களின் அரசாங்கத்தில் உள்ள அமைச்சர்கள் எவ்வாறு பணியாற்றுகிறார்கள் என்பதை இது எடுத்துக்காட்டுகிறது என்பதை இந்தப் பத்திரிகை வாயிலாக உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதே நேரத்தில், பால்வளத் துறையின் மூலமாக அரசு அலுவலகங்களில் அலுவலக வளாகத்தினுள் இருக்கக்கூடிய அனைத்து இடங்களிலேயும் அரசின் பால் பூத் மூலம் விற்பனை செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு பேசுவதற்கு அரிய சந்தர்ப்பத்தை அளித்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்து, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** I am on a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே Point of Order இல்லை, திரு. டி. மணி அவர்கள் பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of Order இல்லை. உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** Point of Order. சபையில் என்ன நடக்கிறது என்பது தெரியவில்லை. Point of Order கேட்கிறேன், கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது ஒரு குறளைச் சொல்வதற்கு முன்னால் இந்த அவையில் ஒரு கூட்டம் தினமும் கூச்சல் குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கிறது என்கிற ஒரு கருத்தைச் சொல்லி அது அவையிலே பதிந்திருக்கிறது. அப்படியொரு நிலைமை இருக்குமென்று சொன்னால், அது சட்டமன்ற மாண்பைக் குறைக்கக்கூடிய ஒன்றாகவும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஏதோ இங்கே கூச்சல் குழப்பம் விளைவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதாகவுமான ஒரு செய்திதான் நாட்டிற்குப் போய்ச் சேரும் என்கிற காரணத்தினாலே அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டி. மணி அவர்கள் பேசுங்கள்.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முக்கியமான மூன்று மானியங்கள். அதிலே, குறிப்பாக, மீன்வளத் துறை சம்பந்தமான சில விவரங்களை முதலில் சொல்ல

விரும்புகின்றேன். பொதுவாக, இதை ஒரு உணவுப் பொருளாக நாம் பார்க்க வேண்டும். அந்த அடிப்படையில் தமிழ்நாட்டில் எவ்வளவு மீன்கள் உற்பத்தியாகின்றன, அவற்றில் எவ்வளவு மீன்களை நாம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றோம், அப்படி ஏற்றுமதி செய்வதன் மூலமாக அன்னியச் செலாவணி எவ்வளவு ஈட்டப்படுகின்றது என்ற அந்த விவரங்களையெல்லாம் சபைக்குத் தருவது நன்றாக இருக்கும். அது போன்று வெளிநாட்டிலிருந்து கப்பல்கள் தமிழ்நாட்டின் எல்லைக்குள்ளே வந்து மீன் பிடிக்கின்ற ஒரு சூழ்நிலை இருந்து வருகிறது. சமீபத்திலே இரண்டு மாதங்களுக்கு முன்னால் கன்னியாகுமரியிலே தைவான் நாட்டுக் கப்பல் வந்து ஒரு மாதமாக நின்று மீன் பிடித்து, பிறகு காவல் படையினருக்குத் தெரிந்து சில மாற்றங்களை, ஏற்பாடுகளைச் செய்தார்கள். இந்த நிலை தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய மீனவ மக்களுக்கு மிகப் பெரிய பாதிப்பை உருவாக்குகின்ற நிலை என்பதனை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

அதேபோல, மீனவர்களுக்குச் சரியான பாதுகாப்பு இருக்கிறதா என்று கேட்டால், இல்லை. பாதுகாப்பு என்று சொல்கிறபோது தமிழ்நாட்டிற்குள்ளேயே இந்த மாவட்டத்திலிருந்து அடுத்த மாவட்டத்திற்குப் போய் மீன் பிடிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. தூத்துக்குடியிலிருந்து, இராமநாதபுரத்திற்குச் செல்ல முடியாது. கன்னியாகுமரியிலிருந்து, தூத்துக்குடிக்கு வர முடியாது. எனவே, இதில் ஒரு சரியான முடிவு நாம் எடுத்தாக வேண்டும். அதுபோன்று, பிறகு அடுத்த பகுதிகளுக்கு, பிற மாநிலங்களுக்குச் செல்கின்றபோது இதைவிடச் சிக்கலான பிரச்சினைகள் இருந்துகொண்டு வருகின்றன. சில சீசன் நேரங்களிலே கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கக்கூடிய மீனவர்கள் கோவாவுக்குச் சென்று அங்கே சிறப்பாகக் கிடைக்கின்ற சுறா மீனை அதிகமாகப் பிடித்து வருகிறார்கள். அது ஏற்றுமதிப் பொருளாக இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய மாநில அரசுக்கு அல்லது மத்திய அரசுக்கு அன்னியச் செலாவணி ஈட்டித் தருகின்ற ஒரு நல்ல நிலையை உருவாக்கியிருக்கின்றன. ஆனால், அங்கே போனால், அந்த மீனவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பும் இல்லை. அந்த நிலையை மாற்றுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, பஞ்ச நிவாரணம். பஞ்ச நிவாரணம் என்று சொல்கின்றபோது, தற்போது மீன்பிடிப்பதற்குத் தடை இருக்கின்ற



காலம். எனவே, மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் மீனவர்களுடைய பங்கு என்ற முறையிலே ஒரு தொகையை நாம் மொத்தத்திலே வசூலித்து அவர்களுக்குக் கொடுக்கின்ற ஒரு நிலை இருக்கிறது. அந்த நிலையில் சற்று உயர்வு வேண்டும். இப்போது இருப்பது போதுமானதாக இல்லை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

*பிற்பகல் 12-25*

அதேபோன்று, மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தருகிற திட்டத்தின் அடிப்படையில் பரவலாக வீடுகள் கட்டப்பட்டுள்ளன. இருந்தாலும் கூட நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புவது; கன்னியாகுமரி மாவட்டத்தில் 5 வருடங்களுக்கு முன்னால்—நீரோடி என்னும் பகுதியிலே சூறாவளிக் காற்று அடித்து 90 வீடுகள் உடைந்து போய்விட்டன. ஆனால், இதுவரை கட்டப்படவில்லை. ஒரு கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள் கலந்துகொண்ட, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடந்த அந்தக் கூட்டத்தில் இந்த விவகாரத்தை நான் கிளப்புகிறபோது, அரசினுடைய செயலாளர், அரசினுடைய அதிகாரி அது எந்த அளவுக்கு சாத்தியம் என்று ஒரு கேள்வியைக்கூட கேட்டார்கள். நான், அந்த மீனவர்கள் தென்னங் கீற்றை வைத்துக் கொண்டு அந்த மழையிலே, வெயிலிலே இருக்கின்ற ஒரு சூழ்நிலை இருக்கிறது, அதை மாற்றுவதற்கான உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கடலில் மீன்பிடிக்கப் போய் இறந்த மீனவர்களின் குடும்பத்திற்குத் தற்போது வழங்கப்படுகின்ற ரூபாய் 50 என்பதை 100-ஆக உயர்த்துவது; அதுபோல், இறந்து விட்டார் என்று உறுதிப்படுத்திவிட்டால், அவர்களுடைய குடும்பத்தைப் பாதுகாத்துக்கொள்வதற்கு அரசு தருகின்ற நிதி போதுமானதாக இல்லை. அதை ரூ.5 இலட்சமாக உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் இன்சூரன்ஸ் சம்பந்தமாகக் குறிப்பிட்டார்கள். ஒரு மீனவர் இறந்தால் மொத்தம் 4 இலட்சம் ரூபாய் வரைக்கும் அவர் குடும்பத்தினர் பெறலாம். 14 ரூபாய் என்பது, 7 ரூபாய் மாநில அரசும், மத்திய அரசு 7 ரூபாயும் செலுத்துகின்ற அந்தத் திட்டமானது, அரசாங்கமே பணம்

கட்டுகின்றது. அதிலே, 50,000 ரூபாய் ஒரு மீனவர் இறந்தால் கிடைக்கின்றது. அடுத்து, தனி நபர் விபத்து காப்புறுதித் திட்டம் என்பது. அதிலே, மகளிராக இருந்தால், 20 ரூபாய், ஆண் மகனாக இருந்தால் 24 ரூபாய்; அதைக் கட்டினால், அவர் இறந்தால் 1 இலட்சம் ரூபாய் கிடைகின்றது. அதுபோக தனி நபர் காப்புறுதித் திட்டம் என்பது 60 ரூபாய், ஆண் மகனாக இருந்தால் கட்ட வேண்டும்; 50 ரூபாய் மகளிராக இருந்தால் கட்ட வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒரு தடவைதான் இதைக் கட்ட வேண்டும். இதுபோன்று கட்டினால் அந்த மீனவர் இறந்தால் 2½ இலட்சம் ரூபாய் கிடைக்கின்றது. மொத்தத்தில் கூட்டிப் பார்க்கின்றபோது ஒரு மீனவர் இறந்தால் 4 லட்சம் ரூபாய் கிடைக்கின்றது. வருடத்திற்குக் கட்ட வேண்டிய தொகை என்பது ஆண் மகனாக இருந்தால் 60, 24—84 ரூபாய்; மகளிராக இருந்தால் 50, 20—70 ரூபாய். இவ்வளவு தொகையைச் செலுத்தினால் 4 லட்சம் ரூபாய் கிடைக்கும் என்பதைத் தங்கள் கவனத்திற்கு எடுத்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விளக்கத்திற்கு நன்றி. அதுபோல் மீனைப் பெருக்குவதற்காக அரிய திட்டங்களை வைத்திருக்கிறோம். ஆனால், அது பரவலாக நடக்கின்றதா என்றால் இல்லை. என்னுடைய மாவட்டத்தில் இருக்கின்ற பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு-1, சிற்றாறு அணை-2, இந்தப் பகுதிகளிலே அதிகப்படியான மீன் வளர்க்கின்றார்கள். ஆனால், ஒரு ஆண்டிலே, எவ்வளவு வருமானம் என்பதை நாம் கண்டறிவதோடு அதிலே இன்னும் கொஞ்சம்கூட கவனம் செலுத்தினால் நம்முடைய குளம், குட்டைகள், ஏரிகளில் அதிகப்படியான மீனை வளர்ப்பதற்கான வாய்ப்பை நாம் பெற முடியும். அந்த அடிப்படையிலே அரசு இதிலே முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல்...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் 18-7-2002-ல் இராமநாதபுரத்திலே மீன்வள மேம்பாட்டு இயக்கத்தைத் தொடங்கி வைத்தார்கள். அந்த அடிப்படையிலேதான் உள் நாட்டு மீன் வளம் என்பதை ஒரு ஹெக்டேருக்கு ஆயிரம் டன் என்பதை 3700 டன்னாக 5 வருடத்தில் உயர்த்துவதற்கான இந்த ஒரு அரிய திட்டத்தை புரட்சித்



தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். 5 வருடங்களில் நிச்சயமாக மீன்வளம் காக்கப்படும், உயர்த்தப்படும், மீனவர்களுடைய வருவாய் பெருக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே அதிக கவனம் செலுத்தி இருப்பது பாராட்டுக்குரியது. கடலிலே இப்போது 54 வகை மீன்களைப் பிடிக்கக் கூடாது என்று மத்திய அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அதனால் பாதிப்பு முழுவதும் எங்கே என்று கேட்டால், அது இராமநாதபுரம் மாவட்டத்திலே இருக்கின்ற மீனவர்களைத்தான் பெரிய அளவிலே பாதிப்புக்கு உள்ளாக்கியிருக்கின்றது. அந்த வகையிலேதான் மத்திய அரசாங்கத்திடம் நாம் இன்னும் வலுவாக இந்த 54 வகை மீன்களை...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவரத்தை இந்த அவைக்கு நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சராக இருக்கும் திரு. டி.ஆர். பாலு அவர்கள் வன உயிரினங்கள் சட்டம் 1972-ன்படி, பாதுகாக்கப்பட வேண்டிய உயிரினங்கள் குறித்து மாற்றம் செய்து 2001-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் கடல் உயிரினங்களில் 49 வகைகளான சுறா மற்றும் திருக்கை இனங்கள், அனைத்து வகையான கடல் குதிரைகள், பெருங்களவா மீன்கள், அனைத்து பவளப் பாறைகள், கடல் விசிறிகள் மற்றும் 52 வகையான சங்கு மற்றும் கிளிஞ்சல்கள், அனைத்து வகையான அட்டைகள் மற்றும் கடற்பஞ்சுகள் ஆகியவற்றை, பிடிப்பதற்குத் தடை செய்யப்பட்ட இனங்களாக அறிவித்தார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தன்னுடைய தலையாய முயற்சியால், ஏற்கெனவே மத்திய அமைச்சர் திரு. டி.ஆர். பாலு அவர்களால் தடை செய்யப்பட்ட 49 வகைகள், சுறா, திருக்கைகளின் வகைகளின் 40 வகைகளைப் பிடிக்கவும், 52 வகை சங்கு, கிளிஞ்சல் வகைகளில் 28 வகைகளைப் பிடிக்கவும் திருத்தம் செய்து மைய அரசை ஆணை பிறப்பிக்கச் செய்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

*பிற்பகல் 12-30*

மேலும் மூன்று வகையான வெள்ளை, கருப்பு மற்றும் சிவப்பு அட்டை வகைகளைப் பிடிக்க ஏதுவாக திருத்தங்கள் வெளியிடுவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மத்திய அரசை வலியுறுத்தியுள்ளது. இப்படித் தமிழகத்தினுடைய எந்தப் பிரிவு மக்களுடைய அடிப்படை உரிமையும், யாராலும் எந்தச் சூழ்நிலையிலும் பறிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகவும் விழிப்போடு இருந்து, தமிழக மக்களைக் காப்பதற்காகப் போராடி, வெற்றி கண்டு, நல்லாட்சி தருகிறார், நாடு போற்றும் தலைவி இதய தெய்வம் அம்மா அவர்கள் என்பதை இந்த அவையிலே குறிப்பிட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துக்கொண்ட அந்த முயற்சிக்கு எங்களுடைய கட்சியின் சார்பிலே நான் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன். அதுபோன்று மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கும் நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதுபோல, மீன் குஞ்சுகளைப் பாதுகாப்பதற்கு சில கொல்லி வலைகளைப் பயன்படுத்தக்கூடாது என்ற ஒரு விதி இருக்கின்றது. அந்த விதியைக் கறாராக அமல் நடத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று இன்னொன்று. தூத்துக்குடி மாவட்டத்திலே இருக்கக்கூடிய விசைப்படகுகாரர்களுக்கும், நாட்டுப் படகுக்காரர்களுக்கும் ஒரு பிரச்சினை இருந்துகொண்டே இருக்கிறது. ஆறு மாதங்களாக விசைப்படகுகாரர்கள் மீன் பிடிக்கச் செல்வதில்லை என்ற ஒரு பிரச்சினை இருக்கின்றது. ஆக, சற்று அவர்களோடு பேசி, கொஞ்சம் அவர்களுடைய நேரத்தை, அதிகம் கொடுத்து, அந்த விசைப் படகுகாரர்களுக்கும், இந்த நாட்டுப் படகு வைத்து இருக்கின்றவர்களுக்கும் உள்ள அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, அந்த மீனவர்கள் ஒழுங்காகக் கடலுக்குச் சென்று மீன் பிடிப்பதற்கான ஒரு நல்ல ஏற்பாட்டைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.



அதுபோன்று பழவேற்காடு ஏரியிலே, கடந்த தடவை அந்த முகத்துவாரத்திலே மணல் ஏறியதால் சில பிரச்சினைகள் உருவாகி, அரசாங்கம் 33 இலட்சம் ரூபாய் செலவிட்டு, அந்த மணலை அகற்றும் பணியை ஆரம்பித்தது. ஆனால், அந்தப் பணி முழுமை பெறவில்லை என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். அதுபோன்று பழைய வீடுகளைச் சீரமைக்கின்ற...

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த 2002 ஆம் நிதியாண்டிலே பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் தூர் வாரப்படும் என அறிவிக்கப்பட்டது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணைக்கிணங்க பழவேற்காடு ஏரியின் முகத்துவாரத்தில் தூர் வாரும் பணி ஆரம்பிக்கப்பட்டு, பணி நடைபெற்றது. பணி நடைபெற்ற நேரத்திலே, இயற்கைச் சீற்றங்களால்—மழை வருகின்ற நேரத்திலே அந்த வேலை ஆரம்பிக்கப்பட்டபோது—மணல் வந்து அடித்து மூடிவிட்டது. திரும்ப அந்தப் பணி நடந்து, மறுபடியும் மூடிய அந்த அளவிற்கே திறக்கப்பட்டது. இதுபோன்று வேலை செய்கின்றபோது, முகத்துவாரத்தில் தூர் வாருகின்றபோது, இப்படி ஒரு முகத்துவாரத்தில் தூர் வாரி, மறுபடியும் மூடிவிடுகின்றது. இப்படி மூடிவிட்டால் அதனுடைய அளவு எவ்வளவு, வேலை செய்யப்பட்ட அளவு எவ்வளவு என்பது நமக்குத் தெரியாது. ஏனென்றால் தினமும் நாம் பார்வையிடுவது இல்லை. எனவே, அதிகாரிகள் பார்வையிட்டு அதற்கென்று இப்போது 60 சதவீதம் பணம்தான் வழங்கப்பட்டிருகின்றது. இன்னும் மீதிப் பணம் வழங்கப்படவில்லை. அவர்கள் வேலை பார்த்ததற்கே இன்னும் பணம் ஓரளவு தரவில்லை என்று ஒப்பந்தக்காரர்கள் எங்களிடம் குறையாக முறையிட்டுக் கொண்டிருக்கின்றார்கள். அதனாலே நாம் என்ன செய்வது என்று பரிந்துரையிலே முடிவு எடுத்துக்கொண்டிருக்கின்றோம் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. மணி அவர்களே, இன்னும் இரண்டு நிமிடத்திலே பேச்சை முடித்துவிடுங்கள். மூன்று அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டும்.

**திரு. டி. மணி:** துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் இந்த மானியக் கோரிக்கையிலே சில விஷயங்களைச் சொல்ல வேண்டும். தயவு செய்து அதற்காக நேரத்தைத் தரும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

அதற்கடுத்து, குளச்சல் துறைமுகம். அந்தத் துறைமுகம் நீண்டகாலமாக, என்னுடைய நினைவு 1980 ஆம் ஆண்டிலே நான் அந்தப் பிரச்சினையை ஆரம்பித்து, இந்தச் சபைக்குள்ளேயே சொல்லியிருக்கிறேன். ஆனால், 2003 ஆம் ஆண்டு வரையிலேயும்—இதுவரையிலேயும்—எந்த நடவடிக்கையும் மேற்கொண்டதாக எனக்குத் தெரியவில்லை. அது துறைமுகத்தினுடைய நிலை.

அடுத்து ஒரு மீன்பிடித் துறைமுகம் வேண்டுமென்று நீண்ட காலமாக குளச்சல் மீனவ மக்கள் கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அதனாலே மீன் பெருக்கம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தேங்காய்ப்பட்டணத்திற்கு மீன்பிடி தங்குதளம். அதற்காக சில ஆய்வுகள் நடந்துள்ளதே தவிர, அதிலே எந்த முடிவும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

அதுபோல இந்தத் தூண்டில் வளைவுகள்; தூண்டில் வளைவு என்பது கடலுக்குள்ளே, ஆழ்கடலிலே மீன் பிடிக்கச் செல்வதற்கு ஏதுவான ஒரு ஏற்பாடு. ஆனால், அந்தத் தூண்டில் வளைவு கன்னியாகுமரியிலே வருகின்றபோது, என்ன காரணம் என்பதே எனக்குத் தெரியவில்லை—மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகியிருக்கின்ற பகுதி என்பது விளவங்கோடு தொகுதிக்குள்ளே வரக்கூடிய பகுதியாகும்—அதை மட்டும் விட்டுவிட்டு பிற பகுதிகளிலே ஒரு தூண்டில் வளைவு என்பதற்குப் பதிலாக மூன்று தூண்டில் வளைவுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்கள். ஆக, அந்த நிலைக்கு ஒரு மாற்றத்தை ஏற்படுத்தி விளவங்கோடு தொகுதியிலே தூண்டில் வளைவு வைப்பதற்கான முடிவை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

*பிற்பகல் 12-35*

அடுத்து, கால்நடை. கால்நடை மருத்துவமனைகளை அதிகப்படுத்த வேண்டும்; மருத்துவர்கள், பணியாளர்கள் எண்ணிக்கை உயர்த்தப்பட வேண்டும். போதுமான மருந்து விநியோகம் செய்ய வேண்டும். குழித்துறையில் மருந்து இல்லை என்று சொல்கின்ற ஒரு நிலையை அங்கே இருக்கின்ற மருத்துவர் கூறி வருகின்றார். என்ன என்பது தெரியவில்லை. கால்நடைகள் நோய்வாய்ப்பட்டு இறந்து போனால் நஷ்டஈடு சரியாக வழங்கவேண்டும். நோய் வராமல் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கை வேண்டும். ஆடுகளுக்கு ஏற்பட்ட



நீலநாக்கு நோய், அதற்கான நஷ்டஈடுகள் போதுமானதாக இல்லை. கிராத்தூரில் உள்ள கிளை நிலையத்தைத் தரம் உயர்த்தித் தரவேண்டும். செயற்கை முறை கருவூட்டல் என்பது ஏற்கெனவே திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து எடுத்து வந்து அது பத்துகாணிக்குச் செல்லுகின்றபொழுது அதனுடைய வீரியத் தன்மை குறைந்து விடுகின்றது. ஒரு தடவைக்குப் பதிலாக நான்கு தடவை அந்தப் பசு மாடுகளைக் கொண்டு வந்தாலும் சினை பிடிப்பதில்லை. ஆக, நாகர்கோவிலை மையமாக வைத்துக் கொண்டு இந்த விந்து ஊட்டக்கூடிய ஒரு மையத்தை அங்கே உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோன்று, நம்முடைய *(மணியடிக்கப்பெற்றது)* பால் வளத் துறை...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச்சை முடித்து விடுங்கள்.

**திரு. டி. மணி:** இரண்டே நிமிடத்தில் முடித்து விடுகிறேன். பால் வளத் துறை சம்பந்தமாக கூற விரும்புகிறேன். கறவை மாடுகள் இப்பொழுது விவசாயிகளுக்கு வழங்குகின்றார்களா என்று கேட்டால், இல்லை. சாதாரணமாக கிராமப்புற விவசாயிகளைப் பாதுகாக்கின்ற ஒரு நல்ல திட்டம் அது. ஒரு வீட்டுக்கு இரண்டு கறவை மாடுகள் நாம் மானிய விலையிலே கொடுத்தோம் என்று சொன்னால், அந்த விவசாயி தன்னைத்தானே பாதுகாத்துக்கொள்ள முடியும். அந்த வகையிலே அதற்கான ஏற்பாடுகளைச் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன். அதுபோல பால் உற்பத்தியாளர்களுக்குத் தற்போது உள்ள விலை கட்டுப்படியாகவில்லை. உற்பத்தியாளர்கள் என்னவென்றால் சில பகுதிகளிலே 7 ரூபாய் சொச்சத்திற்குக் கொடுக்கிறார்கள். சில பகுதிகளிலே அதற்குமேலே கொஞ்சம் கொடுக்கிறார்கள். ஆனால், நாம் விற்பனை செய்கின்றபோது அது 12 ரூபாய் என்ற அளவிற்குப் போகின்றது. அந்த மாவட்டத்திலே இருக்கக்கூடிய மையத்தின் வழியாக இதை விற்பனை செய்கின்றபோது 12 ரூபாய். இந்த அளவிற்கு இடைவெளி வேண்டுமா என்பதை அரசு சிந்திக்க வேண்டும். அதுபோன்று பத்துகாணி பகுதியில் புதிய கூட்டுறவுச் சங்கத்தை உருவாக்கியிருக்கின்றார்கள். அந்த பத்துகாணியில் இருந்து ஒரு காலை எட்டி வைத்தால் கேரளா. அங்கே போனால் ஒரு லிட்டர் பாலுக்கு 10 ரூபாய் நம் விவசாயிகளுக்குக் கிடைக்கும். ஆனால் இங்கே நாம் கொடுப்பது 7 ரூபாய் சொச்சத்திற்கு. ஆக, இதையும் பரிசீலனைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதுபோன்று, விற்கப்படுகின்ற பாலினுடைய விலையும் அதனால் உயரக்கூடாது. அதையும் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். நம்முடைய மாடுகளை வைத்திருக்கின்றவர்களுக்கு மலிவு விலையிலேயே அதனுடைய உணவுப் பொருட்கள் கிடைப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். அந்த முறையிலேதான் இந்தக் கறவை மாடுகளைப் பாதுகாத்துக் கொள்வதற்கு வழிவகைகள் என்பது செய்யமுடியும். இதுபோன்று அரசு மருத்துவமனைகளிலே முழுமையாக, இப்போது நம்முடைய கார்ப்பரேஷன் லிமிட்டிற்குள்ளே வரக்கூடிய அரசாங்க மருத்துவமனைகளில் எல்லாம் ஆவின் பாலை நாம் கொடுக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கவேண்டும். குறிப்பாக மதுரையிலே இருக்கின்ற பால் பண்ணையிலே அதனுடைய ஊழியர்களுக்குச் சம்பளம் சம்பந்தமாக ஏற்கெனவே நீதிமன்றத்தில் ஒரு தீர்ப்பு வந்ததற்குப் பின்னாலும் அதை வழங்காத ஒரு நிலை இருக்கின்றது. அந்த நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையில், அந்த ஊழியர்களுக்கு, தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய சம்பளத்தை வழங்கவேண்டும் என்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. கிருஷ்ணமூர்த்தி (குறுக்கீடு) மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கேரளாவைவிட நம் தமிழகத்திலே விலை குறைவாகக் கொடுக்கிறோம், அந்த விலை கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். கேரளாவிலே 11 ரூபாய் 5 காசு. லிட்டர் கொள்முதல் விலையாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் 9 ரூபாய் 50 காசுகள், ஏற்கெனவே கொள்முதல் விலையாக இருந்துகொண்டு இருக்கிறது. கேரளாவிலே பால் உற்பத்தியைப் பொறுத்தவரையில் மிகவும் குறைவு. அதனால் அங்கே விலை கூடுதலாகக் கொடுத்து வாங்குகிறார்கள். நாள்தோறும் கேரளாவிற்கு 46 ஆயிரம் லிட்டர் நம் தமிழகத்திலே இருந்துதான் அவர்களுக்கு பால் சப்ளை செய்து கொண்டு இருக்கிறோம். அதனால் அங்கே விலை கூடுதலாக இருக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகிறபொழுது ஆந்திராவிலே 8 ரூபாய் 88 காசுகள்; கர்நாடகம் 8 ரூபாய் 82 காசுகள். இந்த அளவிலே மற்ற



மாநிலங்களோடு ஒப்பிடுகிறபொழுது தமிழகத்தில்தான் அதிகமான விலை கொடுத்து வாங்குகிறோம். பால் உற்பத்தியாளர்கள் நலனைப் பாதுகாப்பதைப் பொறுத்தவரை மற்ற மாநிலங்களைவிட மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதிலே தனிக் கவனம் செலுத்திக் கொண்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வே. கிருஷ்ணமூர்த்தி.

**•திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, மீன்வளத் துறை மற்றும் பால் வளம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12-40

இந்தியாவில் காற்று மற்றும் நீர் மாசுபடுவதால் ஏற்படும் இழப்பினால் உண்டாகும் பொருளாதார மற்றும் சுகாதாரச் செலவினங்களின் வருட மதிப்பீடு ரூ.24,500 கோடியாகும். நீர் மாசுபட்டால் மட்டும் ஏற்படும் சுகாதாரக் கேட்டினால் வருடத்திற்கு ரூ.19,950 கோடி செலவு ஏற்படுகிறது என்று, மொத்த சுற்றுச்சூழல் செலவினங்களில் 59 சதவிகிதம் ஆகும் என்று உலக ஆய்வு அறிக்கை ஒன்று கூறுகிறது. இந்தியாவில் காற்று மாசுபடுதல் அதிகரித்து வருவதன் காரணமாக ஆண்டுக்கு 7,50,000 பேர் இயல்பான ஆயுளுக்கு முன்பே உயிரிழக்க நேரிடுகின்றது என்று உலக வங்கியின் ஆய்வு அறிக்கை தெரிவிக்கின்றது. இந்தியாவில் ஏற்படும் நோய்களில், 5-ல் ஒரு பங்கு சுற்றுச்சூழல் சீர்கேட்டால் ஏற்படுபவை. இயல்பான ஆயுளுக்கு முன்பே ஏற்படும் மரணங்கள், நோய்கள், சுற்றுச்சூழல் சீர்கேட்டிற்குத் தொடர்புடையவை என்று அந்த ஆய்வு அறிக்கை சொல்கிறது. உச்ச நீதிமன்றம், மாநில உயர் நீதிமன்றங்கள் மற்றும் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் வெளியிட்டுள்ள பல அறிக்கைகளில் நிலத்தடி நீர் வளர்ச்சியானது எதிர்காலச் சந்ததியினரின் தேவைகளுக்கு விட்டுவைக்காமல் இன்றைய தேவையைப் பூர்த்தி செய்வதேயாகும் என்றும் மேலும், மாசுபடுத்துபவர்களே அதற்கான .... (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன மானியக் கோரிக்கையிலே பேசுகிறீர்கள்? மானியக் கோரிக்கை தொடர்பாகப் பேசுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** நீர் எல்லாம் மாசுபடுவதை ஒட்டித்தான் இதெல்லாம் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கால்நடை, பால்வளம், மீன்வளம் பற்றிப் பேசுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அதெல்லாம் வருகிறது. பின்னாலே அதெல்லாம் வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரடியாக வந்து விடுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** எல்லாம் வருகிறது, வருகிறது. (குறுக்கீடு) அதேபோன்று இன்றையத் தேவையைப் பூர்த்தி செய்வதே ஆகும். மேலும், மாசுபடுத்துபவர்களே, அதற்கான செலவுகளை ஈடுகட்ட வேண்டும், மாசுபாட்டையும் தவிர்க்கத் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. ஆனால் அரசு தனது நடவடிக்கைகளில் எந்த அறிக்கைகளையும் கணக்கில் எடுத்துக்கொள்வதாகவோ அல்லது உச்ச நீதிமன்ற தீர்ப்பின் நெறிமுறைகளைப் பின்பற்றுவதாகவோ தெரியவில்லை. நிதி ஒதுக்கீடும் இதற்காகச் செய்யவில்லை. கடந்த 30 ஆண்டுகளாக அரசின் மீன்வளக் கொள்கைகளான கடல் மீன்வள ஆதாரங்களைப் பயன்படுத்துவதிலேயே கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது. இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களை அறிமுகப்படுத்துதல் மற்றும் அவற்றிற்கு மானியம் வழங்குதல் ஆகியவை இதற்கான காரணங்களாக இருக்கின்றன: மீன்வளத் துறையினால் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 13 கடலோர மாவட்டங்களில் 591 கடல் மீன்பிடிக் கிராமங்கள் உள்ளன. இவற்றில் 3.48 இலட்சம் ஆண்களும், 3.31 இலட்சம் பெண்களும், ஆக 6.79 இலட்சம் மீனவர்கள் வசித்து வருகின்றனர். இவர்களில் 2.70 இலட்சம் மீனவர்கள் முழுநேர தீவிர மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். தற்போது சுமார் 8,500 மீன்பிடி விசைப்படகுகளும் மற்றும் சுமார் 41,000 பாரம்பரிய மீன்பிடிப் படகுகளும் உள்ளன. தமிழ்நாட்டில் அண்மையில் கடல் மீன் அதிக அளவில் பிடிக்கப்படுகிறது. தமிழக அரசானது சென்னை சாந்தோம் கடற்கரையிலுள்ள டுமீங்குப்பம்,



செல்வராஜபுரம், நொச்சிக்குப்பம், சீனிவாசபுரம், மாட்டங்குப்பம், அயோத்திக்குப்பம், நடுக்குப்பம், பவானிகுப்பம், நம்பிக்கை நகர், ராஜீவ் காந்தி நகர், முள்ளிமாநகர் ஆகிய மீனவ கிராமங்களின் குடியிருப்புகளை அகற்றி அந்நிய நாட்டுத் தூதரகங்களின் அலுவலகத்தை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. பல இலட்சம் மீனவ மக்களை, தங்களது வாழ்வின் இடங்களைவிட்டு அப்புறப்படுத்தி, கடற்கரையை அழகுபடுத்தும் திட்டத்தைத் தமிழக அரசு கைவிடவேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. கடல் அழகு, கடற்கரை அழகு என்பது சாமானிய மக்களும், படைப்பாளிகளுமான, பாரதி கூறியதைப்போன்று உழைக்கின்ற பிரம்மாக்கள் நிறைந்து இருப்பதுதான், அழகு ஆகும். அதை விடுத்து மனித நடமாட்டமே இல்லாத மயான அமைதியை யார் ரசிப்பது? அதேபோன்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறும்வகையில் இறால் பண்ணைகள் இன்று அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. இவை அந்தந்த மாவட்ட அளவில் கட்டுப்படுத்தப்பட வேண்டும். சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். இன்றுவரை உச்ச நீதிமன்றத் தீர்ப்பையும் மீறி தமிழகத்தின் அனைத்துக் கடலோர மாவட்டங்களிலும் இறால் தொழிற்சாலைகள் அமைக்கப்படுகின்றன. மாவட்டளவில் இவை தடுத்து நிறுத்தப்படவேண்டும். நாகப்பட்டினம் 356, இராமநாதபுரம் 165, கடலூர் 98, தஞ்சாவூர் 78, புதுக்கோட்டை 49, திருவள்ளூர் 46, திருவாரூர் 21, காஞ்சிபுரம் 48 ஆகிய கணக்கெடுப்பின்படி சட்ட விரோதமாக இறால் பண்ணைகள் செயல்படுகின்றன. இவை தடைசெய்யப்படவேண்டும். நாகப்பட்டினத்தில் மட்டும் 22 இறால் தொழிற்சாலைகள் உரிமம் பெற்றுள்ளன. இவையும் உச்ச நீதிமன்ற ஆணைப்படி சட்டத்திற்குப் புறம்பானவையாகும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இறால் பண்ணைகள் அரசு புறம்போக்கு நிலத்தில் மட்டும் செயல்படுகிறது. இவற்றை இடித்துத் தள்ளுவதற்கு மாவட்ட ஆட்சியருக்கு அனைத்து அதிகாரமும் இருப்பதாக தேசிய நீரியல் உற்பத்தி அதிகார அமைப்பு தங்களது கூட்டு அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது. இவை, எந்த அளவில் நடவடிக்கை எடுக்கிறது என்று நமக்குப் புரியவில்லை. இதன் மர்மம் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. அதேபோன்று....

பிற்பகல் 12-45

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தவறான தகவலை இந்த அவைக்குத் தந்துகொண்டிருக்கிறார்கள். மொத்த இறால் பண்ணைகளின் எண்ணிக்கை 2778. இறால் வளர்ப்புச் செய்துவரும் பண்ணைகளின் எண்ணிக்கை 1846. நீர்வாழ் உயிரினக் குழுமத்தின் உரிமைபெற வரப்பெற்ற விண்ணப்பங்கள் 1771. உரிமம் வழங்கப்பெற்றுள்ள பண்ணைகளின் எண்ணிக்கை 297. குழுமத்தின் பரிசீலனையில் உள்ள பண்ணைகளின் எண்ணிக்கை 269. புறம்போக்கு நிலத்திலுள்ள இறால் பண்ணைகளின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டவை 99, மாவட்டக் குழுவின் பரிசீலனையில் உள்ளவை 606. இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால், முதலில் ஒரு இறால் பண்ணைக்கு உரிமம் பெற வேண்டுமென்றால், மாவட்டக் குழு என்று ஒரு குழு இருக்கிறது, மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே. அந்தக் குழுவினுடைய பரிந்துரையைப் பெற்று அவர்களுடைய அனுமதி பெற்றபின் மாநிலத்திலுள்ள குழுவிற்கு வரவேண்டும். அதற்கப்புறம் அந்தக் குழுமத்திற்கு வரவேண்டும். முறைப்படிதான் அதைச் செய்வார்கள். ஆனால், புறம்போக்கு நிலத்தில் இருக்கின்றவற்றிற்குப் பெர்மிஷன் கொடுக்கமாட்டார்கள் என்பதை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)**

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அடுத்து, ஆவின் பால் நிர்வாகத்தில் தற்போது 25 கோடி ரூபாய் இலாபம் பெறுகின்ற முறையில் அரசு ஈடுபட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. அதேநேரத்தில் தொழிலாளர்களுக்குத் தரவேண்டிய டி.ஏ. போன்றவை மிகப்பெரிய அளவிலே கொடுக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, மத்திய அரசு ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழ் இல்லாத, சுத்திகரிக்கப்படாத தண்ணீர் கம்பெனிகளைத் தடை செய்துள்ளது. மாநிலத்தில் ஐ.எஸ்.ஐ. தரச் சான்றிதழ் பெறாத, பல தனியார் கம்பெனிகள் பால் விற்பனை செய்கின்றன. கம்பெனி பால் சில நேரங்களில், இரவு தங்கியிருந்தால்கூட காய்ச்சாமலேயே, சூடுபடுத்தப்படாமலேய மோர் உறை இல்லாமலேயே தயிராகும் ஓர் அதிசயம் படைக்கிறது. எனவே, இந்தப் பால் விற்பனை தடை செய்யப்பட வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது. இதில் பிரச்சினை என்னவென்றால், ஆவின் பால் நிலையங்களில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு அரசு அறிவித்த



அகவிலைப் படி இன்று வரை தரப்படாமல் இருக்கிறது. 1-10-2002 முதல் 4 சதவீதமும், 1-4-2003 முதல் 3 சதவீதமும் தரப்படாமல் உள்ளது. அதேபோன்று இலாபகரமாக இயங்கிவரும் பல மாவட்டங்களில் சம்பளக் குறைபாடுகள் தீர்க்கப்படவில்லை. இன்னும் 18 ரூபாய் அடிப்படைச் சம்பளம் பெறக்கூடிய தொழிலாளர்கள் தருமபுரி, சேலம் போன்ற மாவட்டங்களில் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.

நமது நாட்டில் தொழிலாளர்கள் அவர்களின் கோரிக்கைகளை எடுத்துச் சொல்வதற்கு ஜனநாயக முறைகள் இருக்கின்றன. அந்தச் சந்தர்ப்பம்கூட மறுக்கப்படுகிறது. வாயிற்கூட்டங்கள் நடத்தவோ, பேட்ஜ் அணிந்து தங்களுடைய எதிர்ப்புகளைத் தெரிவித்து, தங்களுடைய உரிமைகளைத் தெரிவிக்கவோ இன்றைக்கு ஜனநாயகம் மறுக்கப்படுகிறது. மீண்டும் அந்த ஜனநாயகம் வழங்கப்படவேண்டும். அதேபோல, பால் பட்டுவாடா தாமதிக்காமல் வழங்கப்படவேண்டும்: தருமபுரியில் இப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்து கொண்டிருக்கின்றன. அதை மாண்புமிகு அமைச்சரிடத்திலே பேசினோம். ஒரே மாதிரியான அளவோ, ஒரே மாதிரியான தரமோ உள்ள பாலுக்கு சேலம், தருமபுரி மாவட்டங்களில் இருக்கிற வித்தியாசத்தைப்பற்றி அமைச்சரிடம் சொன்னதற்கு அவை இன்று ஓரளவுக்குச் சரிசெய்யப்பட்டிருக்கின்றன. மேலும் இருக்கிற குறைபாடுகளும் நீக்கப்படவேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

28 மாவட்டங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளன. கால்நடைகளுக்குத் தீவனம் இன்றி ஈன விலைக்கு விற்கப்படுகின்றன. சந்தையில் ஆடு, மாடுகளின் கறி என்ன விலைக்குப் போகும் என்ற அளவிலேதான் அளவிடப்படுகின்றன. இன்றைக்கு மாடுகளைக் காட்டிலும், ஆடுகளுக்கு சற்று கூடுதல் விலை கிடைக்கிறது. கறி நல்ல விலை என்கின்ற முறையில் விவசாயிகளுக்குச் சற்று ஆறுதல் அளிக்கிறது.

பீகார், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் கால்நடைகளுக்கு அரசால் தீவனம் வழங்கப்படுவதைப் போல, தமிழகத்திலேயும் வழங்கி எஞ்சியுள்ள கால்நடைகளைக் காப்பாற்ற வேண்டுமென இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

மாடுகளை கோமாரி நோய் போன்றவை தாக்கும்போது உடனுக்குடன் மருத்துவ உதவி செய்ய நடமாடும் மருத்துவ உதவிகள் இன்றைக்கு அமல்படுத்தப்பட வேண்டும். குறிப்பாக, திருவாரூர் மாவட்டத்தில்

திரு. காமராஜ், எம்.பி. அவர்கள் இதற்கென நிதியுதவி செய்துள்ளார்கள். அதேபோல, இந்த அரசும் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை எளிய வேலை இல்லாத மக்களுக்குக் கலப்பின பால்வகை மாடுகள் வழங்க கடன் கொடுத்து பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பசு சித்திரவதை செய்யப்படுவதைத் தடுக்க எஸ்.பி.சி.ஐ. என்னும் அமைப்பில் 215 நபர்கள் போலீஸ் உடையுடன் பணியாற்றுகின்றனர். (மணியடிக்கப்பெற்றது) அவர்கள் பணி நிரந்தரமில்லாமல் இருக்கின்றனர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித்துளிகளில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** முடித்துக்கொள்கிறேன். அவர்களில் ஏறத்தாழ 100 பேர் இப்போது பணி ஓய்வு பெறுகிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். அவர்களுக்கு அரசு வழங்கவேண்டிய அனைத்து உதவிகளும் கிடைக்கவேண்டும். மேலும், மேற்கு வங்கம், கேரளம், ஆந்திரம் போன்ற மாநிலங்களில் அவர்களைப் பயன்படுத்துவதைப் போல, மற்ற பல்வேறு பணிகளுக்கும் அவர்களைப் பயன்படுத்துவது சிறப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, தூத்துக்குடி மற்றும் திருச்செந்தூர் விசைப்படகு மற்றும் நாட்டுப்படகு மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதில் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் கடந்த 8 மாதங்களாகத் தீர்க்கப்படாமல் இருக்கின்றன. விசைப்படகு மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லாமல் அந்தக் குடும்பங்கள் பட்டினியால் அவதிப்படுகின்றன. இதுபோன்ற பிரச்சினைகளை மறைந்த மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் உடனடியாகப் பேசித் தீர்த்திருக்கிறார்கள். அப்படி உடனடியாக இந்த அரசும் தலையிட்டுத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த அவையிலே நான் இதைக் குறிப்பிட்டிருக்கின்றேன். தூத்துக்குடியிலே நாட்டுப்படகு மீனவர்களுக்கும் விசைப்படகு மீனவர்களுக்கும் கடந்த காலத்திலே, 10 ஆண்டுகளுக்கு



முன்பு ஒரு லோக்கல் அட்ஜெஸ்ட்மென்ட்; அவர்களுக்குள்ளாக ஒரு ஒப்பந்தம் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்தில் 1983-லே போடப்பட்ட சட்டம் என்பது', விசைப்படகு மீனவர்கள் காலையில் 5 மணிக்குப் புறப்பட்டு இரவு 9 மணிக்கு வந்து சேரவேண்டும். அவர்கள் கடந்த 10 ஆண்டுக் காலத்திலே இந்த 5 மணியிலிருந்து 11 மணி வரைக்கும் வரலாம் என்று அவர்களுக்குள்ளாக ஒரு , ஒப்பந்தம் போட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அந்த அடிப்படையிலே நாட்டுப் படகு மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இரவு நேரத்திலே மோதல் ஏற்பட்டு, நாட்டுப் படகிலே இருந்த 3 பேர் இறந்துவிட்டார்கள். அதனால் பழைய ஒப்பந்தப்படியே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். காலத்தில் போடப்பட்ட ஒப்பந்தப்படியே செயல்பட வேண்டும் என்று நாட்டுப்படகு மீனவர்கள் வற்புறுத்தியுள்ளார்கள். நாங்களும், நமது மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் மற்றும் நிதித் துறை அமைச்சர் எல்லோரும் சேர்ந்து அதற்கான முயற்சிகளை எடுத்து வீட்டு வசதித் துறை அமைச்சர் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து அதற்காகப் பேசிப்பார்த்தோம். அந்த நாட்டுப்படகு மீனவர்கள் எல்லாம் அதற்கு நாங்கள் ஒத்துவர மாட்டோம்; ஒன்பது மணிக்குள்ளாக அவர்கள் திரும்பிவர வேண்டும் என்று கறாராகப் பேசி விட்டார்கள். அந்த அடிப்படையிலே விசைப்படகு மீனவர்கள் கோர்ட்டுக்குச் சென்றிருக்கிறார்கள். கோர்ட்டும் பழைய ஒப்பந்தப்படியே செயல்பட வேண்டும் என்று கூறியுள்ளது. மறுபடியும் அவர்கள் கோர்ட்டுக்கு சென்றிருக்கிறார்கள். அதனால் இந்த நிகழ்ச்சி கோர்ட்டிலே இருக்கின்றது என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அமைச்சரின் முயற்சிக்குப் பாராட்டுகள். விளக்கத்திற்கு நன்றி. அதேபோன்று வட சென்னை அனல்மின் நிலையத்திலிருந்து கொதி நீர் பழவேற்காடு ஏரியில் கலப்பதை உடனடியாகத் தடுத்து நிறுத்தவேண்டும். பழவேற்காடு ஏரியில் உள்ள மீன், நண்டு வகைகள் பெரிய அளவிலே பாதிக்கப்படுகின்றன. இதனால் 50,000-க்கும் மேற்பட்ட மக்கள் ஏறத்தாழ 49 கிராமங்களில் கடுமையாக பாதிக்கப்படுகின்றனர்; வேலையிழந்து பசி, பட்டினியால் வாடுகின்றனர். எனவே, உடனே இதனைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது அரூர் தொகுதியில் உள்ள மலைவாழ் கிராமத்தில் காரப்பாடி என்னும் ஓர் ஊர் இருக்கின்றது. அது உலகத்தோடு எந்தத் தொடர்பும் இல்லாமல் இருக்கிறது. மின் வசதியோ,

மருத்துவ வசதியோ, போக்குவரத்து வசதியோ, பள்ளிக்கூடம் செல்கின்ற வசதியோ இல்லாமல், நடைபாதைகூட இல்லாமல் மிருகங்களைப் போன்று பாறை இடுக்குகளிலும், அடர்ந்த முட்புதர் காடுகளிலும்தான் செல்கின்றனர். ரேஷன் கடைக்குச் செல்ல வேண்டுமானால் மிக நீண்ட தூரம் ஒரு நாள் பயணத்தில் சென்று தொலைதூரத்தில் இருக்கிற கத்திரிப்பட்டி என்னும் ஊருக்குச் சென்று வாங்க வேண்டியுள்ளது. இவர்கள் குடிநீராக ஓடையில் ஓடுகின்ற நீரைப் பயன்படுத்தினார்கள். இப்போது அந்த நீர் வற்றி விட்டதால் தண்ணீருக்கு மிகப் பெரிய அளவிலே கஷ்டப்படுகிறார்கள். எனவே, அவர்கள் அருகிலுள்ள வேப்பம்பட்டி என்னும் ஊரினுடைய தரைப் பகுதிக்கு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அந்தக் கிராமத்தைத் தரையில் கொண்டு வந்து, இறக்கி அவர்களுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டும். அவர்கள் மலைவாழ் மக்கள் என்பதால் எந்தவிதமான பயனும் இல்லாமல் இருக்கிறார்கள் என்பதை நான் சொல்வதோடு, மாண்புமிகு முதல்வரிடத்திலே சென்ற ஆண்டு இது சம்பந்தமாக ஒரு மனு கொடுத்திருக்கிறேன். அதன்மீது நடவடிக்கை எடுத்து கருணையோடு அந்த மக்களுக்கு வாழ்வு அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனது தொகுதியில் மலைவாழ் மக்கள் நிறைந்து உள்ளனர். மலைவாழ் கிராமங்களுக்கு..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கிருஷ்ணமூர்த்தி, தொகுதிப் பிரச்சினை எல்லாம் எழுதிக் கொடுங்கள். மானியக் கோரிக்கையின்மீது பேசுங்கள்.

**திரு. வே. கிருஷ்ணமூர்த்தி:** அவ்வளவுதான். இது ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். மலைவாழ் கிராமங்களில் ரோடுகள் அனைத்தும் மிகப் பெரிய அளவிலே பழுது அடைந்துள்ளன. குறிப்பாக அந்த ரோடுகளைச் சரிப்படுத்தித்தர வேண்டும். போக்குவரத்து வசதிகளை அவர்களுக்கு ஒழுங்குபடுத்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு ஆவலூர் என்னும் இடத்தில் ரேஷன் கடையும், ஆரம்ப சுகாதார நிலையமும் அமைத்துக் கொடுக்க வேண்டும். ஏராளமான கிராமங்களுடைய மையப் பகுதியான இந்த ஆவலூர் கிராமத்தில் ஒரு மேல்நிலைப் பள்ளியும் அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி சொல்லி அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன்.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்பு, பால் வளம், மீன்வளத் துறையிலே பாரதிய ஜனதா கட்சியின் சார்பில் என்னைப் பேசப் பணித்த மாண்புமிகு பேரவைத் தலைவருக்கும், அவையோருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தியா ஒரு விவசாய நாடு. பாரத நாட்டினுடைய வளர்ச்சிக்கும் கிராமப்புற பொருளாதார மேம்பாட்டிற்கும் வேளாண்மையும், கால்நடை வளர்ச்சியும் மிக முக்கிய பங்கு வகிக்கின்றன. கிராமப்புறத்தில் வசிக்கிறவர்களுக்குக் கால்நடை வளர்ப்பு முழு நேரத் தொழிலாகவும், நகர்ப்புறத்தில் வசிக்கின்றவர்களுக்கெல்லாம் பகுதி நேரத் தொழிலாகவும் விளங்குகிறது. பெண்களுக்குப் பெருமளவில் வேலைவாய்ப்பும், சுய வேலைவாய்ப்பும் அளிக்கக் கூடியதாக விளங்கி, பெண்களுக்கு ஒரு தற்சார்பு நிலையையும், தன்னம்பிக்கையையும் இத்தொழில் வளர்க்கிறது. நாகை மாவட்டத்தில், குறிப்பாக வடக்கு மாவட்டத்திலே சாகுபடி நிலப்பரப்பு அதிகரித்து, மேய்ச்சல் நிலம் மிகவும் குறைந்து வருகிற காரணத்தால் கால்நடைத் தொழிலில் அதிக சிரமங்களால் இத்தொழிலை மட்டுமே நம்பியிருக்கிற விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிற அத்தனை வழிகாட்டுதல்களும், திட்டங்களும் முழுமையாக நிறைவேற்றப்பட்டால், கால்நடை வளர்ப்பிலும், பால் வளத்திலும் தமிழகம் நிச்சயமாக முன்னேறும் என்று நான் கருதுகிறேன். மயிலாடுதுறை நகரத்திலே உள்ள அரசு கால்நடை மருத்துவமனையிலே போதுமான அளவிற்கு டாக்டர்கள் கிடையாது. பணியாளர்களும் கிடையாது. நிறையப் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. இந்த மருத்துவமனையின் தரம் மேம்படுத்தப்பட வேண்டும். கூடுதல் மருத்துவர்களை நியமிக்க வேண்டும்.

*பிற்பகல் 12-55*

சென்ற ஆண்டு பருவம் தவறிப் பெய்த மழையினால் எங்கள் பகுதியிலே கோமாரி நோய் அதிக அளவில் பரவி, மருந்து இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டபொழுது, நல்ல வேளையாக எங்களுடைய வேளாண்மைத் துறை அமைச்சர் அங்கே இருந்த காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் ஜீவானந்தம் அவர்கள் உடனுக்குடன் அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, குத்தாலம் தொகுதியிலும், மயிலாடுதுறை தொகுதியிலும் பெருகிவந்த கோமாரி நோயை ஓரளவுக்குக் கட்டுப்படுத்த முடிந்தது.

அதைப்போல மயிலாடுதுறையிலே ஒன்றியம் முழுமைக்குமாக நடமாடும் கால்நடை மருத்துவமனை ஒன்று இயங்க வேண்டும் என்பது

எங்கள் தொகுதி மக்களின் கோரிக்கை. ஒரு டாக்டர், ஒரு மருந்தாளுநர், இரண்டு பணியாளர்களோடு தேதி குறிப்பிட்டு ஒன்றியம் முழுமைக்கும் சுற்றி வருகிற நிலையிலே நடமாடும் கால்நடை மருத்துவமனை ஒன்று இயங்க வேண்டும் என்று மயிலாடுதுறை தொகுதி மக்களின் சார்பாக ஒரு கோரிக்கையை மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.

அதேபோல இன்றைக்குக் குடிசைத் தொழிலாக, கிராமப்புற ஏழை மக்களெல்லாம் வாடிக்கையாக சின்னச்சின்ன அளவிலே ஒரு மாடு, இரு மாடு வைத்துக்கொண்டு பால் ஊற்றுவது வழக்கம். இப்படிப்பட்ட தொழிலுக்குக்கூட இன்றைக்கு ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. பாக்கெட் பால் விற்பனை மிக வேகமாகப் பரவி வருகிறது. சாதாரண ஒரு மாடு, இரு மாடு வைத்துக்கொண்டிருக்கிற குடும்பங்களை, விவசாயக் குடும்பங்களை இது மிகவும் பாதித்திருக்கிறது. இன்றைக்கு ஆவின் பாலுக்கு நிகராக, அதற்குப் போட்டியாக பல்வேறு தனியார் கம்பெனிகளின் பாக்கெட் பால் விற்பனை மூலம் கிராமத்தில் சாதாரண வெற்றிலை பாக்கு, மளிகைக் கடை அளவிற்கு பாக்கெட் வாட்டரைப் போல இன்றைக்கு பாக்கெட் பால் விநியோகம் செய்யப்படுகிறது. சுலபமாகக் கிடைக்கிறது என்பதற்காக நுகர்வோரும், அதை நம்பி வாங்கிக் குழந்தைகளும், நோயாளிகளும் டயரியா நோய்க்கு ஆளாக்கப்படுவதை நாம் பார்த்து வருகிறோம். இப்படிப்பட்ட மிக வேகமாகப் பரவி வருகின்ற பாக்கெட் பால் கலாச்சாரத்தை, பாக்கெட் பாலை நெறிமுறைப்படுத்த வேண்டும்; முறைப்படுத்த வேண்டும். எந்த பாக்கெட்டிலும் ஐ.எஸ்.ஐ. முத்திரை இருப்பதில்லை. Expiry date-ம் இல்லை. ஆகையினால் இதை ஒழுங்குமுறையில் கொண்டுவரவேண்டியது அரசாங்கத்தின் கடமை.

அதைப்போலப் பசு இனத்தைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் நமக்கு இருக்கிறது. 1951-லிருந்து 1997 வரை பார்க்கின்றபோது, 102.16 இலட்சம் பசு இனம் இன்றைக்கு 90.47 இலட்சமாகக் குறைந்துள்ளது. பசு இனத்தின் எண்ணிக்கை குறைந்ததற்குக் காரணம், பசு மாடுகள் இங்கிருந்து கேரளாவிற்கு லாரிகளிலே இரக்கமில்லாமல் கடத்திச் செல்லப்பட்டு இறைச்சிக்காக அங்கே வெட்டப்படுவதுதான். தாயை இழந்த குழந்தைகூட பசும்பாலைப் பருகி உயிர் வாழ முடியும். எனவே, பசு நமக்குத் தாய் போன்றது. பசு விவசாயிகளின் நண்பனாக இருக்கிறது. பசுவின் சாணம் உரமாகப் பயன்படுகிறது. காளைகள் உழவிற்கும், சுமைகளைத் தூக்கும் வண்டி மாடுகளாகவும் பயன்படுத்தப்பட்டு,



அதனால் எரிபொருள் சேமிப்புக்கூட ஏற்படுகிறது. பசு இனத்தைப் பாதுகாக்க நமது அரசியல் சட்டம் வழிகாட்டுதல் நெறிமுறைகளில் கூறியுள்ளதைக் கருத்தில்கொண்டு, பசு இனத்தை அழிவிலிருந்து பாதுகாக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல ஆடு வளர்ப்பு என்ற தலைப்பிலே மொத்தம் உள்ள ஆடுகளில் 45 சதவிகிதம் செம்மறி ஆடுகள்; மொத்தமுள்ள கால்நடைகளில் 20 சதவிகிதம் செம்மறி ஆடுகளின் ஆதிக்கம் இருக்கிறது. ஆனால் நாகை மாவட்டத்திலே செம்மறி ஆடுகள் ஒரு சதவிகிதம்கூட இல்லை. கோடை காலங்களிலே மந்தை மந்தையாகக் கிடையைப் போடுவதற்குத்தான் வருவார்கள். கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்கும், பெண்களுக்கும் மானிய விலையிலே செம்மறி ஆடும், வெள்ளாடும், கொடியாடும் வழங்கினால் கிராமப்புறப் பொருளாதாரம் மேம்படுவதோடு, வேலையற்ற விவசாயப் பெண்களின் வாழ்விற்கு ஓர் உத்தரவாதம் அளிக்க முடியும் என்று நாங்கள் கருதுகிறோம்.

அதேபோல, மீன்வளத்திலே நாகை மாவட்டத்தில் குறிப்பாக சீர்காழி மற்றும் பூம்புகார் தொகுதிகளிலே பன்னாட்டு மூலதனத்தோடு மிகப் பெரிய அளவிலே இறால் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு விவசாய நிலம் பாதிக்கப்பட்டிருக்கிறது. நிலத்தடி நீர் உப்பாகிக் குடிநீரும் பாதிக்கப்பட்டிருக்கிறது. 'லாப்ட்' போன்ற பல்வேறு அமைப்புகள் இந்த இறால் பண்ணையை எதிர்த்து வருகின்றன. இவர்களால் முடியாதபோது, வைரஸ் போன்ற மிகப் பெரிய நோய்கள் இன்றைக்கு இறால் பண்ணைகளை ஓரளவிற்குக் கட்டுப்படுத்தி இருக்கின்றன. இறால் தொழிற்சாலைகளைத் தடைசெய்கிற, 1991 ஆம் ஆண்டு டிசம்பர் 12 ஆம் தேதி உச்ச நீதிமன்றம் கொடுத்த தீர்ப்பை உடனடியாகக் கடுமையாக அமல்படுத்தினால் ஓரளவிற்கு இறால் பண்ணைகளுடைய ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த முடியும்.

பிற்பகல் 1-00

விவசாயிகளுக்கு உள்ளதைப்போலவே மீனவர்களுக்கும் தனியாகக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்படவேண்டும். மீனவர்களில் பெரும்பாலோர் ஆண்கள்தான் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிறார்களே தவிர, விற்பனை செய்கின்ற பொறுப்பும், விற்பனைத் திறமையும் பெண்கள் மத்தியிலேதான் இருக்கிறது. பெரும்பாலும் குடும்பத்தினுடைய நிர்வாகத்தை பெண்கள் பார்த்துச் செய்கின்ற ஒரு சூழ்நிலைதான்

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
220056

இருக்கிறது. அவர்கள் திறமையாக வணிக அனுபவம் பெற்றிருக்கிற காரணத்தால், அவர்களுக்கு உதவுகின்ற வகையிலே கூட்டுறவு வங்கியை ஏற்படுத்தினால் பல்வேறு வகையிலே அவர்களுக்கு உதவியாக இருக்கும்.

அதேபோலக் கடலோரப் பகுதியிலே பல மீனவ கிராமங்கள் பாதிக்கப்படுகின்றன. குறிப்பாக பூம்புகார் கடற்பகுதி; இயற்கையின் எழிலோடு கூடிய அந்தப் பகுதி கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. முன்பு சோழர் காலத்தில் தலைநகராக இருந்த பூம்புகார் இன்றைக்கு கடல்கொண்ட பகுதியாக மாறியிருக்கிறது. இயற்கையோடு கூடிய எழிலார்ந்த அந்தப் பகுதியை, நமது அரசு கூடுதல் முக்கியத்துவம் தந்து, கடல் அரிப்பிலிருந்து பாதுகாக்க வேண்டும்.

அதைப்போலவே, திருமுல்லைவாசல் என்ற பகுதி சீர்காழி தொகுதியிலே இருக்கிறது. அது கடலோரப் பகுதியிலே இயற்கையாகவே துறைமுகமாக அமைந்திருக்கிறது. பல லான்ஞ்கள், போட்-கள் நின்று, மீன்பிடித் தொழிலிலே பலர் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். நேரடியாக அங்கு பிடிக்கப்படுகிற மீன்கள் எல்லாம், கேரளாவிற்குச் செல்கிறபோது, விலை வீழ்ச்சி என்பது மிகவும் மோசமாக பாதிக்கிறது. முதல் நாள் விற்கின்ற மீன்விலை, அடுத்த நாள் மிகப் பெரிய சரிவிற்கு வருகிறது. ஆகையால், திருமுல்லைவாசல் பகுதியிலே இருக்கிற மீனவர்களின் வாழ்க்கைக்கு உத்தரவாதம் தருகின்ற வகையிலே, குளிர்சாதனப் பெட்டி ஏற்பாடு செய்ய வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்னும் இரண்டு மணித் துணிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** சரி, அதேபோல, நாகை துறைமுகத்திலே 2000 விசைப் படகுகள் ஒரே நேரத்திலே நின்று புறப்படுகின்றன. நெரிசல் மிகுந்த இந்தப் பகுதியினால் பல போட்-கள் ஆண்டிற்கு நூறு போட்கள்-ஆவது உடைபடுகின்றன. இந்த நெரிசலைப் போக்குகின்றமுகத்தான் தமிழக அரசு கூடுதல் கவனம் செலுத்தி, இந்தப் படகுத் துறையை விரிவுபடுத்த வேண்டுமென்பது நாகை மாவட்ட மீனவர்களுடைய கோரிக்கை. அதேபோல, நாகை கடலோரப் பகுதி மீனவர்கள் அடிக்கடி இலங்கைக் கடற்படையினராலும், இலங்கை மீனவர்களாலும் கடத்தப்படுவது தொடரும் சம்பவமாக இருக்கிறது. தமிழக அரசு உடனுக்குடன் ....



**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நாகப்பட்டினம் துறைமுகத்தை விரிவுபடுத்த வேண்டுமென்ற அடிப்படையிலே 5 கோடி ரூபாய் ஒதுக்கிக் கொடுத்திருக்கிறார்கள். அதற்கான பணி நடைபெறும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, இப்பகுதி மீனவர்கள் இலங்கை இராணுவத்தாலும், இலங்கை மீனவர்களாலும் கடத்தப்படுவது, சிறை பிடிக்கப்படுவது வாடிக்கையாக இருக்கிறது. சென்ற முறை கிட்டத்தட்ட 26 பேரை இலங்கை இராணுவம் கைது செய்தபோது, அமைச்சர் அவர்களும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், அதேபோல மத்திய அமைச்சர்களும் போராடி, வாதிட்டு விரைவாக அவர்களை வெளியே கொண்டு வந்திருக்கிறார்கள்; என்றாலும், இன்னும் பீச்சங்குப்பம் பகுதியிலேயிருந்து சென்றிருக்கிற மீனவர்கள் நான்கு பேர் சுந்தர், சந்திரன், சிவானந்தன், பாலு போன்ற நான்கு மீனவர்கள் இலங்கைச் சிறையிலே இருக்கிறார்கள். அதேபோல, அவர்களுடைய 4 மீனவப் படகுகளும், 4 போட், லான்ஞ்களும் இலங்கைக் கடற்படை வசம்தான் இருக்கின்றன. தமிழக அரசு உடனடியாகக் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்தி, இந்தப் படகுகளை மீட்டுத் தரவேண்டும். அதேபோல, சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்டுத் தரவேண்டும் என்பது நாகை மாவட்ட மீனவர்களுடைய கோரிக்கை. அதுமட்டுமல்லாமல், இலங்கைச் சிறையில் இருக்கின்ற மீனவர்களின் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் அளிக்க வேண்டும். இடைக்கால நிவாரணமாக ஏதாவது அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று இந்த நல்ல சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-05*

அதுபோல மதுரையில் மீனாட்சியம்மன் கோயிலுக்கு நாம் அடிக்கடி செல்வோம். இப்போது பார்த்தாலும்கூட அந்த மதுரை மீனாட்சியம்மன் பொற்றாமரைக் குளத்தில் நீர் வற்றித்தான்

காணப்படுகிறது. மதுரை தெப்பக் குளத்திலும் நீர் வற்றித்தான் காணப்படுகிறது. சுற்றுலாப் பயணிகளைக் கவருகிறமுகத்தான்கூட நீர் நிரப்பி அங்கே மீன் வளர்த்தால் அழகாக இருக்கும். மாரியம்மன் கோயில் குளத்தில்கூட மீன் இல்லை. குளத்தில் நீரும் இல்லை. நீர் கொண்டு வந்து நிரப்பி மீன் வளர்த்தால் அழகாக இருக்கும். மீனும் நன்கு வளரும் என்று சொல்லிக் கொண்டு, என்னுடைய தொகுதியிலே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** முடித்துவிடுகிறேன். காரைக்குடி தொகுதியில் ஒரு சின்ன பிரச்சினை. காரைக்குடியில் தனியார் கட்டடத்தில் கால்நடை மருத்துவமனை இயங்கி வருகிற காரணத்தால் அது அரசுரீதியான முழுமையான மருத்துவமனையாக இல்லை. சொந்தக் கட்டடத்தில் காரைக்குடியில் ஒரு கால்நடை மருத்துவமனையை உருவாக்க வேண்டும் என்பது காரைக்குடி மக்களுடைய கோரிக்கை. அதுமட்டுமல்லாமல் என்னுடைய தொகுதியில் ஒரே ஒரு பிரச்சின்னையைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மயிலாடுதுறையில் கடந்த மே மாதத்தில் மட்டும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இத்துடன் முடித்துவிடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இது தொடர்பாக முதலைச்சர் அவர்களுக்குத் தனியாக கவன ஈர்ப்பாகக் கொடுத்திருக்கிறேன். என்றாலும் கூட பத்திரிகைகள்—வாரப் பத்திரிகைகள், தினப் பத்திரிகைகள்—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை உரையை முடித்து விடுங்கள். அதை முதலமைச்சர் அவர்களிடம் எழுதிக் கொடுத்து விடுங்கள்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு பிரச்சினை, பெரிதாக இருக்கிறது.**.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஜெக. வீரபாண்டியன், அதை இதிலே பேசக் கூடாது.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**திரு. ஜெக. வீரபாண்டியன்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். ஆகையினால்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்கள் ...

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசுகிறபோது தனியார் பால் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்கு பால் வளத் துறை நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இங்கே குறிப்பிட்டார்கள். இந்தத் தனியார் பால் விற்பனைக்கு வருகிறபோது, அந்தப் பாலைப் பரிசோதிக்கின்ற முறை சுகாதாரத் துறையில் இருக்கிற சானிடெரி இன்ஸ்பெக்டர் மூலமாகத்தான் நகராட்சி மூலமாகவோ அல்லது மாநகராட்சி மூலமாகவோ இதுவரை செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பால் வளத் துறையின் மூலமாக நேரடியாகத் தனியார் பால் விற்பனை செய்கின்றவர்களைக் கண்காணிக்க இதுவரை எந்த ஒரு வாய்ப்பும் இல்லாதிருந்த நிலையில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்கு இந்தத் தகவலை எடுத்துச் சென்று தற்போது தனியார் பால் நிறுவனங்கள் அதிக அளவில் துவக்கப்பட்டு பால் விற்பனை செய்து வருகிற இந்தச் சூழ்நிலையில் அவற்றினுடைய செயல்பாடுகளை நுணுக்கமாகக் காண்காணிக்கவும், பொது மக்களுக்குத் தரமான பால் வழங்குகிறார்களா என்பதை உறுதி செய்யவும் பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையரின் நேரடிக் கட்டுப்பாட்டில் இயக்கத்தக்க வகையில் முழு மானியத்துடன், ரூ.69.78 இலட்சம் மதிப்பில் ஒரு தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. இந்த ஆய்வகம் பால் மற்றும் பால் உபபொருட்களின் மாதிரி எடுத்து பகுத்தாய்வு செய்து சான்றிதழ் வழங்க மத்திய அரசால் அங்கீகாரம், அம்மா அவர்களின் முயற்சியால் பெறப்பட்டுள்ளது. இக்கட்டுப்பாட்டு ஆய்வகத்தின் மூலம் தனியார் பால் நிறுவனங்களின் செயல்பாடுகளைக் கண்காணிக்க இனி வரும் காலங்களில் பால் வளத் துறை மூலமாக நடவடிக்கை முழுமையாக எடுக்கப்படும். அம்மா அவர்களுடைய அரசு அதற்குண்டான பணிகளை நிறைவாகச் செய்திருக்கிறது. அம்மா அவர்கள் வந்த பின்னால்தான் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.(மேசையைத் தட்டும் ஒலி)

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.

## 5. அறிவிப்பு

### பேரவைக் குழுக்களுக்கான தேர்தல் அட்டவணையில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரைக்கு முன்னால், பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

### பேரவைக் குழுக்களுக்கான தேர்தல்

*2003-2004 ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழு, பொதுக் கணக்குக் குழு, பொது நிறுவனங்கள் குழு, அவை உரிமைக் குழு ஆகியவற்றிற்கான தேர்தல் அட்டவணையில் பின்வரும் மாற்றங்கள் செய்யப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட விரும்பும் வேட்பாளர்கள் தங்களது வேட்புத் தாள்களை 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7 ஆம் நாள் புதன் கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும்.*

*வேட்புத் தாள்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 7ஆம் நாள் புதன் கிழமை மாலை 5-00 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 8 ஆம் நாள் வியாழக்கிழமை முற்பகல் 11-00 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.*

*வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், 2003 ஆம் ஆண்டு மே திங்கள் 9 ஆம் நாள் வெள்ளிக்கிழமை குழுக்களுக்கான தேர்தல் நடைபெறும்.*

## 2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு

### (ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால் வளம்

### (உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.



*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா எனும் அமிழ்தூறும் அன்புச் சொல்லே, அகிலத்தில் உதிக்கின்ற அனைத்து உயிர்களும் கண்ணிமை திறந்து புவி பார்க்கும் முன்னே, முத்தாக உதிர்கின்ற முதல் சொல்லாகும். தமிழ் மொழியின் முதலெழுத்து, 'அ' என்றால், அத்தமிழ்த் தாயின் தலை மகளாய், முதல் மகளாய், தரணிக்கே தங்கத் திருமகளாய்த் திகழ்ந்து, தமிழகத்தை ஆளுகின்ற தாயாம், இதய தெய்வம் எங்கள் அன்னையைத்தான் இன்று மூத்தோர் முதல் முல்லைச் சிரிப்பு குழந்தை வரை 'அம்மா' என்று அன்போடு அழைக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அம்மா, உங்களைத் தாயாக, தலைமையாகப் பெற்றதைவிட எங்களுக்குப் பேரின்பமும், பெருமையும் வேறில்லை அம்மா. அன்பு, அறிவு, அஞ்சாமை என்கிற தாரகச் சொல்லை மந்திரச் சொல்லாக மனதில் கொண்டு, தம் தொண்டர்களாம் எங்களை அவ்வழியே அழைத்துச் செல்லும் அற்புதப் பிறவி நீங்கள் அம்மா. அறிவுப் பெட்டகமாய், அன்பின் திருவுருவமாய், தன் அன்பு மக்களைச் சேயாகக் காக்கின்ற தாயாக, தியாகச் செம்மலாகத் திகழ்கின்ற சிந்தனைக் களஞ்சியம்தான் நீங்கள் அம்மா. அம்மா என்றால் அன்பு என்று அன்று பாடினீர்கள். அம்மா என்றால் அகிலமே என்று இன்று வாழ்கிறீர்கள். அறிஞர் அண்ணாவைக்கூட இச்சபையில் வாதத்தால் வென்றிடலாம் என்று வந்தவர்கள் பலருண்டு என்று வரலாறு இருக்கையிலே, அம்மா, உங்கள் வாதத் திறமையை சபைக்கு வந்து, சந்திக்கத் திராணியின்றி, தவழும் நிலையில் தடுமாறிப் போய், (மேசையைத் தட்டும் ஒலி) தவிப்போரையும் நிலைகுலையச் செய்து, தொடை நடுங்க வைத்தது உங்களால் மட்டுமே வரைய முடிந்திட்ட வரலாற்று வரிகள் அம்மா. வாங்கிப் பழக்கப்பட்டவர்கள் வாழ்கின்ற இந்த நாட்டில், தன் பிள்ளைப் பிராயம் முதல் வழங்கியே பழக்கப்பட்ட வள்ளல் பெருந்தகையாம் அம்மா அவர்கள் ஆளுகிற நாட்டில் (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே பேசுகிற வாய்ப்பைப் பெற்றதை எனது பிறவிப் பயனாகக் கருதி, நன்றியோடு இதய தெய்வம் அம்மா அவர்களது தாழ் பணிந்து வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிலையைப் பற்றிச் சிந்திப்பது சராசரி மனிதனின் நிலைப்பாடு என்றால், எதிர்காலச் சந்ததியின் வாழ்க்கையையும், வளர்ந்து வரும் சூழ்நிலைக்கு ஏற்ப

நாட்டு மக்களையும், நாட்டினுடைய மேம்பாட்டையும் பற்றிச் சிந்திப்பவர்தான் ஒரு நாட்டின் தலைவராகவும், தீர்க்கதரிசியாகவும் விளங்குவார்கள் என்பதுதான் அறிஞர்களின் கூற்றாகும். அந்த அடிப்படையில்தான் சுதந்திரம் அடைந்த நாள் முதல், இந்நாள் வரை தமிழகத்தை ஆண்ட எந்த முதல்வருக்கும் இல்லாத சிந்தனையின் அடிப்படையில், அழிந்துவரும் கடல்வாழ் உயிரினங்களின் நிலையை உணர்ந்து, தமிழக மீனவர்களின் வாழ்நாளில் என்றென்றும் வளத்தை மட்டுமே காண்பதற்காக, இந்தியத் திருநாட்டிற்கே எடுத்துக்காட்டாக விளங்கிடும்வண்ணம், குறைந்து வரும் கடல் வாழ் உயிரினங்களைப் பெருக்குவதற்காகவும், மீனவ மக்களின் வருவாயை அதிகப்படுத்துவதற்காகவும் இதய தெய்வம் அம்மா அவர்களின் சீரிய சிந்தையில் உதித்ததுதான் மீன்வள மேம்பாடு இயக்கம். இந்த மீன்வள மேம்பாட்டு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாண்புமிகு அம்மா அவர்கள் 18-7-2002 அன்று இராமநாதபுரத்தில் தொடங்கி வைத்தார்கள்.

மீன்வள மேம்பாட்டு இயக்கத்தின் நோக்கம் என்னவென்றால், சமீப காலங்களில் அண்மைக் கடல் பகுதியில் மீன் வளம் குறைந்து வருவதால், மீனவர்களுக்கு மீன் பிடிப்பின் மூலம் வருவாய் குறைந்து வருகிறது. இத்திட்டத்தின் மூலம் அண்மைக் கடல் பகுதியில் மீன் வளத்தை அதிகரிக்கவும், அதன்மூலம் மீனவர்களின் வருவாயைப் பெருக்கவும் வழிவகை காணப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் அனைத்தும் ரூ.61 கோடி திட்ட மதிப்பீட்டில் ஐந்து ஆண்டுகளில் படிப்படியாக நிறைவேற்றப்படும். மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்கள் இராமநாதபுரம் மாவட்டம், வேதாளையில் கடலில் இறால் குஞ்சுகளை இருப்புச் செய்யும் திட்டத்தை, அண்மைக் கடல் மீன் வளத்தினை மேம்படுத்திடத் தொடங்கி வைத்தார்கள். கடந்த ஆண்டு சுமார் 10 இலட்சம் இறால் குஞ்சுகளை அடைப்புகளில் வளர்த்து, கடலில் இருப்புச் செய்யப்பட்டது. மேலும், 10 இடங்களில் இறால் குஞ்சுகளை இருப்புச் செய்யும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். அண்மைக் கடல் மீன் வளத்தினை மேம்படுத்திட செயற்கை மீன் உறைவிடங்கள் 10 இடங்களில் அமைக்கப்படும். இதனால், கடல் உயிரினங்களின் உற்பத்தி பெருகும். இத்திட்டங்களைக் கண்காணிக்க ஒரு கண்காணிப்புக் குழு, அரசு கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறைச் செயலர் தலைமையில் இயங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டங்களின்கீழ் மீன்பிடி இல்லாத 4 மாதங்களுக்கு



மொத்தம் ரூ.1,200/- வழங்கப்படுகிறது. இதோடுமட்டுமில்லாமல், வறுமைக் கோட்டிற்குக் கீழேயுள்ள மீனவக் குடும்பங்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியுடன் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், கூடுதலாக மாதம் தலா 20 கிலோ வீதம், 4 மாதங்களுக்கு 80 கிலோ அரிசி வழங்கப்பட்டு வருகிறது. கடந்த தி.மு.க ஆட்சியில் இத்திட்டத்தில் நிவாரணப் பணம் பெறத் தகுதியில்லாத பல மீனவர்களைச் சேர்த்து, அரசுப் பணம் விரயமாகச் செலவு செய்யப்பட்டுள்ளது. 2001-2002 ஆம் ஆண்டு, இத்திட்டத்தின்கீழ் பணம் பட்டுவாடா செய்யும்போது பல குறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றை நிவர்த்தி செய்ய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில நிபந்தனைகளுடன்கூடிய ஆணை பிறப்பித்தார்கள். அதன்படி, புகைப்பட அடையாளத்துடன் மீனவர்களை நேரில் கண்டறிந்து, இவ்வாண்டு பணம் பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. இதனால், எந்த ஒரு உண்மையான மீனவரும் இந்தத் திட்டத்தில் விடுபடவில்லையென்பதை இந்தத் தருணத்தில் கூறிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-15

சென்ற ஆண்டு கொள்கை விளக்கக் குறிப்பில் பாக்விரிகுடா பகுதியில், இலங்கை மற்றும் இந்திய நாட்டினுடைய எல்லைக் கோட்டினை அறியாமல் கடக்க நேரும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு உள்ளாகும் நிலையைத் தவிர்க்க வழிக்காட்டும் விளக்குடன்கூடிய ஒளிரும் மிதவைகள் நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 240 கடல் மைல் தூரத்திற்கு அமைக்கப்படுமென அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இத்திட்டத்தை நிறைவேற்ற தக்க சாத்தியக்கூறுகள் சென்னையிலுள்ள கடல்சார்ந்த தொழில்நுட்ப நிறுவனத்துடன் —National Institute of Ocean Technology— கருத்தாய்வு செய்யப்பட்டது. மைய அரசின் மற்ற நிறுவனங்களுடனும், இலங்கை அரசின் இசைவுடனும் இத்திட்டத்தை நிறைவேற்றிட வேண்டியுள்ளதால், மத்திய அரசின் அனுமதி மற்றும் ஓராண்டிற்கு மூலதனச் செலவினமாக ரூபாய் 3 கோடியே 40 இலட்சத்திற்கான செயற்குறிப்பு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் ஒப்புதல் பெறப்பட்டதும், வழிகாட்டும் விளக்குடன்கூடிய ஒளிரும் மிதவைகள் அமைக்கப்படும்.

சர்வதேசக் கடல் எல்லையை அறியாமல் கடந்து செல்லும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். அந்தச் சமயங்களில் மீனவர்களின் குடும்பங்களுக்கு உதவும் வகையில் தினம் ரூபாய் 50 வீதம் அரசு கொடுத்து வருகிறது. இத்திட்டத்தை, சென்ற தி.மு.க. அரசு, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்களுக்கு மட்டும்தான் செயல்படுத்தி வந்தது. ஆனால், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு பொறுப்பேற்றவுடன், இலங்கை மட்டுமின்றி, இதர அண்டை நாடுகளில் கைது செய்யப்படும் மீனவர்களுக்கும் இத்திட்டம் விரிவுப்படுத்தப்பட்டது. மேலும், இதற்கான பணத்தை, முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் சம்பந்தப்பட்ட மீனவக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து முதலில் பெற்று வழங்கி, பின்னர், அரசிடம் திரும்பப் பெற்று சங்கத்திற்குச் செலுத்தி வந்துள்ளனர். அதனால் காலதாமதமாகவே அந்தக் குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைத்து வந்தது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு இந்தக் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக தினம் ரூ.50/- உடனடியாக வழங்கும் திட்டம் அறிவிக்கப்பட்டது. அதன்படி, நாகப்பட்டினம் முதல் கன்னியாகுமரி வரையிலான 8 மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூ.40 இலட்சம் முன்பணமாக வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் நடப்பு நிதியாண்டிலும் தொடரப்படும்.

சர்வதேச கடல் எல்லையை அறியாமல் கடந்து செல்லும்போது, இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டினால் இறக்க நேரிடும் மீனவர்களின் வாரிசுதாரர்களுக்கு, முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் நிவாரணமாக வழங்கப்படுகிறது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அரசு பொறுப்பேற்றவுடன் நிவாரணம் வழங்குவதில் காலதாமதத்தைத் தவிர்க்கும் பொருட்டு, 8 கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு, தலா ஒரு இலட்சம் ரூபாய் வீதம் முன்பணமாக வழங்கப்படவும், பின்னர், இந்தத் தொகை மீளப் பெற்றுக்கொள்ளவும் அரசு ஆணை வெளியிடும் எனச் சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, 8 மாவட்ட மீனவர்கள் பயன்பெறும்பொருட்டு, 9-7-2002-ல் அதற்கான ஆணைகளைப் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பிறப்பித்தது என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சிக்



காலத்தில் நமது மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும்போது, 46 துப்பாக்கிச் சூடு நிகழ்வுகள் நடந்து உள்ளன. அதில் 36 மீனவர்கள் மரணம் அடைந்துள்ளனர். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், அம்மா அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களோடு தொடர்புகொண்டு பேசியதன் விளைவாக, 2001 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மற்றும் நவம்பர் மாதங்களில் துப்பாக்கிச்சூடு சம்பவங்களில், ஒரே ஒருவர் மட்டும்தான் இறந்துள்ளார் என்பதை இத்தருணத்தில் கூறிக்கொள்கிறேன். எதற்காக, இங்கே இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், எதிர்பாராதவிதமாக ஏற்படும் சாலை விபத்துகளைக்கூட, தினந்தோறும் காலையில் குறிப்பெடுத்து பட்டியலிட்டு, சட்டம்-ஒழுங்கு பற்றித் தவறாகப் பிரச்சாரம் செய்துவரும் பட்டியல் தலைவர் திரு. கருணாநிதிக்கு இந்தப் பட்டியலும் தெரியவேண்டுமென்பதற்காக இங்கே குறிப்பிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1996 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு வரை தி.மு.க. ஆட்சியில் கடலில் மீன்பிடிக்கச் செல்கிறபோது பல்வேறு நிகழ்வுகளில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு, இலங்கைச் சிறையில் அடைக்கப்பட்டார்கள். இவர்கள் சிறையிலிருந்த நாட்கள் ஒன்றல்ல, இரண்டல்ல, இரண்டு மாதங்கள் முதல் 10க்கு மேற்பட்ட மாதங்கள் வரை இலங்கைச் சிறையில் வாடியுள்ளனர். ஆனால், எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பாரதப் பிரதமருடன் பேசி எடுத்த நடவடிக்கைகளின் மூலமாக இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர்கள் பல மாதக் கணக்கில் இல்லாமல் சில நாட்கள் கணக்கிலே விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) உதாரணத்திற்கு ஒன்று சொல்ல வேண்டுமென்றால், இலங்கை அதிபர் திருமதி சந்திரிகா அவர்களை, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்னையில் சந்தித்து, தொடர்ந்து தமிழக மீனவர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்குமாறு பேசியதன் விளைவாக, 27 மீனவர்களையும், 31 படகுகளையும் உடனடியாக விடுவிப்பு செய்ய உத்தரவிட்டதோடு, இலங்கை அதிபர் திருமதி சந்திரிகா அவர்களும் இதற்கு உத்தரவாதமும் அளித்துள்ளார்கள் என்ற நல்ல செய்தியையும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-20

நேற்று, இலங்கையிலிருந்து 26 மீனவர்களும், 15 படகுகளும் இராமேஸ்வரம் வந்து அடைந்துள்ளன என்ற இனிய செய்தியையும் இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி அம்மா அவர்கள், தமிழக முதல்வராய் இருந்த காலத்தில் மட்டுமின்றி, எதிர்க்கட்சித் தலைவராக இருந்த காலத்தில்கூட, தமிழர் நலம் காக்க, தாயுள்ளத்தோடு பாகிஸ்தான் சிறையில் பல மாதக்கணக்கில் வாடிய மீனவர்களை, அன்றைக்கு மத்திய அரசுக்குக் கோரிக்கை வைத்து, உடனடியாக விடுவித்தார்கள் என்பதையும் இங்கே சுட்டிக்காட்டுகின்ற நேரத்தில், தமிழினத் தலைவர்கள் என்ற போர்வையில், கடந்த ஐந்தாண்டு காலத்தில், தமிழ்நாட்டைச் சீரழித்த தி.மு.க. ஆட்சியில் பாகிஸ்தானில் சிறை பிடிக்கப்பட்ட மீனவர்களை மீட்பதற்கு அவர்கள் எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்பதையும் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டத்தில், பழவேற்காடு ஏரி, 461 சதுர கிலோமீட்டர் கொண்ட பகுதியாகும். இதை நம்பி 42 மீனவக் குப்பங்களில் சுமார் 25 ஆயிரம் மக்கள் வாழ்கிறார்கள். கடல்நீர் இந்த ஏரியில் வந்தால்தான், இறால், நண்டு போன்ற மீன் வகைகள் பெருகும். அடிக்கடி கடலும், ஏரியும் கலக்கின்ற இடத்தில் முகத்துவாரம் அடைத்து வருகின்றது. 1974 ஆம் ஆண்டு, இந்த முகத்துவாரம் தூர் வாரப்பட்டது. 2002 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையின்போது, பழவேற்காடு ஏரி முகத்துவாரம் தூர் வாரும் பணி தொடங்கப்படும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அறிவித்தது. அதன்படி, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில், 30-9-2002 அன்று தொடங்கப்பட்டு, தூர் வாரும் பணி முடிவுற்று, தற்போது முகத்துவாரம் நல்ல நிலையில் ஓடிக் கொண்டிருக்கிறது. 19-11-2002 அன்று நான் அந்தப் பகுதியைப் பார்வையிட்டபோது, 27 ஆண்டுகளுக்குப் பிறகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், இந்த முகத்துவாரப் பணி வெற்றிகரமாக முடிந்ததற்கு அனைத்து கிராம மக்களும் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதையும் நான் இங்கே குறிப்பிடுவதற்குக் காரணம் என்னவென்றால், கடந்தகால ஆட்சியில் சாதனையாக மார்தட்டிக் கொள்ளும் திரு. கருணாநிதி, தி.மு.க. ஆட்சியில், தூர் வாரினேன், தூர் வாரினேன் என்று சொன்னாரேயொழிய, எங்கள் அம்மா ஆட்சியில், தூர் வாரியதற்கு



நாங்கள் குறிப்பிடும் பழவேற்காடு ஏரி சான்றைப்போல, மீனவ மக்களுக்கு தூர் வாரிய சாதனைகளைச் சொல்ல முடியுமா என்று இங்கே சவாலாகக் கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலையைச் சீரமைக்க மக்களுக்காக முட்கிரீடத்தைச் சுமக்கிறேன் என்று தன்னலம் மறந்து மக்கள் நலம் காக்கும் இதய தெய்வம் அம்மா அவர்கள், தனது ஆட்சிக் காலத்தில், மீனவ மக்கள் எந்த நிலையிலும் பாதிக்கப்படக் கூடாது; அவர்கள் வாழ்க்கைத்தரம் மேம்பாடு அடைய வேண்டும் என்பதற்காக, மீனவர்கள் பயனடையும் வகையில், 826 மீன்பிடியில் ஈடுபடுபவர்களுக்கு 25 விழுக்காடு மானியத்தோடுகூடிய கடனாக, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவக் கூட்டுறவு இணையம் மூலமாக வழங்கிட ரூ.5 கோடி வழங்கியுள்ளார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், 1974 ஆம் ஆண்டு, அரசு நிறுவனமாகத் தொடங்கப்பட்டது. கடந்த 12 ஆண்டு கால மீன் வளர்ச்சிக் கழகத்தின் செயல்பாடுகளைக் கவனிக்கும்போது, 1991-1992 முதல் 1995-1996 முடிய, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஐந்தாண்டுகள் கழகம் தொடர்ந்து இலாபம் ஈட்டி வந்துள்ளது. இந்த ஐந்தாண்டுக் காலத்தில், மீன் வளர்ச்சிக் கழகம் மொத்தம் ரூ.1.7 கோடி இலாபம் ஈட்டியுள்ளது. ஆனால், 1996-1997 ஆம் ஆண்டு முதல் 2000-2001 ஆம் ஆண்டு முடிய உள்ள திரு. கருணாநிதி ஆட்சிக் காலத்தில், 5 ஆண்டுகளில், கழகத்திற்கு மொத்தம் ரூ.1.34 கோடி நட்டம் ஏற்பட்டது. தற்போது, இதய தெய்வம் அம்மா அரசு பதவியேற்றவுடன், 2001-2002 ஆம் ஆண்டு முதற்கொண்டு கழகம் தொடர்ந்து இலாபத்தில் இயங்கி வருகிறது. சென்ற இரண்டு ஆண்டுகளில், ரூ.35.39 இலட்சங்கள் இலாபம் ஈட்டப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த தி.மு.க. ஆட்சியில், தமிழகத்தின் நிதிநிலையைச் சீரழித்து, பலகோடிக் கணக்கில் நிதிச் சுமையைத் தமிழக மக்கள் மீது திணித்தார்கள். அதனை ஆதாரபூர்வமாக அம்மா அவர்கள் சுட்டிக்காட்டியபோது, மறுத்துக் கூக்குரலிட்ட தி.மு.க.-வினருக்கு உதாரணத்திற்காக ஒன்றைக் குறிப்பிடுகிறேன். மீன் வளர்ச்சிக் கழகத்திலே, கடந்த 2 ஆண்டுகால அம்மா ஆட்சியிலே ரூ.35.39 இலட்சம் இலாபம் ஈட்டித்தந்த நிலை இருக்கும்போது, கடந்த 5 ஆண்டுகால தி.மு.க. ஆட்சியில், இந்தச் சிறிய துறையின் ஒரு பிரிவில் மட்டும் ரூபாய்

ஒன்றரை கோடிக்குக் கடன் சுமையை ஏற்றி விட்டிருக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டை எப்படியெல்லாம் சீரழித்திருப்பார்கள் என்பதை இந்த அவைக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக இங்கே நான் குறிப்பிடுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 1-25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் கடல் உணவுப் பொருட்கள் ஏற்றுமதியைப்பற்றிக் கூற வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு நான் இங்கே குறிப்பிடுகிறேன். 2001-2002-ல் சென்னையிலிருந்து 41,516 டன்—அதனுடைய மதிப்பு 1570.10 கோடி--ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி துறைமுகத்தின் மூலம் 18,966 டன் மீன் ஏற்றுமதி செய்யப்படுகின்றது. அதனுடைய மதிப்பு 446.27 கோடி என்பதை இங்கு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அதோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தூத்துக்குடி பிரச்சினையைப் பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். 1983 ஆம் ஆண்டு டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியில் தமிழ்நாடு மீன் பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. அண்மைக் கடற்பகுதியில் மீன்வளம் குறைந்துவருவதன் காரணமாக நாட்டுப் படகு மீனவர்களுக்கும், விசைப்படகு மீனவர்களுக்கும் இடையே தகராறுகள் உண்டாகி சட்டம் ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது. இப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மீன்பிடி முறைகளுக்கு ஏற்றவாறும், மீன் பிடிப்பின்போது ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கவும், இந்த சட்டத்திற்கும் விதிமுறைகளுக்கும் உரிய திருத்தம் வழங்க உத்தேசித்துள்ளார்கள் என்பதை இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2003-2004 ஆம் ஆண்டில் மீனவர் நலனுக்கென சில புதிய அறிவிப்புகளைக் கருணை உள்ளம் கொண்ட தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கு அறிவிக்க ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி கீழ்க்கண்ட அறிவிப்புகளை இந்த அவைக்குத் தெரிவிக்கிறேன்:

(1) 2003-2004 ஆம் நிதியாண்டில் சின்னமுட்டம் மற்றும் மல்லிப்பட்டினம் மீன் பிடித் துறைமுகங்களில் மத்திய அரசு



நிதி உதவியுடன் உத்தேசமாக ரூ.17 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் இரண்டாம் கட்டப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

(2) சென்னை மற்றும் தூத்துக்குடி மீன்பிடித் துறைமுகங்கள் சர்வதேச தரத்திற்கு இணையாக மத்திய மற்றும் மாநில அரசு நிதி உதவியுடன் ரூ. 6 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

(3) தேங்காய்ப்பட்டினம், பூம்புகார் மற்றும் முட்டம் ஆகிய இடங்களில் மத்திய அரசு நிதியுதவி மற்றும் பிற நிதி நிறுவனங்கள் மூலம் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய மீன் பிடித் துறைமுகங்கள் நிர்மானிக்க நடவடிக்கை எடுக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(4) சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையில் 10 இடங்களில் மீன் பிடி இறங்கு தளங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் அமைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(5) புன்னக்காயல், முடசல் ஓடை, திருமுல்லைவாசல் மற்றும் பழையார் ஆகிய இடங்களில் முகத்துவாரத்தில் தூர் வாரிட உரிய திட்டம் படிப்படியாக ஓர் இடத்திற்கு ரூ.30 இலட்சம் வீதம் 1 கோடியே 20 இலட்சம் மதிப்பீட்டில் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(6) தூத்துக்குடி மாவட்டத்தில் சுய உதவிக் குழுக்கள் மூலமாக ரூ.19 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை மற்றும் கோழியினங்களுடன் ஒருங்கிணைந்த மீன் வளர்ப்பு மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(7) உதகமண்டலத்தில் வண்ண மீன் பூங்கா மற்றும் விளையாட்டு மீன்வளச் செயல்பாடுகள் ரூ.33.50 இலட்சம் மதிப்பீட்டில் மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(8) கடல் பொருள் ஏற்றுமதி தரம் நிர்ணயிக்க மாநிலத்தில் 3 இடங்களில் மத்திய மற்றும் மாநில அரசு நிதியுதவியுடன் ரூ.4 கோடியே 50 இலட்சம் மதிப்பீட்டில் ஆய்வகங்கள் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எம். ராதாகிருஷ்ணன்] [2003 மே 6

அம்மா அவர்கள் நல்லாட்சி தருவதற்காக எடுக்கிற ஒவ்வொரு நடவடிக்கையையும் சில எதிர்க் கட்சிகள் பொறுப்புணர்வற்று போராட்டங்களைத் தூண்டும் விமர்சனக் கணைகளை அடுக்கடுக்காய் வீசி வருகின்றன. ஆனால், விமர்சனத்திற்கெல்லாம் காயப்பட்டு கலங்கிப் போகாமல், எதிரிகளை வீழ்த்திக்காட்டி வெற்றி முகத்தோடு நல்லாட்சி தருபவர்தான் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சோதனை ஆயிரம் சூழ, தம்மைத் துன்பங்கள் தொடர்ந்தே சேர, இன்னலைத் தந்தார் பகைவர்; நெஞ்சில் இழிகுணம் கொண்ட கொடியோர். இன்னலுக்கு இன்னல் தந்து இந்த மண்ணிலே வஞ்சம் வீழ, அதனை யாம் தமிழகத்தை இந்த அவனியிலே புகழ்ந்து போற்ற, இன்னலைத் தாண்டி, மிதித்து, சாதனைச் சுவடு பதித்து சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கும் எங்கள் பொன்மனத் தாய் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் தொட்டுப் பணிவோடு வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீன்வளத் துறை மானியக் கோரிக்கை தொடர்பாக மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்துள்ளார்கள். எனது பதிலுரை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் திருப்தி அளிக்கும் எனக் கருதுகிறேன். இருப்பினும் மாண்புமிகு உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளையும், கருத்துகளையும் கவனத்தில்கொண்டு மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரையைப் பெற்று உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, நான் அளித்துள்ள விளக்கத்தை ...

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை முடிகிற வரைக்கும் பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.



2003 மே 6]

**மாண்புமிகு திரு. எம். ராதாகிருஷ்ணன்:** நான் அளித்துள்ள விளக்கத்தினை ஏற்று மீன்வளத் துறையின் மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தருமாறு இம்மாமன்றத்தை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று மாலை 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-30 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

*பிற்பகல் 4-30*

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 2. மானியக் கோரிக்கைகள், 2003-2004, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (இ) கோரிக்கை எண் 6—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—கால்நடை பராமரிப்பு—தொடர்ச்சி

### (ஈ) கோரிக்கை எண் 8—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—பால்வளம்—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 7—கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதிலுரை. மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது'

என்கிற வள்ளுவரின் வாக்கின்படி, எதையும் எதிர்நோக்காது இரக்கம் ஒன்றையே காரணமாக வைத்துச் செய்கின்ற உதவி கடலைவிடப் பெரியது என்கின்ற கருத்திற்கேற்ப, விவசாயக் குடும்பத்தில் பிறந்த என்னை, பால் வளத் துறைக்கு அமைச்சராக்கிப் பணிபுரிய வாய்ப்பளித்த

மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி பணிவுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் உற்பத்தியாளர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற பாலுக்கு நல்ல விலை கிடைக்கவும், நுகர்வோர்களுக்குத் தரமான பாலை நியாயமான விலையில் வழங்குவதையும், நுகர்வோர்களின் தேவைகளை அறிந்து, அவற்றை உடனுக்குடன் பூர்த்தி செய்வதையும், பால் வளத் துறை தனது முக்கிய பணிகளாகச் செய்து வருகின்றது. ஆனால், இதற்கு மாறாக, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 24-10-1996 முதல் மிகக் குறைந்த தரமுள்ள பாலைக் கொள்முதல் செய்ய வழிவகை செய்ததன் மூலம் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலையும் கிடைக்கவில்லை; நுகர்வோர்களுக்குத் தரமான பாலும் கிடைக்கவில்லை. அத்துடன் அப்போதிருந்த சங்க நிர்வாகிகள் செய்த தேவையற்ற பணி நியமனங்கள், பதவி உயர்வுகள், ஊதிய உயர்வுகள், பால் கேன்களைப் பழுது பார்த்ததாகவும், கறவைக் கூடங்களை அமைத்ததாகவும், செலவு செய்யாமலே செய்யப்பட்டதாகத் தவறான கணக்கு எழுதி, சங்கப் பணத்தைக் கையாடல் செய்து, சங்க நிதி இழப்புக்குக் காரணமாகவும் செயல்பட்டதால், அப்போது செயல்பட்டு வந்த 7,626 சங்கங்களில் 3,676 சங்கங்கள் பெருத்த நட்டத்தில் செயல்பட்டு வந்தன.

மேலும் நிர்வாகக் குழுக்களின் பதவிக் காலம் மூன்று ஆண்டுகள் முடிந்த பின்னரும் கூடுதலாக இரண்டு ஆண்டுகள் அனுமதிக்கப்பட்டதன் விளைவாக பால் வளத் துறையினுடைய செயல்பாட்டில் பின்னடைவு ஏற்பட்டது. பால் உற்பத்தியாளர்கள் சொல்லொணாத் துயரத்திற்கு ஆளாக்கப்பட்டார்கள்.

அதேபோல் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களின் கட்டுப்பாடற்ற செலவினங்களாலும், தரத்திற்கு முக்கியத்துவம் கொடுக்காமையாலும், பால் பணப் பட்டுவாடாவுக்குப் போதிய அக்கறை காட்டாததாலும், 17 ஒன்றியங்களில் 12 ஒன்றியங்கள் நட்டத்தில் செயல்பட்டு வந்தன.

இணையத்தைப் பொறுத்தவரை தி.மு.க. ஆட்சியில் பால் விற்பனை விலையை உயர்த்தி, பின்னர் விலையைக் குறைத்தபின் ஆவினுக்கு ஏற்பட்ட இழப்பை அரசே மானியமாக வழங்கும் என்று இந்த மாமன்றத்திலேயே 15-4-1998 ஆம் தேதியில் உறுதியளித்திருந்தும்,



'சொல்வதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்' என்று வார்த்தை ஜாலம் செய்துவந்த திரு. கருணாநிதி, ஆவின் நிறுவனங்களுக்கு வழங்க வேண்டிய அம்மானியத் தொகையை முழுமையாக வழங்காமல், சொல்லியதைச் செய்யாமலேயே சென்றுவிட்டார். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், இணையத்தில் கடந்த தி.மு.க. ஆட்சியில், 1996 முதல் 2001 வரையிலான ஐந்தாண்டு காலமும் தொடர்ந்து நட்டத்திலேயே இயங்கி ரூ.59.58 கோடி நட்டத்தை ஏற்படுத்தினார்கள். குறிப்பாக, 2000-2001-க்கு, இடைப்பட்ட ஓராண்டு காலத்தில் மட்டும், இணையத்திற்கு ரூ.25.65 கோடியும், ஒன்றியங்களுக்கு ரூ.18.03 கோடியும், ஆக மொத்தம் ரூ.43.68 கோடி நட்டத்தை ஏற்படுத்தி, செய்வதைச் சொல்வோம் என்று சொல்லிவந்த திரு. கருணாநிதி, இவ்வளவு பெரிய இழப்பை ஏற்படுத்திவிட்டு, செய்ததைச் சொல்லாமலேயே சென்று விட்டார்.

சொன்னதைச் செய்யாமலும், செய்ததைச் சொல்லாமலும் நடந்துகொண்ட திரு. கருணாநிதியின் பகல் வேஷத்திற்கு பால் வளத் துறையில் நடந்த இந்நிகழ்வுகளே உதாரணம் என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். இந்த நிலையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் பால் உற்பத்தியாளர்களுக்குப் பால் பணப் பட்டுவாடா உடனுக்குடன் வழங்குதல், நுகர்வோர்களுக்குத் தரமான பால் வழங்குதல் மற்றும் நுகர்வோர் தேவை அறிந்து சேவை செய்தல் ஆகிய நடவடிக்கைகளை முன்னுரிமைப் பணிகளாக பால் வளத் துறையில் செயல்படுத்த ஆணையிட்டார்கள். இதன் தொடர்ச்சியாக கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த நிர்வாகச் சீர்கேடுகளைக் களைந்து, நிர்வாகம் சீரமைக்கப்பட்டது. தொட்டதெல்லாம் துலங்க வைக்கும் அம்மா அவர்கள், பால் வளத் துறையில் முந்தைய அரசால் கடனாக வழங்கப்பட்ட ரூ.28 கோடியை, இலட்சக்கணக்கான உற்பத்தியாளர்களின் நலனைக் கருத்திற்கொண்டு, கடனை மானியமாக மாற்றி ஆணையிட்டு, பால் வள நிறுவனத்தை சிரமத்திலிருந்து மீட்டு, நல்ல முறையில் செயல்பட வழி வகுத்தார்கள்.

பிற்பகல் 4-35

பால் கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகளில் காட்டப்பட்டுள்ள முன்னேற்றம்—கறவை மாடுகளைத் திறம்பட பராமரிப்பதற்கும், பால் உற்பத்தியாளர்களின் நலனைப் பாதுகாப்பதற்கும், பால் பணப்

பட்டுவாடா உடனுக்குடன் வழங்க வேண்டுமென்ற மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி கடந்த மே 2001-ல் பால் உற்பத்தியாளர்களுக்குத் தரவேண்டிய பால் பணப் பட்டுவாடா நிலுவைத் தொகை ரூ.35 கோடியாக இருந்தது. இந்த நிலையை மாற்றி ஏப்ரல் 2003-ல் ரூ.12 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதேபோன்று ஒன்றியங்களிலிருந்து சங்கங்களுக்குத் தர வேண்டிய தொகை ரூ.96 கோடியிலிருந்து ரூ.56 கோடியாகக் குறைக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சங்க உறுப்பினர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், 6,980 சங்கங்களிலும் பேரவைக் கூட்டங்கள் நடத்தப்பட்டு, வெளிப்படையான நிர்வாகத்திற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இலாபத்தில் செயல்படும் அனைத்து பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைக் களப் பணியில் உற்சாகப்படுத்த, கடந்த நிதியாண்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி முதல் முறையாக சீருடை வழங்கப்பட்டது. இதன் மூலமாக 28,500 பணியாளர்கள் பயன்பெற்றுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

1-4-1997 முதல் 25-5-2001 வரையிலான காலத்தில் தேவையற்ற பணி நியமனம்; முறையற்ற பதவி உயர்வுகள்; ஊதிய உயர்வுகள் மற்றும் நிதி மோசடி போன்ற தவறுகளைச் செய்த நிர்வாகிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. உதாரணமாக இதுவரை 21 குற்றவாளிகள் வணிகக் குற்றப் புலனாய்வு மற்றும் காவல் துறையால் கைது செய்யப்பட்டுள்ளனர். 61 நபர்கள்மீது குற்றப் புகார் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 192 நபர்கள்மீது தண்ட வசூல் நடவடிக்கை எடுத்து அவர்களிடமிருந்து ரூ.49.83 இலட்சம் வசூலிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இவ்வகை தவறுகளைச் செய்தவர்கள் வருங்காலங்களில் எந்தக் கூட்டுறவு நிறுவனங்களிலும் பதவி வகிப்பதைத் தடுக்க சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. முந்தைய நிருவாகத்தில் இருந்து வந்த குறைகள் நிவர்த்திக்கப்பட்டு நல்ல நிருவாகம் வழங்கியதன் பயனாக 1996-2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 50 விழுக்காடு சங்கங்கள் நட்டத்தில் செயல்பட்டு வந்த நிலையை மாற்றி, தற்பொழுது செயல்பட்டு வரும் 6,980 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும், அதாவது 100 சதவீத சங்கங்களும் இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும் சங்க வளர்ச்சிக்கு எந்தளவுக்கு ஒவ்வொரு உறுப்பினரும் தங்களது பங்களிப்பை வழங்கி உள்ளார்களோ அந்த அளவிற்கு நிதிப் பயன்கள் பால் உற்பத்தியாளர்களுக்கு ரூ.6.10 கோடி போனஸ் தொகையாகவும்,



ரூ.3.71 கோடி ஊக்கத் தொகையாகவும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழங்கியுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஒன்றியங்கள் அளவில் செயல்பாடுகள்:**—ஒன்றியங்களின் செயல்பாட்டில் பல்வேறு பணிகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட குறியீட்டின் அளவிற்குப் பயன்பாடு இல்லாத காரணத்தால், கடந்த ஆட்சிக் காலத்தில் செயல்பட்டு வந்த 17 ஒன்றியங்களில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருச்சி, வேலூர், கோயம்புத்தூர் ஆகிய 5 ஒன்றியங்கள் மட்டுமே இலாபத்தில் செயல்பட்டு வந்தன. இதர 12 ஒன்றியங்கள் கடும் நட்டத்தில் செயல்பட்டு வந்தன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி எடுக்கப்பட்ட சிக்கன நடவடிக்கைகள் தேவையற்ற செலவுகளைக் குறைத்தல், எரியெண்ணெய், மின்சாரம், தண்ணீர், பாலிதீன் பைகள் பயன்பாட்டில் சேமிப்பு மற்றும் பணியாளர்களை ஊக்கப்படுத்திய காரணங்களால் 17 ஒன்றியங்களில் கன்னியாகுமரி, புதுக்கோட்டை, திருச்சி, வேலூர், கோயம்புத்தூர், ஈரோடு, விழுப்புரம், திண்டுக்கல், சிவகங்கை, தஞ்சாவூர் ஆகிய 10 மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்கள் தற்பொழுது இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கிராம அளவில் செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்களில் பால் உற்பத்தித் தொழிலில் மகளிர் பங்கு முக்கியமானது. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கிராமப்புறங்களில் வசிக்கின்ற 10 ஆயிரம் மகளிரை 145 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உறுப்பினர்களாகச் சேர்த்து ரூ.6.49 கோடி செலவில் STEP என்னும் திட்டம் மூன்று ஆண்டு திட்ட காலத்தில் செயல்படுத்த ஆணையிட்டுள்ளது. 2002-2003 ஆம் ஆண்டில் 50 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் 3,590 மகளிர் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு வரும் நிதியாண்டில் 3,640 மகளிர் உறுப்பினர்களுடன் 52 சங்கங்கள் புதியதாக அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2002 முதல் 2009 வரையிலான 7 நிதியாண்டுகளில் மத்திய, மாநில அரசுகளின் 50:50 என்ற விகிதாச்சார அடிப்படையில் ஈரோடு மற்றும் விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியங்களில் 13 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ் 2006 ஆம் ஆண்டுதான் இலாபம் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்தத் திட்டம், அரசின் சீரிய நடவடிக்கையின் காரணமாக அமல்படுத்தப்பட்ட முதல் ஆண்டிலேயே

ஈரோடு மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ரூ.42.06 இலட்சமும், விழுப்புரம் மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் ரூ.106.42 இலட்சமும் இலாபம் ஈட்டியுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-40

பால் கூட்டுறவு நிறுவனங்களின் தாய் நிறுவனமான தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் செயல்பாடுகளை வைத்துத்தான் இதர பால் கூட்டுறவு நிறுவனங்களின் செயல்பாடுகள் அமையும். ஆனால் தாய் நிறுவனமான ஆவின் நிறுவனத்தின் செயல்பாட்டில் சென்ற ஆட்சியில் போதுமான அக்கறை காட்டப்படாத காரணத்தால் ஆவின் நிறுவனம் மட்டுமல்லாது பெரும்பாலான பால் கூட்டுறவு நிறுவனங்கள் நட்டத்தில் செயல்பட்டு வந்தன. கடந்த ஆட்சிக் காலத்தில் ஆவின் நிர்வாகத்தில் ஏற்பட்ட பின்னடைவுகளைச் சரி செய்ய மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி. எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகளில் ஒருசில நடவடிக்கைகளைப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

கால்நடைகளை முறைப்படி பேணுவது குறித்த பயிற்சி மற்றும் சுகாதாரமான முறையில் பால் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் குறித்து களப் பணியாளர்கள் மூலம், விவசாயிகளுக்குப் பயிற்சி அளிப்பதன் மூலம் தமிழகத்தில் பால் வளத் துறையால் கொள்முதல் செய்யப்படும் பாலின் தரம் கொழுப்புச் சத்து 4.3 விழுக்காட்டிலிருந்து 4.5 விழுக்காடு ஆகவும், இதர சத்துக்கள் 8.2 விழுக்காட்டிலிருந்து 8.3 விழுக்காடு ஆகவும் தரம் உயர்த்தப்பட்டது. இத்தர உயர்வால் பால் உற்பத்தியாளர்களுக்கு லிட்டர் ஒன்றுக்குக் கூடுதலாக 21 காசுகள் என்ற அளவில் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 12 கோடி கூடுதலாக உற்பத்தியாளர்களுக்கு விலை கிடைக்க வழிகாணப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் 6,980 சங்கங்கள் மூலம் நாள் ஒன்றுக்கு சராசரியாக 18.88 இலட்சம் லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. சங்கங்களில் சுகாதார முறைப்படி பெறப்படுகின்ற பால் உள்ளூர் தேவைகளைப் பூர்த்தி செய்த பின்னர் ஒன்றியங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பாலின் தரம் ஒவ்வொரு நிலையிலும் சோதனை செய்யப்படுகிறது என்பது ஆவின் நிறுவனங்களின் சிறப்பு அம்சமாகும். சென்னைப் பெருநகரில் ஆவின் பால் விற்பனையில் ஆர்வம் உள்ள நபர்களை ஊக்குவிக்கும் வண்ணம் தானியங்கி பால் வழங்கும் விற்பனை



நிலையம் முகவர் உரிமத்திற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த காப்புத்தொகை ரூபாய் 40 ஆயிரத்திலிருந்து ரூபாய் பத்தாயிரம் ஆகவும், கண்ணாடி இழைத் தொட்டி முகவர்களுக்கான காப்புத் தொகை ரூபாய் 17,500-லிருந்து ரூபாய் ஐந்தாயிரமாகவும் குறைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இதுவரை 63 புதிய முகவர்கள் நியமிக்கப்பட்டு, பால் விற்பனை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தானியங்கி பால் விற்பனை நிலையங்களில் வைப்புத் தொகையின்றி பால் உப பொருட்கள் விற்பனை செய்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது. நீண்டகாலங்களாக மூடப்பட்டிருந்த 18 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இணையம் அனைத்து மாநிலங்களிலும் செயல்படும் அரசு மற்றும் கூட்டுறவு நிறுவனங்களுக்குப் பால் பவுடர் விற்பனை செய்து வருகிறது. 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக பால் பவுடர் 2,647 மெட்ரிக் டன்கள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டு வந்தது. மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் அறிவுரையின்படி கடந்த இரண்டு ஆண்டுகளில் பால் பவுடர் விற்பனைக்கு முக்கியத்துவம் கொடுத்துத் தரத்தை உயர்த்தியதன் மூலமாகவும், புதிய விற்பனை உத்திகளைக் கையாண்டதன் மூலமாகவும் ஆண்டு ஒன்றுக்குச் சராசரியாக பால் பவுடர் 9,127 மெட்ரிக் டன்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய ஆட்சியில் விற்பனை செய்யப்பட்ட அளவைவிட சற்றேறக்குறைய நான்கு மடங்கு கூடுதலாக விற்பனை செய்யப்பட்டு சாதனை படைத்துள்ளது அம்மா அவர்களுடைய அரசு.

1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆண்டு ஒன்றுக்கு நெய் விற்பனை 3,411 மெட்ரிக் டன்களாக இருந்தது. கடந்த இரண்டாண்டுகளில் அம்மா அவர்களின் ஆணையின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக ஆண்டு ஒன்றுக்கு 6,477 மெட்ரிக் டன்களாக நெய் விற்பனை உயர்த்தப்பட்டு (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்களின் அரசில் கடந்த அரசைவிட ஏறக்குறைய 100 விழுக்காடு உயர்வு அடைந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆவின் நிறுவனம் தனது வாடிக்கையாளர்களின் நலனைக் கருத்தில்கொண்டு, நந்தனம் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் வாடிக்கையாளர் குறை கேட்கும் பிரிவு ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. இப்பிரிவிற்கு பொதுமக்கள் பால் மற்றும் பால்

உபபொருட்கள் விநியோகம் சம்பந்தப்பட்ட குறைகளை அவ்வப்போது தெரிவிக்க தொலைபேசி, மின்னஞ்சல் தபால் மற்றும் இணையதளம் மூலம் வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் ஆவின் நிறுவனம் செயல்பாடுகளைப் பொதுமக்கள் நேரில் தெரிந்து கொள்வதற்காக நுகர்வோர், பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பொதுநல நிறுவனங்களைச் சேர்ந்தவர்களைப் பால் பண்ணைகளுக்கு அழைத்துச் சென்று பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும் சென்னையில் பகுதிவாரியாக நுகர்வோர் குறை தீர்க்கும் கூட்டங்கள் நடத்தப்பட்டு அதன்மூலம் பொதுமக்களுக்கு ஆவின் நிறுவனத்தின் மீதுள்ள நம்பிக்கையும் நல்லெண்ணமும் உயர வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்டகாலங்களாகத் தொடர்ந்து ஆவின் வாடிக்கையாளர்களாக இருப்பவர்களைக் கௌரவிக்கும்வகையில், கடந்த மார்ச் மாதத்தில் ஒரு லிட்டர் மாதாந்திர பால் அட்டை வாங்கியவர்களுக்கு 100 மில்லி நெய் அன்பளிப்பாக வழங்கப்பட்டது என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

தகவல் தொழில்நுட்பத் துறையில் மாண்புமிகு அம்மா அவர்களின் மின்னணு ஆளுமை கொள்கையின் அடிப்படையில் e-governance, ஆவின் நிறுவனம் இணையதளம் www.aavin.net என்ற பெயரில் உருவாக்கப்பட்டு, ஆவின் நிறுவனத்தைப் பற்றிய அனைத்துத் தகவல்களும் தரப்பட்டுள்ளன.

*பிற்பகல் 4-45*

இந்த இணையதளத்தின் மூலமாகப் பொதுமக்கள் தங்கள் குறைகள் மற்றும் பால் உபபொருட்கள், தேவைகளைப் பதிவு செய்யலாம். மேலும் ஒப்பந்தப்புள்ளிகள், ஏலம் போன்ற செய்திகள் அவ்வப்போது இணையதளத்தின் மூலம் பொதுமக்களுக்கு உடனுக்குடன் தெரிவிக்கப்படுகிறது. பால் விற்பனையை அதிகப்படுத்தும் நோக்கத்தோடும், பொதுமக்களின் வசதிக்காகவும் கணினி மூலம் பால் அட்டை விற்பனை செய்ய ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டு வெகு விரைவில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது. மேலும் கன்னியாகுமரி முதல் சென்னை வரை மாவட்டவாரியாக பால் பண்ணைகளின் செயல்பாட்டை மேம்படுத்த எரிசக்தி தணிக்கை (energy audit) இயந்திர செயல்பாட்டு முன்னேற்றம் (Machinery Performance Improvement) இருப்பு





நிலை விவரம் --Stock Inventory-- தினசரி பால் கொள்முதல் மற்றும் விற்பனை --Daily Milk Procurement and Sales-- ஆகிய விவரங்களை ஒவ்வொரு நாளும் சேகரித்து ஆய்வுசெய்ய ஒரு மென்பொருள் தயாரிக்கப்பட்டு இதற்காக ஒரு தனி இணையதளம் www.aavinnet.com என்ற பெயரில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த இணையதளத்தின் மூலம் சென்னையிலிருந்து மட்டுமல்லாமல் உலகின் எந்தப் பகுதியிலிருந்தும் ஆவின் நிறுவனத்தின் செயல்திறன் மதிப்பீட்டை உயர் அலுவலர்களால் ஆய்வு செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. உலகச் சந்தைகளில் இன்று அனைத்து நாடுகளும் பங்கேற்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்பனை செய்ய இதுவரை உள்நாட்டுச் சந்தைகளை மட்டும் நம்பி வந்த நிலையை மாற்றி அயல்நாட்டுச் சந்தையில் பொருட்களை விற்கவும், இலாபம் மற்றும் அந்நியச் செலாவணி ஈட்டிடவும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனவே இணையம் ஏற்றுமதிப் பிரிவைத் துவக்கி விரைவில் ஆவின் பால் பொருட்களை அண்டை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திட தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இது தொடர்பாக ஏற்றுமதி செய்யப்படும் பால் பவுடர் மற்றும் நெய் தயாரிக்க ஈரோடு பால் பண்ணைக்கும், பால் புவுடர் தயாரிக்க சேலம் பால் பண்ணைக்கும் தேவையான உரிமங்கள் கிடைத்துள்ளன. மேலும் ஏற்றுமதியாகும் பொருட்கள் உலகத் தரத்தில் இருக்கும்வண்ணம் ISO மற்றும் HACCP உலகத் தரச் சான்றிதழ் பெற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு உள்ளன. மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளின் பயனாக அம்மா அவர்களின் அரசு, வந்த முதல் ஆண்டிலேயே நல்ல திட்டங்கள் வகுத்ததன் மூலம் ஆவின் நிறுவனம் ரூபாய் 15.46 இலட்சம் இலாபத்தில் செயல்படத் துவங்கியது. (மேசையைத் தட்டும் ஒலி)

2002-2003 ஆம் ஆண்டில் ரூ.16.46 கோடி நிகர இலாபம் ஈட்டி (மேசையைத் தட்டும் ஒலி) ஆவின் வரலாற்றிலேயே இலாபம் ஈட்டுவதில் இதுவரை எய்தப்படாத சாதனையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நிகழ்த்தியுள்ளது என்பதைப் பெருமகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) பால் உற்பத்தியாளர்களின் நலனுக்காக, கடனை மானியமாக மாற்றியும், பால் வளத் துறையில் மேற்சொன்ன நடவடிக்கைகளை அடையத்தக்க ஆணைகள் வழங்கியும் எங்களை நல்வழியில் நடத்திச் செல்லும் இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இத்துறையின் சார்பாக பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் ஆணையின்படி 1 கோடியே 98 இலட்சம் மதிப்பிலான புதிய அறிவிப்புகளை இங்கே வெளியிடுகிறேன்.

(1) பால் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான துருவுறா எஃகு கொள்கலன்களை வாங்க சங்கங்களிடம் போதுமான நிதிவசதிகள் இருப்பதில்லை. எனவே பால் பண்ணை மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்களுக்குச் சுத்தமான மற்றும் தரமான பாலைக் கொள்முதல் செய்து அனுப்புவதற்குத் தேவையான 5775 துருவுறா எஃகு கொள்கலன்களை வாங்கி, 1444 பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. 5775 துருவுறா எஃகு கொள்கலன்கள் கொள்முதல் செய்ய ரூ.108 இலட்சம் செலவாகும். பகுதி-2 திட்டத்தின்கீழ் 50 சதவிகிதத் தொகையான ரூ.54 இலட்சம் அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகையைப் பயனாளிச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும்.

(2) பால் கூட்டுறவுச் சங்கங்களின் தரத்தின் அடிப்படையில் பாலைக் கொள்முதல் செய்தால் கிராம அளவில் உள்ள பால் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கும். பகுதி-2 திட்டத்தின் கீழ் 150 சங்கங்களுக்கு 150 தரமளக்கும் கருவிகள் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. எனவே 150 தரமளக்கும் கருவிகள் கொள்முதல் செய்யத் தேவைப்படும் தொகை ரூ.45 இலட்சமாகும். இதில் 50 சதவீதத் தொகையான ரூ.22.50 இலட்சம் அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகையைப் பயனாளிச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும்.

(3) கணினியுடன்கூடிய பால் சேகரிக்கும் இயந்திரம் பால் எடையைக் கணக்கிட்டு, கொழுப்புச்சத்தை அளவிட்டு, பால் வழங்கும் உறுப்பினர்கள் பயன்பெறும் வகையில் பால் பணம் பட்டுவாடா செய்யும் ஒரு இயந்திரமாகும். எனவே பகுதி-2 திட்டத்தின்கீழ் 4 கணினியுடன் பால் சேகரிக்கும் இயந்திரம் 4 பிரதம பால் கூட்டுறவுச் சங்கங்களில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. ஒரு இயந்திரத்தின் விலை ரூ.1.75 இலட்சமாகும். இதன் அடிப்படையில் 4 இயந்திரங்கள் அமைக்க ரூ.7 இலட்சமாகும். இதில் 50 சதவீதத் தொகையான ரூ.3.50 இலட்சம் அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகையை பயனாளிகள் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும்.

பிற்பகல் 4-50

(4) நவீன உறைவிந்து தொழில்நுட்பத்தின் மூலம் உள்ளூர் கறவை மாடுகளைக் கலப்பின கறவைகளாக மாற்றி தரத்தை உயர்த்தினால்





பால் உற்பத்தித் திறன் பெருகும். எனவே, பகுதி 2 திட்டத்தின்கீழ் 20 லிட்டர் கொள்ளளவு கொண்ட 200 திரவ நைட்ரஜன் குடுவைகள் வழங்க அரசு திட்டமிட்டுள்ளது. ஒரு திரவ நைட்ரஜன் குடுவையின் விலை ரூ.18 ஆயிரம். இதன் அடிப்படையில் 200 திரவ நைட்ரஜன் குடுவைகள் வாங்க ரூ.36 இலட்சம் தேவைப்படும். இதில் 50 சதவீத தொகையான ரூ.18 இலட்சம் அரசால் வழங்கப்படும். மீதமுள்ள தொகையை பயனாளிச் சங்கங்கள் ஏற்றுக்கொள்ளும்.

(5) தமிழகத்தில் 13.07 இலட்சம் பசுக்களும் 2.72 இலட்சம் எருமைகளும், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்குச் சொந்தமாக உள்ளன. பசுந்தீவனம் கால்நடைகளுக்குப் புரதச் சத்தினை அளிக்கும் ஓர் இன்றியமையாத தீவனம் ஆகும். பாலில் புரதச்சத்துக் குறைவு, பால் உற்பத்திக் குறைவு, காலதாமதமாகக் கருவுறுதல் ஆகிய குறைகளை நீக்கி கால்நடைகளுக்குப் பசுந்தீவனம் உணவாக வழங்கப்படுகிறது. தற்போது தமிழகத்தில் பசுந்தீவன உற்பத்தி மிகக் குறைவாக உள்ளது. இதனை அதிகப்படுத்தவும், வருங்காலங்களில் கால்நடைகளுக்கு பசுந்தீவனம் தாராளமாகக் கிடைக்கவும் வழி செய்யும் வகையில் சேலம், ஈரோடு, மதுரை, கோயம்புத்தூர், சிவகங்கை மற்றும் தஞ்சாவூர் ஆகிய ஆறு மாவட்ட பால் கூட்டுறவு ஒன்றியங்களில் முன் மாதிரி பசுந்தீவனப் புல் பண்ணைகள் ரூபாய் ஒரு கோடி செலவில் அமைக்க அரசு திட்டமிட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மைய அரசின் வறட்சி நிவாரணப் பணி மற்றும் இயற்கைச் சீற்றம் நிவாரண நிதியிலிருந்து இத்தொகை மாநில அரசால் பெறப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இனி வரும் காலங்களிலும் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி தமிழக பால் உற்பத்தியாளர்கள் நலனைப் பாதுகாப்பதில் பால் வளத் துறை தனது பணியினைச் சிறப்பாகச் செய்யும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, மன உறுதியில் சிங்கம் போன்றும், தீமை வராமல் காப்பதில் தாயைப் போலவும், மிகுந்த நூல் அறிவும், கற்றோர் பாராட்டும் நுண் அறிவும், சிறந்த ஆளும் திறமையும் நீக்கமற பெற்றிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம், எங்கள் அம்மா அவர்களின் பொற்பாதங்களில் எனது பணிவான நன்றியைத் தெரிவித்து வணங்கி எனது உரையை நிறைவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பால் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் மாண்புமிகு

உறுப்பினர்கள் கலந்துகொண்டு பல்வேறு அரிய கருத்துகளை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். 41 மாண்புமிகு உறுப்பினர்கள், 161 வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளையெல்லாம் அரசு கவனமாக ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுத்துச் செயல்படும் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்கள் கொடுத்திருக்கும் வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக் கொண்டு பால் வளத் துறை குறித்த மானியக் கோரிக்கையினை நிறைவேற்றித் தரும்படி அன்போடு கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி அவர்களின் நல்லாசியுடன் உரையைத் தொடங்குகின்றேன்.

"மடுத்தவாய் எல்லாம் பகடுஅண்ணான் உற்ற
இடுக்கண் இடர்ப்பாடு உடைத்து"

என்பது வள்ளுவரின் வாய்மொழி. ஆம். கால்நடைகளிலேயே கம்பீரமானது காளை மட்டும்தான். கணக்கற்ற பாரம் ஏற்றி கழுத்தினிலே சுமத்தினாலும், குறுமதியாளர் பாதையிலே குழிகளைப் பறித்து வைத்தாலும், சழக்கர்களின் சகதியிலே சக்கரமே மூழ்கினாலும், காளை மட்டும் களைப்பதில்லை, சாலையிலே வண்டியினைச் சளைக்காமல் இழுத்துச் செல்லும், இலக்கு நோக்கி.

நொறுக்குகின்ற நிதிச் சுமையா, நெருக்குகின்ற தட்டுப்பாடா, கவலை இல்லை. அஞ்சாமல் அத்தனையும் அகற்றிப் புறந்தள்ளி, தடைகள் அத்தனையும் தவிடு பொடியாக்கிவிட்டு, தமிழகத் தேரினைத் தடம்புரளாமல் செலுத்தி, ராஜ பாட்டையில் கம்பீரமாக இன்று அழைத்துச் செல்கின்ற (மேசையைத் தட்டும் ஒலி) தங்கநிகர் சிங்கத் தலைவி, தானைத் தலைவி, பொன்மனத் தலைவி, புரட்சித் தலைவி, இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களின் மலரடிகளைப் பணிந்து வணங்குகின்றேன்.



கோவை மாவட்டத்தில் உள்ள ஒரு குக்கிராமம் பச்சார்பாளையம். ஏழைத் தொண்டனாய், அம்மாவின் அடிமாறாத விசுவாசியாய், கணக்கற்ற கழகத் தொண்டர்களிலே மிகச் சாதாரண ஒரு விவசாயியாய், முப்பத்தோராண்டுகள் ஒன்றியச் செயலாளராய், எப்போதும் போல் பணியாற்றி வந்த என்னைத் தேர்ந்தெடுத்து, பொங்கலூர் தொகுதியிலே போட்டியிட ஆணையிட்டு, பெருவாரியான வாக்குகளையும் பெற்றுத் தந்து, எங்கோ ஒரு மூலையில் இருந்த என்னைக்கூட அமைச்சராக்கி இங்கே ஓர் இருக்கை தந்த இதய தெய்வமே, இனிய தமிழகத்தின் இணையற்ற நம்பிக்கை இமயமே!

பிற்பகல் 4-55

மூலையில் கிடந்த எங்களுக்கெல்லாம் முகவரி தந்த எங்களின் அன்னையே! உதிரத் துளிகள் ஒவ்வொன்றிலும் உறைந்துவிட்ட எங்களின் உன்னதத் தாயே! கால்நடைகளில், காட்டு விலங்குகளில் சிங்கராஜாவின் சிரசில் மட்டுமே நிரந்தர மகுடம். சிம்மராசிச் சிங்கமே, இந்தச் சிம்மாசனம் தங்களுக்கு மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி) சிம்மராசிச் சிங்கமே, இந்தச் சிம்மாசனம் தங்களுக்கு மட்டுமே. பகைவரைத் தூக்கிப் பந்தாடி எங்களை பத்திரமாகக் காக்கிற பராசக்தி தாய்க்கு நாங்கள்தான் என்றென்றும் நன்றியுள்ள சிம்மவாகனம். நாங்கள்தான் தாயே என்றென்றும் நன்றியுள்ள சிம்மவாகனம். (மேசையைத் தட்டும் ஒலி) பச்சைக் குருதியைப் பாலாக்கித் தருகிற பசுக்களுக்கெல்லாம் ஒரு கோமாதா - எங்களுக்கெல்லாம் நீங்கள்தான் தாயே குலமாதா! எங்களுக்கெல்லாம் நீங்கள்தான் தாயே குலமாதா! (மேசையைத் தட்டும் ஒலி).

அந்தக் காலத்திலே அருந்தமிழ்ப்புலவர் ஒருவர் அழகாய்ச் சொன்னார் - கால்நடைகள், விலங்கினங்கள் இவற்றைவிட கயவர்கள்தான் கொடியவர்களாம். கயவர்களைக் கண்டால் கண்ணிலே பட்டுவிடாமல் காதவழி தூரம் போய்விடுங்கள் என்று கன்னித் தமிழ்ப் புலவர் ஒருவர் கவிதை ஒன்றை எழுதி வைத்தார். எங்களுக்காக அன்றே எழுதிவைத்த அந்தப் பாடல் இதுதான்—

"கொம்புளதற் கைந்து குதிரைக்குப் பத்துமுழம்
வெம்புகரிக் காயிரந்தான் வேண்டுமே—வம்பு செறி
தீங்கினர்தம் கண்ணில் தெரியாத தூரத்து
நீங்குவதே நல்ல நெறி"

இதன் கருத்து– "அருமை மானிடரே, நீங்கள் ஐந்து முழம் தூரம் தள்ளியிருந்தால் ஆடு, மாடுகளால் ஆபத்தில்லை. பத்து முழம் தூரம் நீங்கள் விலகியிருந்தால் பாய்ந்து வருகிற பரிகளால் பாதகம் இல்லை. ஆயிரம் முழம் தூரம் அகன்றிருந்தால் அச்சம் தருகிற ஆனைகளால்கூட உங்களுக்கு ஆபத்து இல்லவேயில்லை. ஆனால், தீயவர்கள் வந்தால் மட்டும் திரும்பிக்கூடப் பார்த்து விடாதீர்கள்" என்பதே ஆகும்.

எங்கள் அம்மாவின் முன் இந்தப் பாடல் வரிகள் அர்த்தமற்றதாகிவிடுகின்றன. ஏனெனில் - எங்களின் அம்மா உற்றுப் பார்த்தாலே ஓடிவிடுபவர்கள் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) எங்களின் அம்மா உற்றுப் பார்த்தாலே ஓடிவிடுபவர்கள் அவர்கள் தான். எங்கள் அம்மாவின் எதிரே அமராமல் எங்கோ பதுங்குவதும், ஒதுங்குவதும் அவர்கள்தான். எங்கள் அம்மாவின் முன்னே, எதிரே அமராமல் எங்கோ பதுங்குவதும் ஒதுங்குவதும் அவர்கள்தான். எங்கள் இதயதெய்வத்தின்..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவியரங்கத்தில் இருப்பதைப்போல் இருக்கிறது. அமைச்சர் தொடருங்கள்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** எங்கள் இதய தெய்வத்தின் முழக்கம் இடிமுழக்கம் என்பதால் கருநாகம்கூட—கருநா.....கம்கூட, அம்மாவின் கண்ணெதிரே அமர்வதே இல்லை. (மேசையைத் தட்டும் ஒலி) கருணைத் தெய்வமே, தங்களின் காலடி தொழுது வணங்கி, கால்நடை பராமரிப்புத் துறையின் மானியக் கோரிக்கை மீதான பதில் உரையைத் தொடங்குகிறேன். உரையினிலே குறை இருப்பின் மன்னிக்க வேண்டுகிறேன், தாயே!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சீரிய தலைமையில் நடைபெறும் இந்த நல்லாட்சியில், அம்மா அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் அடிப்படையில் தமிழகத்திலுள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்குத் தேவையான மருத்துவ வசதியையும் மற்றும் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் அதிகரித்து, கால்நடை வளர்க்கும் கிராம மக்களின் வருமானத்தை அதிகரிக்கச் செய்து, எல்லோரும் வளம்பெற்று வாழ அரிய பல திட்டங்கள் தீட்டப்பட்டு, கால்நடை பராமரிப்புத்



துறையானது மஞ்சு விரட்டில் பாயும் ஆண்டிப்பட்டியின் அஞ்சாநெஞ்ச மயிலைக் காளையைப் போல் புத்துணர்ச்சி பெற்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். கால்நடைகள், கிராமப்புற மக்களுக்கு ஒரு கூடுதல் வருமான ஆதாரமாக இருப்பதுடன் சமச்சீரான புரதச்சத்து மிக்க பால், முட்டை மற்றும் இறைச்சியையும் அளித்து வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆசியோடு கால்நடை பராமரிப்புத் துறை குறித்த சில விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் பெருமக்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்தம் 259 இலட்சம் கால்நடைகள் மற்றும் 365 இலட்சம் கோழி இனங்கள் உள்ளன. இவற்றுக்குத் தேவையான மருத்துவ வசதி, இனப்பெருக்க வசதி, உடல் நலம் பேணும் பணி மற்றும் பயனாளிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்கள் மாநிலத்திலுள்ள 1,016 கால்நடை நிலையங்கள் மூலமாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும், கால்நடைகளுக்கு முதலுதவி மற்றும் செயற்கை முறை கருவூட்டல் ஆகிய பணிகளுக்கு 2,123 கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

கால்நடை கிளை நிலையங்கள் தற்போது, காலை 8 மணி முதல் 12 மணி வரை மட்டுமே செயல்படுகின்றன. கிராம மக்களுக்குக் கால்நடை மருத்துவச் சேவை இன்னும் கூடுதல் நேரம் கிடைத்திட பிற்பகலிலும் 3-00 மணி முதல் 5-00 மணிவரை செயல்படும் கருத்துரு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-00

10, 12 ஆண்டுகளுக்கு முன்பு இத்துறையில் 22 பிரதம கால்நடை மருத்துவமனைகள், 57 கால்நடை மருத்துவமனைகள், 758 கால்நடை மருந்தகங்கள் மட்டுமே செயல்பட்டு வந்தன. மாண்புமிகு அம்மா அவர்களின் 1991-1996 ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்கள் எடுத்த நடவடிக்கைகளால் கால்நடைகளின் எண்ணிக்கை பெருகின. தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரைக்கு ஏற்றவாறு கால்நடை நிலையங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும்—மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியில்—60 கால்நடை மருந்தகங்கள், 41 கால்நடை

மருத்துவமனைகள், 2 பிரதம கால்நடை மருத்துவமனைகள் மற்றும் 24 மணிநேர மருத்துவ வசதியுடன் கூடிய 3 பன்முக மருத்துவமனைகள் சென்னை, கோயம்புத்தூர் மற்றும் மதுரை ஆகிய மாநகராட்சிகளில் புதிதாகத் தொடங்கப்பட்டன.

வாய் பேசத் தெரியாத கால்நடைகளின் நோய் போக்க வேண்டுமென்று, அன்புச் சுரங்கமாம் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் இவ்வாறு வரலாற்றிலேயே முதன்முறையாக பன்முக மருத்துவமனைகளைப் பல்வேறு மாவட்டங்களில் தொடங்கி (மேசையைத் தட்டும் ஒலி) 24 மணிநேரமும் இயங்க வைத்தார்கள். ஆனால், வீட்டிலே ஒரு மருமகனுக்கு, இல்லை, இல்லை; திருமகனுக்கு வியாதி என்று வந்துவிட்டால், விமானத்திலே ஏற்றி அமெரிக்காவுக்கு அனுப்பியவர்களோ, இதய தெய்வம் அம்மா அவர்களின் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இத்தகைய திட்டத்தை இருட்டடிப்புச் செய்தார்கள்.

அமெரிக்காவிலே பிறந்தால்கூட 'அம்மா' என்று மட்டுமே அன்புடனே அழைக்கின்ற ஆவின் கன்றுகளுக்கும், அனைத்துக் கால்நடைகளுக்கும் தற்போது பன்முக மருத்துவமனைகளைப் பல்வேறு மாவட்டங்களில் விரிவாக்கியுள்ளார்கள் பாசமிகு அம்மா அவர்கள். அந்தவகையில் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருச்சிராப்பள்ளி, சேலம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மூன்று மாநகராட்சிகளிலும் பன்முக மருத்துவமனைகள் தொடங்க ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த அவைக்கு மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் தற்போதுள்ள மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகளின் பரப்பளவு 1.23 இலட்சம் ஹெக்டேர் ஆகும். இது இந்த மாநிலத்திலுள்ள மொத்த நிலப்பரப்பில் ஒரு சதவீதமேயாகும். மேய்ச்சல் நிலங்கள் பல்வேறு காரணங்களால் குறைந்துகொண்டு வருவதைத் தவிர்க்கும் பொருட்டு, மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகை நிலமாகவும் மாற்றக்கூடாது என்று மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, 2001-ல் பதவியேற்றதும் ஆணை பிறப்பித்தது. அவ்வாறு மாற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது அப்படி மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்பளவு உள்ள வேறு நிலம் அதே மாவட்டத்தில் மேய்ச்சல் நிலமாக பயன்படுத்தப்பட அந்தந்தத் துறைகளால் ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.



இவற்றோடு கால்நடைகளுக்குத் தேவையான மேய்ச்சல் நிலப் பரப்பை அதிகரிக்கும் நோக்கத்தோடு இதர துறைகளுடன் சேர்ந்து தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் வரும் நிலங்களையும், மேய்ச்சல் நிலங்களாக மாற்ற மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய ஆலோசனையுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நடப்பாண்டில் கோயம்புத்தூர், தேனி, திண்டுக்கல், மதுரை, விருதுநகர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் ஈரோடு ஆகிய மாவட்டங்களில், மாவட்டத்திற்கு 25 விவசாயிகள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு ஹெக்டேர் நிலத்தை மேம்படுத்தி, புல் வளர்ப்பில் ஈடுபடுத்தப்படுவார்கள். இத்திட்டத்திற்காக மாவட்டத்திற்கு 3 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் வீதம், 50 சதவீத மானியத்துடன் 30 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். இதனால் 200 விவசாயிகள் பயன்பெற்று, 200 ஹெக்டேர் தரிசு நிலம் மேய்ச்சல் நிலமாக மேம்படுத்தப்படும்.

மாண்புமிகு அம்மா அவர்கள் கால்நடைச் செல்வங்களின்மீது பரிவுகொண்டு முன் எப்போதும் வழங்கப்படாத நிதியான 20 கோடி ரூபாய் இத்துறையின் வறட்சி நிவாரணப் பணிகளுக்கென இயற்கைச் சீற்ற நிவாரண நிதியிலிருந்து வழங்கியுள்ளார்கள்.

"கேளுங்கள் கொடுக்கப்படும்;

தட்டுங்கள் திறக்கப்படும்"

என்றார் ஏசுபிரான். ஆலயங்களில் அன்னதானம் வழங்கி, மனிதர்களின் பசியைப் போக்குகிற மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களோ, கதவைத் தட்டிக் கேட்பதற்குக் கையில்லாத பிராணிகளின், வாய் திறந்து கேட்பதற்கு வாயில்லாத ஜீவன்களின் வயிற்றுப் பசியைப் போக்கிட பசுந்தீவன வளர்ப்புத் திட்டத்தையும், மேய்ச்சல் நில மேம்பாட்டுத் திட்டத்தையும், ஆழ்குழாய்க் கிணற்றுநீர்த் திட்டத்தையும் அறிமுகப்படுத்தி, அதற்காக வரலாற்றிலேயே முதன்முறையாக 20 கோடி ரூபாயை வாரி வழங்கியுள்ளார்கள் என்பதை இங்கே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கி, கால்நடைகளுக்குத் தடையின்றி தீவனம் கிடைத்திட கால்நடை பராமரிப்புத் துறையில் உள்ள கால்நடைப் பண்ணைகளை மேம்படுத்தி, தீவன உள்ளீடுகளைப் பெருக்க,

[திரு. ப.வெ. தாமோதிரன்] [2003 மே 6

அரசு கால்நடைப் பண்ணைகளுக்கு 8 கோடி ரூபாயும், மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்த 1 கோடி ரூபாயும் ஒதுக்கி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அரசுப் பண்ணைகளில் 447 ஏக்கர் நிலத்தில் சாகுபடி செய்யப்பட்டு வந்தது பசுந்தீவனம். இந்த நிதி ஒதுக்கீட்டால் 1,340 ஏக்கர் நிலம் பசுந்தீவன சாகுபடிக்காகக் கொண்டுவரப்பட்டு 80 ஆயிரத்து 400 டன் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும் என்பதையும் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 5-05

வறட்சி நிவாரணப் பணிகளுக்கு இந்தத் துறைக்கு 20 கோடி ரூபாய் மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையோடு அளித்து இருப்பதால் பசுந்தீவனப் புல் உற்பத்திக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் மூலம் உற்பத்தியை மேம்படுத்த வறட்சிக் காலத்தில்கூட பசுந்தீவனம் நமது மாநிலத்தில் உபரியாகவே இருக்கும் வகையில், நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடைகளைத் தாக்கும் கோமாரி நோயிலிருந்து அவற்றைக் காப்பாற்ற அந்நோய்க்கு எதிரான தடுப்பூசி மருந்துகள் தட்டுப்பாடின்றி அனைத்துக் கால்நடைகளுக்கும் கிடைக்க, 5 கோடியே 30 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தடுப்பூசி போட மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். இவை மட்டும் இல்லாமல், ஆழ்குழாய்க் கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், மின் இணைப்பு, மோட்டார் மற்றும் நீர்த் தொட்டிகளைக் கால்நடை நிலையங்களில் ஏற்படுத்தி, குடிநீர் வசதிகளை மேம்படுத்த வறட்சி பாதித்துள்ள 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில், 939 ஆழ்குழாய்க் கிணறுகள், 4 கோடியே 69 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

புறக்கடை கோழி வளர்ப்பில் மகளிர் சுய உதவிக் குழுவினரை முழுமையாக ஈடுபடுத்தி அவர்களுக்கு இலாபம் ஈட்டித்தரும் நோக்கத்தோடு, மாண்புமிகு அம்மா அவர்கள் பிறந்த நாள் அன்றும்,



2003 மே 6] [திரு. ப.வெ. தாமோதிரன்]

மாட்டுப் பொங்கல் தினத்திலும் 9 பெட்டைக் கோழிகளும் ஒரு சேவலும் மாவட்டந்தோறும் 10 குழுக்களுக்கு வழங்கும் திட்டம், அரசுக்கு எந்தவிதச் செலவுமின்றி, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் செயல்படுத்தப்படும். தேவையான மருத்துவ வசதிகள் கால்நடைத் துறையினரால் இலவசமாக வழங்கப்படும்.

பசு மற்றும் எருமைகளின் இனவிருத்திப் பணிகளை ஒருங்கிணைத்து மேம்படுத்தும் நோக்கத்துடன் தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமையைத் துவக்கிட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு தொடங்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். இதன்படி மாநிலத்தில் உள்ள பசு மற்றும் எருமைகளுக்கான இனவிருத்திப் பணிகளும் இம்முகமையின்கீழ் கொண்டுவரப்படும். கடந்த நான்கு ஆண்டுகளாக தேசிய பசு மற்றும் எருமை இன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் இம்முகமைக்குப் பெற வேண்டிய 100 சதவீத மானியமான 20 கோடியே 28 இலட்ச ரூபாயை மைய அரசிடமிருந்து பெற்றது மாண்புமிகு நம் அம்மா அவர்களின் அரசுதான் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இத்திட்டத்தின்கீழ் 750 நபர்களுக்கு செயற்கை முறைக் கருவூட்டல் தொழில்நுட்பத்தைப் பயிற்றுவிக்கப்படுவதுடன், அவர்கள் சுயவேலைவாய்ப்பு முறையில் பணியிலும் அமர்த்தப்படுவார்கள். மூன்றாண்டுகளில் 3,262 நிலையான செயற்கை முறைக் கருவூட்டல் நிலையங்கள், நிலையான மற்றும் நடமாடும் நிலையங்களாக மாற்றப்படும். 6 உறைவிந்து நிலையங்கள் வலுப்படுத்தப்படும். இதனால், குக்கிராமங்களில் வசிக்கும் பெண்கள்கூட, பசு மற்றும் எருமைகளை இனவிருத்திக்காகத் தொலைவில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல வேண்டிய நிலை மாற்றப்பட்டு, அவர்களின் இருப்பிடங்களிலேயே அவ்வசதி கிடைத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் வழி வகுத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

டென்மார்க் நாட்டின் நிதியுதவியுடன் கூடிய டேனிடா கால்நடை வளர்ச்சித் திட்டம் புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, சிவகங்கை மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இணைப்புத் தொடர்பு தம்பதிகள் மற்றும் இலக்கு

விவசாயிகளுக்குக் கால்நடை பராமரிப்பு முறைகளில் பயிற்சி அளித்து அவர்களின் வருமானத்தைப் பெருக்குவதே இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும். 2004 மார்ச் மாதத்துடன் முடிவடைய உள்ள இத்திட்டத்தை மேலும் ஓர் ஆண்டு நீட்டிக்கும் வகையில் மாண்புமிகு அம்மா அவர்கள் உரிய நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

முன்னோடியான இத்திட்டத்தினை எளிய முறையில் பிரதிபலிப்புச் செய்ய முடியும் என்பதை உணர்ந்து, இதுபோன்று ஒரு திட்டத்தை மற்ற மாவட்டங்களிலும் செயல்படுத்த வேண்டும் என முடிவு செய்து தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி, கரூர், திண்டுக்கல், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் நாமக்கல் ஆகிய 12 மாவட்டங்களில் உள்ள 1,278 ஊராட்சிகளில் செயல்படுத்த மாண்புமிகு அம்மா அவர்களால் ஆணையிடப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் இதுவரையில் 1,024 தொடர்பு தம்பதியினர் பயிற்றுவிக்கப்பட்டு, பின்பு இத்தொடர்பு தம்பதியினர் சுமார் 39 ஆயிரத்துக்கு மேற்பட்ட இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

பிற்பகல் 5-10

கால்நடைகளைத் தாக்கும் கொடிய நோய்களில் வெக்கை மற்றும் கோமாரி நோய்கள் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்துகின்றன. தேசிய வெக்கை நோய்த் தடுப்புத் திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தியதன் பயனாக நமது மாநிலத்தை வெக்கை நோயில்லாத மாநிலமாக அறிவிக்க வழி வகுக்கப்பட்டுள்ளது. கால்நடைகளின் நடமாட்டங்களினால் வெக்கை நோய் ஏதேனும் உள்ளதா என்பதனைக் கண்டறிய, தற்பொழுது கிராமங்களில், வழித்தடங்களில் மற்றும் கால்நடை நிலையங்களில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனோடு கடுங்கண்காணிப்பின்கீழ் ஊநீரில் (Serum) வெக்கை நோய் எதிர்ப்புத் திறன் உள்ளதா என்பதும் சோதனை செய்யப்படுகின்றது. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் இப்பணிகளுக்காக 2002-2003-ல் 88 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவு செய்ய ஆணையிடப்பட்டு, திட்டம் செயல்படுத்தப்பட்டது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கோமாரி நோயினைக் கட்டுப்படுத்த மாநிலத்திலுள்ள



கால்நடைகளுக்குத் தடுப்பூசிகள் போடவும் தாயுள்ளம் கொண்ட நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 80 இலட்சம் ரூபாய் தடுப்பூசி வாங்க அனுமதித்து ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

கால்நடை பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 2002-2003-ல் 2 கோடியே 14 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் 4,812 பாதுகாப்பு முகாம்கள் நடத்தப்பட்டு, 55 இலட்சம் கால்நடைகள் பயனடைந்துள்ளன. நடப்பாண்டிலும், இத்திட்டத்தின்கீழ் கூடுதல் கால்நடைகள் பயனடைய வழிவகைகள் செய்யப்பட்டு, கடந்த ஆண்டு மாதிரியே இந்த ஆண்டும் 2 கோடியே 14 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கீடு செய்துள்ளார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

கோஷாலாக்கள் என்ற பசுமடம், கால்நடைகள் பராமரிப்புக்காக ஏற்படுத்தப்பட்ட ஒரு நல்ல திட்டம் ஆகும். அண்டை மாநிலங்களிலிருந்து நமது மாநிலம் வழியாக வேறு மாநிலங்களுக்கு அடிமாடுகளாகக் கால்நடைகள் கடத்தப்படும் நிலை அறிந்து வேதனையுற்ற மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைத்து, லாரிகளில் மனிதாபிமானம் இன்றி ஏற்றிச் செல்லப்படும் அத்தகைய மாடுகளைக் காப்பாற்ற வேண்டும் என்று உத்தரவிட்டார்கள். இன்றைக்குக் காலையில்கூட மாண்புமிகு உறுப்பினர் சகோதரர் ஆர். கிருஷ்ணன் அவர்கள் பேசும்போது கேரளாவுக்கு அடிமாடுகளாகக் கொண்டு செல்லப்படும் மாடுகளைக் காப்பாற்ற என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். சோதனைச் சாவடிகளிலிருந்து மீட்கப்படும் அத்தகைய மாடுகள் அருகிலுள்ள கோஷாலாக்கள் என்கின்ற பசுமடங்களுக்குக் கொண்டு செல்லப்பட்டு நன்கு பராமரிக்கப்படுகின்றன என்ற நல்ல செய்தியை இந்தப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசும்போது கால்நடைகளின் தரம் உயர்த்தப்படுவது பற்றிச்

சொன்னார்கள். அதற்காகத்தான் கலப்பினப் பசுக்கள் வளர்க்கப்படுவது ஊக்குவிக்கப்படுகிறது. தரமற்ற கால்நடைகள் விவசாயப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தேசிய கால்நடை மேம்பாட்டு நிறுவனத்தின் மூலம் இவ்வாண்டு கால்நடைகளின் இனப்பெருக்கக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு, 13 கோடி ரூபாய் செலவில் கால்நடைகளின் தரம் உயர்த்தப்பட மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பரிசீலித்து வருகிறார்கள். கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்தாலும் பால் உற்பத்தி குறையவில்லை. மாறாக தமிழகத்தில் 2001-2002 ஆம் ஆண்டு இருந்த உற்பத்தியைவிட இன்றைக்கு 5 ஆயிரம் மெட்ரிக் டன் பால் உற்பத்தி செய்யப்படுகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற ஒன்றை சில கிராமங்களுக்கு மட்டும் அறிமுகப்படுத்தி, கடந்த கால ஆட்சியினர் ஓட்டுப்பெறும் குறுகிய நோக்கத்தோடு அத்திட்டத்தைச் செயல்படுத்தினார்கள். ஆனால், அனைத்துத் தரப்பு ஏழை எளிய விவசாயப் பெருமக்களும் வளர்க்கும் கால்நடைகள் பயன்பெறும் வகையில், வருடந்தோறும் 5 ஆயிரம் கால்நடைகள் என்ற அளவிற்கு அனைத்து கிராமப் பகுதிகளிலும் இந்தப் பாதுகாப்புத் திட்டத்தைச் செயல்படுத்த—கடுமையான நிதி நெருக்கடியுள்ள இந்த நேரத்திலும்—மாண்புமிகு அம்மா அவர்கள் மாநிலம் முழுவதும் விரிவுபடுத்தி, தமிழகத்தில் உள்ள அனைத்துக் கால்நடைகளுக்கும் தொற்று நோய் ஏற்படாத வண்ணம் பாதுகாத்து, கால்நடைகளைச் செழுமையோடு வைத்தார்கள் என்றால் அந்தப் பெருமை மாண்புமிகு அம்மா அவர்களுக்கே உண்டு. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்தில் மட்டுமல்லாமல், உண்மையிலேயே இன்றைக்குத் தமிழகத்திலே உள்ள கால்நடைகளைத் தொற்று நோயிலிருந்து பாதுகாத்து, தொலைநோக்குச் சிந்தனையோடு ஒரு முன்மாதிரித் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பால் மனோஜ் பாண்டியன் அவர்கள் 11-4-2003 அன்று இங்கே பேசுகையில்' கால்நடைத் துறையிலும் ஒரு முறைகேடு நடைபெற்று வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள்மீது முந்தைய ஆட்சியினர் காழ்ப்புணர்ச்சியோடு உண்மைக்குப் புறம்பான வழக்குகளைத் தொடுத்து அவர்களுக்குத் தொல்லை கொடுத்தார்களே,



அதுபோல இல்லாமல் உண்மையிலேயே கடந்த ஆட்சியில் இந்தத் துறையில் முறைகேடு நடந்தது என்றும், அதைக் கண்டுபிடித்து பொறுப்பானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து தண்டனை கொடுத்துச் சிறைச்சாலைக்கு அனுப்ப வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்கள்.

*பிற்பகல் 5-15*

கடந்த ஆட்சிக் காலத்தில் கால்நடைகளுக்கு மருந்து வாங்கியதில் பல்வேறு ஊழல்கள் நடைபெற்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். சுந்தரம் அவர்கள்தான் முதலில் வெளி உலகத்திற்குத் தெரிவித்தார்கள். அந்த ஊழல் செய்தவர்கள்மீது துறை ரீதியான விசாரணையும், லஞ்ச ஒழிப்பு மற்றும் கண்காணிப்புத் துறையின் விசாரணையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களில் சிலர் தற்காலிக பணிநீக்கம்கூடச் செய்யப்பட்டுள்ளார்கள். ஊழல் தடுப்பு கண்காணிப்புத் துறையின் விசாரணைகள் முடிவுற்றதும் அவர்கள்மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். இத்துறைக்குப் பொறுப்பு வகித்த தி.மு.க.வின் முன்னாள் அமைச்சர் மீதும் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அதுவும் லஞ்ச ஒழிப்புத் துறையின் விசாரணையில் (மேசையைத் தட்டும் ஒலி) இருந்து வருகிறது என்பதை இந்தப் பேரவையின் உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி முருகேசன் அவர்கள் 28-3-2003 அன்று பேசும்போது காங்கேயம் காளை இனங்கள் அழிந்து வருகின்றன என்றும், அவற்றைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி போன்ற இனங்களைப் பாதுகாக்க, தேசிய பசு மற்றும் எருமை இன அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், இந்த பேரவைக்கும் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இந்தத் துறையின் அமைச்சர் பொறுப்பை ஏற்ற பிறகு 25-11-2002 அன்று கருவலூர் என்ற ஊரில் மாடுகளுக்குக் கருச்சிதைவு

நோய் ஏற்பட்டிருப்பதாக அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று மருத்துவக் குழுவை அங்கே அனுப்பி சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

*28-11-2002* அன்று திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதி, வீரக்கல் கிராமத்தில் தொண்டை அடைப்பான் நோய் ஏற்பட்டு கால்நடைகள் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று கோவையில் இருந்த எங்களுக்குச் செய்தி வந்தவுடன், அம்மா அவர்கள் ஆணையுடன் அங்கிருந்தே உடனடியாக வீரக்கல் சென்று, பாதிக்கப்பட்ட கால்நடைகளைப் பார்வையிட்டு, மருத்துவக் குழுவை அழைத்து உடனடி நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்தேன். அன்றைக்கு அங்கே என்னுடன் வந்திருந்த ஆத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் பி.கே.டி. நடராஜன் அவர்கள் ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், முருநெல்லிக்கோட்டை ஊராட்சி, சுள்ளெரும்பு கிராமத்தில் கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்ட இடம் தருவதாகத் தெரிவித்து, கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணை பெற்று இந்த ஆண்டே அங்கே கட்டடம் கட்ட பரிசீலிக்கப்படும் என்பதை அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதைப்போலவே, *10-1-2003* மற்றும் *11-1-2003* அன்று வடவேடம்பட்டி மற்றும் கரும்புரவி பாளையத்தில் அடைப்பான் நோய் ஏற்பட்டு கால்நடைகள் பாதிக்கப்பட்டன என்று செய்தி வந்தவுடன் அம்மா அவர்களின் ஆணையுடன் 'ஒரே' மணி நேரத்தில் மருத்துவக் குழு அங்கே சென்று உடனடியாகத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டதால் அங்குள்ள 5 ஆயிரம் கால்நடைகள் உயிருடன் காப்பாற்றப்பட்டன என்ற செய்தியையும் (மேசையைத் தட்டும் ஒலி) மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மலையப்பசாமி அவர்களின் தொகுதியான கபிலர்மலையில் *29-3-2003* அன்று செம்மறி ஆடுகளுக்கு நோய் ஏற்பட்டது என்று தெரிவித்தார்கள். உடனடியாக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணை பெற்று சிகிச்சை அளிக்கப்பட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும், அவருடைய கட்சியைச் சார்ந்த தலைவர்களுக்கும் அன்போடு (மேசையைத் தட்டும் ஒலி) தெரிவித்துக்கொள்கிறேன்.



இதேபோன்று *29-11-2002* அன்று கோவை மாவட்டம், வேலப்பநாயக்கன்பாளையத்திலும், *9-12-2002* அன்று பொள்ளாச்சி, ராமபட்டினத்திலும், *11-12-2002* அன்று கந்தம்பாளையத்திலும், காமநாயக்கன் பாளையத்திலும், *2-1-2003* மற்றும் *22-1-2003* அன்று வடவள்ளி, எஸ்.குமாரபாளையம், அருகம்பாளையம் ஆகிய ஊர்களிலும், *22-3-2003* அன்று குத்தாலத்திலும் கால்நடைகள் நோயினால் பாதிக்கப்பட்டதாகத் தகவல் கிடைத்தவுடன், துறை அலுவலர்களைத் தொடர்பு கொண்டு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, கால்நடைகளுக்கு உரிய சிகிச்சைகள் உடனடியாக அளிக்கப்பட்டதோடு, நோய்கள் பரவாமலும் தடுக்கப்பட்டன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன் ((மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 5-20*

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறையோடு தொடர்புடைய விஷயம் என்பதால் ஒரு தகவலை இந்த அவைக்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன். நேற்று என்று கருதுகிறேன். இந்த அவையில் பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர் ஒருவர்--எனக்கு பெயர் சரியாக நினைவில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் என்று கருதுகிறேன். அவர்-- ஒரு கேள்வியைக் கேட்டார். அதாவது, மாடுகள், கறவை மாடுகள் அதிகமாக பால் கறக்கவேண்டும் என்பதற்காக அந்த மாடுகளுக்கு ஒருவிதமான ஊசி போடுகிறார்கள். அதனால் பாலுக்குப் பிறகு இரத்தம் வந்துவிடுகிறது. அந்த இரத்தம் பாலில் கலந்து, அந்தப் பால் விநியோகிக்கப்படுவதால் சில வியாதிகள் மனிதர்களுக்கு ஏற்படுகின்றன, இதைப்பற்றி இந்த அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார். அப்போது சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் அவர்கள் அப்படி எந்தப் புகாரும் இந்த அரசுக்கு வரவில்லை என்று தெரிவித்தார்கள். இதைப்பற்றி நான் விளக்கமாகக் கூற விரும்புகிறேன். அதிகமாகப் பால் சுரக்க வேண்டும் என்பதற்காக கறவை மாடுகளுக்கு ஊசி போடுவதால் இரத்தம் வராது. ஆனால் ஒரு பழக்கம் இருக்கிறது. சில இடங்களில், மேலைநாடுகளிலும் சரி, இந்தியாவின் பிற மாநிலங்களிலும் சரி என்ன செய்கிறார்கள் என்றால் பொதுவாக பால் கறக்க கைகளைத்தான் பயன்படுத்துவார்கள். இதுவரை இங்கே, அதுதான் நடைமுறையில் இருந்து வருகிறது. ஆனால், இப்போது புதிதாக ஒரு இயந்திரத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அது மின்சாரத்தால் இயங்குகின்ற ஒரு இயந்திரம். மாடுகளை, கறவை மாடுகளைக் கைகளால் கறக்காமல் இந்த இயந்திரத்தை attach

செய்துவிடுகிறார்கள்; அந்த மாட்டுக்கு மாட்டிவிடுகிறார்கள். குறிப்பிட்ட நேரம் அந்த இயந்திரம் ஓடி அதன்பிறகு அதை நிறுத்திவிட்டால் பாதகமில்லை. ஆனால், பல சந்தர்ப்பங்களில் இந்த இயந்திரங்களை இயக்குபவர்கள் என்ன செய்கிறார்கள் என்றால் அந்த இயந்திரத்தை மாட்டிவிட்டு ஸ்விட்சை ஆன் செய்துவிட்டு அவர்கள் எங்கோ சென்றுவிடுகிறார்கள். அந்த மாடு பால் சுரந்து, சுரந்து பால் எல்லாம் தீர்ந்தபிறகு அந்த இயந்திரத்தை நிறுத்தாததால் அதன்பிறகு இரத்தம் வர ஆரம்பித்துவிடுகிறது. இதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆகவே, இந்த மானியக் கோரிக்கைக்காக எவ்வளவு நிதி ஒதுக்குவது என்று நிதித் துறைச் செயலாளர் அவர்களுடனும், துறைச் செயலாளர் அவர்களுடனும் நான் இந்த பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்னால் ஆய்வு நடத்தியபோது இந்தத் துறைக்கென்று என்னென்ன புதிய திட்டங்களை அறிவிக்கலாம் என்பதைப்பற்றி என்னுடன் அவர்கள் கலந்தாலோசித்தபோது மாடுகளைக் கறப்பதற்காக இத்தகைய இயந்திரங்களை வாங்கலாமா என்று கேட்டு அதற்கு நிதி ஒதுக்கீடு வேண்டுமென்று கேட்டார்கள். இது ஒரு கொடூரமான பழக்கம். நாம் அரசு அதிகாரிகளிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தால், அரசு ஊழியர்களிடம் இந்தப் பொறுப்பைக் கொடுத்தால் தக்க நேரத்தில் அந்த இயந்திரங்களை நிறுத்தமாட்டார்கள். அதனால் பாவப்பட்ட அந்த மாடுகள் பாலுக்குப் பதிலாக இரத்தம் சுரக்க நேரிடும். ஆகவே, இந்த இயந்திரங்களை வாங்கக்கூடாது என்று உத்தரவிட்டிருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன் :** தலைவர் அவர்களே, நேற்றுகூட, *5-5-2003* அன்று விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூருக்கு அருகிலுள்ள பின்ராம்பட்டு கிராமத்தில் சில கால்நடைகள் இறந்தது குறித்த தகவல் அறிந்தவுடன் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க கால்நடைத் துறை அதிகாரிகள் சம்பந்தப்பட்ட கிராமத்திற்கு உடனடியாகச் சென்று தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டு அவ்வாறு தடுப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன என்பதை இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*25-12-2002* அன்று திப்பனூர் கிராமத்தில் உயர்ரக ஆடு வளர்ப்புப் பற்றி ஆய்வு செய்யப்பட்டது. அங்கே கம்பளிக்காக வளர்க்கப்படும்



வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாரத் மெரினோ ஆடுகளுடன் உள்ளூர் ஆடுகளை இணைத்து அதன்மூலம் பெறப்படும் குட்டிகளின் உரோமம் உயர்ந்த விலைக்குச் சந்தையில் விலைபோக வாய்ப்புள்ளதாக அந்த ஆய்வின்போது கண்டறியப்பட்டது. ஆகவே, அந்தக் கிராமத்தில் இத்திட்டத்தை ஊக்குவிக்க சோதனை அடிப்படையில் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லியாவுதின் சேட் அவர்கள் பரமத்தி ஒன்றியத்தில் தென்னிலை என்ற ஊரில் உள்ள கால்நடை மருத்துவமனையைச் சீர்படுத்தித் தரவேண்டுமென்று என்னிடம் நேற்று கேட்டுக்கொண்டார்கள். அதைப்பற்றி துறை அதிகாரிகளிடம் விவாதித்து, விரைவில் அதற்கான நடவடிக்கைகள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையோடு எடுத்து விரைவிலே அங்கே உள்ள அந்தக் கால்நடை மருத்துவமனை சீர்படுத்திக் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் தமது தொகுதியின் தேவை குறித்து 3 கோரிக்கைகளைக் கொடுத்துள்ளார்கள். அவற்றுள் வேலம்பாளையம் என்ற கிராமத்தில் கால்நடை மருத்துவமனைக்குக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றக் கோரிக்கைகளும் விரைவில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் கால்நடை வளர்ப்பு பல பகுதிகளில் இலாபகரமான முறையில் செயல்பட்டு வருகிறது. இறக்குமதி செய்யப்பட்ட நெருப்புக் கோழிகள் வளர்ப்பு, சோதனை அடிப்படையில் காட்டுப்பாக்கம் அரசுப் பண்ணையில் வளர்க்கப்பட்டு, அதுவும் ஆராய்ச்சி நிலையில் உள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய்த்தடுப்பு மருந்து நிலையத்தில் கால்நடை மற்றும் கோழியினங்களைப் பாதுகாக்க எட்டு வகையான நுண்ணுயிர்த் தடுப்பு மருந்துகளும், 11 வகையான நச்சுயிரி தடுப்பு மருந்துகளும் உற்பத்தி செய்யப்பட்டு, தமிழ்நாட்டில் உள்ள

அனைத்துக் கால்நடை நிலையங்களுக்கும் அனுப்பப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள தடுப்பூசி மருந்துகள் அங்கே உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இங்கு உற்பத்தி செய்யப்படும் தடுப்பூசி மருந்துகள் அகில இந்திய அளவில் முதல் தரம் பெற்றவை என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 5-25

விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. மணி அவர்கள் பேசுகிறபோது உறை விந்து அதிக தூரம் எடுத்துச் செல்லப்படுவதால், அதன் தரம் குறைந்துவிடும் என்று குறிப்பிட்டார்கள். திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்கு உறை விந்து கருவூட்டல் குச்சிகள் அனுப்பப்படுவதால் தரம் ஏதும் குறையாது. உறை விந்து செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் தரமான விந்துகள் பல ஆண்டுகள் பராமரிக்கப்பட்டு, பயன்படுத்தப்படலாம். மருந்துகள் பற்றாக்குறையாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கால்நடை பராமரிப்புத் துறைக்குத் தேவையான மருந்துகள் தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகத்தின் மூலம் வருடத்திற்கு 12 கோடி ரூபாய்க்கு வாங்கி பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஆகவே, மருந்துகள் வழங்குவதில் எவ்விதத் தட்டுப்பாடும் இல்லை. அவ்வாறு ஏதாவது இருந்தால் உடனடியாகப் பரிசீலிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோமாரி நோய்த் தடுப்பூசி வருடந்தோறும் 80 இலட்சத்திற்கு வாங்கி உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், இவ்வாண்டு கூடுதலாக வறட்சி நிவாரணப் பணிகளின் கீழ் 5 கோடியே 30 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டில் கோமாரி நோய்த் தடுப்பூசி விநியோகிக்கப்பட உள்ளது என்பதை உறுப்பினர் பெருமக்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர் ஜெக. வீரபாண்டியன் அவர்கள் பேசும்போது நாகப்பட்டினம் மாவட்டத்திலே ஆடுகள் 1 சதவிகிதம் தான் இருக்கின்றன. ஆடுகளே இல்லை என்று சொன்னார்கள். செம்மறி ஆடுகள் இல்லை என்று சொன்னார்கள். அவர்கள் பேசும்போது குறுக்கிட வேண்டாம் என்று இருந்தேன். அங்கு காடுகளே இல்லை அதனால் ஆடுகளே இல்லை என்றுகூடச் சொல்லியிருக்கலாம். (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி) எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆசியோடு உங்களுக்கு நான்



அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். மயிலாடுதுறையில் நடமாடும் கால்நடை மருந்தகம் தொடங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். அதன் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து நிதிநிலைமைக்கு ஏற்ப தகுதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். காரைக்குடியில் கால்நடை மருத்துவமனைக்கு அரசுக் கட்டடம் கட்டப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். நாகப்பட்டினத்தில் ஆடுகளே இல்லை என்று சொன்னார்கள். அது ஒரு தவறான தகவலாகும். நாகப்பட்டினம் மாவட்டத்திலே 12 ஆயிரத்து 157 செம்மறி ஆடுகளும், 3 இலட்சத்து 76 ஆயிரத்து 750 வெள்ளாடுகளும் உள்ளன என்று துறை ரீதியான பதில் எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அதையே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். நாகப்பட்டினம் மாவட்டம் கடலோர மாவட்டமாக இருப்பதால், அங்கே மேய்ச்சல் நிலம் அதிகமாக இல்லை என்றே கூறலாம்.

மாண்புமிகு விளவங்கோடு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சினை ஊசி பற்றி இன்னொன்றும் சொன்னார்கள். 4 முறை மருத்துவ மனைக்குச் சென்றால்தான் கருவூட்டல் வெற்றி பெறுகிறது என்று சொன்னார்கள். இப்போது இருக்கிற திட்டப்படி 3,572 நடமாடும் மருத்துவ அலகுகள் ஏற்படுத்தப்பட இருக்கின்றன. அப்படி ஏற்படுத்தப்படும்போது விவசாயிகள் இருக்கும் இடங்களிலேயே அவர்களுடைய கால்நடைகளுக்கு சினை ஊசி போட நடவடிக்கை எடுக்கப்பட்டுவிடும். அதன்காரணமாக பல முறை சினை ஊசி போடுவது தவிர்க்கப்பட்டுவிடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதற்காக தேசிய கால்நடை மேம்பாட்டு நிறுவனம் இவ்வாண்டு ஆரம்பிக்கப்பட்டு இன விருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்தி சீரமைப்புக் கட்டமைப்புப் பணிகளும் சுமார் 13 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படவிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிராத்தூரிலுள்ள கிளை நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்று திரு. மணி அண்ணன் அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அம்மா அவர்களின் ஆணையுடன் அதனையும் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் அன்புடன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். திருநெல்வேலியிலிருந்து நாகர்கோயிலுக்கு உறைவிந்து குச்சிகள் கொண்டுசெல்ல அதிகநேரம் ஆவதால், அது

கெட்டுப் போகிறது. ஆகவே, நாகர்கோயிலிலேயே திரவ நைட்டிரஜன் ஆலை அமைக்க வேண்டும் என்று கேட்டார்கள். ஈச்சங்கோட்டையிலிருந்து ஒரு கிளை ஆலை மாற்றி நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும். அவர்கள் கேட்டமாதிரி குழித்துறை கால்நடை மருத்துவமனைக்கு வருடாவருடம் ரூபாய் 97 ஆயிரத்திற்கு மருந்துகள் வழங்கப்படுகின்றன. இதுவே போதுமானது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் திரு. ஸ்டாலின் அவர்கள் 24-3-2003 அன்று இங்கே பேசியபோது, கடந்த ஆண்டும், இந்த ஆண்டும் நிதிநிலை அறிக்கைகளில் பல்வேறு உறுதிமொழிகளையும், வாக்குறுதிகளையும் வழங்கியிருக்கிறீர்களே, அறிவிக்கப்பட்ட திட்டங்கள் எல்லாம் என்ன ஆச்சு, என்ன ஆச்சு என்று கேலி செய்யும் நோக்கத்தோடு கேட்டார்கள். அவ்வப்போதே, அதற்கெல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தக்கவாறு பதில் சொன்னார்கள்.

வாயில்லாத கால்நடைகளுக்கு வாங்கப்பட்ட மருந்துகளில்கூட நீங்கள் ஊழல் செய்ததாலேதான் ஆட்சியிலேயிருந்து அகற்றப்பட்டீர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் நல்லாட்சியிலே வாயில்லாக் கால்நடைகள்மீது அக்கறை கொண்டு என்னென்ன திட்டங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை ஒன்றிரண்டு வார்த்தைகளில் சொல்ல விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியிலே ஆரம்பிக்கப்பட்டிருக்க வேண்டிய சிறப்பு கால்நடை மேம்பாட்டுத் திட்டம், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில், அம்மா அவர்களின் சீரிய முயற்சியில் 20 கோடியே 28 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டு துவக்கப்பட்டாச்சு. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-30

என்னாச்சு, என்னாச்சு என்று கேட்டீர்களே, எந்த ஆட்சிக் காலத்திலும் இல்லாத அளவிற்கு கால்நடைச் செல்வங்களை மேம்படுத்துவதற்கு 20 கோடி ரூபாய் செலவில் வறட்சி நிவாரணப் பணிகளைச் செயல்படுத்தியாச்சு. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னாச்சு, என்னாச்சு என்று ஏளனம் செய்தீர்களே, வாடும் பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளலாராக விளங்கும்



எங்கள் அம்மா அவர்கள், கால்நடைகளுக்குத் தண்ணீர் வேண்டுமே, தரமான தீவனம் வேண்டுமே என்று எண்ணி, தீவன மேம்பாட்டுத் திட்டத்திற்காகத் தரிசு நில மேம்பாட்டுத் திட்டம் என்று அறிவித்து, மகளிருக்கு முக்கியத்துவம் கொடுத்து செயல்படுத்தியாச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) மேய்ச்சல் நிலங்களை வேறு பணிகளுக்கு மாற்றிவிடாமல் தடை போட்டாச்சு. (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக மாற்ற அடிக்கல் நாட்டியாச்சு. (மேசையைத் தட்டும் ஒலி)

என்னாச்சு, என்னாச்சு என்றெல்லாம் கேட்கத்தெரிந்த அண்ணாச்சி, அதற்கான பதில்களைக் கேட்பதற்கு பொறுப்போடு அவைக்கு வராமல் போனீங்களே, ஏனுங்க உங்களுக்கு என்னாச்சு? (சிரிப்பு) (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தத் துறையின் ஒரு முக்கிய அங்கமாக விளங்கும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் பற்றி ஒருசில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்பல்கலைக்கழகம் கால்நடை மருத்துவ அறிவியலுக்கு எனத் துவக்கப்பட்ட முதல் பல்கலைக்கழகம் ஆகும். உயர் கல்வி அளிக்கவும், ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பொருட்டும் செயல்பட்டு வருகிறது. கால்நடை மற்றும் கோழிகளைத் தாக்கும் நோய்களைக் கட்டுப்படுத்த தடுப்பு மருந்துகள் தயாரிக்கப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் தரமான கால்நடைகளை உருவாக்கும் பொருட்டு, ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நவீன தொழில்நுட்பங்களை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்க கணிப்பொறியுடன் கூடிய 3 தகவல் தொழில்நுட்ப மையங்கள், வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புத்தாமரைப்பட்டியிலும், இந்தப் பல்கலைக்கழகத்தால் துவக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தை இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதல் மாநிலமாக மாற்றி அமைப்பேன் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சூளுரைக்கேற்ப, வெற்றி நடைபோட்டுக் கொண்டிருக்கும் இலட்சியப் பயணத்தில், நல்ல பல திட்டங்கள் நிதிநிலை அறிக்கையிலும், துறையின் கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் இடம் பெற்றுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் சீரிய அரசில், நடப்பு நிதியாண்டில், இத்துறையில்

[திரு. ப.வெ. தாமோதிரன்] [2003 மே 6

செயல்படுத்தப்படவுள்ள நல்ல பல சத்தான, முத்தான திட்டங்களை மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

"சுழன்றும்ஏர்ப் பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை"

என்ற குறளுக்கேற்ப, ஏழை விவசாயிகள் உழவுக்கும், இதரப் பணிகளுக்கும் எருதுகளையே நம்பியுள்ளனர். காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி இனங்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். இன விருத்தியில் நவீன கரு மாற்று முறை செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக 13 கோடியே 99 இலட்சம் ரூபாய் நடப்பாண்டில் செலவிடப்படும். இதன்மூலம் 67 சதவீத பசுவினங்கள், 56 சதவீத எருமையினங்கள் செயற்கை முறைக் கருவூட்டல் மூலம் இனவிருத்திக்குக் கொண்டு வரப்படுவதன் மூலம், பால் உற்பத்தி வருகிற பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் இரண்டு மடங்காகும் என்பதை மகிழ்ச்சியுடன் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பெரும்பாலான மாமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதிகளில் கால்நடை மருந்தகம் அமைக்க வேண்டுமென்றே கோரியுள்ளார்கள். கால்நடை பராமரிப்புத் துறையின் வரலாற்றிலேயே இதுவரை இல்லாத அளவிற்கு, நடப்பாண்டில் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இமாலய சாதனையைப் படைத்து, இந்த ஆண்டு, தகுதியின் அடிப்படையில் 72 கால்நடைக் கிளை நிலையங்களைக் கால்நடை மருந்தகங்களாகத் தரம் உயர்த்த ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். சாத்தான்குளம் தொகுதி, கால்வாய் கிராமத்தில் ஒரு புதிய கால்நடை மருந்தகம் ஏற்படுத்தவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இறைச்சி உற்பத்தியை அதிகரித்து, விவசாயிகளின் துணை வருவாயை அதிகரிக்க, 2003-2004-ல் 18 இலட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவில் செம்மறி ஆடுகளின் உள்ளினச் சேர்க்கையைத் தவிர்க்க, டானிடா உதவியுடன் புதுக்கோட்டை கால்நடை வளர்ச்சித் திட்டத்தில் பயிற்சி பெற்ற 567 தொடர்புப் பணியாளர் தம்பதியினர் ஒவ்வொருவருக்கும் 4 மாத வயதுடைய 4 ஆட்டுக் கிடா குட்டிகள் வழங்கப்படும். இத்திட்டம் புதுக்கோட்டை, சிவகங்கை,



2003 மே 6] [திரு. ப.வெ. தாமோதிரன்]

இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 மாவட்டங்களில் செயல்படுத்தப்படும். இந்தக் கிடா ஆட்டுக் குட்டிகளுக்கு ஒரு வயது ஆகும் வரை தடுப்பூசி, தீவனம் மற்றும் காப்பீடு அளிக்கப்படும். அதன்பின்னர் அவை அந்தப் பகுதியில் உள்ள செம்மறி ஆடுகளை இனப் பெருக்கம் செய்யும் விவசாயிகளிடம் இனப் பெருக்கத்திற்காக விற்கப்படும்.

திடீர் நோய்க் கிளர்ச்சி, அவசர மருத்துவ சேவை மற்றும் அத்தியாவசிய விவரங்களை விரைவில் பெறவும், மாண்புமிகு அம்மா அவர்கள் தற்போது தொலைபேசி வசதி இல்லாத 15 மாவட்டத் தலைமை இடங்களில் உள்ள கால்நடை நிலையங்களுக்கு 75,000 ரூபாய் செலவில் 15 தொலைபேசி இணைப்புகள் இந்த நடப்பாண்டில் ஏற்படுத்தித் தர இசைவு அளித்துள்ளார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 5-35

கால்நடை மருத்துவ வசதி இல்லாத கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழை விவசாயிகளின் இருப்பிடங்களுக்கே சென்று, செயற்கை முறைக் கருவூட்டல் பணி மேற்கொள்ளவும், கால்நடைகளுக்கு மருத்துவ வசதி அளிக்கவும், நடப்பாண்டில் மேலும் ஒரு நடமாடும் கால்நடை மருந்தகப் பிரிவு ஒரு இலட்சத்து 34 ஆயிரம் ரூபாய் செலவில் ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் இசைவு அளித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டுள்ளேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வான்கோழிகள் புறக்கடை வளர்ப்பிலும் இலாபம் ஈட்டித்தரும் என்ற விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மாண்புமிகு அம்மா அவர்கள் நடப்பாண்டில் 350 பெண் வான்கோழிகள் மற்றும் 50 ஆண் வான்கோழிகள் 4 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் செலவில் அரசு கால்நடைப் பண்ணைகளில் வளர்க்க இசைவளித்துள்ளார்கள். இவை செயல் விளக்கப் பண்ணையாக இருக்கும். வான்கோழிகள் வளர்ப்பில் ஆர்வம் காட்டும் விவசாயிகளுக்கு அதன் குஞ்சுகள் விற்கப்படும்.

இளம் கன்றுகளின் நோய் பாதிப்பு மற்றும் கன்று இறப்புக்குக் காரணமாக இருக்கக்கூடிய ஈ-கோலி நுண்ணுயிர்களைக் கண்டறிந்து தனிமைப்படுத்தி, அவற்றிற்கு எதிரான தடுப்பூசிகளைத் தயார் செய்து கன்றுகளின் இறப்பு விகிதத்தைக் குறைக்கும்பொருட்டு, தமிழ்நாடு

[திரு. ப.வெ. தாமோதிரன்] [2003 மே 6

கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலம், 4 இலட்சத்து 3 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு திட்டம் இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும்.

நாமக்கல் மாவட்டத்தில் பால் தரும் எருமைகளை சுவாச சம்பந்தமான சுழிச்சலுடன் கூடிய நோய் தாக்குவதால் ஏற்படும் பொருளாதார இழப்பைத் தவிர்க்க, அந்நோய் பற்றிய காரணிகள் குறித்துக் கண்டறிய 13 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஆய்வுத் திட்டம் ஒன்று நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் செயல்படுத்தப்படும்.

தருமபுரியில் நன்னீர் அலங்கார மீன் வளர்ப்புத் தொழில்நுட்பத்தின் மூலம் சுய வேலைவாய்ப்பை உருவாக்கவும், உபரி வருமானத்தை ஏற்படுத்தவும் 4 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், தருமபுரி பகுதியிலுள்ள மீனவ மக்களுக்கு நன்னீர் அலங்கார மீன் வளர்ப்புத் திட்டம், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் மூலமாக மேற்கொள்ளப்படும்.

நான் எடுத்த இந்தப் பிறவிப் பயனை அடையும் வகையில், அம்மா அவர்களின் காலத்தில் நாங்கள் வாழ்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் நாங்களும் ஒரு அணிலைப்போல் பணியாற்ற ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றோம் என்பதை நினைந்து நினைந்து பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

ஆண்டிப்பட்டியில் வென்று ஆள வந்தீர்கள் அம்மா,

அச்சரப்பாக்கத்தில் வென்று ஏழைகளின் அச்சம் தீர்த்தீர்கள் அம்மா,

வாணியம்பாடியில் வென்று வானுயரப் புகழ் பெற்றீர்கள் அம்மா,

சைதாப்பேட்டையில் வென்று சரித்திரம் படைத்தீர்கள் அம்மா,

சாத்தான்குளத்தில் வென்று சாதனை படைத்தீர்கள் அம்மா.

கோழிகளைப்பற்றி நான் எதுவும் சொல்லாமல் விட்டால், நிறைவாகாது. தமிழ்நாடு, கோழி வளர்ப்பில் முன்னணி மாநிலமாகத் திகழ்கிறது என்பது அனைத்து உறுப்பினர்களுக்கும் தெரியும். கோழியே, கோழியே, முட்டை போடு என்று காட்டுக்குள் பேரம் பேசி, காட்டு தர்பார் நடத்தியவர்கள் கோழிப் பண்ணைகளையே குத்தகைக்கு எடுத்து, கோழிக் கூண்டுகளைக் காலி செய்து மூடுவிழா



2003 மே 6] [திரு. ப.வெ. தாமோதிரன்]

நடத்தினார்களே, கூண்டுகள் இவர்களுக்காகத் தயாராவது எப்போது என்று தமிழகம் தவிப்புடன் கேட்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மூடுவிழா நடத்துகின்ற அவர்களுக்கு தமிழ்ப் பரணி பாடுகின்ற விழா நடத்தும் பண்பு ஏது? தகுதி ஏது? உதட்டளவில் தமிழ் பேசும் உத்தம புத்திரர்கள், எங்கள் அம்மாபோல் உலகத் தமிழ் மாநாடு ஒன்றேனும் நடத்தியதுண்டா?

இதய தெய்வம் அம்மா அவர்கள்தான் 1993 ஆம் ஆண்டில் கால்நடை பராமரிப்புத் துறையின் நூற்றாண்டு விழாவைத் தமிழகம் போற்றுகின்ற வகையிலே நடத்தினார்கள். அடுத்து வருவதோ, கால்நடை மருத்துவக் கல்லூரியின் நூற்றாண்டு விழா. விழா என்றாலே எப்போதும் "வேதா நிலையம்" தேடி வரும். விழா என்றாலே எப்போதும் "வேதா நிலையம்" தேடி வரும். விழா என்றாலே எப்போதும் புரட்சித் தலைவியை நாடி வரும். ஏனென்றால், விழாத் தலைவி, என்றென்றும் "விழாத" தலைவி எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) விழாத தலைவி எங்கள் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்கள் மட்டும்தான்.

வாய் இல்லாப் பிராணிகளுக்கும் வாழ்வளிக்கும் வற்றாத கருணையே, வரலாறே, தங்களின் தாள்களிலே தலை பணிந்து வணங்குகிறேன். அந்த வகையில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில் ஏழை எளிய மக்கள், குறிப்பாக கிராமப்புற விவசாயப் பெருங்குடி மக்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் இந்தத் துறையின் மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்கக் குறிப்பில் அனைத்து அம்சங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. திட்டப் பயன்கள் மக்களை விரைவாகச் சென்றடையும் வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இங்கு பேசிய மாண்புமிகு உறுப்பினர்களின் நல்ல பல கருத்துகளெல்லாம் சட்டமன்றப் பேரவையின் நிருபர்களால் குறிப்பெடுக்கப்பட்டு, அவைக் குறிப்பிலே பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு இந்தப் பொன்னான வாய்ப்பினை அளித்த எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர், நான் வணங்கும் தெய்வம், இந்த நாட்டின் தலைசிறந்த குடிமகளாகச் சிறப்பாக விளங்கிக் கொண்டிருக்கின்ற எங்கள் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களே, தங்களையும் வணங்கி எனது இந்த பதிலுரையை நிறைவு செய்ய விழைகிறேன்.

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெறச் சொல்லுங்கள். கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கவிஞர் திரு. தாமோதிரன் அவர்களே, (சிரிப்பு) வெட்டுத் தீர்மானங்களை திரும்பப் பெறச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** இன்றைக்குக் கால்நடை பராமரிப்புத் துறை குறித்த மானியக் கோரிக்கையில் 41க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருந்தாலும், பல உறுப்பினர்கள் அவையில் இல்லாத காரணத்தால், நான்கு மாண்புமிகு உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, (சிரிப்பு) வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று மானியக் கோரிக்கையை நிறைவு செய்யக் கோருங்கள்.

**மாண்புமிகு திரு. ப. வெ. தாமோதிரன்:** கொள்கை பற்றி விவாதிக்கவும் மற்றும் பல்வேறு பிரச்சினைகள் குறித்தும் தரப்பட்ட வெட்டுத் தீர்மானங்களுக்கு நான் ஏற்கெனவே போதிய அளவிற்குப் பதிலளித்திருப்பதாகக் கருதுகிறேன். அவற்றையெல்லாம் தாங்கள் ஏற்றுக் கொண்டு, இங்கே கொடுத்துள்ள வெட்டுத் தீர்மானங்களையெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டு, கால்நடை பராமரிப்புத் துறை மானியக் கோரிக்கையை முழுமனதோடு நிறைவேற்றித் தருமாறு இந்த மாமன்றத்தின் அனைத்து உறுப்பினர் பெருமக்களையும் அன்போடும், பண்போடும், பணிவோடும் கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி.மு.க. ஆட்சியில் கால்நடைத் துறை அமைச்சராக இருந்த புலவர் செங்குட்டுவன் மீதும், அன்றைய கால்நடைத் துறை உயரதிகாரிகள் மீதும், கால்நடைகளுக்கு மருந்துகள் வாங்கியதில் ரூபாய் எட்டரை கோடி அளவிற்கு ஊழல் நடந்துள்ளது என்று சென்னை செஷன்ஸ் நீதிமன்றத்திலே நான் வழக்குத் தொடர்ந்துள்ளேன்.



இந்த வழக்கில் ஆரம்பக்கட்ட விசாரணைகள் எல்லாம் முடிவுற்று, அந்த அறிக்கையை இலஞ்ச ஒழிப்புத் துறையினர் தவறு செய்தவர்கள்மீது மேல் நடவடிக்கை எடுக்கக் கோரி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசை கால்நடைகளுக்கு மருந்துகள் வாங்கியதில் ஊழல் செய்துள்ள முன்னாள் தி.மு.க. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் புலவர் செங்குட்டுவன் மீதும், உயரதிகாரிகள் மீதும் எப்.ஐ.ஆர். பதிவு செய்து, ஊழல் தடுப்புச் சட்டத்தின்கீழ் தக்க நடவடிக்கை எடுக்குமாறு நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதுபற்றிப் பதில் சொன்னார். (குறுக்கீடு) இல்லை, சொன்னார். (குறுக்கீடு) திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கத்திற்குரிய கால்நடைத் துறை அமைச்சர் அவர்களுடைய தெளிந்த விளக்கத்திற்கு பாராட்டுதல்களையும், சொந்த மாவட்டம் என்ற நிலையிலே என்னுடைய மகிழ்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏராளமாய் அவர் விளக்கங்களைத் தந்தாச்சு. பக்கத்திலே இருக்கக்கூடிய அமைச்சர் உட்பட ஏராளமான சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளையெல்லாம் கேட்டு, அத்தனையும் கொடுத்தாச்சு. சிங்காநல்லூரிலே ஒரு கால்நடை மருந்தகம் வாடகைக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கிறது. சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருந்தேனே; அது என்னாச்சு? நான் கொடுத்த விண்ணப்பத்தினை நீங்கள் பார்த்தாச்சு; படித்தாச்சு; அது என்ன ஆச்சு என்று கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள்; நேரமாச்சு. (சிரிப்பு) (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

**மாண்புமிகு திரு. ப.வெ. தாமோதிரன்:** சிங்காநல்லூருக்கு மட்டுமல்ல. உங்கள் ஊருக்கு அருகிலுள்ள ஒண்டிப்புதூருக்கும் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையோடு, நிச்சயமாக 2 கால்நடை மருத்துவமனைகள் கட்டிக் கொடுத்தாச்சு என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(இ) கோரிக்கை எண் 6 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - கால்நடை பராமரிப்பு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - கால்நடை பராமரிப்பு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜெக. வீரபாண்டியன்.

**திரு. ஜெக. வீரபாண்டியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெக. வீரபாண்டியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.வி. முரளிதரன்.

**திரு. கே.வி. முரளிதரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.வி. முரளிதரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய 6ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 176,98,50,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 1000/- ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

**(ஈ) கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால்வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை - பால் வளம் பற்றிய 8ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 13,15,52,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை — மீன் வளம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7 — கால்நடை பராமரிப்பு மற்றும் மீன் வளத் துறை — மீன் வளம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. லா. சந்தானம், இருக்கையில் இல்லை. திரு. லா. சந்தானம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. அரசன்.

**திரு. ப. அரசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. அரசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

*பிற்பகல் 5-45*

"கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம் பற்றிய மானியக் கோரிக்கை எண் 7-ன்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 54,61,91,000/— மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 2,96,10,000/— ஆகியவற்றிற்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



[பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## 6. அரசினர் தீர்மானம்

### விதி 32–ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7-5-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் ஒத்திவைப்பு குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ 7-5-2003 ஆம் நாளன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

7-5-2003 ஆம் நாளன்று வினாக்கள்-விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை, புதன்கிழமை (7-5-2003) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 5-45 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*95.* 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 15-11-2002 ஆம் நாளிட்ட 131 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*96.* வருவாய்த் துறையின் 30-5-1962 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட SRO. 2437/1962 ஆம் எண் அறிவிக்கையில் (இது பின்னர் திருத்தப்பட்டது) திருத்தம் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 19-11-2002 ஆம் நாளிட்ட 134 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*97.* 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 25-11-2002 ஆம் நாளிட்ட 135 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*98.* செல்லுலார் தொலைபேசிகளின் விற்பனை குறித்து 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், யாதொரு வணிகரால் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் வரி வீதத்தை நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிக வரித் துறையின் 24-12-2002 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*99.* 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரித் துறையின் 23-1-2003 ஆம் நாளிட்ட 6 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]





*100.* வணிக வரித் துறையின் 1-7-2002 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (2)/வ.வ./568 (F-5)/2002 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்தது குறித்து வணிக வரித் துறையின் 31-1-2003 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*101.* செல்லிடத் தொலைபேசிகளின் (Cellular telephones) விற்பனை மீது 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க வரியை நான்கு சதவீதமாகக் குறைப்பது குறித்தும் பதினொன்றாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்ட ஏவியேஷன் கேசோலின், ஏவியேஷன் ஜெட் எரிபொருள், டர்பைன் எரிபொருள், பெட்ரோல், உயர்வேக டீசல், இலேசான டீசல் எண்ணெய் ஆகியவற்றின்மீது செலுத்தத்தக்க வரியின் மீதான இச்சட்டத்தின் 3-I ஆம் பிரிவின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க மேல்வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் மற்றும் ஏவியேஷன் கேசோலின் ஜெட் எரிபொருள் உட்பட ஏவியேஷன் டர்பைன் எரிபொருள், இலேசான டீசல் எண்ணெய் ஆகியவற்றின் விற்பனை அல்லது கொள்முதல் மீது 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகர் செலுத்தத்தக்க கூடுதல் விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்தும் வணிக வரித் துறையின் 21-3-2003 ஆம் நாளிட்ட 26 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவு மற்றும் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 14/1970) 4(3) பிரிவு ஆகியவற்றின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

*102.* சென்னை-17, தியாகராய நகரில் உள்ள கண்ணம்மாப்பேட்டை இடுகாட்டில் நிறுவுவதற்காக, சென்னை தியாகராயநகர் திருவாளர்கள் பரம்சாந்தி நிலையத்திற்கு 30 மீட்டர் உயரமுள்ள புகைப்போக்கி வசதியுடன் (Chimney) அமைந்த சுத்திகரிப்பு அமைப்புடன் கூடிய மின் தகன மேடையை அமைப்பது தொடர்பாக, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ், எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க (இருபது இலட்சத்து ஐம்பத்து எட்டாயிரத்து அறுபது ரூபாய்க்கு மேற்படாமல்) வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக

வரித் துறையின் 25-3-2003 ஆம் நாளிட்ட 31 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

103. மதுரையைச் சேர்ந்த (பதிவு எண்.49/79) ஏலாமையுற்றோருக்கான, 'திருவாளர்கள் ஹெலன் கெல்லர் பணிச்சங்கம்' மேற்கொள்ளும் உறை (envelope) தயாரிப்புத் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்படும் மூலப்பொருட்களைக் கொள்முதல் செய்வது தொடர்பாக, மேற்சொன்ன சங்கம், 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிக வரித் துறையின் 25-3-2003 ஆம் நாளிட்ட 32 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

325. மானியக் கோரிக்கை எண் 6 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

326. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - கால்நடை பராமரிப்பு பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

327. மானியக் கோரிக்கை எண் 7 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன்வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

328. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - மீன் வளம் பற்றிய செயலாக்க வரவு-செலவுத் திட்டம், 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

329. மானியக் கோரிக்கை எண் 8 - கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2003-2004. (தமிழ், ஆங்கிலம்).

330. சிறப்புப் பொருளாதார மண்டலங்களுக்கான தமிழக அரசின் கொள்கை 2003 என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).



## இணைப்பு-I

(246 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## கோரிக்கை எண்—6

## கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் மீன் வளத் துறை-கால்நடை பராமரிப்பு

### கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

**முன்னுரை:**

கால்நடை பராமரிப்பு மற்றும் வேளாண்மை ஆகிய இரு தொழில்களும் பழங்காலந்தொட்டே இந்திய கிராமப்புறப் பொருளாதார முன்னேற்றத்திற்கு இன்றியமையாதவையாகவும், முக்கியமானதாகவும் இருந்து வந்துள்ளன. இத்தொழில், இருப்பிடத்திற்கு அருகிலேயே முழு நேர மற்றும் பகுதி நேரத் தொழிலாக உள்ளது. மேலும், நிரந்தர வருவாயை அளிப்பதும், மனிதவள ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக் கொள்வதும், கால்நடை வளர்ப்பின் சிறப்பாகும். கால்நடை வளர்ப்பு கிராமப்புற மற்றும் நகர்ப்புற மக்களுக்கு, முக்கியமாக கால்நடைகளைப் பேணிக் காப்பதிலும், வளர்ப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கும் பெண்களுக்கு பெரும் அளவில் வேலைவாய்ப்பு, குறிப்பாக சுய வேலைவாய்ப்பு அளிக்கக்கூடியதாக உள்ளது. கால்நடை வளர்ப்புத் தொழிலை 9.8 மில்லியன் விவசாயிகள் முதன்மைத் தொழிலாகவும், 8.6 மில்லியன் விவசாயிகள் துணைத் தொழிலாகவும் கொண்டுள்ளார்கள். இது மொத்தத் தொழிலாளர்களில் 5 சதவீதம் ஆகும். பால்பண்ணைத் தொழிலில் சுமார் 75 மில்லியன் பெண்களும், 15 மில்லியன் ஆண்களும் ஈடுபட்டுள்ளனர். அன்றாட கால்நடை பராமரிப்பு வேலைகளில், 71 சதவீதம் பெண்களே செய்கின்றனர். சமச்சீரான புரதச்சத்து மிக்க இறைச்சி, பால் முட்டை மற்றும் பால் பண்ணைப் பொருட்கள் வாயிலாக தேசிய ஊட்டச்சத்துத் தரத்தினை அதிகப்படுத்துவதற்கு கால்நடைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. காளை மாடுகளைப் பெரும்பாலும் வேளாண் உழவுத் தொழிலில் பயன்படுத்துகின்றனர். அதன் சாணம் மண்வளத்தை அதிகரிக்கக் கூடிய இயற்கை உரமாகவும் உள்ளது. மேலும் கால்நடைகள் மனிதர்களின் பண்பாட்டில் சம்பந்தப்பட்ட சொத்தாகவும் சமூக மற்றும் சமயச் சடங்குகளிலும் முக்கியப் பங்கு வகிக்கின்றன.

கால்நடைகள் நிலமற்ற வேளாண் தொழிலாளர்களுக்கு குடும்பத் தொழிலைப்போல அவர்களுக்கு முக்கிய ஆதாரமாக உள்ளது. கிராமப்புற நிலமற்ற விவசாயிகளுக்கு கால்நடை வளர்ப்புத் தொழில் முக்கிய சொத்தாகவும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்கு முதுகெலும்பாகவும் விளங்குகின்றது. கால்நடை வளர்ப்பு கிராமப்புற ஏழை மக்களுக்கு, குறிப்பாக வேளாண் தொழில் நடைபெறாத காலங்களிலும் கணிசமான அளவு வருவாயைத் தருவதுடன் குறுகிய காலகட்டத்துக்குள் கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்துவதாக அமைகின்றது.

கால்நடை பராமரிப்புத் துறை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்குத் தேவையான மருத்துவ வசதி மற்றும் உற்பத்தித் திறனை அதிகரிப்பதில் முக்கிய பங்காற்றி வருகின்றது. இவற்றுடன் பயனாளிகள் பயனடையக்கூடிய பலவகையான திட்டங்களைச் செயல்படுத்தி கிராம மக்களின் துணை வருவாயை அதிகரிக்க உதவுகிறது. இச்சேவை மாநிலமெங்கும் பரந்து காணப்படுகின்ற பல்வேறு கால்நடை நிலையங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றது. இயற்கை மற்றும் சுற்றுப்புறச்சூழல் பாதிக்காவண்ணம் கால்நடைகள் மற்றும் இயற்கை ஆதாரங்களை நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்வதில் இத்துறை முக்கிய பங்காற்றுகிறது. இத்துறையால் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்ட பல்வேறு நலத் திட்டங்களின் பயனாக, கடந்த பத்தாண்டுகளில் கால்நடைப் பொருட்களான பால் மற்றும் முட்டை உற்பத்தி முறையே 48.5 சதவீதமும், 56 சதவீதமும் உயர்ந்துள்ளது. ஆண்டுக்கு பால் பண்ணைத் தொழில் 5 சதவீதமும், கறிக்கோழித் தொழில் 10 சதவீதமும், முட்டைத் தொழில் 5 சதவீதமும் வளர்ந்து வருகின்றது. இது கிராமப்புறப் பொருளாதாரத்தை முன்னேற்ற பெருந்துணையாக உள்ளது.

நாளொன்றுக்கு 1990-91-ல் 33.75 இலட்சம் மெட்ரிக் டன்னாக இருந்த அனைத்து இனங்களின் பால் உற்பத்தி மதிப்பீடு, 2001-2002-ல் 49.90 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது. இதேபோல் 1990-91-ல் ஆண்டுக்கு 2,551 மில்லியனாக இருந்த முட்டை உற்பத்தி மதிப்பீடு 2001-2002-ல் 4,223 மில்லியனாக அதிகரித்துள்ளது. 1990-1991-ல் ஒருவருக்கு ஒரு நாளைக்கு உட்கொள்ளும் பாலின் அளவு 166 கிராம் என்பது, 2001-2002-ல் 219 கிராமமாக அதிகரித்துள்ளது. இது போன்றே ஒருவர் ஒரு வருடத்திற்கு உட்கொள்ளும் முட்டை எண்ணிக்கை 46 லிருந்து 68 ஆக உயர்ந்துள்ளது. கலப்பினக் கருத்தரிப்பின்





மூலமும், நோய்களைக் கட்டுப்படுத்துவதன் மூலமும் ஒருவர் உட்கொள்ள வேண்டிய, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகத்தின் பரிந்துரை அளவான நாளொன்றுக்கு 220 கிராம் பாலும், வருடமொன்றுக்கு 183 முட்டைகளும் விரைவில் எட்டப்படும். தமிழ்நாட்டில் அதிகமாக கறிக்கோழி, முட்டைக்கோழி உற்பத்தி செய்யப்படுவதால், கோழிக்கறியும், முட்டைகளும் அதிக அளவில் மக்களுக்குக் கிடைக்கின்றன. தற்போது நிலவும் விலைகளின்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கால்நடைகள் 5.51 சதவீத பங்கினைக் கொண்டுள்ளது.

பெருகிவரும் மக்கள் தொகை, குறைந்து வரும் நிலம் மற்றும் வேளாண் நிலங்களின் பரப்பு, பருவமழை பொய்ப்பு, உணவுத் தேவை அளவு அதிகரிப்பு போன்ற பிரச்சினைகளை நாடு தற்போது எதிர்கொண்டுள்ளது. இவற்றைக் கருத்திற்கொண்டு துறையானது, எந்த தட்ப வெப்ப நிலையையும் தாங்கிக் கொண்டு அதிக உற்பத்தித் திறனை அளிக்கக்கூடிய கால்நடைகளை உற்பத்தி செய்ய திட்டங்கள் வகுத்துள்ளது. தனியார், கூட்டுறவு அமைப்புகளின் பங்கு மற்றும் வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள ஏழை எளியோர் பயன்பெறும் வகையிலான பல்வேறு பயனாளிகள் பயன்பெறும் திட்டங்களுக்கு அரசு தொடர்ந்து தரும் ஆதரவினால், கால்நடை வளர்ச்சித் திட்டங்களின் பயன்களை முழுமையாக வெளிப்படுத்த இயலும். கிராமப்புறங்களில் கால்நடை வளர்ப்பு, வறுமை ஒழிப்பு, வேலையின்மை மற்றும் கிராமப்புறங்களில் மாற்றம் கொண்டு வர உதவும் முக்கிய தொழிலாக இருப்பதுடன் மக்கள் கிராமப்பகுதிகளிலிருந்து நகரப்பகுதிக்குக் குடிபெயர்வதைக் குறைத்து கிராமப்புற பொருளாதாரத்தை மேம்படுத்த பெரிதும் உதவுகின்றது.

**பொது நிர்வாகம்**

கால்நடை பராமரிப்புத் துறையானது கால்நடை மருத்துவப் பணிகள் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர்களின் முழுக் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றது. கால்நடை மருத்துவப் பணி இயக்குநரின்கீழ் பலதரப்பட்ட தொழில்நுட்பப் பணிகளுக்கு இரண்டு கூடுதல் இயக்குநர்கள், ஒரு இணை இயக்குநர் மற்றும் ஒரு துணை இயக்குநர் உறுதுணையுடன் செயல்பட்டு வருகின்றார்கள். கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநருக்கு பலதரப்பட்ட தொழில்நுட்பப் பணிகளில் உதவிட ஒரு கூடுதல் இயக்குநர் மற்றும் ஒரு துணை

[2003 மே 6

இயக்குநர் பணியாற்றுகின்றனர். துறையின் நிர்வாகம் மற்றும் கணக்கு தொடர்பான பணிகளுக்கு இயக்குநர்களுக்கு உதவிட ஒரு துணை இயக்குநர் (பணியாளர்) மற்றும் நிதி ஆலோசகர் மற்றும் முதன்மைக் கணக்கு அலுவலர் ஆகியோர் பணிபுரிகின்றார்கள்.

மாநிலம் 25 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டல இணை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருகின்றது. 25 மண்டலங்களும் 65 ஆட்சிக் கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு கோட்டத்திற்கும் ஓர் உதவி இயக்குநர், துறையின் அனைத்துப் பணிகளையும் கவனித்து வருகிறார்.

கூடுதல் இயக்குநரின் தகுதியில் உள்ள ஓர் இயக்குநரின் தலைமையின்கீழ் இராணிப்பேட்டையில் உள்ள கால்நடை நோய் தடுப்பு மருந்து நிலையம், கால்நடை மற்றும் கோழியினங்களுக்கு பலவகை தொற்று நோய் நச்சுயிரி மற்றும் நுண்ணியிர் தடுப்பு மருந்துகளைத் தயாரிக்க செயல்பட்டு வருகின்றது. நோய் ஆய்வு, உறுதி மற்றும் கண்காணிக்க ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னையில் செயல்பட்டு வருகிறது.

இத்துறையில் 8 கால்நடைப் பண்ணைகள், 3 ஆட்டுப் பண்ணைகள், 20 கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்திப் பிரிவுகள் மற்றும் 2 கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள் ஒவ்வொன்றும் ஒரு துணை இயக்குநர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வருகின்றன.

துறையில் உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் அமைச்சுப் பணியாளர்களின் பணிகளை சிறப்பான முறையில் மாற்றி அமைத்திட அவசியம் ஏற்பட்டுள்ளமையால் துறை பணியமைப்பு, மறுசீரமைப்பு செய்யப்பட உள்ளது. அதற்கான கருத்துரு ஆய்வில் உள்ளது.

**கால்நடை எண்ணிக்கை:**

மாநிலத்தின் மொத்த கால்நடைகளின் எண்ணிக்கை 259.39 இலட்சம் ஆகும். இது நாட்டில் உள்ள மொத்த கால்நடைகளில் 5.40 சதவீத பங்கும், உலக அளவில் 0.60 சதவீத பங்கும் ஆகும். பதினாறாவது கால்நடை மற்றும் கோழியினக் கணக்கெடுப்பின்படி (1997) மாநிலத்தில்



2003 மே 6]

கால்நடைகள் மற்றும் கோழிகளின் இனவாரியான எண்ணிக்கை விவரங்களும், அதன் விழுக்காடு பங்கும் கீழே தரப்பட்டுள்ளன:

| இனம் | எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கையில் விழுக்காடு |
|---|---|---|
| மாட்டினம் | 9046542 | 34.88 |
| எருமையினம் | 2741263 | 10.57 |
| செம்மறியாடுகள் | 5258884 | 20.27 |
| வெள்ளாடுகள் | 6416204 | 24.74 |
| நாய்கள் | 1796216 | 6.92 |
| பன்றிகள் | 609176 | 2.35 |
| கழுதைகள் | 43197 | 0.16 |
| குதிரைகள் மற்றும் மட்ட குதிரைகள் | 11003 | 0.04 |
| முயல்கள் | 16909 | 0.07 |
| **மொத்த கால்நடைகள்** | **25939394** | **100** |
| கோழிகள் | 35792376 | 98.03 |
| வாத்துகள் | 715153 | 1.96 |
| மற்றவை (வான்கோழி, நெருப்புக்கோழி) | 3546 | 0.01 |
| **மொத்த கோழியினங்கள்** | **36511075** | **100** |

[2003 மே 6

கடந்த 47 ஆண்டுகளில் கால்நடைகள் மற்றும் கோழியினங்களின் போக்கு பின்வருமாறு:

| இனங்கள் | 1951 | 1994 | 1997 | சதவீத வேறுபாடு முந்தைய கால்நடை கணக்கெடுப்புடன். | சதவீத வேறுபாடு 47 ஆண்டுகளில். |
|---|---|---|---|---|---|
| | (இலட்சத்தில்) | | | | |
| மொத்த கால்நடைகள் | 251.30 | 256.79 | 259.39 | +1.01 | +3.22 |
| பசுவினம் | 102.16 | 90.96 | 90.47 | -0.55 | -11.45 |
| எருமையினம் | 22.97 | 29.31 | 27.41 | -6.48 | +19.13 |
| செம்மறியாடுகள் | 80.24 | 56.12 | 52.59 | -6.30 | -34.41 |
| வெள்ளாடுகள் | 40.40 | 58.65 | 64.16 | +9.39 | +58.91 |
| பன்றிகள் | 4.09 | 6.13 | 6.09 | -0.65 | +48.78 |
| கோழியினம் | 83.78 | 238.54 | 365.11 | +53.06 | +336.20 |
| கோழிகள் | 81.56 | 233.62 | 357.92 | +53.21 | +338.84 |
| வாத்துக்கள் | 2.22 | 4.91 | 7.15 | +45.53 | +222.07 |

கடந்த 47 ஆண்டுகளில் மாநிலத்தில் மொத்தக் கால்நடைகளின் எண்ணிக்கை 3.22 சதவீதம் அதிகரித்துள்ளது. பசுவினம் 11.45 சதவீதமும், செம்மறியாட்டினம் 34.41 சதவீதமும் குறைந்துள்ளன. எருமையினம் 19.13 சதவீதம் அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் வெள்ளாடுகள் மற்றும் பன்றியினம் இரு மடங்காகியுள்ளன. இதே காலத்தில் கோழியினம் சிறப்பு மிக்க அளவான 336.20 சதவீதம் அதிகரித்துள்ளது. கோழிப் பிரிவுகளைத் தோற்றுவிக்க அரசின் உதவி, வெள்ளைக் கழிச்சல் நோயிலிருந்து காத்திட மேற்கொள்ளப்பட்ட பரவலான தடுப்பூசி, தரமான தீவனம் எளிதில் கிடைத்திட வழிவகை, மேம்படுத்தப்பட்ட மருத்துவம், தற்கால நவீன பராமரிப்பு, மேலாண்மை முறைகள் கடைபிடிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வர்த்தகரீதியான முட்டை மற்றும் கறிக்கோழிகள் வளர்ப்பு ஆகியவை பயனாய் இம்முன்னேற்றம் அடைய முடிந்தது. இதனால் இதுவரையில் குடிசைத் தொழிலாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது பெரிய அளவிலான தொழிலாக நாமக்கல், சேலம், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் பல இடங்களில் பெருகியுள்ளது.



2003 மே 6]

பசுவின எண்ணிக்கை குறைந்தபோதிலும், பால் உற்பத்தி சீராக அதிகரித்து வருகிறது. கலப்பின கருத்தரிப்புத் திட்டம் மற்றும் அது தொடர்புடைய திட்டங்களைச் செயல்படுத்தியதன் பயனாகவும் அயலினங்களான ஜெர்சி மற்றும் ஹோல்ஸ்டைன் ப்ரிசியன் போன்ற இனங்களைக் கருவூட்டல் செய்ததன் பயனாகவும் கால்நடைகளின் எண்ணிக்கை அதிகரித்ததோடு உபயோகமற்ற கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்துள்ளன. இதனால் மொத்த இனமற்ற கால்நடைகளின் எண்ணிக்கை குறைந்து வந்த போதிலும் தனி மாட்டின் பால் உற்பத்தித் திறனானது உயர்ரக மரபு அணுவை பயன்படுத்தியதினால் சீராக அதிகரித்து வருகிறது. கலப்பினப் பசுவின் ஒரு நாளைய சராசரி பால் உற்பத்தி 1991-92—ல் நாளொன்றுக்கு 4.497 கிலோவாக இருந்தது. 2001-2002 ஆம் ஆண்டில் 6.320 கிலோவாக அதிகரித்துள்ளது. இது 40 சதவீதம் அதிகமாகும்.

தேசிய கால்நடைக் கொள்கையின் வரையறைகளைப் பின்பற்றி மாநிலத்தில் கால்நடைக் கொள்கை உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது. இக்கால்நடைக் கொள்கையின் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

* கால்நடை உடல் நலம் பேணும் வசதிகளை விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்;
* செயற்கைமுறை கருவூட்டல் பணியை தீவிரப்படுத்துதல்;
* கிராமப்புறங்களில் வாழும் பெண்களை புறக்கடை கோழி வளர்ப்பில் ஊக்குவித்தல்;
* மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்துதல்;
* கால்நடை மருத்துவ சேவையில் தனியாரை ஊக்குவித்தல் மற்றும்
* இறைச்சிக்கூடங்களை நவீனப்படுத்தி பொது மக்களுக்குத் தரமான இறைச்சி வழங்குதல்.

**தீவனம் மற்றும் பசுந்தீவனம்**

பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் அவர்களின் மேம்பட்ட வாழ்க்கைத்தரத்திற்கு ஏற்ப கிராம மற்றும் நகர்ப்புறங்களில் குடியிருக்கும்

இருப்பிடத்திற்குத் தேவை அதிகரித்துள்ளது. மேலும் தொழிற்சாலை, வாணிபம், போக்குவரத்து மற்றும் பொழுதுபோக்கு ஆகியவற்றை விரிவுபடுத்துவதற்கு நிலம் தேவைப்படுகிறது. இதனால் தீவனம் மற்றும் பசுந்தீவன உற்பத்தி மற்றும் மேய்ச்சல் நில வசதி குறைந்துள்ளது.

கால்நடைகளுக்குக் கொடுக்கப்படும் தீவனம், உலர் தீவனம், பசுந்தீவனம் மற்றும் அடர் தீவனம் ஆகும். இந்தத் தீவனங்களில் உலர் தீவனம் அதிக அளவில் உட்கொள்ளப்படுகிறது. கால்நடை பெருக்கம், மனிதனுக்குத் தேவைப்படாத வைக்கோல், கதிர், அரிசித் தவிடு, சிறுசிறு தானியக்குறுணைகள், எண்ணெய் வித்துக்கள் மூலம் கிடைக்கும் பிண்ணாக்கு மற்றும் பருத்திக்கொட்டை போன்றவற்றைச் சார்ந்துள்ளது. 15 முதல் 20 விழுக்காடு மாட்டினங்களுக்கு மட்டுமே அடர் தீவனம் தற்சமயம் கிடைக்கிறது. பசுந்தீவனம் பெரும்பாலும், கறவை மாடுகளுக்கு மட்டுமே கொடுக்கப்படுகிறது. மாநிலத்தில் பசுந்தீவனம் குறிப்பிட்ட பருவ காலங்களிலும், குறிப்பிட்ட இடங்களிலும் மட்டுமே கிடைக்கின்றது. 400 கிலோ எடையுள்ள பசுவினம் நாளொன்றுக்கு சராசரியாக 5 கிலோ உலர் தீவனம் மற்றும் 15 கிலோ பசுந்தீவனம் உட்கொள்ளும் என உத்தேசித்து, மாநிலத்தில் உள்ள மொத்த மாட்டினத்திற்கு ஒரு வருடத்திற்கு 2,15,127 இலட்சம் மெட்ரிக் டன்கள் உலர் தீவனம் மற்றும் 6,45,382 இலட்சம் மெட்ரிக் டன்கள் பசுந்தீவனம் தேவைப்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

கால்நடைகள் உட்கொள்ளும் மொத்தத் தீவனத்தில் மூன்றில் ஒரு பங்கு மேய்ச்சல் மூலம் கிடைக்கிறது. நிரந்தர புல்வெளிகள், நிரந்தரமாக பயிரிடப்படாத நிலங்கள், பயன்படுத்த முடியாத நிலங்கள், ஏரிக்கரை புறம்போக்கு நிலங்கள், சாலையோர புல்வெளிகள் மற்றும் சாகுபடி செய்யப்பட்ட வயல் ஓரங்கள் மேய்ச்சலுக்குப் பயன்படுகின்றன. மேய்ச்சல் வசதி வடகிழக்கு பருவமழைக்குப் பின் 3 முதல் 4 மாதங்கள் வரைதான் நீடிக்கும். பயிரிடப்படாத காலங்களில் அறுவடை செய்யப்பட்ட நிலங்கள் மேய்ச்சலுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. வரையறுக்கப்பட்ட வனப்பகுதி மற்றும் நிலங்களில் அதிகாரிகளின் அனுமதியோடு கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுவதுடன், உலர் தீவனப்புல் அறுவடையும் செய்யப்படுகிறது.

மாநிலத்தில் தற்போதுள்ள மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகளின் பரப்பளவு 1.23 இலட்சம் ஹெக்டேர் ஆகும். இது



மாநிலத்தில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 1 சதவீதமாகும். மேய்ச்சல் நிலம் மற்றும் இதர மேய்ச்சல் புல்வெளிகள் அதிகப்பட்சமாக காஞ்சிபுரம் மாவட்டத்தில் 18,428 ஹெக்டேரும், இதற்கு அடுத்தாற்போல் தருமபுரி மாவட்டத்தில் 13,618 ஹெக்டேரும் உள்ளது. மேய்ச்சல் நிலங்கள் ஏனைய பணிகளுக்கு வரையறையின்றி பயன்படுத்தப்படுவதால் அவற்றின் தரம் மற்றும் பரப்பளவு குறைந்துள்ளது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு மேய்ச்சல் நிலத்தை வேறு எந்த வகை நிலமாகவும் மாற்றக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பித்துள்ளது. அவ்வாறு மாற்ற வேண்டும் என்ற கட்டாயம் ஏற்படும்போது, மாற்றப்படும் நிலத்திற்குச் சமமான பரப்பளவு உள்ள வேறு நிலம் அதே மாவட்டத்தில் மேய்ச்சல் நிலமாக பயன்படுத்த ஒதுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது. அந்த மாற்று நிலத்தை மேய்ச்சல் நிலமாக உருவாக்க செலவினம் 1 ஏக்கருக்கு ரூ.6000/- அல்லது 1 ஹெக்டேருக்கு ரூ.15,000/- உள்ளாட்சி அமைப்புகளின் கணக்கில் வைப்பு நிதியாக செலுத்தப்பட வேண்டும்.

இத்துறையானது, மேய்ச்சல் நில வசதிகளை அதிகரிக்க இதர துறைகளுடன் சேர்ந்து சேலம், நாமக்கல், வேலூர், தேனி, தஞ்சாவூர், திண்டுக்கல், திருநெல்வேலி, திருவண்ணாமலை, இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களில் தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தினைச் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க இத்துறை பல்வேறு திட்டங்களை செயல்படுத்துகிறது. கீழ்க்கண்ட இடங்களில் பசுந்தீவன விதை உற்பத்திப் பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன:-

1. படப்பை (காஞ்சிபுரம் மாவட்டம்)
2. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
3. செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்)
4. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
5. சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்)
6. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)

[2003 மே 6

7. புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்)

கீழ்க்கண்ட பசுந்தீவன அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன:

* நிலமற்ற மற்றும் ஏழை விவசாயக் குடும்பங்கள் கால்நடை பராமரிப்புப் பணிகளில் ஈடுபடுத்த, சமுதாயத் தீவன மற்றும் பசுந்தீவன வங்கிகளை உள்ளூர் சுய உதவிக் குழுக்களின் உதவியுடன் ஏற்படுத்தி தீவன வசதிகளைப் பெருக்க ஊக்குவித்தல்;
* நீண்ட கால பசுந்தீவன வகையைச் சார்ந்ததும் மற்றும் அதிக மகசூல் அளிக்கக்கூடிய நேப்பியர், உயர் ரக கோ. 1, கோ. 3, பாரா மற்றும் கினி புல் வகைகள் பயிரிட ஊக்குவித்தல்;
* காராமணிப் பயறு வகை, ஸ்டைலோ, கோ. 3 புல் வகைகளை, தென்னை மற்றும் மாந்தோப்புகளிடையே ஊடுபயிராக விளைவிக்க ஊக்குவித்தல்;
* தீவன விதைகள் அடங்கிய சிறு பைகளை இலவசமாக வழங்குதல்;
* அதிக அளவிலான இரும்பு மற்றும் புரதச் சத்து கொண்டுள்ள அகத்தி மரக்கன்றுகளை விநியோகித்தல்;
* புரதச் சத்து மிக்கதும் அதிக அளவில் வறட்சித் தன்மையைத் தாங்கக்கூடியதுமான சூபாபுல் மரக்கன்றுகளை விநியோகித்தல் மற்றும்
* வறட்சி நிவாரணப் பணிகளின்கீழ் கால்நடைப் பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்கத் தேவையான உள்ளீடுகளை மேம்படுத்துதல்.

கால்நடை பராமரிப்புத் துறைக்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்கு உதவிட இயற்கைச் சீற்றம் நிவாரண நிதியிலிருந்து ரூ.2000.00 இலட்சம் அரசு விடுவித்துள்ளது.

மாநிலத்தில் பசுந்தீவனங்கள் உற்பத்திக்கும், தேவைக்கும் பெரிய இடைவெளி காணப்படுகிறது. இதனால், இப்பகுதிகளில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்குப் போதிய மேய்ச்சல் நிலம் இல்லாமையால், ஏற்கெனவே உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களில் அதிக அளவில்



2003 மே 6]

மேய்ச்சலுக்கு விடப்படுகின்றன. வறட்சி சமயங்களில் இது மேலும் அதிகமாகின்றது.

இதனை எதிர்கொள்ளவும், பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்கவும் துறையில் உள்ள கால்நடை பண்ணைகள் மற்றும் இதர நிலையங்களில் உள்ள உள்ளிருப்புகளை மேம்படுத்தி தீவன உள்ளீடுகளைப் பெருக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. உள்ளிருப்புகளை மேம்படுத்தி பசுந்தீவன உள்ளீடுகளை உற்பத்தி செய்ய பெரிய பண்ணைகளுக்கு ரூ.400.00 இலட்சமும், சிறு பண்ணைகளுக்கு ரூ.400.00 இலட்சமும் வழங்கப்பட்டுள்ளன. கிராமங்களில் உள்ள புறம்போக்கு மேய்ச்சல் நிலங்களை மேம்படுத்தும் பொருட்டு, வேலிகள் மற்றும் நீர்ப்பாசனம் போன்றவை ரூ.200.00 இலட்சம் செலவில் மேம்படுத்தப்படும். நிலம் மேம்படுத்துவது, பாசன வசதிகள், மின்சார வசதிகள் போன்றவற்றிற்கு இது செலவிடப்படும். மேற்கண்ட பணிகளுக்கு, உள்ளூர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சுய உதவி குழுக்களையும் ஈடுபடுத்தி மேய்ச்சல் நிலம் மேம்படுத்தப்பட்டு பராமரிக்கப்படும்.

கால்நடைப் பண்ணைகளில் தற்சமயம் 447 ஏக்கரில் பசுந்தீவன உற்பத்தி செய்யப்படுகின்றது. இது அங்கு பராமரிக்கப்படும் கால்நடைகளுக்குப் போதுமானதாகும். தற்சமயம் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களில் உள்ள பல்வேறு பண்ணைகளில் பசுந்தீவன உற்பத்தியைப் பெருக்க, 1340 ஏக்கர் பசுந்தீவன சாகுபடிக்காகக் கொண்டுவரப்படும். ஓர் ஏக்கர் பரப்பளவில் ஆண்டுக்கு 60 டன்கள் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. ஆகையால் 1340 ஏக்கர் நிலத்தில், 80400 டன்கள் பசுந்தீவனம் உற்பத்தி செய்யப்படும். இது அப்பகுதிகளில் வளர்க்கப்படும் கால்நடைகளுக்குப் பெரும் பயனை அளிக்கும். இவையல்லாமல், பசுந்தீவன சாகுபடிக்குத் தேவைப்படும் உள்ளீடுகளான விதைகள், கன்றுகள், புல் கரணைகள் ஆண்டுதோறும் உற்பத்தி செய்யப்படும். இதனால் பசுந்தீவன சாகுபடி மற்றும் கால்நடைகளுக்குத் தீவனம் அளித்தல், குறிப்பாக கலப்பினங்களுக்குப் பசுந்தீவனம் அளித்தல் போன்றவை கால்நடை வளர்ப்போரிடம் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இவை மட்டுமின்றி கீழ்க்கண்ட நடவடிக்கைகளில் வறட்சி நிவாரணப் பணிகள் ஆற்றப்படுகின்றன:

தற்போதுள்ள வறட்சியின் காரணமாக கால்நடைகள் தொற்று

[2003 மே 6

நோய்களினால் பாதிப்புக்குள்ளாகி விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும். இக்கால்நடைகளை கோமாரி நோயிலிருந்து காத்திட, அவற்றிற்கு அந்நோய்க்கு எதிராக ரூ.530.50 இலட்சம் செலவில் தடுப்பூசி பணி மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஆழ்துளைக் கிணறுகள், மேல்நிலைத் தொட்டி, மின் இணைப்பு, மோட்டார் மற்றும் நீர்த் தொட்டிகள் ஆகியவை கால்நடை நிலையங்களில் ஏற்படுத்தப்பட்டு குடிநீர் வசதிகள் மேம்படுத்தப்படும். இவ்வசதிகளை அப்பகுதிகளில் பராமரிக்கப்படும் கால்நடைகள் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் காலங்களில் உபயோகித்து பயனடையும். வறட்சி பாதித்துள்ள 22 மாவட்டங்களில் உள்ள 313 ஊராட்சி ஒன்றியங்களில் 939 ஆழ்துளைக் கிணறுகள் ரூ.469.50 இலட்சம் செலவில் ஏற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**இனப்பெருக்கம்:**

பசுவினம் மாநிலத்தில் மொத்தம் உள்ள கால்நடைகளில் 35 சதவீதமாகவும், மொத்த மாட்டினத்தில் 77 சதவீதமாகவும் உள்ளது. மொத்தப் பசுவினங்களின் எண்ணிக்கையானது அயலினம் மற்றும் கலப்பினத்தில் 24 சதவீதம், உள்நாட்டு தூய்மை மரபுடைய இனத்தில் 15 சதவீதம் மற்றும் நாட்டினத்தில் 61 சதவீதத்தினைக் கொண்டுள்ளது.

நாட்டினங்கள் நோய் எதிர்ப்பு சக்தி, அதிக வெப்ப நிலையைத் தாங்கக் கூடியதாக இருந்தாலும், முதல் கன்று ஈனும் வயது அதிகமாயும், பால் கொடுக்கும் காலம் குறைந்தும், குறைந்த பால் உற்பத்தித் திறனும், ஒரு கன்றுக்கும் மற்றொரு கன்று ஈனுவதற்கும் இடைப்பட்ட காலம் அதிகமாகவும் இருக்கின்றன. ஆனால் அயலினங்களில் முதல் கன்று ஈனும் காலம், பால் வற்றும் காலம் மற்றும் இரு கன்றுக்கு இடைப்பட்ட காலம் ஆகியவை மிகக் குறைவானதாக உள்ளது. மேலும் பால் கறவை நாட்கள் மற்றும் உற்பத்தித் திறன் மிகச் சிறப்பாக உள்ளது. ஆனால் நோய் எதிர்ப்புத் திறனும் தட்ப வெப்ப நிலையைத் தாங்கும் தன்மையும் குறைவாக உள்ளன. நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்பு மற்றும் தட்ப வெப்ப நிலையைத் தாங்குவது போன்ற திறன்களைப் பாதுகாத்து மற்ற திறன்களை குறுகிய காலத்தில் குறைந்த செலவில் மேம்படுத்த கலப்பினப் பெருக்கம் செய்வது ஒன்றே மாற்று வழியாகும். நாட்டினங்களை அவற்றின் சொந்த பிறப்பிடங்களிலேயே வளர்த்து அவற்றின் மரபு



2003 மே 6]

அணு பாதுகாக்கப்பட்டு பேணப்படுகின்றன. காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகிய இரண்டும் நாட்டின உழவு மாடுகளாகும்.

தூய்மை மரபுடைய இனங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி போன்ற இனங்களைப் பாதுகாத்தல், அதிக உற்பத்தித் திறன் கொண்ட கலப்பினங்களைப் பெருக்குதல் ஆகியவை துறையின் முக்கிய குறிக்கோளாகும்.

**தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமை:**

தேசிய பசு மற்றும் எருமையின இனவிருத்தித் திட்டத்தினை மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்த மாநில கால்நடை வளர்ச்சி முகமை துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

* செயற்கைமுறை இனவிருத்தி மூலம் கலப்பின மாட்டினங்களை செம்மைப்படுத்துதல்;
* இனவிருத்திக்குத் தேவையான உள்ளீடுகளை, விவசாயிகளின் இருப்பிடங்களிலேயே அளித்தல்;
* நாட்டினங்களைப் பாதுகாக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் (காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி);
* உள்ளீடு மற்றும் சேவையின் தரத்தை உயர்த்துதல், மற்றும்
* உள்ளிருப்பு வசதிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ளுதல்.

இம்முகமைக்குத் தலைவராக செயலாளர், கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை அவர்கள் இருப்பார். அவரது கட்டுப்பாட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்திற்காக தலைமை செயல் அலுவலர் பொறுப்பேற்று உள்ளார். இத்திட்டத்தைச் செயல்படுத்த மத்திய அரசு தற்பொழுது ரூ.5.70 கோடி விடுவித்துள்ளது.

**கலப்பின கால்நடை இனப்பெருக்கம்:**

கால்நடை கலப்பின இனப்பெருக்கத்தினால் கீழ்க்கண்ட பலவகையான நன்மைகள் கிடைக்கின்றன:—

[2003 மே 6

* உள்நாட்டினங்கள் 3½ ஆண்டுகள் கழித்தே இனவிருத்திக்கு உகந்தவையாக உள்ளன. ஆனால் கலப்பினங்கள் 2-2½ வருடங்களிலேயே இனவிருத்திக்குத் தயாராகின்றன;

* உள்நாட்டினங்களைவிட கலப்பினங்களில் பருவத்திற்கு வரும் அறிகுறிகள் எளிதாகத் தென்படுகின்றன;

* கலப்பின கால்நடைகளில் கருத்தரிப்பு விழுக்காடு அதிகமாக உள்ளதால் அதன் வாழ்நாளில் அதிகமான கன்றுகளை ஈனுகின்றன;

* கலப்பினங்களில் ஒரு நாளைக்கு கிடைக்கக்கூடிய சராசரி பாலின் அளவு, மொத்தக் கறவை நாட்கள் மற்றும் கறவைத் திறன் ஆகியவை அதிகமாக உள்ளன மற்றும்

* கலப்பினங்களில் பால் வற்றும் காலம் மிகவும் குறைவாகும். இதனால் விவசாயிகள் 12 முதல் 15 மாதத்திற்குள் ஒரு கன்று வீதம் பெறும் வாய்ப்பு உள்ளது.

மேலும், நாட்டினங்களில் காணப்படும் நோய் எதிர்ப்புத் தன்மை மற்றும் வெப்ப நிலை தாங்கும் தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கவும், கலப்பினப் பெருக்கம் ஏதுவாக அமைகின்றது.

மாநிலத்தில் கடைபிடிக்கப்படும் பசுவினம் மற்றும் எருமையின பெருக்கக் கொள்கை பின்வருமாறு:—

* நாட்டின பசுக்களின் இனப்பெருக்கத்திற்கு அதிக அளவில் பால் தரக்கூடிய அயலின ஜெர்சி மற்றும் ப்ரிசியன் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு கலப்பினப் பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்;

* நாட்டின எருமைகளை முர்ரா இனப் பொலிகாளைகளின் விந்தினைக் கொண்டு இனப்பெருக்கம் செய்து தரம் உயர்த்துதல்;

* கலப்பினப் பொலிக்காளைகளின் விந்தினைக் கொண்டு கலப்பினப் பசுக்களை இனப்பெருக்கம் செய்தல்; மற்றும்

* உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்களான காங்கேயம் மற்றும் உம்பளாச்சேரி ஆகியவை அதிகமாகக் காணப்படும் பகுதிகளில் தேர்ந்தெடுத்த முறையில் இனப்பெருக்கம் செய்தல்.

இனப்பெருக்கத்திற்கு மேற்கூறிய கொள்கையைக் கடைபிடித்ததன்



2003 மே 6]

பலனாக கலப்பினம் 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 11.24 இலட்சமாக இருந்தது, 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 21.41 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 90 சதவீதம் அதிகமாகும். இதே காலகட்டத்தில் உள்நாட்டினங்கள் 69.51 இலட்சத்திலிருந்து 55.41 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 20 சதவீதம் குறைவாகும். இதற்கு உற்பத்தித் திறன் குறைவாக உள்ள உள்நாட்டின காளைகளின் எண்ணிக்கை 32 சதவீதம் குறைந்ததே காரணமாகும். உழவு மற்றும் வேலைத் திறன் அதிகம் கொண்ட உள்நாட்டு தூய்மை மரபுடைய இனங்கள் 12.57 இலட்சத்திலிருந்து 13.27 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 6 சதவீதம் உயர்ந்துள்ளது.

**எருமையினம் தரம் உயர்த்துதல்:**

எருமையினம் மாநிலத்தில் மொத்தம் உள்ள மாட்டினங்களில் 23 சதவீதமாகவும், மொத்த கால்நடைகளில் 11 சதவீதமாகவும் உள்ளது. மொத்த எருமையின எண்ணிக்கையானது முர்ரா 2 சதவீதம், தரம் உயர்த்தப்பட்ட எருமைகள் 20 சதவீதம் மற்றும் நாட்டினத்தில் 78 சதவீதத்தினைக் கொண்டுள்ளது. தீவனத்தை எருமையினம் பசுவினங்களைவிட செம்மையாகப் பயன்படுத்துகின்றன. எருமையினம் குறைந்த தரம் கொண்ட நார்ச்சத்து பொருட்களைச் செரிமானமாகக் கூடிய பொருளாக மற்றும் பால், இறைச்சியாக மாற்றும் திறன் அதிகம் கொண்டுள்ளது. மேலும் பசுவினங்களைக் காட்டிலும் இவை உலர் தீவனம் குறைத்து உட்கொள்கிறது. எருமைப் பாலானது பசும்பாலை விட இரு மடங்கு கொழுப்புச் சத்தும், 30 சதவீதம் அடர்பொருளும் மிகுந்ததாகும்.

எருமையினம் 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 31.28 இலட்சமாக இருந்தது, 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 27.41 இலட்சமாகக் குறைந்துள்ளது. இது 12 சதவீதம் குறைவாகும். உற்பத்தி மிகவும் குறைவாக உள்ள நாட்டின எருமைகள் 18 சதவீதம் குறைந்ததே இதற்குக் காரணமாகும். இதே காலகட்டத்தில் தரம் உயர்த்தப்பட்ட எருமையினங்கள் 4.72 இலட்சத்திலிருந்து 5.58 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 18 சதவீதம் அதிகமாகும். இதனால் மொத்த பால் உற்பத்தியில் எருமையினத்தின் பங்கு 1991 ஆம் ஆண்டு 13.53 இலட்சம் கிலோவிலிருந்து 2001-2002 ஆம் ஆண்டில் 18.19 இலட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது. இதே காலகட்டத்தில் ஒரு எருமை மாட்டிலிருந்து ஒரு நாளைக்கு கிடைக்கும் சராசரி பாலின் அளவு

3.227 கிலோவிலிருந்து 4.100 கிலோவாக உயர்ந்துள்ளது. முர்ரா எருமை இன உறைவிந்தைப் பயன்படுத்தியதாலும் உற்பத்தித் திறனற்ற எருமையினங்களை முறையாக அகற்றியதாலும் இச்சாதனையை அடைய முடிந்தது.

**உறைவிந்து உற்பத்தி நிலையங்கள்:**

பசு மற்றும் எருமையினத்தின் உற்பத்தி திறனை அதிகரிக்கும் நோக்குடன் அயலினம் மற்றும் தரம் உயர்த்தப்பட்ட இனங்களின் திரவ விந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி இத்துறையினால் 1948-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. உறைவிந்து மூலம் செயற்கைமுறை கருவூட்டல் பணி 1975-ல் அறிமுகப்படுத்தப்பட்டது. திரவ விந்தின் உபயோகம் படிப்படியாக குறைக்கப்பட்டு அதற்குப் பதிலாக 1993-ல் அனைத்து செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களிலும் உறைவிந்து உபயோகப்படுத்தப்பட்டன.

3,572 செயற்கைமுறை கருவூட்டல் நிலையங்களின் தேவையை பூர்த்தி செய்யும் நோக்குடன் கீழ்க்கண்ட 4 இடங்களில் உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன:—

1. ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்)
2. அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்)
3. ஓசூர் (தருமபுரி மாவட்டம்)
4. உதகமண்டலம் (நீலகிரி மாவட்டம்)

மொத்தம் 276 எண்ணிக்கையிலான ஜெர்சி, ஹோல்ஸ்டைன், ப்ரிசியன், கலப்பினங்கள், காங்கேயம் மற்றும் முர்ரா பொலிகாளைகள் மேற்கண்ட நிலையங்களில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையங்களில் நடுத்தர உறைவிந்து குச்சிகள் தயாரிக்கப்படுகின்றன.

திரவ நைட்ரஜன் உற்பத்தி ஆலைகள் ஈச்சங்கோட்டையில் மூன்றும், அபிசேகப்பட்டி மற்றும் ஓசூரில் தலா இரண்டும், உதகமண்டலம் (நீலகிரி), சைதாப்பேட்டை (சென்னை) மற்றும் திருப்பரங்குன்றம் (மதுரை) ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ஆக மொத்தம் 10 ஆலைகள் செயல்படுகின்றன. இவை உற்பத்தி செய்யப்பட்ட உறைவிந்து குச்சிகளை உறைய வைக்கவும், வீரியம் குறையாமல் பாதுகாக்கவும் பயன்படுகின்றன. மாநிலத்தில் வேலூர், கோயம்புத்தூர், மதுரை,





திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருநெல்வேலி, தஞ்சாவூர், கடலூர் சிவகங்கை, சென்னை, திண்டுக்கல் மற்றும் சேலம் ஆகிய 12 இடங்களில் உறைவிந்து சேமிப்பு வங்கிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றின் முக்கியப் பணிகளாக திரவ நைட்ரஜன் மற்றும் உறைவிந்தினை பாதுகாத்து பல இடங்களில் உள்ள கால்நடை நிலையங்கள் மற்றும் கிளை நிலையங்களுக்கு செயற்கை முறை கருவூட்டல் பணிக்குப் பயன்படுத்த உதவி வருகின்றன.

2002-2003-ல் 30.71 இலட்சம் உறைவிந்து குச்சிகளும், 1.70 இலட்சம் லிட்டர்கள் திரவ நைட்ரஜனும், உறைவிந்து உற்பத்தி நிலையங்கள் மற்றும் திரவ நைட்ரஜன் நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**செம்மறியாடு மற்றும் வெள்ளாடு இனப்பெருக்கம்:**

செம்மறியாடுகள் மாநிலத்தில் மொத்தம் உள்ள ஆடுகளில் 45 சதவீதமாகவும், மொத்த கால்நடைகளில் 20 சதவீதமாகவும் உள்ளது. செம்மறியாடு வளர்ப்பு இம்மாநிலத்தில் ஒரு முக்கிய உபதொழிலாகக் கருதப்படுகிறது.

உகந்த தட்பவெட்ப நிலை கொண்ட தென்மாவட்டங்களான இராமநாதபுரம், சிவகங்கை, தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் விருதுநகர் போன்ற பகுதிகள் செம்மறி ஆட்டுத் தொழிலுக்கு ஏற்றதாக உள்ளது. செம்மறியாடு வளர்ப்பு பெரும்பாலான நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள் வாழ்க்கைக்கு முதன்மையான தொழிலாகவும், வருவாயை அதிகரிக்கவும் உதவுகிறது, இறைச்சி மற்றும் தோல் மூலம் கிடைக்கும் வருமானம் தவிர நிலத்தினை வளப்படுத்துவதற்காக செம்மறி ஆட்டினங்களை வயல்வெளிகளில் மந்தைகள் மூலம் பராமரித்தலால் சிறிது வருமானம் கிடைக்கிறது. செயல்படுத்தப்படும் அனைத்து கிராமப்புற வறுமை ஒழிப்பு திட்டங்களில், செம்மறியாடு வளர்ப்பு நல்ல பலனை அளிக்கிறது.

செம்மறியாடுகள், மாநிலத்தில் உள்ள மூன்று ஆட்டுப் பண்ணைகளைத் தவிர, செம்மறியாட்டுப் பிரிவுகள் ஓசூர், புதுக்கோட்டை அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாடு ஆகிய மாவட்ட கால்நடைப் பண்ணைகளில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. கீழக்கரிசல் செம்மறியாடு, அபிசேகப்பட்டி மற்றும் செட்டிநாட்டிலும், இராமநாதபுரம்-வெள்ளை செம்மறியாடு புதுக்கோட்டையிலும்

இனவிருத்தி செய்யப்படுகிறது. சாத்தூர், சின்னசேலம் மற்றும் முகுந்தராயபுரம் ஆகிய ஆட்டுப் பண்ணைகளில் முறையே, வேம்பூர் மேச்சேரி மற்றும் சென்னை சிகப்பு இனங்கள் பராமரித்து வரப்படுகின்றன. மாண்டியா மற்றும் கலப்பின செம்மறியாடு, ஓசூர் கால்நடைப் பண்ணையில் இனவிருத்தி செய்யப்பட்டு வருகிறது. இப்பண்ணையில் இனப்பெருக்கம் செய்யப்படும் தரமான கிடா மற்றும் கிடேரிகள் விவசாயிகள் வளர்க்கும் உள்ளூர் ஆடுகளின் தரத்தினை உயர்த்துவதற்கு பயன்படுத்தப்படுகின்றன.

வெள்ளாடுகள் மாநிலத்தில் மொத்தம் உள்ள ஆடுகளில் 55 சதவீதமாகவும், மொத்த கால்நடைகளில் 25 சதவீதமாகவும் உள்ளது. வெள்ளாடுகள் 1989 ஆம் ஆண்டு கால்நடை கணக்கெடுப்பின்படி 59.20 இலட்சமாக இருந்தது, 1997 ஆம் ஆண்டு கணக்கெடுப்பில் 64.16 இலட்சமாக அதிகரித்துள்ளது. இது 8.39 சதவீதம் அதிகமாகும்.

இத்துறை ஜமுனாபாரி வெள்ளாடுகளை ஆட்டுப்பண்ணை, சின்னசேலம் மற்றும் சாத்தூர், மாவட்ட கால்நடைப் பண்ணைகள் செட்டிநாடு, கொருக்கை, ஓசூர் மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களில் இனப்பெருக்கத்திற்காக பராமரித்து வருகின்றது. புதுக்கோட்டை மாவட்ட கால்நடைப் பண்ணையில் தெல்லிச்சேரி இன வெள்ளாடுகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இந்த வெள்ளாடுகளின் வம்சாவழிகள் உள்ளூர் விவசாயிகளின் ஆட்டுத் தரத்தை அதிகரிக்க வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், உள்நாட்டு இனங்களான கொடி ஆடு மற்றும் கன்னி ஆடுகளைப் பாதுகாப்பதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் முறையே மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் மற்றும் ஆட்டுப்பண்ணை சாத்தூரில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

ஆடுகளுக்கு ஏற்படும் பெரும்பாலான உடல்நலக் குறைவுகளுக்கு அவற்றைத் தாக்கும் குடற்புழுக்களே முக்கிய காரணம் ஆகும். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன், இத்துறை 1982-83 முதல் தீவிர உடல் நலம் பேணும் திட்டம் செம்மறியாடுகள் பயன்பெறும் வகையில் செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம், சென்னை, நீலகிரி, கன்னியாகுமரி நீங்கலாக பிற மாவட்டங்களில் விவசாயிகள் வளர்க்கும் செம்மறியாடுகளுக்கு காலமுறைப்படி குடற்புழு நீக்கம் செய்யப்படுகிறது. 2002-2003-ல் செம்மறியாடுகளுக்கு குடற்புழு நீக்கத்திற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பீட்டில் மருந்துகள் பயன்படுத்தப்பட்டன.





**இதர கால்நடை அபிவிருத்தி:**

முந்தைய ஆண்டுகளில் பன்றி வளர்ப்பு அறிவியல் முறைப்படி இல்லாதிருந்தாலும், அண்மைக் காலங்களில் இது சிறந்ததாக விளங்குகிறது. மேலும் ஏழை விவசாயிகளுக்கு சத்துமிக்க உணவாகவும், இலாபகரமான சுய வேலைவாய்ப்புத் தொழிலாகவும், கூடுதல் வருவாயை அளிக்கக் கூடியதாகவும் உள்ளது. நகர்ப்புற மக்களின் பன்றி இறைச்சி மற்றும் பன்றி உற்பத்தி பொருள்களின் தேவையினை நிறைவு செய்ய பன்றி வளர்ப்பு ஊக்குவிக்கப்பட்டு வருகிறது.

லார்ஜ் ஒயிட் யார்க்ஷயர் பன்றியினங்கள் சென்னை சைதாப்பேட்டை பன்முக கால்நடை மருத்துவமனை வளாகத்திலும், மாவட்ட கால்நடைப்பண்ணை ஓசூர், அபிசேகப்பட்டி, செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை ஆகிய இடங்களிலும் இனப்பெருக்கத்திற்காகப் பராமரிக்கப்படுகின்றன. உள்ளின சேர்க்கையைத் தவிர்ப்பதற்காக மத்திய அரசு உதவியுடன் வெளி மாநிலங்களிலிருந்து புதிய பன்றிகள் வாங்கி மேற்கண்ட இடங்களிலுள்ள பன்றிப் பிரிவுகளில் சேர்க்கப்பட உள்ளன.

குதிரையினத்தை இனப்பெருக்கம் செய்து பாதுகாக்க ஒரு குதிரை வளர்ப்பு பிரிவு ஓசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் இயங்கி வருகிறது. தற்பொழுது 10 பெண் குதிரைகளும், 3 ஆண் குதிரைகளும், 11 குதிரைக் குட்டிகளும் இப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இப்பிரிவில் உள்ள குதிரைகளை பொதுமக்களுக்கு விற்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

சென்னை சைதாப்பேட்டையில் ஒரு நாய் வளர்ப்புப் பிரிவு நிறுவப்பட்டுள்ளது. இப்பிரிவில் நாட்டின நாய்களான இராஜபாளையம், கோம்பை மற்றும் சிப்பிப்பாறை மட்டுமே வளர்க்கப்பட்டு வந்தன. மற்ற அயல்நாட்டு இனங்களின் தேவையை கருத்தில் கொண்டு, லாப்ரடார் மற்றும் டாபர்மேன் இனங்கள், இப்பிரிவில் 1997-98 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டன. இதன் குட்டிகள் பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. தற்சமயம் இப்பிரிவில் 13 ஆண் நாய்களும், 26 பெண் நாய்களும், 3 குட்டிகளும் உள்ளன.

**கோழியின பெருக்கம்:**

புறக்கடையில் மட்டுமே வளர்க்கக்கூடியதாக இருந்த கோழி வளர்ப்பு தற்போது சுறுசுறுப்பான வர்த்தகரீதியான தொழிலாக

மாறிவிட்டது. 1960 ஆம் ஆண்டின் பின்பகுதியில் ஆழ்கூழ் முறை அறிமுகப்படுத்தப்பட்டதின் மூலம் கோழி வளர்ப்பில் மிகப் பெரிய முன்னேற்றம் காண வழி வகுக்கப்பட்டது. புதுவித அறிவியல் தொழில்நுட்பங்கள் புதிய இனகோழிகள் மற்றும் கலிபோர்னியா கூண்டு முறை கோழிவளர்ப்பு போன்றவற்றின் வருகையினால் கோழிவளர்ப்புத் தொழிலில் புரட்சி ஏற்பட்டுள்ளது. இதனை விரைவு படுத்தும் நோக்குடன் 1950 ஆம் ஆண்டுகளில் தொடங்கப்பட்ட கோழி விரிவாக்க நிலையங்கள் முக்கிய காரணமாய் அமைந்துள்ளன. அவை செயல்விளக்க பண்ணைகளாகவும், விரிவாக்க நிலையங்களாகவும் செயல்பட்டு, விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து கோழிப் பண்ணைத் தொழிலை செய்ய ஊக்குவித்தன. கிராமப்புற கோழி வளர்ப்பு மொத்த முட்டை உற்பத்தியில் 30 சதவீத பங்கு வகிக்கிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் கோழிகளின் பங்கு ஒரு சதவீதமாகும். தற்போது வர்த்தக ரீதியான கோழிப்பண்ணைத் தொழில், பெரிய முதலீட்டாளர்களின் வசம் உள்ளது. இந்நிலையில் கோழி விரிவாக்க நிலையங்கள் தேவையில்லாததால், அவற்றின் உள்ளீட்டு வசதிகளை வேறு நல்ல முறையில் பயன்படுத்த இத்துறை திட்டமிட்டுள்ளது.

கிராமப்புற வீடுகளில் புறக்கடையில் 5 முதல் 10 கோழிகள் சிறிய முதலீட்டில் வளர்க்கப்படுகின்றன. இதன் காரணமாக இறைச்சி மற்றும் முட்டைகள் அந்த குடும்பத்திற்கு கிடைக்கின்றன. புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகள் பூச்சி, புழு, வீணாகின்ற தானியங்கள் மற்றும் பண்ணை, சமையலறைக் கழிவுகளை உட்கொண்டு நமக்கு முட்டையாகவும் இறைச்சியாகவும் பயன்படுகின்றன. இந்த கோழிகளை வெள்ளைக் கழிச்சல் என்ற நோய் தாக்க அதிக வாய்ப்புள்ளது. ஆகவே இத்துறையானது கோழிகளை இந்த நோயிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் அனைத்து கால்நடை நிலையங்களிலும் ஒவ்வொரு வாரத்தில் ஒரு குறிப்பிட்ட நாளிலும் மற்றும் கிளை நிலையங்களில் மாதத்திற்கு இரு முறையும் தடுப்பூசி பணி மேற்கொள்ளப்படுகின்றது. இந்நோய் தொடர்பாக கிராம மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடனும் நோயிலிருந்து கோழிகளைக் காக்கும் பொருட்டும் இத்துறையால் ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதத்தில் மாநில அளவிலான வெள்ளைக்கழிச்சல் தடுப்பு ஊசி பணி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் கால்நடை பாதுகாப்புத் திட்ட முகாம்களிலும் இப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மாநிலத்தில் 25 கோழி விரிவாக்க நிலையங்களும், 2 குஞ்சு பொரிக்கும் நிலையங்கள், ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் காட்டுப்பாக்கத்திலும்,



மற்றொன்று தருமபுரி மாவட்டத்தில் ஓசூரிலும் விவசாயிகளுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்குவதற்குச் செயல்பட்டு வருகின்றன. கோழிகளுக்கு ஏற்படும் நோய்களை அறிந்து கொண்டு அவற்றை காலத்தே கட்டுப்படுத்துவதற்கு இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடங்கள், ஒன்று ஈரோட்டிலும் மற்றொன்று நாமக்கல் மாவட்டம் ஆண்டலூர் கேட்டிலும் செயலாற்றி வருகின்றன. விவசாயிகளிடையே வான்கோழி வளர்ப்புப் பற்றி பிரபலப்படுத்த வான்கோழி வளர்ப்புப் பிரிவு ஒன்று காட்டுப்பாக்கம் கோழிப்பண்ணையில் நிறுவப்பட்டுள்ளது. துறையில் உள்ள ஐந்து கால்நடை பண்ணைகளில் வான்கோழி பிரிவுகளை ஏற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**கால்நடைப் பண்ணைகள்:**

கால்நடைப் பண்ணைகள், தேர்ந்தெடுக்கப்பட்ட தரமான அறிவியல் பூர்வமான இனப்பெருக்கம் மூலம் குறிப்பிட்ட கால்நடைகளை இனப்பெருக்கம் செய்து பராமரித்து வருகின்றன. இப்பண்ணைகள் செயல்விளக்கப் பண்ணைகளாகவும், தரமான கால்நடைகளை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு மூலாதாரமாகவும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர இப்பண்ணைகள் மூலம் விவசாயிகளுக்கு தீவன விதை பொருட்கள் அளிப்பதுடன் கால்நடை இனப்பெருக்கம், தீவனம் அளித்தல் மற்றும் பராமரிப்பதில் உள்ள அண்மைக்கால தொழில்நுட்பப் பயிற்சிகளையும் விவசாயிகளுக்கு அளித்து வருகின்றன. பண்ணைகள் அமைந்துள்ள இடம் மற்றும் பராமரிக்கப்படும் இடங்கள் பின்வருமாறு:—

| வ.எண் | பண்ணையின் பெயர் | பண்ணையின் மொத்தப் பரப்பளவு (ஏக்கரில்) | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|---|
| 1 | அயலின கால்நடை பெருக்குப் பண்ணை, ஈச்சங்கோட்டை (தஞ்சாவூர் மாவட்டம்). | 1344.61 | மாடு |
| 2 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஓசூர் (தருமபுரி மாவட்டம்). | 1641.41 | மாடு, குதிரை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி. |

[2003 மே 6

| வ.எண் | பண்ணையின் பெயர் | பண்ணையின் மொத்தப் பரப்பளவு (ஏக்கரில்) | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|---|
| 3 | மாவட்ட கால்நடைப் பண்ணை, அபிசேகப்பட்டி (திருநெல்வேலி மாவட்டம்). | 1103.29 | எருமை, பன்றி, செம்மறியாடு, மற்றும் கோழி |
| 4 | மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலம், (நீலகிரி மாவட்டம்). | 129.38 | மாடு |
| 5 | மாவட்ட கால்நடைப் பண்ணை, புதுக்கோட்டை (புதுக்கோட்டை மாவட்டம்). | 997.61 | மாடு, எருமை செம்மறியாடு வெள்ளாடு, பன்றி மற்றும் கோழி |
| 6 | மாவட்ட கால்நடைப் பண்ணை, ஒரத்தநாடு (தஞ்சாவூர் மாவட்டம்). | 229.34 | எருமை மற்றும் மாடு |
| 7 | மாவட்ட கால்நடைப் பண்ணை, செட்டிநாடு (சிவகங்கை மாவட்டம்). | 1901.32 | மாடு, செம்மறியாடு, வெள்ளாடு பன்றி மற்றும் கோழி |
| 8 | மாவட்ட கால்நடைப் பண்ணை, கொருக்கை (திருவாரூர் மாவட்டம்). | 495.68 | மாடு மற்றும் வெள்ளாடு |
| 9 | ஆட்டுப் பண்ணை, சின்னசேலம் (விழுப்புரம் மாவட்டம்). | 1866.28 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு |



2003 மே 6]

| வ.எண் | பண்ணையின் பெயர் | பண்ணையின் மொத்தப் பரப்பளவு (ஏக்கரில்) | பராமரிக்கப்படும் இனம் |
|---|---|---|---|
| 10 | ஆட்டுப் பண்ணை, முகுந்தராயபுரம் (வேலூர் மாவட்டம்). | 481.60 | செம்மறியாடு |
| 11 | ஆட்டுப் பண்ணை, சாத்தூர் (விருதுநகர் மாவட்டம்). | 542.48 | செம்மறியாடு மற்றும் வெள்ளாடு |

ஈச்சங்கோட்டையில் அமைந்துள்ள பண்ணையில் ஜெர்சி இன கால்நடைகளும், உதகமண்டலத்தில் அமைந்துள்ள பண்ணையில் ஹோல்ஸ்டைன் ப்ரீசியன் இன மாட்டினங்களும் பிரத்யேகமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. அபிசேகப்பட்டி மற்றும் ஒரத்தநாடு ஆகிய இடங்களில் அமைந்துள்ள கால்நடைப் பண்ணைகளில் முர்ரா இன எருமைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. உள்நாட்டினங்களின் தனித்தன்மையைப் பாதுகாக்கவும், அவ்வினங்களை இனப்பெருக்கம் செய்ய ஊக்கப்படுத்தும் நோக்கத்துடன் சிகப்பு சிந்தி மற்றும் காங்கேயம் இன கால்நடைகள் ஒசூர் பண்ணையிலும் உம்பளாச்சேரி இன கால்நடைகள் கொருக்கை பண்ணையிலும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

எதிர்கால இனப்பெருக்கத் திட்டங்களுக்குத் தேவையான கலப்பினக் காளைகள் தேர்வு செய்யும் நோக்கத்துடன் ஒசூர் மாவட்ட கால்நடைப் பண்ணையில் ஒரு களப்பணித் தொடர்புடைய மரபு வழி சோதனைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒசூர், செட்டிநாடு மற்றும் புதுக்கோட்டை கால்நடைப் பண்ணைகளில் கலப்பினக் கால்நடை உற்பத்தி மேற்கொள்ளப்படுகின்றன. இதன் முக்கிய நோக்கம் கலப்பினங்களின் உயரின மரபுகள் அளவு மிகையாகாமல் கட்டுப்படுத்துவது, நோய் எதிர்ப்புத் திறனை இழக்காமலும், தட்ப வெட்ப நிலையை தாங்கக்கூடிய வகையிலும், பால் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது ஆகும்.

[2003 மே 6

கரு மாற்றல் தொழில்நுட்பம் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கரு மாற்று தொழில்நுட்பப் பிரிவு அயலின கால்நடை பெருக்கப் பண்ணை, ஈச்சங்கோட்டை மற்றும் மாவட்டக் கால்நடைப் பண்ணை, ஒசூரில் இயங்கி வருகின்றன.

**சிறப்புத் திட்டங்கள்:**

கால்நடை வளர்ப்பு கிராமப்புற மக்களின் பொருளாதாரத்தை முன்னேற்றம் செய்ய முக்கிய ஆதாரமாக உள்ளது. அவை அவர்களின் பொருளாதாரம் மற்றும் சமூக நிலையில் உயர் தகுதி அளிக்க பெரும் துணை புரிகிறது. பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்பவும், விவசாய நிலங்களின் விலை ஏற்றத்தினாலும், குறைந்து வரும் நீர் ஆதாரங்களினாலும், அறிமுகப்படுத்தப்பட்ட நல்ல உற்பத்தி திறன் கொண்ட கால்நடைகளினாலும், விவசாயிகள் தங்கள் வாழ்க்கையை நடத்திட ஏதாவது ஒரு கால்நடை வளர்ப்பில் கவனம் செலுத்துகின்றனர். ஆகையால் இப்பிரிவினருக்கு வேலைவாய்ப்பினை அளிக்கவும், ஏழை மக்களை கால்நடை வளர்ப்பில் ஈடுபடுத்தி, அவர்களின் துயர்துடைக்கவும், இத்துறை பயனாளிகள் பயன்பெறும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

**(அ) மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் 1981 முதல் கோயம்புத்தூர், திண்டுக்கல், தேனி, மதுரை, திருநெல்வேலி, கன்னியாகுமரி, ஈரோடு மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் மூலம் அபிசேகப்பட்டி, மாவட்ட கால்நடை பண்ணையிலுள்ள உறைவிந்து வங்கி வலுப்படுத்தப்பட்டதுடன், ஒரு பயிற்சி மையமும் கட்டப்பட்டுள்ளது. மேலும் கோயம்புத்தூர் மாவட்டம் வேட்டைகாரன்புதூர் மற்றும் தேனி மாவட்டம் உத்தமபாளையம் ஆகிய இடங்களில் நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவும், திண்டுக்கல்லில் ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவும் தோற்றுவிக்கப்பட்டன.

*2002-2003*-ல் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகளுக்கும், ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவுக்குமான பணியாளர், பராமரிப்பு செலவு மற்றும் *300* விவசாயிகளுக்கு பயிற்சியளிக்க ரூ.*15.00* இலட்சம், திட்டபகுதியில் செம்மறியாடு அலகுகள் வழங்க ரூ.*30.00* இலட்சம், இத்திட்டத்தில் வாங்கப்பட்ட வாகனங்களை



2003 மே 6]

பராமரிப்பதற்காக ரூ.*0.79* இலட்சம், ஆக மொத்தம் ரூ.*45.79* இலட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் *25* பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொருவருக்கும் ஒரு ஹெக்டேர் நிலத்தில் *50%* மானிய உதவியுடன் புல்தீவனம் வளர்க்க ஒரு மாவட்டத்திற்கு ரூ.*3.75* இலட்சம் வீதம் *8* மாவட்டங்களுக்கு ரூ.*30.00* இலட்சம் செலவில் தரிசு நிலம் மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

**(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

இத்திட்டம் நீலகிரி மாவட்டத்தில் *1975* முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் உதகமண்டலம் மாவட்ட கால்நடை பண்ணையில் ஒரு உறைவிந்து உற்பத்தி நிலையம், ஒரு கால்நடை நோய் புலனாய்வு பிரிவு மற்றும் இரண்டு நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவு கோத்தகிரி மற்றும் கூடலூரில் நிறுவப்பட்டுள்ளன.

*2002-2003*-ல், மாவட்ட கால்நடைப் பண்ணை, உதகமண்டலத்தின் நீர்நிலை ஆதாரங்களை மேம்படுத்தி, பசுந்தீவன உற்பத்தியை அதிகரிக்க ரூ.*6.00* இலட்சம், பண்ணையில் உறைவிந்து உற்பத்தியை அதிகரிக்க ரூ.*6.00* இலட்சம், ப்ரீசியன் இன இளம் பொலிகாளைகள் வாங்க ரூ.*6.00* இலட்சம், உதகமண்டலம் கால்நடை நோய் புலனாய்வுப் பிரிவின் நிர்வாக செலவினங்களுக்கு ரூ.*2.50* இலட்சம், ஆக கூடுதல் தொகையான ரூ.*14.50* இலட்சம் இத்திட்டத்திற்காக வழங்கப்பட்டது.

**(இ) சிறப்பு மத்திய உதவித் திட்டம்:**

வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் இந்து ஆதிதிராவிடர் சமூகத்தின் பொருளாதார மேன்மையில் அரசு மிகவும் முனைப்பாக உள்ளது. அதற்காக *1983*ஆம் ஆண்டு முதல் சிறப்பு மத்திய உதவித் திட்டம் என்ற திட்டத்தினை அவர்களின் நலனுக்காகவே முன்னுரிமையாக செயல்படுத்தி வருகின்றது. செம்மறியாடு, வெள்ளாடு, கோழி அல்லது மாடு வளர்ப்பில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு வருமானத்தை அதிகரிக்கும் நோக்குடன், இத்திட்டத்தின் கீழ் கால்நடைகளை வாங்க அவர்களுக்கு நிதி உதவி மான்யத்துடன் அளிக்கப்படுகிறது.

*1999-2000*-ல், *3537* குடும்பங்கள் பயன்பெறும் வகையில் *2700* செம்மறியாடு அலகுகள் மற்றும் *837* வெள்ளாடு அலகுகளை

[2003 மே 6

மானியத்துடன் ரூ.399.54 இலட்சம் மொத்த செலவில் வழங்க திட்டமிடப்பட்டது. இத்திட்டம் வரும் ஆண்டுகளிலும் தொடரப்பட்டு, இதுவரை 2266 செம்மறியாடு அலகுகள் மற்றும் 674 வெள்ளாடு அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

**(ஈ) கால்நடைப் பாதுகாப்புத் திட்டம்**

இத்திட்டம் 1999-2000 முதல் கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு மருத்துவ வசதிகளைப் பெற பற்றாக்குறையாக உள்ள குக்கிராமங்களிலும் அவ்வசதி அளிக்கும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் நடைபெறும் சிறப்பு முகாம்களில் உடல்நலம் பேணுதல், நோய்த்தடுப்பூசி போடுதல், குடற்புழு நீக்கம், ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல், சினை பரிசோதனை மற்றும் மலட்டுத்தன்மை நீக்கம் ஆகிய பணிகள் இலவசமாக மேற்கொள்ளப்படுகின்றன. பல்வேறு வகையான கால்நடை நோய்கள் தொடர்பான விவரங்கள் மற்றும் நோய் வருமுன் காத்தல் போன்ற நடவடிக்கைகள் குறித்தும் விளக்க கண்காட்சி இம்முகாம்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றன. 2002-2003-ல், 4812 முகாம்கள் ரூ.214.14 இலட்சம் மொத்த செலவில் நடத்தப்பட்டுள்ளன.

**டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம்:**

டானிடா உதவியுடன் கூடிய கால்நடை வளர்ச்சித் திட்டம் 1-8-1990 முதல் புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் வட்டத்தில், அன்னவாசல், குன்றாண்டார் கோவில் மற்றும் விராலிமலை ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் ரூ.6.42 கோடி ஒதுக்கீட்டில் முதல் கட்டமாக 6 ஆண்டு கால அளவில் செயல்படுத்தப்பட்டது. மேம்படுத்தப்பட்ட கால்நடை வளர்ப்பு முறைகளைக் கடைப்பிடித்தல் மற்றும் அவற்றை செயல்படுத்துவதனால் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல் ஆகியவை இத்திட்டத்தின் தலையாய நோக்கமாகும்.

இத்திட்டத்தின்கீழ் ஊராட்சி ஒன்றிய வாரியாக தொடர்பு பணியாளர் தேர்வு செய்யப்பட்டு பலவகைப்பட்ட கால்நடை பராமரிப்பு, தீவன அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் விரிவாக்க தொழில்நுட்பங்கள் பயிற்றுவிக்கப்படுகிறார்கள். இலக்கு விவசாயிகள், விவசாய சங்கங்கள் மூலமாகவும், அரசு சாரா சங்கங்கள் மூலமாகவும், மகளிர் சங்கங்கள் மூலமாகவும், கால்நடை நிலையங்கள் மூலமாகவும் தேர்வு செய்யப்படுகின்றனர். பயிற்சி பெற்ற தொடர்பு பணியாளர் தம்பதியினர் இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவிக்கிறார்கள்.



2003 மே 6]

இத்திட்டத்தின் முதல் கட்டம் வெற்றிகரமாக செயல்பட்டதால், இரண்டாவது கட்ட திட்டமானது, 46 ஊராட்சி ஒன்றியங்களை உள்ளடக்கி 1997 முதல் புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய 5 தென் மாவட்டங்களில் ஏழு ஆண்டு கால அளவில் ரூ.27.50 கோடி செலவில், 20 இலட்சம் வேளாண் குடிமக்கள் பயன்பெறும் பொருட்டு விரிவுபடுத்தி நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இதுவரையில் 1024 தொடர்பு பணியாளர்கள் பயிற்றுவிக்கப்பட்டு, பின்பு இத்தொடர்பு பணியாளர்கள் 39043 இலக்கு விவசாயிகளைப் பயிற்றுவித்துள்ளனர்.

இத்திட்ட செயலாக்கத்தின் பயனாக நிறைவேறியவை:

* புறக்கடையில் வளர்க்கப்படும் கோழிகள் ஒரு வீட்டில் 5 கோழிகளிலிருந்து 30 கோழிகள் வளர்க்கும் அளவுக்கு, அதிகமாக உள்ளதால், புறக்கடை கோழி வளர்ப்பில் விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது;

* கோழிகளுக்கு நோய்களினால் ஏற்படும் இறப்பு சதவீதம் 50 லிருந்து இல்லை என்ற அளவுக்கு ஆகியுள்ளது;

* கோழிகளுக்கு புரதச்சத்தினை அதிகரிக்க கரையான் அளிக்கப்படுவதால், அதன் உற்பத்தித் திறன் அதிகரித்துள்ளது;

* குஞ்சு பொறிப்பதற்கு வைக்கப்படும் முட்டைகளில் கரு அறியும் முறை பின்பற்றப்படுவதால், கருவுறா முட்டைகள் நீக்கப்பட்டு விவசாயிகளுக்கு முட்டை இழப்பு இல்லை என்ற நிலை உருவாகியுள்ளது:

* நல்ல பராமரிப்பு முறைகளைக் கடைப்பிடிப்பதன் பயனாக கிரிராஜா கோழிகள் 6 மாதங்களில் 2 கிலோ எடையை அடைகிறது;

* இவற்றினால் கோழி வளர்ப்பின் மூலம் மட்டும் ஆண்டொன்றுக்கு ரூ.3000/- கூடுதல் வருமானம் கிடைக்கின்றது. இதனால் பல கிராமங்களில் உள்ள பல குடும்பங்கள் கோழி வளர்ப்பில் ஈடுபடுகின்றனர்.

* ஆட்டினத்தை வெளி ஒட்டுண்ணிகளிலிருந்து காத்திட மருந்து நீர் தெளிப்பான் மூலம் தடுப்பு மருந்து தெளிக்கப்படுகிறது. இது உற்பத்தித் திறனை அதிகரிக்க உதவுகிறது;

[2003 மே 6

* மரபுசாரா தீவன வகைகளான புளி மற்றும் மரக்கன்றுகளை பானைகளில் வளர்த்து கால்நடைகளுக்கு தீவனமாக அளிக்கப்படுகிறது.

* ஒவ்வொரு வீட்டிலும் வளர்க்கப்படும் வெள்ளாடுகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது மற்றும்

* வெள்ளாடுகள் மற்றும் செம்மறியாடுகளுக்குக் காலமுறைதோறும் குடற்புழு நீக்கம் செய்யப்படுவதால் அதன் எடை 30-40 சதவீதம் அதிகரித்துள்ளது. இதன் மூலம் கிலோவுக்கு 60 ரூபாய் கூடுதலாக வருமானம் கிடைக்கிறது.

இத்திட்டத்தின் வாயிலாக அளவிடமுடியாத இலாபம் மற்றும் பயிற்சி பெற்ற தொடர்பு தம்பதிகள் பல கால்நடை பராமரிப்பு முறைகளை அறிமுகப்படுத்தி அவற்றைக் கடைப்பிடித்தல் ஆகியவற்றோடு இத்திட்டம் குறைந்த முதலீட்டில் பெரும் முன்னேற்றம் காணும் முன்னோடியான திட்டமாகும். முழுமையாக பன்முகப்படுத்தியது, கிராமங்களைச் சார்ந்த விரிவாக்கம் மற்றும் எளிய அணுகுமுறைதான் இத்திட்டம் நிலைத்து நிற்க வழிவகுத்தது. எளிய முறையில் இத்திட்டத்தினை பிரதிபலிப்பு செய்ய முடியும் என்பதால், இத்திட்டத்தினைப் போல ஒரு திட்டம் மற்ற மாவட்டங்களில் செயல்படுத்த மாநில அரசு முடிவு செய்துள்ளது.

இத்திட்டத்தினைப் போன்ற ஒரு திட்டம் அடுத்த ஐந்தாண்டுகளில் மாநிலத்தில் எஞ்சியுள்ள 336 ஊராட்சி ஒன்றியங்களுக்கும் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, மதுரை, தேனி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் உள்ள 67 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்படுத்தப்பட்டது. 2002-2003-ல் கரூர், திண்டுக்கல், பெரம்பலூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

**மாதிரி வரைவுத் திட்டம்:**

1977-78 முதல் கால்நடை பொருள்களான பால், முட்டை மற்றும் இறைச்சி ஆகியவற்றை பற்றி நம்பத் தகுந்த மற்றும் குறிப்பிட்ட கால அளவில் பெறப்படும் புள்ளிவிவரங்கள் அனைத்து மாவட்டங்களிலிருந்து பருவ வாரியாக, வருடந்தோறும் தொடர்ந்து, ஒருங்கிணைந்த கணக்கெடுப்புத் திட்டம் மூலம் அறியப்படுகின்றன. இவ்வாறு களத்திலிருந்து பெறப்படும் புள்ளிவிவரங்களை பகுப்பாய்வு



2003 மே 6]

செய்வதன் மூலமாக பால் மற்றும் கால்நடை பொருட்கள் பற்றி மதிப்பீடு செய்யப்படுகின்றன. இது இத்துறையினால் தொடங்கப்பட்டு மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு கால்நடை வளர்ச்சி செயல்பாடுகளைக் கண்காணிக்கவும், அதன் தாக்கத்தை அறியவும் உதவுகிறது. மேலும் இந்த ஆய்வு அடிப்படை புள்ளிவிவரங்களை வழங்குவதால், இது பிற்கால திட்டங்களைத் திட்டமிட மிகவும் உதவுகிறது.

2002-2003 ஆம் ஆண்டில் குளிர்காலம் நீங்கலாக முதல் இரண்டு பருவ காலங்களில் பால், முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தியின் மதிப்பீடு பின்வருமாறு:

| பொருள் | கோடைக் காலம். | மழைக் காலம். | மொத்தம். |
|---|---|---|---|
| பால் (000' டன்கள்) | 1460 | 1627 | 3087 |
| முட்டை (மில்லியன் எண்ணிக்கை) | 1240 | 1214 | 2454 |
| இறைச்சி (மில்லியன் கிலோ) (பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்கள் மட்டும்) | 12.71 | 12.69 | 25.40 |

கால்நடை கணக்கெடுப்பு பணி 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே மேற்கொள்ளப்படுகிறது. இரு கால்நடைக் கணக்கெடுப்புக்குட்பட்ட காலங்களில் ஏற்படும் மாற்றங்களை மதிப்பீடு செய்வதற்கு இடைக்கால கணக்கெடுப்புத் திட்டம் 1981 முதல் இயக்குநரகத்தில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுச் சங்கங்கள்:**

ஆடு, கோழி மற்றும் பன்றி வளர்ப்பு கூட்டுறவுச் சங்கங்கள் 1964 முதல் இத்துறையின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தகைய சங்கங்களுக்கு செயல்முறை பதிவாளராக கால்நடை மருத்துவப் பணிகள் இயக்குநர் செயல்படுகிறார். நலிவுற்ற பகுதியினரை உறுப்பினர்களாக்கி அவர்களின் பொருளாதாரத்தை உயர்த்துவதே இந்தச் சங்கங்களின்

நோக்கமாகும். இத்துறையில் மொத்தம் 942 சங்கங்கள் உள்ளன. அதில் 256 சங்கங்கள் மட்டுமே செயல்படுகின்றன. மற்ற சங்கங்களும் செயல்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

**கால்நடை மருத்துவ பணிகள்:**

கால்நடை பராமரிப்புத் துறை மாநிலத்தில் உள்ள கால்நடைகள் மற்றும் கோழிகளுக்கு தேவைப்படும் கால்நடை மருத்துவ உதவி மற்றும் உடல் நலம் பேணும் பணியில் முக்கிய அங்கம் வகிக்கின்றது. இத்துறையின் தொழில்நுட்ப அறிஞர்கள், மாநிலம் முழுமையும் பரவியுள்ள கால்நடை நிலையங்கள் மூலமாக இப்பணியினை வழங்குகிறார்கள். உடல் நலம் பேணுதல், நோய் கண்டறிதல், நோய்த் தடுப்பு, நோய் அறவே ஒழித்தல், இனப் பெருக்கப் பணிக்கு உதவிடல், வேளாண் குடிமக்களுக்கு பயிற்சி அளித்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

**கால்நடை உடல் நலம் பேணுதல்.**

**கால்நடை நிலையங்கள்:**

கால்நடைகளுக்கு உடல் நலப் பாதுகாப்புப் பணியானது, களப்பணி கால்நடை நிலையங்களான பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள், கால்நடை மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருந்தகங்கள் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்நிலையங்கள் கால்நடை மருத்துவ முதுநிலை பட்டதாரிகள் மற்றும் பட்டதாரிகள் தலைமையின்கீழ் செயல்பட்டு வருகின்றன.

பன்முக மருத்துவமனைகள் சென்னை சைதாப்பேட்டையிலும், மதுரை தல்லாகுளத்திலும் மற்றும் கோயம்புத்தூரிலும் அமைந்துள்ளன. அங்கு கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி 24 மணி நேரமும் அளிக்கப்பட்டு வருகிறது. பன்முக மருத்துவமனைகள், பிரதம மருத்துவமனைகள் மற்றும் கால்நடை மருத்துவமனைகளில் உள் நோயாளிகள் பிரிவுகளுடன், ஈனியல், மருத்துவம், பெரிய அறுவை சிகிச்சைகள் போன்ற சிறப்பு மருத்துவ வசதிகளுடன் செயல்பட்டு வருகின்றன. கால்நடை நிலையங்களான சைதாப்பேட்டை (சென்னை), தல்லாகுளம் (மதுரை), கோயம்புத்தூர், பொள்ளாச்சி, திருச்சிராப்பள்ளி, வேலூர், சேலம், திண்டுக்கல், ஈரோடு, காஞ்சிபுரம், தூத்துக்குடி மற்றும் பாளையங்கோட்டை ஆகிய இடங்களில் எக்ஸ்ரே வசதிகளும் உள்ளன.



கால்நடை நிலையங்களில், கால்நடை மற்றும் கோழிகளுக்கு இலவசமாக சிகிச்சை மேற்கொள்ளப்படுகின்றன. நோயுற்ற கால்நடைகளுக்கு சிகிச்சை வசதி செய்வதுடன், நாட்டின பசுவினங்கள் மற்றும் எருமையினங்களின் தரத்தை உயர்த்தும் நோக்குடன் செயற்கை முறை கருவூட்டல் பணியும், உடல்நலப் பணியாக நோய்த் தடுப்பூசிப் பணியும், குடற்புழு நீக்கப் பணியும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் இந்நிலையங்களில் மலட்டுத் தன்மை நீக்கப் பணியும் மேற்கொள்ளப்படுகின்றன.

தேசிய வேளாண்மைக் குழு 2000 ஆம் ஆண்டில் 5,000 கால்நடை அலகுகளுக்கு ஒரு கால்நடை நிலையம் என்ற வீதத்தில் இருந்தால்தான் முழுமையான கால்நடை நலப் பணிகளைத் தரமுடியும் என பரிந்துரை செய்துள்ளது. தமிழ்நாட்டில் 134.96 இலட்சம் கால்நடை அலகுகள் உள்ளன. இதற்கு 2,699 கால்நடை நிலையங்கள் செயல்பட்டால்தான் தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையைப் பூர்த்தி செய்ய இயலும்.

தற்சமயம் 1,016 கால்நடை நிலையங்கள் பின்வருமாறு உள்ளன:

| | | |
|---|---|---|
| 1 | பன்முக மருத்துவமனைகள் | 3 |
| 2 | பிரதம மருத்துவமனைகள் | 25 |
| 3 | கால்நடை மருத்துவமனைகள் | 139 |
| 4 | கால்நடை மருந்தகங்கள் | 849 |
| | **மொத்தம்** | **1,016** |

கால்நடை மற்றும் கோழியினங்களின் உற்பத்தி திறனைப் பெருக்குவதற்கும், கால்நடை மருத்துவ சேவைகளை கால்நடை வளர்ப்போர்களின் இருப்பிடங்களிலேயே வழங்கவும், தேசிய வேளாண்மைக் குழுவின் பரிந்துரையை நிறைவேற்றவும், கால்நடை மருத்துவப் பட்டதாரிகளுக்கு சுயவேலைவாய்ப்பினை அளிக்கவும், வேலையில்லா கால்நடை மருத்துவ பட்டதாரிகளை ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் பணியாற்றும் வகையில் அவர்களை அமர்த்தி, அவர்களுக்குத் தேவைப்படும் நிதியைத் தேசிய வங்கிகளின் மூலம் பெற நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் துறையின் மூலமாக இவர்களுக்கு அன்றாட பணிகளுக்குத் தேவையான திரவ நைட்ரஜன் குடுவை, தேவையான சாதனங்கள், மற்ற உபகரணங்கள் நியமிக்கப்பட்ட கால்நடை பட்டதாரிகளிடம் உரிய பிணை முறி பெற்றுக்கொண்டு கடன் அடிப்படையில் வழங்கப்படும்.

[2003 மே 6

**(அ) நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள்:**

மாநிலமெங்கிலும், குக்கிராமங்களில் வசிக்கும் வேளாண் குடிமக்கள் கால்நடைகளைச் சிகிச்சைக்காகவும், இனவிருத்திக்காகவும் அழைத்துச் செல்ல முடியாமல் போவதைத் தடுக்கும் நோக்குடன் நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் மற்றும் மருந்தகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நடமாடும் பிரிவுகளின் முக்கிய நோக்கங்களாவன:

* கால்நடைகளுக்கும், கோழியினங்களுக்கும் தங்கள் இருப்பிடங்களிலேயே உடல் நலப் பாதுகாப்பு மற்றும் மருத்துவ உதவி அளித்தல்;

* நோய் வருமுன் தடுப்பு நடவடிக்கையாக, தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுதல் மற்றும் தொற்று நோய்த் தாக்கி ஏற்படும் நோய் கிளர்ச்சியினை தடுக்க நடவடிக்கை எடுத்தல்;

* ஒட்டுண்ணிகளில் இருந்து கால்நடைகளைக் காத்திட பெருமளவிலான குடற்புழு நீக்கப் பணி மேற்கொள்ளுதல்; மற்றும்

* செயற்கைமுறை கருவூட்டல் பணி பசுவினங்களுக்கும், எருமையினங்களுக்கும் மேற்கொள்ளுதல்.

மாநிலமெங்கிலும் 54 நடமாடும் கால்நடை மருத்துவ பிரிவுகள் ஒவ்வொன்றுக்கும் ஒரு கால்நடை உதவி மருத்துவர் பொறுப்பிலும், தேவையான பணியாளர்களுடனும், ஊர்தியுடனும், அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் நிலையான கால அட்டவணைப்படி செயல்பட்டு வருகின்றன. இம்மாதிரியான சிகிச்சை வசதிகள் மக்கள் இருப்பிடத்திலேயே கிடைப்பதால் பொதுமக்களிடையே அதிக அளவில் வரவேற்பைப் பெற்றுள்ளன.

382 நடமாடும் கால்நடை மருந்தகங்கள் அனைத்து ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் (நாகப்பட்டினம், ஏற்காடு மற்றும் வால்பாறை ஊராட்சி ஒன்றியங்கள் தவிர) அந்தந்த கால்நடை விரிவாக்க அலுவலர்களின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகின்றன. இப்பணிக்காக



2003 மே 6]

அவர்களுக்குத் தேவையான மருந்துகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன.

**(ஆ) கிளை நிலையங்கள்:**

2,123 கிளை நிலையங்கள் மாநிலத்தில் கால்நடை ஆய்வாளர்களின் கட்டுப்பாட்டில் இயங்குகின்றன. இந்நிலையங்களில் நோய்வாய்ப்பட்ட கால்நடைகளுக்கு முதலுதவி, பசுவினம் மற்றும் எருமையினங்களுக்கு செயற்கைமுறை கருவூட்டல், சினைப் பரிசோதனை மற்றும் கிளை நிலைய எல்லையில் உள்ள கால்நடை மற்றும் கோழிகளின் வருடாந்திர கணக்கெடுப்புப் பணி நடைபெறுகின்றன. கால்நடை உதவி மருத்துவர் மற்றும் உதவி இயக்குநர் (கால்நடை பராமரிப்பு) ஆகியோர்களின் தொழில்நுட்ப ஆலோசனைப்படி தடுப்பூசிப் பணிக்கும், குடற்புழு நீக்கப் பணிக்கும் இவர்களைப் பயன்படுத்துகிறார்கள்.

2002-2003-ல் 167.21 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை பணியும், 6.23 இலட்சம் கால்நடைகளுக்கு ஆண்மை நீக்கமும், 225.78 இலட்சம் கால்நடை மற்றும் கோழிகளுக்கு தடுப்பூசி பணியும், 154.44 இலட்சம் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கப் பணியும், 32.28 இலட்சம் செயற்கைமுறை கருவூட்டல் பணியும் மேற்கொள்ளப்பட்டன.

**நோய்த் தடுப்பு, கண்டுபிடிப்பு, கட்டுப்படுத்துதல் மற்றும் ஒழித்தல்:**

"கால்நடை நலம் தேசிய வளம்", பல்வேறு கால்நடை தொற்று நோய்களினால் நாட்டிற்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுகிறது. நுண்ணுயிர் மற்றும் நச்சுயிரி நோய்கள் பெரும் நோய் இறப்பு மற்றும் பாதிப்பையும், ஓரணு மற்றும் இரைப்பை-குடல் ஒட்டுண்ணிகளால் உற்பத்தித் திறனும் குறைகின்றது. நோய் பாதிப்பு உலக சந்தையில் இந்திய கால்நடைகள் நுழைவதற்கு பெரும் தடையாக உள்ளது. மேலும் நோய்களைக் கட்டுப்படுத்துவதின் பயனாக உறபத்தித் திறன் அதிகரிக்கின்றது.

முன்கூட்டியே தடுப்பூசிகள் போடுவது மற்றும் குறிப்பிட்ட நோய் கண்டறிவதன் மூலமாக பல்வேறு நோய்களிலிருந்து கால்நடைகளை காத்திட இயலும். பொதுவாக விவசாயிகள், தடுப்பூசி போடுவதில் ஆர்வம் காட்டாமல், நோய் கண்டபின், சிகிச்சை மூலம் நோய் குணப்படுத்துவதிலேயே ஆர்வம் காட்டுகின்றனர். ஆகையால் தேவையான நோய் வருமுன் எச்சரிக்கை நடவடிக்கை மற்றும் அறவே ஒழித்தல் ஆகிய பணிகளை இத்துறை மட்டுமே மேற்கொள்ள

[2003 மே 6

வேண்டியுள்ளது. மேலும் முறையான நோய்க் கட்டுப்பாடுகளின் மூலம் நோய்கள் உண்டாவது குறைக்கப்பட்டு, பின் நோய் முற்றிலுமாக ஒழிக்கப்படும் நிலை உண்டாக வழி வகுக்கிறது.

**(அ) நோய்த் தடுப்பு:**

"நோய் வரும் முன் காத்தல்" என்ற சொல்லுக்கு இணங்க இத்துறையால் கால்நடைகள் மற்றும் கோழியினங்களுக்கு முக்கியத்துவம் தந்து நோய்த் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கால்நடைகள் மற்றும் கோழியினங்களைக் காக்க தடுப்பூசி மற்றும் உயிர்காக்கும் மருந்துகள் வேலூர் மாவட்டத்தில் உள்ள இராணிப்பேட்டை, கால்நடை நோய்த் தடுப்பு மருந்து நிலையத்தில் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்நிலையத்தில் தற்போது 8 வகையான நுண்ணுயிர் தடுப்பு மருந்துகளும், 9 வகையான நச்சுயிரி தடுப்பு மருந்துகளும் தயாரிக்கப்படுகின்றன.

**(ஆ) நோய்க் கடுங்கண்காணிப்பு மற்றும் தொற்று நோய் கண்டறிவது:**

பலவகையான நோய் நிகழ்வுகள் மற்றும் நோயின் தன்மைகளை முன்கூட்டியே கண்டறிவதன் மூலம், அவற்றை காலத்தே கட்டுப்படுத்த முடியும். இதன் பொருட்டு 15 கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகள் கீழ்க்கண்ட இடங்களில் செயல்படுகின்றன:

| | | |
|---|---|---|
| 1. காஞ்சிபுரம் | 6. சேலம் | 11. உதகமண்டலம் |
| 2. வேலூர் | 7. சிவகங்கை | 12. தூத்துக்குடி |
| 3. கடலூர் | 8. திருநெல்வேலி | 13. ஈரோடு |
| 4. கோயம்புத்தூர் | 9. மதுரை | 14. திண்டுக்கல் |
| 5. தஞ்சாவூர் | 10 திருச்சிராப்பள்ளி | 15. விழுப்புரம் |

ஏற்கெனவே நிகழ்ந்த நோய் கிளர்ச்சிகள் மற்றும் புள்ளிவிவரங்களைக் கொண்டு நோய் ஏற்படக்கூடிய இடங்கள் வரையறுக்கப்படுகின்றன. இவை களப்பணி அலுவலர்களுக்கு நோய் பற்றி முன்கூட்டியே அறிவிக்கவும், தகுந்த முறையில் முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளவும் உதவுகின்றன.

தலைமையகத்தில் கால்நடை நோய் கடுங்கண்காணிப்பு பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டு, கால்நடை மற்றும் கோழியின நோய்கள் மற்றும் நோய் கிளர்ச்சி குறித்து பல வகையான விவரங்கள் சேகரிக்கப்படுகின்றன. கால்நடை நோய் பற்றிய தகவல் அறியும் முறை, மத்திய அரசின் தேசிய தகவல் அறியும் மையம் மூலமாக ஏற்படுத்தப்பட்டு, இதன் மூலம் நோயின் தாக்குதல் உடனுக்குடன் அறியப்பட்டு, அந்தப் பகுதியில் தீவிர முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொண்டு நோயினைக் கட்டுப்படுத்தி அவற்றினை அறவே ஒழிக்க உதவியாக இருக்கின்றது. இதில் கிடைக்கும் தகவல்கள் அருகில் உள்ள மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன.



2003 மே 6]

**(இ) நோய் கண்டறிதல்:**

விவசாயிகள் நலன் கருதி இரண்டு கோழி நோய் கண்டறியும் ஆய்வுக்கூடம், ஒன்று நாமக்கல் மாவட்டத்தில் ஆண்டலூர்கேட்டிலும், மற்றொன்று ஈரோட்டிலும் செயல்பட்டு வருகின்றன. இவை மூலமாக நோய் விரைவில் ஆய்வு செய்யப்படுவது மட்டுமின்றி தீவன ஆய்வு நீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, காலத்தே விவசாயிகளுக்கு ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன. 2002-2003-ல், 1313 கோழிப் பண்ணைகள், 1118 கிராமங்கள் பார்வையிடப்பட்டன. மேலும் 7112 மாதிரிகள் பரிசோதனை செய்யப்பட்டன.

நான்கு நடமாடும் ஆய்வுக்கூடங்கள் நோய் புலனாய்வு பிரிவுடன் சார்ந்து மதுரை, வேலூர், திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் செயல்படுகின்றன. நடமாடும் ஆய்வகங்கள் அனைத்திலும் தேவையான ஆய்வுக்கூட உபகரணங்கள் மற்றும் நோய் ஆய்வு பணி மேற்கொள்ளும் வசதிகள் உள்ளன. அவை நோய் பாதிப்புள்ள இடங்களுக்குச் சென்று உடனுக்குடன் அந்த இடங்களிலேயே நோயைக் கண்டறிந்து. தீவிர நோய் ஆய்வுப் பணிக்குத் தேவையான மாதிரிப் பொருட்களைச் சேகரிக்கின்றன.

கால்நடை நோய் புலனாய்வு பிரிவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பு செய்ய உதவிடவும், களப் பணியாளர்களின் ஆய்வு தொடர்பான பணிகளில் உதவிடவும் ஒரு மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் சென்னை சைதாப்பேட்டை பன்முக மருத்துவமனை வளாகத்தில் இயங்கி வருகிறது. மத்திய தொடர்பு ஆய்வுக்கூடம் பலவகையான நுண்ணுயிரியல் சோதனை, நீர் பரிசோதனை மற்றும் தசைநோய் குறியியல் பணியினை மேற்கொண்டு, நோயின் தன்மையை உறுதிப்படுத்துகின்றது. நீல நாக்கு நோயை சீக்கிரமாகவும், விரைவாகவும், துல்லியமாகவும் கண்டறிய ஒரு 'நீல நாக்கு ஆய்வுப் பிரிவு' இவ்வாய்வுக்கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

**ஈ) நோய் கட்டுப்படுத்துதல்:**

இந்தியாவில் உள்ள கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்கள் உலகச் சந்தையில் எளிதாக நுழைந்து ஏற்றுமதியைப் பெருக்க வேண்டுமாயின் "Office International Epizootics" என்ற பன்னாட்டு நிறுவனம் நிர்ணயித்துள்ள தரக்கட்டுப்பாட்டினை எட்ட வேண்டும். அதாவது கோமாரி, வெக்கைநோய் மற்றும் மாட்டினத்தைத் தாக்கக்கூடிய தொற்று நுரையீரல் அழற்சி நோய்களிலிருந்து இப்பொருட்கள் பாதுகாக்கப்பட்டவை என சான்று அளிப்பதே இதன் பொருளாகும்.

**i) கோமாரி நோய்:**

கோமாரி நோய் நச்சுயிரி கிருமிகளினால் ஏற்படும் தொற்றுநோய் ஆகும். அது மாட்டினங்கள், எருமையினங்கள், செம்மறியாடுகள் மற்றும் வெள்ளாடுகளைத் தாக்குகின்றன. அதிக நோய் பாதிப்புத் தன்மையால் பால் உற்பத்தி குறைப்பு, மலட்டுத் தன்மை மற்றும் இளங்கன்றுகள் இறப்பு போன்றவற்றை ஏற்படுத்துகிறது. நோய் பாதிக்கப்பட்ட பயனற்ற கால்நடைகள் விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பை ஏற்படுத்துகின்றன. இந்தக் கால்நடைகளைப் பாதுகாக்கும்பொருட்டு இத்துறை கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி இலவசமாகப் போடுவதற்கு ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 2002-2003-ல் இத்திட்டத்திற்காக ரூ. 54.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2.98 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. தற்போது இந்நோயினைக் கட்டுப்படுத்த மாநிலத்திலுள்ள அனைத்து கால்நடைகளுக்கும், தடுப்பூசி போடுவதற்கு ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ii) நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம்**

மூன்று மாவட்டங்களைக் கொண்ட தென் பகுதியில் தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டத்திலும், கேரள மாநிலத்தில் கொல்லம் மற்றும் திருவனந்தபுரத்திலும் கால்நடை மற்றும் கால்நடைப் பொருட்கள் ஏற்றுமதியை வலுப்படுத்தவும் அதிகரிக்கவும் நோயிலிருந்து பாதுகாக்கப்பட்ட மண்டலம் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி திட்டப் பகுதிகளிலும் மற்றும் அதனைச் சார்ந்த திருநெல்வேலி மாவட்டத்தில் 40 கிலோ மீட்டர் உள்ளடக்கிய பகுதிகளிலும் முறையான, பெருமளவிலான தடுப்பூசிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திருநெல்வேலி மாவட்டத்தை



ஒட்டிய எல்லையோரப் பகுதிகளில் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டு திட்டப் பகுதிக்கு உள்ளே வரும் கால்நடைகளைக் கண்காணித்து தடுப்பூசி போடப்படுகின்றன. இத்திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் 29-10-1984 முதல் செயல்பட்டு வருகிறது. கோமாரி நோயினைத் தடுக்கும்பொருட்டு 2002-2003-ல், 13703 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**உ) நோய் அறவே ஒழித்தல்:**

தேசிய வெக்கைநோய் தடுப்புத் திட்டத்தின்படி 1993-94 முதல் 1996-97 வரை 100 சதவீதம் தடுப்பூசிப் பணி அனைத்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்டன. தடுப்பூசிப் பணியானது 31-12-1997-ல் முடிக்கப்பட்டது. இத்துறையின் கடும் முயற்சியின் பயனாக செப்டம்பர், 1995 முதல் இம்மாநிலத்தில் வெக்கைநோய் கிளர்ச்சி ஏதும் ஏற்படவில்லை. இச்சீரிய முயற்சியின் பயனாக மார்ச், 1998-க்குப் பிறகு தமிழ்நாடு தற்காலிகமாக வெக்கை நோயில்லா மாநிலமாக அறிவிக்க வழிவகுத்துள்ளது. தற்சமயம் மாநிலத்தில் 16 வெக்கைநோய் குழுக்கள், 10 வெக்கைநோய் கண்காணிப்புப் பிரிவுகள் மற்றும் 10 வெக்கைநோய் சோதனைச் சாவடிகள் செயல்பட்டு வருகின்றன. கால்நடைகளின் நடமாட்டங்களினால் வெக்கைநோய் ஏதேனும் உள்ளதா என்பதனைக் கண்டறிய, இத்துறையால் 1998-99 முதல் கிராமங்களில், வழித்தடங்களில் மற்றும் கால்நடை நிலையங்களில் தீவிர கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதனோடு கடுங்கண்காணிப்பின்கீழ், ஊநீரில் வெக்கைநோய் எதிர்ப்புத் திறன் உள்ளதா என்பதைக் கண்டறிய யதேச்சையான முறையில் தேர்வு செய்யப்பட்ட கிராமங்களில் உள்ள கால்நடைகளில் சோதனை செய்யப்படுகின்றன.

**விரிவாக்கப் பணி மற்றும் கால்நடை பொது சுகாதாரம்**

"காண்போம் கற்போம்" என்ற கொள்கையின்படி, இத்துறையானது உள்ளூர் விழாக்களிலும், பொருட்காட்சியிலும் மற்ற நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன தொழில் நுட்பங்களையும் கால்நடை பொது சுகாதாரம் குறித்த அணுகு முறைகளையும் பொது மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. ஒவ்வொரு ஆண்டும் சென்னை அகில இந்திய சுற்றுலா தொழில் பொருட்காட்சி மற்றும் கூட்டுறவு வாரவிழாவில் இத்துறை கலந்து கொள்கிறது. பலவகையான தகவல் தொடர்பு சாதனங்களான தொலைக்காட்சி அகில இந்திய வானொலி மற்றும் நாளிதழ் மூலமாகவும் பொது

[2003 மே 6

மக்களுக்குத் தேவையான அடிப்படை விவரங்கள் சென்றடைகின்றன. மாநிலமெங்கும் நடைபெறும் கால்நடை பாதுகாப்பு முகாம்கள், விழாக்கள், கண்காட்சிகள், உள்ளூர் சந்தைகளில் கால்நடை பராமரிப்பின் தற்கால நவீன அறிவியல் தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய நோய்கள் பற்றிய துண்டுப்பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுற்றறிக்கைகள், செய்தி மடல்கள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு, அவர்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்த வழிவகை செய்யப்படுகிறது. கால்நடை பராமரிப்பு பற்றிய செய்தி ஒலிபரப்பை வாரந்தோறும் அகில இந்திய வானொலி நிலையம் மூலமாக மேற்கொள்கிறது. 2002-2003-ல், கால்நடை பராமரிப்பு தொடர்பான 37 நிகழ்ச்சிகள் ஒலிபரப்பப்பட்டன.

இத்துறைக்குத் தேவையான விளம்பரம் மற்றும் விரிவாக்க அச்சடிப்புப் பணிகளான துண்டுப் பிரசுரங்கள், சிறு புத்தகங்கள், சுவரொட்டிகள், புத்தகக் குறிப்புகள் மற்றும் பதிவேடுகள் ஆகியவற்றை அச்சடிக்க சென்னை, சைதாப்பேட்டையில் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பிரிவு ஒன்று அச்சுக்கூட வசதியுடன் செயல்பட்டு வருகின்றது.

மனிதன் மற்றும் விலங்குகள் பெரும்பாலும் அருகருகே வசிப்பதால், பல நோய்கள் விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவுகின்றன. மனிதனுக்குப் பரவும் தொற்று நோய்களில் 4/5 பங்கு விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவுகின்றன. விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களைக் கட்டுப்படுத்த கால்நடை பொது சுகாதாரம் முக்கிய பங்காற்றுகிறது. 70-80 சதவீத மக்கள் கிராமப்புறங்களில் வசிப்பதாலும், அவர்களின் விவசாயம் செய்யும்முறை கால்நடைகளை நம்பியிருப்பதாலும், இப்பிரச்சினை நமது நாட்டில் முக்கியத்துவம் அடைகின்றது.

விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களைக் கண்காணித்து தடுத்து, கட்டுப்படுத்தி மற்றும் முடிந்தால் அறவே ஒழித்தலுக்கு, கால்நடை பராமரிப்புத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இது சம்பந்தமாக நடைபெறும் சில பணிகள் பின்வருமாறு:

**வெறிநாய்க் கடி நோய்த் தடுப்புத் திட்டம்:**

விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவும் நோய்களுள் வெறிநாய்க் கடி ஒரு அபாயகரமான நோயாகும். மனிதர்களுக்கு



2003 மே 6]

இந்நோய் வெறிகண்ட நாய்களின் மூலமாகப் பரவுகிறது. ஆகையால் இந்நோய் நாய்களுக்கும், நாய்களிலிருந்து மனிதனுக்கும் மற்ற கால்நடைகளுக்கும் பரவுவதைத் தடுக்க வெறிநாய்க்கடி நோய்த் தடுப்புப் பிரிவுகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

**இத்திட்டப் பிரிவுகளின் முக்கிய நோக்கங்கள்:**

* முறையான மற்றும் காலமுறைப்படி நோய்த் தடுப்பினை கையாள வீடுவீடாகச் சென்று வளர்ப்பு நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்பட்டு உரிய கட்டணம் வசூலிக்கப்படுகிறது;
* நோயினால் பாதிக்கப்பட்ட கால்நடைகள் மற்றும் நாய்களுக்கு இலவசமாக தடுப்பூசிப் பணி மேற்கொள்ளப்படுகிறது; மற்றும்
* பொதுமக்களிடையே இந்நோய்பற்றி விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் வகையில் துண்டுப் பிரசுரங்கள் மற்றும் விளக்கக் குறிப்புகள் மூலமாக தகுந்த விளம்பரம் மற்றும் பிரச்சாரம் செய்தல், நாய் கண்காட்சி நடத்துதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இத்திட்டம் மக்களிடையே வெகுவாக வரவேற்பினைப் பெற்றுள்ளது. மனிதர்கள் மற்றும் நாய்களைத் தாக்கக் கூடிய வெறிநாய்க்கடி நோய் இந்நிலையங்களின் அருகில் உள்ள இடங்களில் கணிசமான அளவில் குறைந்துள்ளது. இத்திட்டத்தின்கீழ் 2002-2003-ல், 13,932 தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன.

**பெருமளவில் தடுப்பூசி போடுதல் மற்றும் குடற்புழு நீக்கம்:**

இத்துறை கால்நடை மற்றும் கோழிகளுக்கு முறையாக தடுப்பூசி மற்றும் குடற்புழு நீக்கம் இலவசமாக செய்து வருகின்றது. இதனால் அடைப்பான், கன்று வீச்சு மற்றும் நாடாப்புழு (Strongylosis) ஆம்பிஸ்டோமியாசிஸ் (Ampistomiasis), ஒட்டுண்ணிகள் (Hydatidosis) போன்ற அபாயகரமான நோய்கள் மேலும் பரவாமல் தடுக்கப்படுகின்றன. முறையான குடற்புழு நீக்கம் கால்நடைகளுக்கும் கோழிகளுக்கும் செய்வதன் பலனாக மனிதனுக்குப் பரவாமல் குடற்புழுக்களின் வளர்ச்சி தவிர்க்கப்படுகிறது.

**இறைச்சி தரம் ஆய்வு:**

உள்ளாட்சி மன்றங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் பதிவு பெற்ற இறைச்சிக் கூடங்களில் முறையான இறைச்சி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதனால் இறைச்சி மூலம் பரவும் நாடாப்புழு மற்றும் தசைப்பகுதிக்குள் வளரும் ஒட்டுண்ணிகள் போன்ற நோய்களிலிருந்து பொது மக்கள் காக்கப்படுகிறார்கள்.

**பிராணி நலத் திட்டங்கள்:**

**கால்நடைகளைக் கொடுமைப்படுத்துதலைத் தடுத்தல்:**

கால்நடைகளை மனிதாபிமான முறையில் நடத்தவும் கொடூரமான முறையில் அண்டை மாநிலங்களுக்கு ஏற்றிச் செல்வது மற்றும் அதனால் ஏற்படும் அநீதிகளை தவிர்க்கவும், இவ்வரசு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. கால்நடைகளை வாகனங்களில் ஏற்றிச் செல்லும்போது காணப்படும் இரக்கமற்ற செயல்களைத் தடுக்க இவ்வரசு மாநிலம் மற்றும் மாவட்ட அளவிலான குழுக்களை ஏற்படுத்தியுள்ளது. மாநிலத்தின் கால்நடை நல செயல்பாடுகளை இதர துறையுடன் ஒருங்கிணைத்து செயல்பட ஒரு கால்நடை நலப் பிரிவு தனியாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

**பசு மடங்கள்:**

பதிவு செய்யப்பட்ட பொது அறக்கட்டளை நிலையங்கள் மற்றும் இந்து சமய அறக்கட்டளை வாயிலாக பதிவு செய்யப்பட்ட அறக்கட்டளை நிலையங்கள் பசு மடங்களாகும். இவை மாநில அரசால் அங்கீகாரம் வழங்கப்பட்டு பசுக்களைப் பாதுகாக்கவும், பேணவும் அவற்றை முன்னேற்றவும் பாடுபடுகின்றன. மேலும் கவனிப்பாரற்று அனாதையாகத் திரியும், கொடுமைப்படுத்தலிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் இறைச்சிக்காக வெட்டப்படுதலிலிருந்து காப்பாற்றப்பட்ட பசுக்களும் இங்கு பராமரிக்கப்பட்டு வருகின்றன.

பசுக்களைப் பாதுகாக்கக் கட்டடங்கள் மற்றும் அடிப்படை வசதிகளான ஆழ்துளைக் குழாய் கிணறு மற்றும் நீர்த் தொட்டிகளைக் கட்டுவதற்கு உத்தேசமாக பசுமடம் ஒன்றுக்கு ரூ.3.00 இலட்சம் தேவைப்படும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.





**தெரு நாய்களின் பிறப்பு விகிதத்தைக் கட்டுப்படுத்தும் திட்டம்:**

இதன் முக்கிய நோக்கங்களாவன:—

* தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்தி அவற்றைப் படிப்படியாக குறைத்து, பின்பு நீண்ட காலத்தில் சமன்படுத்துவது.
* வெறிநாய் நோயினைக் குறைப்பது.
* ஆரோக்கியமான தெரு நாய்கள் கொல்லப்படுவதை நிறுத்துவது.

நகராட்சி மற்றும் உள்ளாட்சி நிறுவனங்கள் தெரு நாய்களின் எண்ணிக்கையைக் கட்டுபடுத்த, அவற்றைப் பிடித்து கொன்று வருகின்றன. இதனைத் தவிர்க்கவும், நிரந்தரத் தீர்வு காணவும், பிராணிகள் நல வாரியம் பெருமளவில் கருத்தடை மற்றும் வெறிநாய் நோய்த் தடுப்பூசித் திட்டத்தினை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ் தெரு நாய்கள் மனிதாபிமான முறையில் பிடிக்கப்பட்டு, கருத்தடை செய்யப்பட்டு வெறிநோய்க்கு எதிரான தடுப்பூசி போடப்பட்டு அவை பிடித்து வரப்பட்ட இடத்திலேயே மறுபடியும் விடப்படுகின்றன.

**இறைச்சிக் கூடங்களை நவீனமயமாக்கல்:**

இறைச்சிக் கூடங்களில் சுகாதாரமான முறையில் இறைச்சி உற்பத்தி செய்யவும், அங்கு கால்நடைகளை மனிதாபிமான முறையில் கையாளவும், சுமை ஊர்திகளிலிருந்து கால்நடைகளை இறக்குவதற்கு திண்காரை சாய்வு மேடை, நீர்த்தொட்டிகள், வெட்டுவதற்குமுன் அவற்றைப் பார்வையிட இடம், கட்ட கயிறுகள், ஒரு கால்நடை வெட்டப்படும்போது மற்றவை பாராவண்ணம் தனியான இடம், கழிவுப் பொருட்கள் வெளியேற இடம், பொதுவான மின்சார வசதி மற்றும் குளிர்சாதனம் போன்ற வசதிகள் மிகவும் அவசியமானது.

மாநிலத்தில் செயல்பட்டு வரும் 183 பதிவு செய்யப்பட்ட இறைச்சிக் கூடங்களில் கீழ்க்கண்ட 5 கூடங்கள் நவீனமயமாக்க தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன:—

[2003 மே 6

| வ. எண் | இறைச்சிக் கூடம் உள்ள இடம் | மாவட்டம் |
|---|---|---|
| 1 | பெரம்பூர் | சென்னை |
| 2. | காந்தி அங்காடி | திருச்சிராப்பள்ளி |
| 3. | வெத்திலைப்பேட்டை | மதுரை |
| 4. | சேலம் நகரம் | சேலம் |
| 5. | உக்கடம் | கோயம்புத்தூர் |

மேற்கூறிய வசதிகளை ஏற்படுத்தி ஒரு இறைச்சிக்கூடம் ரூ. 10.00 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்படும். இந்த 5 இறைச்சிக்கூடங்களை நவீனமயமாக்க ரூ. 50.00 இலட்சத்திற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**கால்நடைச் சந்தைகளை தரம் உயர்த்துதல்:**

மாநிலத்தில் செயல்பட்டு வரும் 198 கால்நடைச் சந்தைகளில், கீழ்க்கண்ட 10 கால்நடைச் சந்தைகள் தரம் உயர்த்துவதற்காக தேர்வு செய்யப்பட்டுள்ளன:

| வரிசை எண் | கால்நடை சந்தை | மாவட்டம் |
|---|---|---|
| 1. | பொள்ளாச்சி | கோயம்புத்தூர் |
| 2. | பல்லாவரம் - சென்னை | காஞ்சிபுரம் |
| 3. | பொய்கை - சத்தியமங்கலம் | வேலூர் |
| 4. | மேலப்பாளையம் | திருநெல்வேலி |
| 5. | திருப்பரங்குன்றம் | மதுரை |
| 6. | திங்கள்சந்தை | கன்னியாகுமரி |
| 7. | திருக்கழுக்குன்றம் | காஞ்சிபுரம் |
| 8. | ஊத்தங்கரை | தருமபுரி |
| 9. | இராஜபாளையம் | விருதுநகர் |
| 10. | ஈரோடு | ஈரோடு |

மேற்கண்ட கால்நடை சந்தைகளில் அடிப்படை உள்ளிருப்பு வசதிகளான கால்நடைகளை சுமை ஊர்திகளிலிருந்து ஏற்றுவதற்கும், இறக்குவதற்கும் வசதியாக திண்காரை சாய்வு மேடை, நீர் தொட்டிகள், கால்நடை முதலுதவி நிலையம், கால்நடைகளை மனிதாபிமான



2003 மே 6]

முறையில் நடத்துவதற்கு செய்ய வேண்டியவை / செய்யக்கூடாதவை ஆகியவற்றைப்பற்றி விளக்கும் விளக்கப் பலகை போன்ற வசதிகள் ஒரு கால்நடைச் சந்தைக்கு ரூ.2.64 இலட்சம் வீதம் செலவு செய்து தரம் உயர்த்தப்பட உள்ளது. மேற்கண்ட 10 கால்நடைச் சந்தைகளை ரூ.26.40 இலட்சம் செலவில் தரம் உயர்த்துவதற்கான கருத்துரு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்:**

**முன்னுரை**

இந்தியா வேளாண்மையை அடிப்படையாகக் கொண்ட நாடாதலால் மக்களின் உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதில் கோழி, கால்நடை மற்றும் மீன் பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. கால்நடை வளர்ப்பானது வசதி குறைந்த கிராமப்புற மகளிரின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதிலும், பொருளாதார முன்னேற்றம் பெறச் செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கிறது. கால்நடை வளர்ப்பு வேகமாக வளர்ந்து வரும் தொழிலாக உருவெடுத்து தற்போது இத்துறையின் மூலம் ஈட்டப்படும் வருவாய் வேளாண் தொழில் மூலம் ஈட்டப்படும் மொத்த வருவாயில் 26 சதவிகிதத்தைக் கடந்துள்ளது.

மாறி வரும் உலக வர்த்தகச் சூழலில் உலக வர்த்தக நிறுவன வழிமுறைகளுக்கு ஏற்ப சர்வதேசச் சந்தையில் ஈடுகொடுக்கும் வகையில் நமது உள்நாட்டு உற்பத்திப் பெருக்கம், தர மேம்பாடு, வர்த்தக முறை மற்றும் தொழில் நுட்பக் காப்பீடு போன்றவற்றில் முன்னேற்றம் காணவேண்டியுள்ளது.

20-9-1989 அன்று தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் கீழ்க்கண்ட நோக்கத்துடன் உருவாக்கப்பட்டது:

* இளங்கலை, முதுகலை மற்றும் முனைவர் பட்டம் பெறுவோருக்கு கால்நடை மருத்துவம், விலங்கின மற்றும் மீன்வள அறிவியலில் சிறந்த கல்வியை அளித்தல்;
* கால்நடை மற்றும் மீன்வள உற்பத்தி, அவற்றின் பாதுகாப்பு மற்றும் அவற்றிலிருந்து பெறப்படும் பொருட்கள் பற்றிய ஆராய்ச்சி மேற்கொள்ளுதல்; மற்றும்
* தொழில் நுட்பக் கல்வியை கால்நடை பராமரிப்புத் துறையைச் சார்ந்த மருத்துவர்கள் மற்றும் கிராமப்புறப் பண்ணையாளர்களுக்கு விரிவாக்கக் கல்வி மூலம் பரப்புதல்.

[2003 மே 6

கடந்த பத்தாண்டுகளில் இப்பல்கலைக்கழகம் மூன்று கல்லூரிகள், ஐந்து ஆராய்ச்சி நிலையங்கள், இரண்டு நிறுவனங்கள், ஐந்து பயிற்சி மையங்கள் மற்றும் 16 கால்நடை பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களைக் கொண்டு கல்வி, ஆராய்ச்சி, தொழில் நுட்பம் மற்றும் வளாக வசதிகளை மேம்படுத்திக் கொண்டுள்ளது. பல்கலைக்கழகப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் முகமாகவும், கால்நடை மற்றும் மீன் வளத்தைச் சார்ந்த தொழில் துறை, பண்ணையாளர்கள் மற்றும் பொது மக்கள் பயன்பெறும் வகையிலும் சுயநிதி அமைப்புகளை உருவாக்கி வெற்றி கண்டுள்ளது. லெப்டோஸ்பைரா நோயறி ஆய்வகம், கால்நடைத் தீவன தர ஆய்வு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம் மற்றும் இறால் நோயறி ஆய்வகம் ஆகியன இவ்வகையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

**கல்வி**

இப்பல்கலைக்கழகத்தின் பல்வேறு கல்வித் திட்டங்களில் 2002-2003 ஆம் ஆண்டின் மாணவர் சேர்க்கையின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| பாடப்பிரிவு | சென்னைக் கால்நடை மருத்துவக் கல்லூரி, சென்னை | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், நாமக்கல் | மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தூத்துக்குடி | மொத்தம் |
|---|---|---|---|---|
| பி.வி.எஸ்சி. | 127 | 79 | - | 206 |
| பி.எஃப்.எஸ்சி. | - | - | 35 | 35 |
| எம்.வி.எஸ்சி. | 56 | 13 | - | 69 |
| எம்.எஃப்.எஸ்சி. | - | - | 6 | 6 |
| பிஎச்.டி (கால்நடை) | 12 | 2 | - | 14 |
| பிஎச்.டி. (மீன்வளம்) | - | - | - | - |
| வர்த்தக மேலாண்மையியல் பட்டயப் படிப்பு | - | - | - | - |
| **மொத்தம்** | **195** | **94** | **41** | **330** |



2003 மே 6]

தமிழக அரசு, இந்திய அரசு, இந்திய வேளாண் அறிவியல் கழகம் மற்றும் இதர முகமைகள் உதவியுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கு மாணவர்களுக்கு உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2001-2002 ஆம் கல்வியாண்டிலிருந்து அகில இந்திய கால்நடை மருத்துவக் குழு பரிந்துரைத்த விதிமுறையின்படி இளங்கலை மாணவர்களுக்கான பாடத்திட்டம் அமல்படுத்தப்பட்டு வருகிறது.

**ஆராய்ச்சி**

பல்கலைக்கழகத் திட்டத்தின்கீழ், வளாக வசதியை வலுப்படுத்தவும், உயர் கல்வி அளிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும், ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் கண்டுபிடிப்புகளைப் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை மேற்கொள்ள 88 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் 5 திட்டங்கள் பல்கலைக்கழக நிர்வாகத்திற்காகவும், 51 திட்டங்கள் துறை மேம்பாடு மற்றும் புதிய துறைகள் உருவாக்குவதற்காகவும், பண்ணையாளர்களின் பிரச்சினைகளை எதிர்கொள்ளும்முகமாக 18 ஆராய்ச்சித் திட்டங்களும், 14 மீன்வளத் திட்டங்களும் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவை தவிர 70 புரவலர் ஆராய்ச்சித் திட்டங்கள் ரூ.1,416.52 இலட்ச மதிப்பீட்டில் தற்பொழுது இப்பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றன.

**முக்கிய சாதனைகள்**

* பெரும் பொருளாதார இழப்பு ஏற்படுத்தும் ஆட்டுக் கொள்ளை நோயைத் தடுக்க வீரிய நச்சுயிர் தடுப்பூசி அதன் நோய்த் தடுப்புத்திறன் ஓராண்டிற்கு நீடிக்கும் வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் சாதாரண தட்பவெப்ப நிலையைத் தாங்கக்கூடிய ஆட்டுக் கொள்ளை நோய்த் தடுப்பூசி தயாரிக்கப்பட்டு அதன் திறன் மேம்படுத்தப்பட்டுள்ளது. அண்டை மாநிலங்களான கர்நாடகா, ஆந்திர பிரதேசம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களுக்கு ஏழு இலட்சம் தடுப்பூசி மருந்தளவு வழங்கப்பட்டுள்ளன.
* கோழிகளைத் தாக்கும் வெள்ளைக்கழிச்சல் நோய்க்கு எதிராக அறை வெப்ப நிலையை தாங்கக் கூடிய குருணை வடிவ தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்டது. ஈரோடு, நாமக்கல் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் சோதனை முறையில் வர்த்தகத்திற்கான கோழிகளில் இத்தடுப்பூசி

அளிக்கப்பட்டு வெற்றி கண்டுள்ளது. மேலும் வெள்ளைக் கழிச்சல் நோயைத் தடுக்க டி52 வகையைச் சார்ந்த சாதாரண வெப்ப நிலையைத் தாங்கும் மற்றுமொரு தடுப்பூசி தயாரிக்கப்பட்டு நிலைப்படுத்தப்பட்டு, ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் பல்கலைக்கழக இறைச்சிக் கோழி பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 8000 இறைச்சிக் கோழிகளுக்கு கண்/மூக்கு வழியாக அளிக்கப்பட்டது.

* தமிழ்நாட்டில் ஆடுகளைத் தாக்கும் நீலநாக்கு நோய்க்குக் காரணமான நச்சுயிரியைக் கொண்டு தடுப்பூசி தயாரிக்கப்பட்டு, அதன் நோய்த் தடுப்புத் திறன் 180 நாட்களுக்கு நீடிக்கும் என அறியப்பட்டுள்ளது. மேலும் இந்நோயை உண்டாக்கும் நச்சுயிரியைக் கண்டறியும் ஒருமுகப்படுத்தப்பட்ட எதிரணு சார்ந்த சாதனமும் தயாரிக்கப்பட்டு அதன் தர ஆய்வு திருப்திகரமாக உள்ளது.

* மரபியல் தொழில்நுட்பம் மூலம் தரமான வெறிநோய்த் தடுப்பூசி தயாரிக்கும்முகமாக அந்நோய்க் காரணியின் G மற்றும் N மரபணுக்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டு மாற்று மரபணு முறையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்திய வகை வெறிநோய் நச்சுயிரியின் பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டதில் இந்நச்சுயிரி, இலங்கை மற்றும் பிலிப்பைன்ஸ் வகை நச்சுயிரியுடன் ஒத்துள்ளது என அறியப்பட்டுள்ளது.

* கோழிகளின் நோய் நிலை மற்றும் நோய் எதிர்ப்புத் திறனைக் கண்டறிய, நோய் எதிர்ப்புத் திறத்திற்கென நான்கு வகை ஒருமுக எதிரணுக்களைக் கொண்டு, சோதனைச் சாதனம் உருவாக்கப்பட்டுள்ளது.

* ஆடுகளில் அதிகமாகக் காணப்படும் எலும்பு முறிவை குணப்படுத்த உட்பொருத்து தொழில்நுட்பம் நிலைப்படுத்தப்பட்டுள்ளது. உயர் அழுத்தத் தகடுகள் மற்றும் நிலைப்படுத்தப்பட்ட திருகாணிகள் கொண்ட கூட்டு எலும்பு முறிவுக்கு சிறந்த சிகிச்சை அளிக்க இயலும் என கண்டறியப்பட்டுள்ளது.

* மேச்சேரி செம்மறியாட்டினுடைய குணாதிசயங்கள், உற்பத்தித் திறன் மற்றும் மரபியல் பகுப்பாய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதிக இறைச்சி விகிதம், சிறந்த வகை தோல், குறைந்த தீவனத்தேவை மற்றும் அதிக



வெப்பத்தைத் தாங்கும் திறன் போன்றவை மேச்சேரி இனத்தின் சிறப்பு குணங்களாகும். இவ்வினத்தின் பண்புகளும் அறியப்பட்டுள்ளன.

* கன்னி இன வெள்ளாடுகளின் குணாதிசயங்கள் மற்றும் உற்பத்தித் திறன் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இவ்வினம் சிறந்த இறைச்சி அளிக்கக்கூடியதாகவும், வறட்சியைத் தாங்கி வளரக் கூடியதாக இருப்பதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

* கருமாற்று தொழில் நுட்பம் ஆய்வக விலங்குகளான முயல்களில் மேற்கொள்ளப்பட்டு முயல்குட்டிகள் பெறப்பட்டுள்ளன. மேலும் ஆடுகளில், சோதனைக் கூடத்தில் சினைமுட்டை முதிர்ச்சி, கருவூட்டல், கரு உற்பத்தி மற்றும் கருமாற்று முறைகள் நிலைப்படுத்தப்பட்டு வெற்றிகரமான ஆட்டுக்குட்டிகள் பிறந்துள்ளன.

* மரபணு மாற்று தொழில்நுட்பம் நெறிப்படுத்தப்பட்டுள்ளது. ஒளிரும் பச்சை புரத மரபணு மாற்றி செலுத்தப்பட்டு முயல்கரு வெற்றிகரமாக உருவாக்கப்பட்டுள்ளது.

* மாடுகளில் கருமாற்று சிகிச்சை நெறிப்படுத்தப்பட்டுள்ளது.

* மரபு பொறியியல் மூலம் செல்லுலேஸ் என்ற தீவனப் பொருளை விரைவில் நொதித்து ஜீரணிக்கும் அசையூண் வயிற்று நுண்கிருமி தயாரிக்கப்பட்டுள்ளது.

* உள்ளூரில் கிடைக்கும் தீவனப் பொருட்கள், வளர்ச்சி ஊக்கிகள் மற்றும் தீவன வசீகரப் பொருட்களைக்கொண்டு குறைந்த விலையில் 1.60, 1.63 மற்றும் 1.67 புள்ளிகள் தீவன மாற்றுத்திறன் கொண்ட ஆரம்ப, வளர்ப்பு மற்றும் முடிவு இறால் தீவனம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**விரிவாக்கக் கல்வித் திட்டம்**

பல்கலைக்கழக கால்நடைப் பொருட்களை ஒருமுக விற்பனை மூலம் விநியோகிப்பதுடன், தொழில் நுட்ப தகவல் சேவைகள் செய்ய பல்கலைக்கழக வேளாண் தொழில்நுட்ப மையம் ஒன்று காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள காட்டுப்பாக்கத்தில நிறுவப்பட்டுள்ளது.

[2003 மே 6

கனடாவில் உள்ள சர்வதேச ஆராய்ச்சி மேம்பாட்டு மையத்தின் நிதியுதவியுடன் கால்நடை பராமரிப்பில் நவீன தொழில்நுட்பம் பற்றிய தகவல்களை பண்ணையாளர்களுக்கு வழங்குவதற்காக, வேலூர் மாவட்டம் சித்தேரியிலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழுமணியிலும், மதுரை மாவட்டம் புதுத்தாமரைப்பட்டியிலும் மூன்று தொழில்நுட்பத் தகவல் மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன. இதுவரை இந்தத் தகவல் மையங்களின் மூலம் 6,831 பண்ணையாளர்கள் செய்தித் தொடர்பு, ஒலி ஒளி அமைப்பு மற்றும் தொலைத் தொடர்பு தொழில்நுட்பத்தின்மூலம் பயன் அடைந்துள்ளனர்.

தஞ்சாவூரிலும் மற்றும் நாகர்கோயில் மாவட்டத்தைச்சார்ந்த பரக்கை என்னும் இடத்திலும் மீன் வளர்ப்போர் பயனடையும் வகையில் இரண்டு மீன்வள பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.

2002-2003 நிதியாண்டில் 31,278 பண்ணையாளர்கள் நிலையப் பயிற்சிகள் மற்றும் கிராமங்களுக்குச் சென்று அளிக்கப்படும் பயிற்சிகள்மூலம் பயனடைந்துள்ளனர். 24,296 பண்ணையாளர்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டன. கால்நடை பராமரிப்பு, கறவை மாடு வளர்ப்பு மற்றும் ஆடு வளர்ப்பு ஆகியவற்றில் அஞ்சல் வழிக் கல்வியும் நடத்தப்பட்டது. 50 வானொலி நிகழ்ச்சிகளும், 36 தொலைக்காட்சி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. வானொலி வேளாண் பள்ளியின் 7 நிகழ்ச்சிகள்மூலம் 2,065 பேர் பயனடைந்துள்ளனர். மேலும் பண்ணையாளர்களுக்குப் பயன் தரும் வகையில் ஏழு புத்தகங்கள் மற்றும் மூன்று ஒலித் தட்டுக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

**திட்டம்**

வளாக வசதி மேம்பாடு, தரமான உயர் கல்வி அளித்தல், சிறந்த ஆராய்ச்சிப் பணிகளை மேற்கொள்வதோடு கால்நடை உற்பத்தியை உயர்த்தி கால்நடைப் பண்ணையாளர்கள், கோழிப் பண்ணையாளர்கள் மற்றும் மீன் வளர்ப்போருக்கு நவீனத் தொழில்நுட்பங்களை உடனுக்குடன் வழங்குதல் போன்றவை இப்பல்கலைக்கழகத் திட்டத்தின் முக்கிய நோக்கங்கள் ஆகும். பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் ரூ.22,908.16 இலட்ச நிதி ஒதுக்கீடு கோரப்பட்டுள்ளது. அவற்றுள் ரூ.17,232.28 இலட்சம் தற்போது நடைமுறையிலுள்ள திட்டங்களைச் செயல்படுத்துவதற்காகவும், ரூ.5,675.88 இலட்சம் புதிய ஆராய்ச்சித் திட்டங்களைத் தீட்டும் நோக்கத்திற்காகவும் கோரப்பட்டுள்ளது.



2003 மே 6]

**இணைப்பு - II**

*(246 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**கோரிக்கை எண் - 8**

## கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை - பால் வளம்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2003-2004

பால்வளம், தமிழகத்தில் பொருளாதார உயர்வுக்காகவும், பெருமளவில் வேலைவாய்ப்பு, சுயவேலைவாய்ப்பு, குறிப்பாக மகளிருக்கு அளிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது. பால்வளத் துறை, கிராமப்புறங்களைச் சார்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், நகரம் மற்றும் நகர்ப்புறத்தைச் சார்ந்தவர்களுக்கும் வருமானத்தை ஈட்டித் தருவதில் முக்கியத்துவம் பெறுகிறது. பால் மற்றும் பால் உபபொருட்கள் அனைத்துத் தரப்பு மக்களுக்கும் தேவைப்படும் ஊட்டச்சத்து அளிக்கிறது. கோடிக்கணக்கான சிறிய மற்றும் நடுத்தர விவசாயிகளுக்கு அன்றாட வாழ்க்கைக்கு வழிவகை செய்கிறது. விவசாயத்தினைச் சார்ந்த மாநிலமாக தமிழகம் விளங்குவதால், பெருவாரியான விவசாயிகள் கால்நடைகள் வைத்துள்ளார்கள். பால்வளம், விவசாயத்திற்கு அடுத்தபடியாக முக்கிய வருவாய் ஆதாரமாகத் திகழ்கின்றது. மாறும் தட்ப வெட்பநிலை உடைய இந்தியாவில், பருவமழை பொய்த்துவிட்டால் விவசாயம் பாதிக்கப்படுகிறது. ஆனால் பால் உற்பத்தி ஒருபோதும் பாதிக்காமல், தொடர்ந்து நிலையான வருவாயை அளிக்கிறது.

1958 ஆம் வருடத்தில் பால்வளத் துறை ஆரம்பிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் நிர்வாகக் கட்டுப்பாட்டிலிருந்த பால் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் ஒன்றியங்கள், 1-8-1965 முதல் பால் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம் மற்றும் சட்டரீதியான செயல்பாடுகள் பால்வளத் துறைக்கு மாற்றப்பட்டன. பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் விதிகளின்கீழ் செயற்பதிவாளராக நியமனம் செய்யப்பட்டார். தமிழகத்தில் "ஆனந்த்" பாணியில் சங்கங்கள் செயல்படத் தொடங்கியபோது, 1-2-1981 ஆம் தேதியில் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் பதிவு செய்யப்பட்டது.

அதுவரை தமிழ்நாடு பால்வள நிறுவனத்தால் செய்யப்பட்டு வந்த வணிகப்பணிகளாகிய பால் கொள்முதல், பதப்படுத்துதல் மற்றும் விற்பனை ஆகிய அனைத்துப் பணிகளும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு மாற்றப்பட்டன.

பரவலாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையினால், தனியார் பால் நிறுவனங்கள், பால்பண்ணைத் தொழிலில் நுழைந்துள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு, தமிழகத்தில் பால் கூட்டுறவுகளின் வளர்ச்சிக்கு உயரிய முக்கியத்துவம் அளித்து, உரிய உத்திகளைப் பயன்படுத்தி, தொடர்ச்சியான பல நடவடிக்கைகளை எடுத்துவருவதால் கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியங்கள் மற்றும் இணையம் குறிப்பிடும்படியான வெற்றியினைப் பெற்றுள்ளன.

**பால்வளத் துறையின் இரண்டு முக்கிய நோக்கங்கள்**

(1) நிலையான, மாறாத மற்றும் ஒழுங்குபடுத்தப்பட்ட விற்பனை முறைகள் மூலம் பால் உற்பத்தியாளர்கள் உற்பத்தி செய்யும் பாலுக்கு ஆதாயமான விலை கிடைக்க வழி செய்தல்.

(2) நுகர்வோருக்குத் தரமான பாலும், பால் பொருட்களும் நியாயமான விலையில் கிடைக்க வழி செய்தல்.

மேற்கண்ட இரண்டு முக்கிய நோக்கங்களை எய்த, பின்வரும் நடவடிக்கைகள் பால்வளத் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தவும், அதன்மூலம் கால்நடைகள் நீண்ட காலத்திற்கு அதிக பால் அளிப்பதை கருத்தில் கொண்டு, பால் கூட்டுறவுச் சங்கங்களிலுள்ள அங்கத்தினர்களின் கால்நடைகளுக்கு, இலவச மருத்துவ வசதி அளித்தல், செயற்கை முறை கருவூட்டல் செய்தல், சரிவிகித கால்நடைத் தீவனம் அளித்தல் மற்றும் அங்கத்தினர்களுக்கு நவீன கால்நடை பராமரிப்புப் பயிற்சி அளித்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன. நுகர்வோருக்கான தரமான பாலினை வழங்கல் மற்றும் விற்பனை உயர்விற்கு ஏற்ப புதிய குளிரூட்டும் நிலையங்கள் மற்றும் பால் பதப்படுத்தும் வசதிகளைப் பெருக்குதல், நவீன விற்பனை வழிமுறைகளை வகுத்தல் ஆகிய பணிகள் செயல்படுத்தப்படுகின்றன.



**பால்வளத் துறையின் அமைப்பு**

பால்பெருக்குத் துறை, பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் தலைமையின்கீழ் செயல்பட்டுவருகின்றது. பால் கூட்டுறவுகளின் செயற்பதிவாளராக ஆணையர் செயல்படுகிறார். மேலும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குனராகவும் இருந்து வருகின்றார்.

பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழ் சட்டபூர்வ பணிகளான கூட்டுறவுச் சங்கங்கள், ஒன்றியம் மற்றும் இணையம் ஆகியவற்றைப் பதிவு செய்தல், மேற்பார்வை, ஆய்வு, விசாரணை, தகராறு தீர்த்து வைத்தல் மற்றும் கூட்டுறவுச் சங்கங்களை கலைத்தல் ஆகியவற்றைச் செய்கிறார். மேற்கண்ட சட்டபூர்வ பணிகளைச் செய்வதற்கு ஆணையருக்கு உதவியாக கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் நிலையில், ஒரு துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு), ஒரு துணைப் பதிவாளர் (தலைமையிடம்) மற்றும் மாவட்ட அளவில் 23 சரக துணைப் பதிவாளர்கள், பதிவாளரின் சட்டபூர்வ அதிகாரங்களைப் பெற்று செயல்படுகின்றார்கள். பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் விவரம் இணைப்பில் தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

**துறையின் செயல்பாடுகள்**

பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தல், பதிவு செய்து அவற்றின் செயல்பாடுகளை மேற்பார்வை செய்தல் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மற்றும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துதல் போன்ற முக்கிய பணிகளைச் செய்து வருகின்றது.

விசாரணை, ஆய்வு, தண்ட வசூல் நடவடிக்கை மற்றும் சட்டத்திற்குப் புறம்பாக செயல்படும் நிர்வாகக் குழுவினை கலைத்து, தனி அலுவலர்கள் நியமனம் செய்தல் மற்றும் செயலிழந்த சங்கங்களின் செயல்பாடுகளை

[2003 மே 6

முடிவுக்குக் கொண்டுவருதல் ஆகிய சட்டபூர்வப் பணிகளை பால்வளத் துறை செய்து வருகிறது. நீதிமுறை சார்புடைய அதிகாரங்களான தகராறுகள், மேல்முறையீடு, சீராய்வு, மறு ஆய்வு, போன்ற அதிகாரங்கள், பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர், துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு) மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால் பதம்) ஆகியோருக்கு 1983 ஆம் வருடத்திய தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம், 1988 தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளின்கீழான அதிகாரங்களைச் செலுத்த தமிழக அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

பால் மற்றும் பால்பொருட்கள் ஆணை 1992-ன்கீழ் தமிழ்நாடு மாநிலத்திற்கு பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் மாநில பதிவு அதிகாரியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். தமிழகத்தில் செயல்பட்டு வருகின்ற அனைத்து கூட்டுறவு மற்றும் தனியார் பால் பண்ணைகள் நாள் ஒன்றுக்கு 10,000 லிட்டர் பால் கையாண்டாலோ அல்லது பால் பொருட்களிலுள்ள மொத்த சத்து வருடத்திற்கு 500 மெட்ரிக் டன் கையாண்டாலோ அவை பால் மற்றும் பால் பொருட்கள் ஆணையின்கீழ் பதிவுச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். பால் உற்பத்தி மற்றும் பால் பண்ணை மேம்பாட்டுத் துறை ஆணையர் / மாநில பதிவு அதிகாரிக்கு, நாளொன்றுக்கு 10,000 லிட்டர் முதல் 2,00,000 லிட்டர் வரை பால் உற்பத்தி செய்கின்ற பால் பண்ணைகளுக்கு பதிவுச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் மத்திய அரசால் வழங்கப்பட்டுள்ளது. ஆணையர், துணைப் பால் ஆணையர் (கூட்டுறவு), அந்தந்த மாவட்ட ஆட்சியர் மற்றும் சரக துணைப் பதிவாளர் (பால் பதம்) ஆகியோருக்கு பதிவு பெற்ற பால் பண்ணைகளின் செயல்பாட்டினை கண்காணிக்கவும், காலமுறை ஆய்வு மேற்கொள்ளவும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

**பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்**

பால் மாடுகள் வைத்திருந்து, 1872 ஆம் ஆண்டு இந்திய ஒப்பந்தச் சட்டப்படி ஒப்பந்தம் செய்து கொள்ள தகுதி பெற்ற 25 அல்லது அதற்கு மேலும் உள்ள நபர்கள் ஒன்று சேர்ந்து, ஒன்றுக்கு மேற்பட்ட கிராமங்களை விவகார எல்லையாகக் கொண்டு, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக் கொள்ளலாம். அவர்கள் அந்தந்த மாவட்டத்திலுள்ள சரகத் துணைப் பதிவாளர்களை அணுகி



2003 மே 6]

ஆலோசனை பெறலாம். பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் சங்கத்திற்கு தரமான பாலை வழங்க வேண்டும். சங்கத்திற்கு பால் வழங்கும் உறுப்பினர்கள் 10 / 15 நாட்களுக்கு ஒரு முறை பால் பணம் பெறுவர். சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ வசதி, செயற்கைமுறை கருவூட்டல், சமன்படுத்தப்பட்ட கால்நடைத் தீவனங்கள் வழங்குதல் ஆகியவை செய்து தரப்படுகின்றன. விவசாயிகளுக்கு வழங்கும் கால்நடை பராமரிப்புப் பயிற்சி, கறவை மாடுகளின் தரத்தை உயர்த்தி அதன்மூலம் அவற்றின் உற்பத்தித் திறனை மேம்படுத்தி உறுப்பினர்கள் நீண்ட காலத்திற்கு பயன்பெறுவதை உறுதி செய்கிறது.

**மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்:**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி, மகளிர் பால் தொழிலில் அதிகமாக ஈடுபடுவதை ஊக்கப்படுத்த, மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அந்தந்தப் பகுதிகளில் அமைக்கப்பட்டு வருகின்றன. அதன்படி, தமிழகத்தில் தற்பொழுது 1404 மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

**தனி அலுவலர்கள் நியமனம்:**

பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் இணையம் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களால் நிர்வகிக்கப்பட்டு வந்தன. தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுக்களின் பதவிக் காலம் ஏற்கெனவே முடிந்திருந்தாலும், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 33(10)(AA)-யின்படி அந்நிர்வாகக் குழுக்களின் பதவிக் காலம் நீட்டிக்கப்பட்டிருந்தாலும் அவர்களுடைய பதவிக் காலத்தை அரசு ஆணைகளின்படி முடிவுக்குக் கொண்டுவந்து கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், பிரிவு 89(1)ன்கீழ் தனி அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் 26-5-2001 முதல் தனி அலுவலர்களின் பொறுப்பில் இயங்கி வருகின்றன. 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தனி அலுவலர்களாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர் இணையத்திற்கு அதன்

[2003 மே 6

நிர்வாக இயக்குனரே தனி அலுவலராக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

**ஒன்றியங்களின் செயல்பாடுகள்:**

1. தமிழகத்தில், சென்னை தவிர மற்ற 28 மாவட்டங்களை உள்ளடக்கி, 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் செயல்பட்டு வருகின்றன.
2. 16 பால் பதப்படுத்தும் பண்ணைகள், நாளொன்றுக்கு 18.96 இலட்சம் லிட்டர் பால் பதப்படுத்தும் திறனுடன் செயல்படுகின்றன.
3. 39 பால் குளிரூட்டும் நிலையங்கள், நாளொன்றுக்கு 12.83 இலட்சம் லிட்டர் பால் குளிரூட்டும் திறனுடன் செயல்படுகின்றன.
4. புதிய குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல்.
5. புதிய கொள்முதல் வழித்தடங்கள் அமைத்து, சங்கங்களிலிருந்து பால் கொள்முதல் செய்தல்.
6. பாலை சங்கங்களிலிருந்து கொள்முதல் செய்து, நவீன பால் பண்ணைகளில் பதப்படுத்தி, தரத்தினை உறுதி செய்து, பாக்கெட்டுகளில் அடைத்து உள்ளூரில் விற்பனை செய்தல்.
7. சென்னை மாநகரத்திற்குத் தேவைப்படும் பாலினை சுகாதார முறைப்படி அனுப்பிவைத்தல்.
8. கொள்முதல் விலை மற்றும் விற்பனை விலையை நிர்ணயம் செய்தல்.
9. புதிய விற்பனை உத்திகளைப் புகுத்தி, ஒன்றியங்களின் திரவப் பால் விற்பன்னையைப் பெருக்குதல்.
10. ஒன்றியம் மூலம் பெறப்படும் இடுபொருள் வசதியை சங்க உறுப்பினர்களுக்கு அளித்தல்.
11. தொடக்க சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு மருத்துவ வசதி மற்றும் அவசரகால மருத்துவ வசதி வழங்குதல்.
12. உறுப்பினர், சங்கப் பணியாளர்களுக்கு கால்நடை முதலுதவிப் பயிற்சியும், செயற்கைமுறை கருவூட்டல் பயிற்சியும் வழங்குதல்.
13. சங்க உறுப்பினர்களின் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் வசதியை ஏற்படுத்திக் கொடுத்தல்.



2003 மே 6]

14. சங்கங்களுக்கு துருவுறா எஃகு பால் கேன்கள், பால் பரிசோதனைக் கருவி மற்றும் திரவ நைட்ரஜன் குடுவைகள் வழங்குதல்.
15. சேலம், ஈரோடு, மதுரை, தருமபுரி ஒன்றியங்களில் உள்ள பால் பண்ணைகளில் பால் பதனிடும் வசதியுடன், பால் பொருட்களை உற்பத்தி செய்யும் வசதிகளும் உள்ளன. ஒன்றியங்களின் உள்ளூர் விற்பனை நீங்கலாக உள்ள உபரி பால், அருகிலுள்ள பால் பொருட்கள் உற்பத்தி செய்யும் பால் பண்ணைகளுக்கு பால் உபபொருட்களாக மாற்ற எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்தப் பால் பண்ணைகளில், பால் உபபொருட்களாகிய வெண்ணெய், பால் பவுடர் மற்றும் நெய் ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.
16. மாதவரம், ஈரோடு மற்றும் மதுரை அருகில் கப்பலூரில் உள்ள கால்நடைத் தீவன ஆலைகள் முறையே காஞ்சிபுரம்-திருவள்ளூர், ஈரோடு மற்றும் மதுரை ஒன்றியங்களினால் இயக்கப்பட்டு வருகின்றன. இந்த ஆலைகள் ஒவ்வொன்றின் உற்பத்தித் திறன் நாளொன்றுக்கு 100 மெட்ரிக் டன்கள் ஆகும். இம்மூன்று ஆலைகளில் உற்பத்தியாகும் குச்சிவகை மற்றும் தூள்வகை தீவனங்கள், பால் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கும், கால்நடை பராமரிப்புத் துறையின்கீழ் செயல்படும் கால்நடை பண்ணைகளுக்கும், சென்னை மாநகராட்சி உட்பட ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களுக்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**இணையத்தின் செயல்பாடுகள்:**

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம், 17 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தலைமை நிறுவனமாகும். இணையத்தின்கீழ் நான்கு இடங்களில் பால் பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. முதலாவது பண்ணை, அம்பத்தூரில் நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டரும், இரண்டாவது பண்ணை, மாதவரத்தில் நாளொன்றுக்கு 2.00 இலட்சம் லிட்டரும், மூன்றாம் பால் பண்ணை, சோழிங்கநல்லூரில் நாளொன்றுக்கு 4.00 இலட்சம் லிட்டரும், செயல்திறன் உள்ளவையாக இயங்கி வருகின்றன. இப்பண்ணைகள் ஒன்றியங்களிலிருந்து பாலினைப் பெற்று, பதப்படுத்தி, பால் பைகளில் நிரப்பி, சென்னை மாநகரம் மற்றும் புறநகர்

[2003 மே 6

பகுதிகளுக்கு விற்பனைக்காக அனுப்பிவைக்கின்றன. அம்பத்தூரில் உள்ள நான்காவது பண்ணை, பால் உபபொருட்களாகிய யோகர்ட், ஐஸ்கிரீம், கோவா மற்றும் மைசூர்பா போன்றவற்றைத் தயாரித்து வருகின்றது. ஒன்றியங்களிலிருந்து பெறப்படும் பாலை சென்னை பெருநகரில் விற்பனை மேற்கொள்வதும், மாவட்ட ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களை விற்பனை செய்வதுமான ஒருங்கிணைப்புப் பணியை இணையம் மேற்கொண்டு வருகிறது.

இணையத்தின் பால் மற்றும் பால் பொருட்களின் விற்பனை கீழ்க்கண்ட மூன்று பிரிவுகளால் மேற்கொள்ளப்படுகின்றன:—

(1) பெருநகர் பால் விற்பனை.

(2) பெருநகர் பால் உபபொருட்கள் விற்பனை.

(3) பிற மாநிலங்களில் பால் உபபொருட்கள் விற்பனை.

சென்னை பெருநகரிலும் மற்றும் புறநகர் பகுதிகளிலும் பால் உபபொருட்கள் இணையத்தால் நேரடியாக நந்தனத்தில் உள்ள பால்பொருள் விற்பனை பிரிவின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன. உபபொருட்கள், அம்பத்தூரில் உள்ள சேமிப்புக் கூடத்தில் வைக்கப்பட்டு, விற்பனை நிலையங்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

36 ஆவின் பாலகங்கள், 125 சில்லறை உரிமம் பெற்றவர்கள், 8 மொத்த விற்பனையாளர்கள், 3,000 சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் 44 பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவை மூலம் பால் மற்றும் பால் உபபொருட்கள் விற்பனை மேற்கொள்ளப்படுகின்றன. திருமணம் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளுக்கான பால் மற்றும் பால் பொருட்களின் தேவையை ஆவின் நிறுவனம் சிறப்பு விற்பனைமூலம் பூர்த்தி செய்கிறது.

217 தானியங்கி பால் வழங்கும் நிலையங்கள் மற்றும் 178 கண்ணாடி இழைத் தொட்டிகள் மூலமாக நுகர்வோர்களுக்கு நிலைப்படுத்திய பால் விற்கப்பட்டு வருகின்றது. சில தானியங்கி பால் வழங்கும் நிலையங்களிலும் பால் பொருட்கள் விற்கப்படுகின்றன. தற்பொழுது, தானியங்கி பால் வழங்கும் நிலையங்களில், பால் பை விற்பனையும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

ஒன்றியங்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைத்து வழி நடத்தி, அவற்றிற்குத் தேவையான தொழில்நுட்ப ஆலோசனைகளை இணையம்



2003 மே 6]

வழங்குகின்றது. ஒன்றியங்கள் சார்பாக திட்டமிடல், பால் பண்ணைகள் மற்றும் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், விரிவாக்கம் செய்தல் ஆகிய பணிகளையும், இயந்திரச் சாதனங்களை நிறுவி உற்பத்தியைத் தொடங்கிவைக்கும் பணிகளையும் "டர்ன்கீ" (Turnkey) அடிப்படையில் இணையம் மேற்கொள்கின்றது. ஒன்றியங்கள் உற்பத்தி செய்யும் பால் பொருட்களாகிய பால்பவுடர், நெய், வெண்ணெய், பாலாடைக்கட்டி ஆகியவற்றை இம்மாநிலத்திலும், பிற மாநிலங்களிலும் விற்பனை செய்ய இணையம் உதவி புரிகின்றது.

**பால் கொள்முதல் விலை**

பால் உற்பத்தியாளர்களுக்கு, பால் கொள்முதல் விலை 1-12-2001 முதல் கீழ்க்கண்டவாறு உயர்த்தப்பட்டுள்ளது:

| காலம் | எருமைப் பால் | | பசும்பால் | |
|---|---|---|---|---|
| | (கொழுப்புச் சத்து கிலோ ஒன்றுக்கு.) | ஒரு லிட்டரின் விலை. | (மொத்த திடப்பொருள் கிலோ ஒன்றுக்கு.) | ஒரு லிட்டரின் விலை. |
| 1.12.2001 முதல் இன்று வரை. | ரூ.156.28-லிருந்து ரூ.163.40. | ரூ.10.94-லிருந்து ரூ.11.44. | ரூ.69.23 -லிருந்து ரூ.73.08. | ரூ.9.00-லிருந்து ரூ.9.50. |

**பால் விற்பனை விலை**

| சமன்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) Toned Milk. | | நிலைப்படுத்திய பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) Standardised Milk. | | முழுக்கொழுப்புச் செறிந்த பால் (லிட்டர் ஒன்றுக்கு) (பால் பைகளில்) Full Cream Milk. | | நிலைப்படுத்திய பால் (தானியங்கி பால் வழங்கும் நிலையத்தில்) (லிட்டர் ஒன்றுக்கு) Automatic Vending Machine. | |
|---|---|---|---|---|---|---|---|
| பால் அட்டை | ரொக்கம். | பால் அட்டை | ரொக்கம். | பால் அட்டை | ரொக்கம். | பால் அட்டை | ரொக்கம். |
| ரூ.12.50 | ரூ.14.00 | ரூ.14.50 | ரூ.16.00 | ரூ.16.50 | ரூ.18.00 | ரூ.14.00 | ரூ.14.50 |

[2003 மே 6

**உள்ளீட்டுப்பணி—பால் உற்பத்தியை மேம்படுத்தும் திட்டம்**

கூட்டுறவு அமைப்பின்கீழ் 13.07 இலட்சம் பசு மற்றும் 2.72 இலட்சம் எருமை கறவை இனங்கள் கொண்டு வரப்பட்டுள்ளன. அவற்றிற்கு மருத்துவம் மற்றும் இனவிருத்திக்கான உறைவிந்து செயற்கைமுறை கருவூட்டல் செய்ய தேவையான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. பால் உற்பத்தியாளர் சங்க உறுப்பினர்களுக்கு கால்நடை தீவனமும், பசுந்தீவனமும் வழங்கப்படுகின்றன. நடமாடும் கால்நடை மருத்துவப் பிரிவுகள் மூலம் சிகிச்சையும், கோமாரி மற்றும் தைலேரியாசிஸ் போன்ற நோய்களுக்கு எதிராக தடுப்பு ஊசி போடும் வசதியும் செய்யப்பட்டுள்ளன.

**கால்நடை பராமரிப்பு மற்றும் கருவூட்டல் நடவடிக்கைகள்**

செயற்கைமுறை கருவூட்டல் வசதி 2,515 பால் கூட்டுறவுச் சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கிராம அளவில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலம் கால்நடைகளுக்கு செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டில் 12.26 இலட்சம் கால்நடைகளுக்கு உறைவிந்து செயற்கைமுறை கருவூட்டல் செய்யப்பட்டுள்ளது. அதனால் 3.07 இலட்சம் கன்றுகள் பிறந்துள்ளன. மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களில் தேர்ச்சி பெற்ற மருத்துவர் மூலம் நடமாடும் கால்நடைப் பிரிவு செயல்படுகின்றது. 4,539 பால் கூட்டுறவுச் சங்கங்கள் கால்நடை மருத்துவ நலத் திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. சென்ற ஆண்டில் 5.35 இலட்சம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளன. கால்நடை உரிமையாளர்களிடம் இருந்து வரும் அவசரக் கால அழைப்பிற்காக அவசரக் கால சிகிச்சைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின்கீழ் 56 முழுநேர கால்நடை சிகிச்சைப் பிரிவுகளும், 35 அவசரக் கால சிகிச்சைப் பிரிவுகளும் செயல்பட்டு வருகின்றன.

**இனவிருத்தித் திட்டம்**

செயற்கை முறை கருவூட்டலின் பயனாக, 2002-2003 ஆம் ஆண்டில் 1.48 இலட்சம் வீரியமுள்ள கிடேரிக் கன்றுகள் பிறந்துள்ளன. கடந்த 2002-2003 ஆம் ஆண்டில் உதகமண்டலத்திலுள்ள கருவூலப் பொலிகாளைப் பண்ணையிலுள்ள உறைவிந்து நிலையத்திலும்,



2003 மே 6]

ஈரோட்டிலுள்ள எருமை இனப் பொலிகாளை உறைவிந்து நிலையத்திலும், தலா 10.83 இலட்சங்கள் பசுவின மற்றும் 2.95 இலட்சங்கள் எருமையின உறைவிந்துக் குச்சிகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன.

**புனரமைப்புத் திட்டம்**

**ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்—மத்திய மாநில அரசுகளின் கூட்டுத் திட்டம்—கூட்டுறவுகளுக்கு உதவுதல்**

நட்டத்தில் இயங்கும் ஒன்றியங்களைச் சீரமைப்பதற்காக மத்திய அரசு, ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் "கூட்டுறவுகளுக்கு உதவும் புனரமைப்புத் திட்டம்" ஒன்றினை சில நிபந்தனைகளுக்கு உட்பட்டு உருவாக்கியது. இத்திட்டத்திற்கு ஆகும் செலவில் 50 விழுக்காடு மத்திய அரசும், 50 விழுக்காடு மாநில அரசும் மானியமாக வழங்கும்.

இத்திட்டத்தின்கீழ், ஈரோடு மற்றும் விழுப்புரம் ஒன்றியங்களை மேம்படுத்த தேசிய பால்வள வாரியம் தெரிவு செய்தது. மேற்குறிப்பிட்டுள்ள திட்டத்திற்கான தமிழக அரசின் பங்கு ரூ.6.50 கோடி, ஏற்கெனவே தமிழக அரசினால் வழங்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, விழுப்புரம் ஒன்றியத்திற்கு ரூ.1.50 கோடியும், ஈரோடு ஒன்றியத்திற்கு ரூ.2.25 கோடியும் முதல் தவணையாக வழங்கியுள்ளது. மேற்குறிப்பிட்ட தொகைகளை இரண்டு ஒன்றியங்களும் பால் உற்பத்தியாளர்களின் பால் பணம் பட்டுவாடா செய்ய பயன்படுத்தியுள்ளது.

**பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பில் உதவி**

சொத்துகள் அற்ற கிராமப்புற பெண்கள், பெண்கள் தலைமையேற்கும் குடும்பங்கள், தாழ்த்தப்பட்ட/பழங்குடியினர் குடும்பங்கள், பால் பண்ணைத் தொழிலில் ஆர்வம் உடைய பெண்கள் ஆகியோரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்காக பயிற்சி மற்றும் வேலைவாய்ப்பிற்கு ஊக்கம் அளிக்கும் திட்டம் சென்ற ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டத்திற்கானச் செலவு ரூ.649.463 இலட்சம் ஆகும். இத்திட்டம் மூன்றாண்டுகளில் சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், வேலூர், விழுப்புரம், தருமபுரி மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படும். 10,000 பெண்களுக்கு சட்ட அறிவு, கால்நடைகளுக்கான செயற்கைமுறை

கருத்தரிப்பு, முதலுதவி, பால் சோதனைக் கருவி உபயோகித்தல், பால் கலப்படம் கண்டுபிடிப்பு, பால் மாடுகள் நிர்வாகம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் வழங்கப்படும். இதன்மூலம் நிலையான வருவாய் தொடர்ந்து பெறமுடியும். மைய அரசின் 90 விழுக்காடு நிதியுதவிடன் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மீதமுள்ள 10 விழுக்காடு திட்டத் தொகையை பயனாளிகளுக்காக, மாவட்ட ஒன்றியங்கள் ஏற்கும்.

மத்திய அரசிடமிருந்து முதல் தவணையாக ரூ.132.48 இலட்சம் பெறப்பட்டு, அதில் ரூ.111.08 இலட்சங்கள் செலவிடப்பட்டுள்ளன. 2002-2003 ஆம் ஆண்டில், அனைத்து மகளிர் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க நிர்ணயிக்கப்பட்ட குறியீடான 58-ல், 50 மகளிர் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. 3590 மகளிர் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 2002-2003 ஆம் ஆண்டில் பால் கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாடுகள்

### பிரதம சங்க அளவில் பரிசோதனை மூலமாக பால் கொள்முதல் செய்தல்

தரமான பாலை கொள்முதல் செய்து, அதன்மூலம் உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்கச் செய்வதற்கு பாலின் தரமளக்கும் முறை தொடக்க கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்படுகிறது. மேலும் தரமான பால் கொள்முதல் செய்ய வழிவகுக்கிறது. சென்னைக்கு வரும் பாலின் தரம் கொழுப்புச்சத்து 4.3 விழுக்காடாக இருந்த நிலை மாற்றப்பட்டு, 4.5 விழுக்காடாகவும், இதர சத்துகள் 8.2 விழுக்காடாக இருந்த நிலை மாற்றப்பட்டு, 8.3 விழுக்காடாகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் நுகர்வோர்களுக்குத் தரமான பால் கிடைக்கிறது.

### பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு சீருடை வழங்குதல்

மாவட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் மற்றும் தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் கூட்டுறவு இணையப் பணியாளர்களுக்கு மட்டும் சீருடைகள் வழங்கப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணைப்படி, பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களைக் களப்பணியில்



உற்சாகப்படுத்தவும், அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்தவும், கடந்த நிதியாண்டில் அனைத்து பிரதம பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு முதல்முறையாக சீருடை வழங்கப்பட்டது. இதன்மூலம் 28,500 கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன் அடைந்து உள்ளார்கள்.

### உறுப்பினர்களுக்கு பால்பணம் பட்டுவாடா செய்வதில் முன்னேற்றம்

2001 ஆம் ஆண்டு, மே மாத நிலவரப்படி சங்கங்கள் உறுப்பினர்களுக்குக் கொடுக்கவேண்டிய நிலுவைத் தொகை ரூ.35 கோடியாக இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அவர்களின் ஆணையின்படி, எடுத்த தொடர் நடவடிக்கையின் பயனாக 2003 ஆம் ஆண்டு, ஏப்ரல் மாத நிலவரப்படி உறுப்பினர்களுக்குக் கொடுக்க வேண்டிய பால் பண நிலுவைத் தொகை ரூ.12 கோடியாக குறைந்துள்ளது.

### பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பதில் முன்னேற்றம்

2002-2003 ஆம் நிதியாண்டில் 195 பால் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### இலாபத்தில் செயல்படும் பால் கூட்டுறவுச் சங்கங்கள்

2000-2001 ஆம் ஆண்டில் செயல்பட்ட 7626 சங்கங்களில் 3950 சங்கங்கள் மட்டுமே இலாபத்தில் செயல்பட்டு வந்தன. கிராம அளவில் செயல்படுகின்ற பால் கூட்டுறவுச் சங்கங்கள் இலாபத்தில் செயல்படுகின்றபோதுதான், பால் வழங்கும் உறுப்பினர்கள் தங்களுக்குரிய பால் பணப் பட்டுவாடாவை உரிய நேரத்தில் பெறுவதோடு, போனஸ் மற்றும் ஊக்கத்தொகை போன்ற பணப்பயன்களையும் பெறமுடியும். இதைக் கருத்திற்கொண்டு, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணைப்படி, சங்கங்களின் நிதி ஆதாரத்தை மேம்படுத்த நடவடிக்கை மேற்கொண்டதன் பயனாக 2003 ஆம் ஆண்டில் செயல்படும் 6980 சங்கங்கள் அனைத்துமே இலாபத்தில் செயல்பட்டு வருகின்றன.

### ஒன்றியங்கள் அளவில் "புதிய பொது வடிவம்" அறிமுகப்படுத்துதல்

நுகர்வோருக்குச் சென்றடையும் பாலின் தரத்தினை உறுதி செய்யும்

[2003 மே 6

"புதிய பொது வடிவம்" என்ற கூட்டுறவு முத்திரை சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, ஈரோடு மற்றும் நீலகிரி ஒன்றியங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. "ஆவின்" எனக் குறிப்பிடப்படும் பாலின் விற்பனையை விளம்பரப்படுத்தும் சாதனமாக அமைந்துள்ளது.

**பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்று (ஐ.எஸ்.ஓ. 9002)**

2002-2003 ஆம் ஆண்டில், சேலம் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒனறியம் பன்னாட்டுத் தர நிர்ணயச் சான்று (ஐ.எஸ்.ஓ. 9002-1994) பெற்றுள்ளது.

**பால் பொருட்களின் ஏற்றுமதித் தரம்**

சேலம், ஈரோடு ஒன்றியங்களில் தயாரிக்கப்படும் பால் பவுடர் ஏற்றுமதித் தரம் (Export Licence) வாய்ந்ததற்கான சான்று பெறப்பட்டுள்ளது.

**பால் உப பொருட்களின் விற்பனை**

1996 முதல் 2001 வரையிலான முந்தைய ஆட்சிக் காலத்தில் நெய் விற்பனை சராசரியாக ஆண்டொன்றுக்கு 3411 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. அதேபோல் கொழுப்பு நீக்கிய பால் பொடி விற்பனை 2647 மெட்ரிக் டன்னாக மட்டுமே இருந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் ஆணையின்படி, எடுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கையின் பயனாக இந்த இரண்டு ஆண்டுகளில் நெய் விற்பனை இரண்டு மடங்காக உயர்ந்து 6477 மெட்ரிக் டன் அளவுக்கு விற்பனை செய்துள்ளது. மேலும் கொழுப்பு நீக்கிய பால்பொடி விற்பனை நான்கு மடங்கு உயர்ந்து, 9127 மெட்ரிக் டன் அளவுக்கு இணையத்தின் மூலம் விற்பனை செய்து ஒன்றியங்கள் சாதனை படைத்துள்ளன.

**ஒன்றியங்களின் அடிப்படை வசதிகளை அதிகரித்தல்**

2002-2003 ஆம் ஆணடில் நாளொன்றுக்கு 50,000 லிட்டர் கொள்ளளவு உள்ள புதிய பால் குளிரூட்டும் நிலையம் ரூ.57.50 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், திருச்சி மாவட்டம் மணப்பாறை நகரத்தில் நிறுவப்பட்டுள்ளது. இராமநாதபுரம் மாவட்டத்தில் தரம் வாய்ந்த பாலினை விற்பனை செய்வதற்கு ஏதுவாக ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் பரமக்குடி பால் குளிரூட்டும் நிலையம், பால் பை



2003 மே 6]

நிரப்பும் வசதியுடன் விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

**இலாபம் ஈட்டும் ஒன்றியங்கள்**

2000-2001 ஆம் ஆண்டில் 17 மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் 5 மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள் மட்டுமே இலாபம் ஈட்டின. 2002-2003 ஆம் ஆண்டில் ஈரோடு, விழுப்புரம், வேலூர், திருச்சி, தஞ்சாவூர், சிவகங்கை, புதுக்கோட்டை, கன்னியாகுமரி, திண்டுக்கல் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய 10 மாவட்ட பால் உற்பத்தியாளர் ஒன்றியங்கள் இலாபம் ஈட்டி சாதனை படைத்துள்ளன.

**இணைய அளவில் புதிய பொது வடிவம் அறிமுகப்படுத்துதல்**

'புதிய பொது வடிவம்' என்ற கூட்டுறவு முத்திரை இணையத்தில் 12-11-2001 அன்று தேசிய பால் வள நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டது.

சென்னையிலுள்ள அனைத்து விற்பனை வாகனங்களின் இரு பக்கமும், நல்ல விளம்பரத்திற்காக 'புதிய பொது வடிவம்' என்ற கூட்டுறவு முத்திரை வரையப்பட்டுள்ளது.

**வானொலியில் விளம்பரங்கள் செய்யப்படுதல்**

பன்னாட்டு தர நிர்ணயச் சான்று (ISO 9002) இணையத்தின் ஒரு பிரிவான உதகை பொலிகாளை பண்ணை பன்னாட்டுத் தரச்சான்று பெற்றுள்ளது.

தனியார் பால் விற்பனையாளர்களின் போட்டிகளைச் சமாளிப்பதற்கும், மாதாந்திர பால் அட்டைகள் வாங்கும் நுகர்வோர்களை ஊக்குவிப்பதற்காகவும், பரிசுகள் மற்றும் இலவச அன்பளிப்புகள் நுகர்வோருக்கு வழங்கப்படும் விற்பனை உத்திகள் கையாளப்படுகின்றன.

2001-2002 ஆம் ஆண்டுவரை இணையம் தொடர்ந்து நட்டத்தில் இயங்கி வந்தது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி எடுக்கப்பட்ட கீழ்க்கண்ட நெறி நடவடிக்கையின் பலனாக இந்த ஆண்டு ரூ.16.46 கோடி இலாபம் ஈட்டி வரலாறு

[2003 மே 6

**சிக்கன நடவடிக்கைகள்**

(அ) வாகனச் செலவு குறைப்பு.

(ஆ) பதப்படுத்திய பாலிற்கு பதிலாக புதிய, தரமான குளிரூட்டிய பால் கொள்முதல் செய்தல்.

(இ) பால் பைகள் வீணாவதைத் தவிர்த்தல்.

(ஈ) பால் சேதாரச் செலவு குறைப்பு.

(உ) பொருள் கொள்முதல் செலவு குறைப்பு

(ஊ) எரி எண்ணெய், தண்ணீர் மற்றும் மின்சாரச் செலவு குறைப்பு.

(எ) பால் பவுடர் மற்றும் நெய் விற்பனை விலையை உயர்த்தி விற்பனை செய்வது.

(ஏ) மிகை நேர ஊதியம் தவிர்த்தல்.

(ஐ) ஏர்-இந்தியா போன்ற நிறுவனங்களுக்கு நிலைப்படுத்திய பால் விற்பனை செய்ய ஆணை பெறுதல்.

**பால்வளத் துறையின் பொதுவான புள்ளி விவரங்கள்**

| வரிசை எண் | இனம் | | செயலாக்கம் (31-03-2003) |
|---|---|---|---|
| 1 | முதன்மைச் சங்கங்களின் எண்ணிக்கை | | 8,486 |
| | (அ) பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | 8,423 | |
| | (ஆ) பால் வழங்கும் கூட்டுறவுச் சங்கம் | 1 | |
| | (இ) கூட்டுறவு பால் விற்பனை | 1 | |
| | (ஈ) பால் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் | 60 | |
| | (உ) பால் வழங்கும் கூட்டுறவு ஒன்றியம் | 1 | |
| 2 | செயல்படும் சங்கங்கள் | 6,980 | |
| 3 | உறுப்பினர்களின் எண்ணிக்கை | | 22.21 இலட்சம் |



2003 மே 6]

| | | |
|---|---|---|
| 4 | சங்க அளவில் பால் உற்பத்தி (நாளொன்றுக்கு) | 18.88 இலட்சம் லிட்டர் |
| 5 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியங்களின் எண்ணிக்கை | 17 |
| 6 | மாநில அளவு இணையம் | 1 |
| 7 | ஒன்றிய அளவில் பால் கொள்முதல் (நாளொன்றுக்கு) | 15.79 இலட்சம் லிட்டர் |
| 8 | சென்னை மாநகரத்தில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 6.53 இலட்சம் லிட்டர் |
| 9 | மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தி ஒன்றியங்களின் அளவில் பால் விற்பனை (நாளொன்றுக்கு) | 5.87 இலட்சம் லிட்டர் |
| 10 | பால் பதப்படுத்தப்படும் ஆலைகளின் எண்ணிக்கை | 16 |
| | (அ) பால் பதப்படுத்தும் திறன் (நாளொன்றுக்கு) | 18.96 இலட்சம் லிட்டர் |
| 11 | பால் குளிரூட்டும் நிலையங்கள் எண்ணிக்கை | 39 |
| 11 | (அ) குளிரூட்டும் திறன் (நாளொன்றுக்கு) | 12.83 இலட்சம் லிட்டர் |
| 12 | தானியங்கி பால் வழங்கும் நிலையங்களின் எண்ணிக்கை | 217 |

**வரும் நிதி ஆண்டிற்கான செயல் திட்டங்கள்:**

**பிரதமச் சங்கங்கள் அளவில் தூய்மையான பால் உற்பத்தி**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆணையின்படி ஒவ்வொரு ஒன்றியத்திலும் ஒரு பால் வழித்தடத்தினை தேர்வு செய்து, "தூய்மையான பால் உற்பத்தி" பற்றி விவசாயிகளுக்கு கற்றுக் கொடுத்து தூய்மையான பால் உற்பத்தி வழிமுறைகளை பால் வழித்தடங்களில் உள்ள பால் கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படுத்துதல்.

**இணைய அளவில்:**

சென்னை மாநகரத்தில் பால் பை விற்பனையை நாளொன்றுக்கு 5.79 இலட்சம் லிட்டரிலிருந்து 5.95 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்துவதற்கும், தானியங்கி பால் விற்பனையை நாளொன்றுக்கு 0.81 இலட்சம் லிட்டரிலிருந்து 0.95 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்த்தி, ஆக மொர்த்தம் 6.90 இலட்சம் லிட்டர் அளவுக்கு பால் விற்பனையை உயர்த்தவும் கீழ்க்கண்ட உத்திகள் கையாளப்படவுள்ளன.

இதுவரை பால் விநியோகத்தின்கீழ் வராத தாம்பரம் விரிவாக்கம், மறைமலைநகர், பூந்தமல்லி, ஆவடி, திருவள்ளூர், காஞ்சிபுரம், கல்பாக்கம், கூடுவாஞ்சேரி, ரெட் ஹில்ஸ் ஆகிய பகுதிகளிலும் பால் விற்பனை துவக்கப்படும்.

மொத்த பால் விற்பனையாளர்கள் எண்ணிக்கை 44-லிருந்து 60-ஆக உயர்த்தப்படும்.

மொத்த விற்பனையாளர்களை ஊக்குவித்து அதனால் சில்லரை விற்பனையாளர்களின் எண்ணிக்கை 800-லிருந்து 1,000-ஆக உயர்த்தப்படும்.

சென்னை மாநகர பால்பண்ணைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

சென்னை மாநகர பால்பண்ணைகள் எச்.ஏ.சி.சி.பி. (Hazard Analysis and Critical Control Point)-க்காக விண்ணப்பித்து அதைப் பெறவும் ஐ.எஸ்.ஓ.-9002: 1994-லிருந்து ஐ.எஸ்.ஓ. 9001-2000 இந்த வருடத்தில் பெறவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



பாலின் தரத்தினை உயர்த்துவதற்கும் அதன் குளிர்வு தன்மை நுகர்வோரை அடையும் வரையில் குறையாமல் இருக்கவும் தொடர் குளிர்சாதன வசதி அறிமுகப்படுத்தப்படும். சோழிங்கநல்லூர் பண்ணையிலிருந்து இயங்கும் 14 வழித்தடங்களில் குளிர்வுத் தன்மைநீக்கா வண்டிகள் (Insulated) வாயிலாக இயக்கப்பட உள்ளன. மேலும் மாதவரத்தில் உள்ள 35 விற்பனை வழித்தடங்களும், அம்பத்தூரில் உள்ள 37 விற்பனை வழித்தடங்களும் படிப்படியாக குளிர்வுத் தன்மையுள்ள வண்டிகள் வாயிலாக இயக்கப்படவுள்ளன.

தற்போது துறை அலுவலர்களால் நடத்தப்படும் 121 தானியங்கி பால் விற்பனை நிலையங்கள் படிப்படியாக தனியார் மூலம் நடத்தப்படும்.

கண்ணாடி இழை தொட்டிகளின் எண்ணிக்கை 178-லிருந்து 230-ஆக உயர்த்தப்படும்.

விழிப்புணர்வு ஊட்டவும், பால் வணிகச் சின்னத்தை பிரபலப்படுத்தவும் ஐந்து விளம்பரதாரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

பால் விற்பனையை உயர்த்துவதற்கு அனுபவம் வாய்ந்த தொழில் வல்லுநர்கள் வாயிலாக விற்பனை ஆய்வு மேற்கொள்ளப்படும்.

நுகர்வோர் நலம் மற்றும் ஊக்குவிப்புக் குழு, நுகர்வோர் கூட்டங்களை தொடர்ந்து நடத்துதல், பால் பண்ணைகளை பார்வையிடல், வீட்டுக்கு வீடு ஆவின் பால் அட்டைகள் வாங்குவதற்காக ஆதரவு நாடுதல் போன்றவற்றை மேற்கொள்ளும்.

குறித்த நேரத்தில் பால் விநியோகம் செய்வதையும், விநியோகத் தரத்தினை உயர்த்துவதையும் உறுதி செய்ய நிர்வாக இயக்குநரின் நேரடிப் பார்வையில் 10 சிறப்புக் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

**தரக் கட்டுப்பாட்டு ஆய்வகம்**

ரூ.69.78 இலட்சம் செலவில் மத்திய அரசின் 100 சதவீத மான்யத்தில் பால் உற்பத்தி மற்றும் பால்பண்ணை மேம்பாட்டுத் துறை, ஆணையர் அலுவலகத்தில் ஒரு தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் நிறுவப்பட்டுள்ளது. மேற்படி தரக்கட்டுப்பாட்டு ஆய்வகம் ஆணையரின் கட்டுப்பாட்டில்

செயல்படும். இந்த ஆய்வகம் தனியார் மற்றும் கூட்டுறவு பால் பண்ணைகளின் மூலம் விநியோகம் செய்யும் பால் மற்றும் பால் உபபொருட்களின் தரத்தினை பரிசோதனை செய்து அதற்கான சான்றிதழ் வழங்கும்.

**பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை**

பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறை, *1-10-1987* முதல் தொடங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது. கிராம அளவில் செயல்பட்டுவரும் பிரதம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் மாவட்ட அளவில் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் மாநில அளவில் இயங்கும் தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம் ஆகியவற்றின் சட்ட ரீதியான தணிக்கை, இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இத்துறையில், *370* பணியாளர்கள் மாற்றுப்பணி அடிப்படையில் கூட்டுறவு மற்றும் இதர துறைகளிலிருந்து பெறப்பட்டு பணிபுரிந்து வருகின்றனர்.

**தணிக்கை முன்னேற்றம்:**

**(அ) தொடக்கநிலை பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை 2001-2002 ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை**

*2001-2002* ஆம் ஆண்டிற்கு *8,648* தொடக்க பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களில், *31-12-2002* வரை *5,961* சங்கங்களின் தணிக்கை முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள *2,687* சங்கங்களின் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**(ஆ) மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியங்களின் தணிக்கை முன்னேற்றம்:**

*1997-1998* ஆம் ஆண்டு இறுதித் தணிக்கை தொடர்பாக *17* ஒன்றியங்களுக்கும் தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

**1998-1999 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள *17* ஒன்றியங்களில் *16* ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு சான்று வழங்கப்பட்டுள்ளது. ஒரு ஒன்றியத்தில் சோதனைத் தணிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.



**1999-2000 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள *17* மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்களில் *12* ஒன்றியங்களுக்கான தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச்சான்று வழங்கப்பட்டுள்ளது. *2* ஒன்றியங்களுக்கான தணிக்கை துவக்கப்பட்டு, முன்னேற்றத்திலுள்ளது. *3* ஒன்றியங்களில் தணிக்கை முடிக்கப்பட்டு அறிக்கை பெறப்பட்டுள்ளது.

**2000-2001 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள *17* ஒன்றியங்களில், *7* ஒன்றியங்களின் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. *2* ஒன்றியங்களின் தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது. *5* ஒன்றியங்களில் தணிக்கை துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. *3* ஒன்றியங்களில் தணிக்கை இன்னமும் துவக்கப்படவில்லை.

**2001-2002 இறுதித் தணிக்கை:**

மொத்தமுள்ள *17* ஒன்றியங்களில் *1* ஒன்றியத்தில் தணிக்கை முடிக்கப்பட்டு தணிக்கைச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. *9* ஒன்றியங்களில் தணிக்கை துவக்கப்பட்டு நடைபெற்று வருகிறது. *6* ஒன்றியங்களில் தணிக்கை இன்னமும் துவக்கப்படவில்லை. ஒன்றியத்திற்கான தணிக்கை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

**(இ) தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையம்:**

*1997-1998* ஆம் ஆண்டிற்கான தணிக்கை பால் கூட்டுறவுத் தணிக்கைத் துறையினரால் முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாண்டிற்குரிய தணிக்கைச் சான்று இயக்குனரது சோதனைத் தணிக்கைக்குப் பிறகு வழங்கப்படும்.

*1998-1999* ஆம் ஆண்டிற்கான தணிக்கை பால் கூட்டுறவுகளின் தணிக்கைத் துறையினரால் செய்யப்பட்டு முடியும் தருவாயிலுள்ளது.

**1999-2000 மற்றும் 2000-2001**

*2* உதவி இயக்குநர்/தணிக்கை பணியிடங்கள் அனுமதிக்கப்பட்டு தணிக்கை விரைவில் முடிக்கப்படத் தேவையான அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

**அரசு வருவாய்**

2000-2001-ல் தணிக்கை கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின்கீழ் கடந்த ஜனவரி 2003 முடிய கேட்பு ரூ.228.59 இலட்சத்தில் ரூ.224.33 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசு கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டு தணிக்கைக் கட்டணம் மற்றும் அடிப்படை விதி கட்டணத்தின்கீழ் கடந்த ஜனவரி 2003 முடிய கேட்பு ரூ.69.76 இலட்சத்தில் ரூ.60.93 இலட்சம் வசூலிக்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது.

**தொகுப்புரை:**

கிராமங்களில் வாழும் மக்கள், பிரதமப் பால் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்க பால் வளத் துறையை அணுகி அதன் மூலம் ஜீவாதார தொழிலை நடத்தி ஒரு நிலையான வருமானத்தைப் பெறலாம்.

ஆர்வமுள்ள இளைஞர்கள் மற்றும் மகளிர் மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியங்கள்/இணையத்தில், பால் மற்றும் பால் பொருட்கள் விற்பனை செய்ய முகவர்களாகப் பதிவு செய்து கொண்டு, பால் நுகர்வோர்களுக்கு பால் மற்றும் பால் பொருட்களை விற்பனை செய்து, அதன் மூலம் ஒரு நிலையான வருவாயைப் பெற்று தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ளலாம்.



## இணைப்பு-III

*(247 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கோரிக்கை எண் 7

### கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை—மீன்வளம்
## கொள்கை விளக்கக் குறிப்பு—2003-2004

**முன்னுரை**

தமிழ்நாடு 1,076 கிமீட்டர் நீளமுள்ள கடற்கரை (இந்திய கடற்கரையின் நீளத்தில் 15%) பகுதியைக் கொண்டுள்ளது. இப்பகுதியில் 1.9 இலட்சம் சதுர கிலோ மீட்டர் கடல் நீர்ப்பரப்பளவில் தனியுரிமை பொருளாதார மண்டலம் (EEZ) அமைந்துள்ளது. இம்மண்டலத்திற்குள் கடற்படு நிலத்தொடர் 41,412 சதுர கிலோ மீட்டர் உள்ளது.

தமிழ்நாட்டில் சுமார் 6.9 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். அவர்களில், 2.62 இலட்சம் மீனவ மக்கள் முழு நேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இவர்கள் கடற்கரையோர பகுதிகளில் அமைந்திருக்கும் 591 மீனவ கிராமங்களில் வசித்து வருகின்றனர். தமிழ்நாட்டில் 1,071 தொடக்க மீனவ கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவற்றில் 329 உள்நாட்டு மீனவர் மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் அடங்கும். இச்சங்கங்களில் 3,56,307 மீனவர்களும் 64,623 மீனவ மகளிரும் உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது 10,278 மீன்பிடி விசைப்படகுகளும், 49,000 பாரம்பரிய மீன்பிடிக் கலன்களும் உள்ளன. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களில் சுமார் 20,000 மீன்பிடிக் கலன்கள் வெளிப் பொருத்தும், உட்பொருத்தும் இயந்திரங்கள் பொருத்தப்பட்டு கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டு வருகின்றன. தமிழகத்தில் சென்னை, தூத்துக்குடி மற்றும் சின்னமுட்டம் ஆகிய இடங்களில் 3 பெரிய மீன்பிடி துறைமுகங்களும், பழையாறு மற்றும் வாலிநோக்கம் ஆகிய இடங்களில் 2 சிறிய மீன்பிடி துறைமுகங்களும் மற்றும் 7 மீன் இறங்கு தளங்களும் உள்ளன. இக்கட்டமைப்புகள் மீன்பிடிக் கலன்களை பாதுகாப்பாக நிறுத்துவதற்கும், பிடிக்கப்பட்ட மீன்களை கரையேற்றுவதற்கும் உபயோகப்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் சுமார் 3,70,000 ஹெக்டேர் உள்நாட்டு நீர்ப்பரப்பு உள்ளது. இதில் 52,000 ஹெக்டேர் நீர்த்தேக்கங்கள், 97,000 ஹெக்டேர் பெரிய நீர்ப்பாசன மற்றும் நீண்ட பருவ கால குளங்கள், 1,58,000

ஹெக்டேர் சிறிய பாசன குளங்கள் மற்றும் குட்டைகள், 63,000 ஹெக்டேர் கழிமுகம், உப்பங்கழி சதுப்பு நிலங்கள் ஆகியவை அடங்கும். இவையனைத்தும் மீன்பிடிப்பு மற்றும் மீன்வளர்ப்பிற்கு ஏற்றதாக உள்ளன. தற்போது சுமார் 4,000 ஹெக்டேர் நீர்ப்பரப்பு பகுதி நன்னீர் மீன் வளர்ப்பிற்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின்கீழ் பயன்படுத்தப்பட்டு வருகிறது. நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்காக உருவாக்கப்பட்ட 4,455 ஹெக்டேரில், 2,900 ஹெக்டேர் நீர்ப்பரப்பில் இறால் வளர்ப்பு மேற்கொள்ளப்படுகிறது.

தமிழகத்தில் இருந்து 2002 ஆம் ஆண்டில் 61,612 மெட்ரிக் டன் அளவு கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு ரூ.2,181.32 கோடி அந்நியச் செலாவணி ஈட்டப்பட்டுள்ளது.

**மீன்வளத் துறையின் கொள்கை—நோக்கங்கள்**

மீன்வள ஆதாரத்தினை பாதுகாத்து மீன் உற்பத்தியினை அதிகரிப்பதையும், மீனவர்களின் சமூகப் பொருளாதார நலனைப் பாதுகாப்பதையும் முக்கிய கோட்பாடாகக் கொண்டு மீன்வளத் துறையின் கொள்கைகள் கீழ்க்கண்டவாறு வடிவமைக்கப்படுகின்றன:—

(1) அண்மைக் கடற்பகுதிகளில் அதிக மீன்பிடிப்பினை குறைக்க ஏதுவாக இதுவரை பிடிபடாமல் இருக்கும் மீன்வளத்தினை மீனவர்கள் பிடிக்க ஊக்குவித்தல்.

(2) கடற்கரை பகுதிகளில் மீன்வள ஆதாரத்தினைப் பாதுகாத்தல், மீன் இருப்பு அதிகரித்தல், செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல் மற்றும் மீன்கள் இறால் வகைகளை வளர்த்து கடலில் இருப்பு செய்தல் போன்றவை மூலமாக அண்மைக்கடல் பகுதிகளில் மீன்வள ஆதாரங்களைக் கூட்டுதல்.

(3) சுற்றுச்சூழலுக்கு ஏற்ப கடற்கரையோர நீர்வாழ் உயிரின வளர்ப்பினை மேற்கொள்ளுதல்.

(4) மீன் இறங்கு தளங்கள் மற்றும் மீன் விற்பனை வசதியை மேம்படுத்திட அடிப்படை கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல்.

(5) உள்நாட்டு நீர்நிலைகளில் மீன் உற்பத்தியை அதிகரிக்கச் செய்தல்.





(6) மீனவர்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிடும் வகையில் நலத்திட்டங்களைச் செயல்படுத்துதல்.

(7) மீனவ மற்றும் கிராமப்புற மக்களுக்கு நேரிடை மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்குதல்.

(8) மீனவ மற்றும் மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல்.

(9) உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதன் மூலம் உள்நாட்டு மீன் விற்பனையை வலுப்படுத்துதல்.

**1. மீனள மேம்பாட்டு இயக்கம்**

தமிழகத்தில், மிக அதிக அளவில் பயன்படுத்தும் வாய்ப்புள்ள கடல் மற்றும் உள்நாட்டு நீர்வள ஆதாரங்கள் (நீர்வாழ் உயிரின வளர்ப்பு உட்பட) மீன் உற்பத்தியை பெருக்குவதற்கு இதுவரையில் சரியான முறையில் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் 15 அம்ச திட்டத்தில், மீன் உற்பத்தியை அதிகரிப்பதும், உள்நாட்டு மற்றும் கடல் நீர்ப்பரப்பில் பல்வகை மீன்வளர்ப்பை மேம்படுத்துவதும், அதன் மூலம் மீன் வளர்ப்போர் மற்றும் எளிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையினை உயர்த்துவதும் அடங்கும். 18-7-2002 அன்று இராமநாதபுரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மீனள மேம்பாட்டு இயக்கத்தினை துவக்கி வைத்து மீனள மேம்பாட்டு இயக்க அறிக்கையையும் வெளியிட்டார்கள்.

சுற்றுச்சூழலுக்கு உகந்தவாறும், வளம் குன்றாதவாறும், கடல் மற்றும் உள்நாட்டு மீன்வளத்தை பெருக்கி உள்நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்து ஏற்றுமதியை அதிகரிப்பதே மீனள மேம்பாட்டு இயக்கத்தின் நோக்கம் ஆகும். பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கும், ஆறு, குளம், குட்டை போன்ற உள்நாட்டு நீர் ஆதாரங்களில் நவீன உத்திகள் மூலம் மீன்வளத்தை பெருக்கி மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் இவ்வியக்கம் முனையும்.

மீனள மேம்பாட்டு இயக்கத்தின் அடிப்படை குறிக்கோள் மீனவர்கள், மீன் வளர்ப்போர் ஆகியோரின் மீன்பிடித் தொழில் உற்பத்தித் திறனைப் பெருக்குதல், கடற்கரையோர மற்றும் ஊரக ஏழை மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் மீன் தொழில்களையும், கூடுதல் வேலைவாய்ப்புகளையும் உருவாக்குதல்,

[2003 மே 6

பாரம்பரிய மீனவர்கள் மற்றும் மீன் வளர்ப்போரின் சமூகப் பொருளாதார நிலையை உயர்த்தி அவர்களின் நலன்களைப் பாதுகாத்தல், தொழில்நுட்பத் திறனை மேம்படுத்தி உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி விற்பனைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவுக்கு மீன் உற்பத்தியைப் பெருக்குதல் ஆகியவை மீனள மேம்பாட்டு இயக்கத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் ஆகும்.

இவ்வியக்கத்தின்கீழ் நிறைவேற்றப்படும் முக்கிய திட்டங்கள்:—

(1) ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன்வள வளர்ச்சி.

(2) குளம் குட்டைகளில் ஒருங்கிணைந்த மீன்வளர்ப்பைப் பிரபலமாக்குதல்.

(3) கடலோரப் பகுதிகளை நீர்வாழ் உயிரின வளர்ப்பிற்காக மேம்படுத்துதல்.

(4) கடலோர மீன்வளத்தை மேம்படுத்துதல்

(அ) மீன்வள இருப்பை அதிகப்படுத்துதல்.

(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்.

(5) மீன்பிடிப்பிற்குபின் உதவியும் விற்பனையும்

(அ) மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்களை மேம்படுத்துதல்

(ஆ) மீன் சில்லறை விற்பனை கட்டமைப்பு வசதிகள் அமைத்தல்.

(6) கடலில் பாதுகாப்பு நடவடிக்கைகள்

(அ) உயிர் காக்கும் மிதவைகள்

(ஆ) புவிநிலை அறிவிக்கும் கருவிகள்

(7) ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி வசதிகளை வலுவாக்குதல்.

மேலே விவரிக்கப்பட்ட மீனள மேம்பாட்டு இயக்கத் திட்டங்கள் வரும் ஐந்தாண்டுகளில் ரூ.6,107.50 இலட்ச திட்ட மதிப்பீட்டில் நிறைவேற்றப்படும்.

மேலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், 2 இலட்சம் இறால் குஞ்சுகளை இராமநாதபுரம் மாவட்டம் வேதாளையில் இருப்பு செய்து, கடலில் இறால்களை இருப்பு செய்யும் திட்டத்தினை



2003 மே 6]

துவக்கி வைத்தார்கள்.

மீன்வள மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டங்கள் படிப்படியாக 2002-2007-ம் ஆண்டுக்குள் நிறைவேற்றப்படும்.

**2. கடல் மீன்வளம்**

**2.1. பாரம்பரிய மீன்பிடிக் கலன்களை இயந்திரமயமாக்குதல்**

கடலில் மீனவர்கள் மீன்பிடிக்கப் பயன்படுத்தும் பாரம்பரிய மீன்பிடிக் கலன்களான கட்டுமரம் மற்றும் வள்ளங்கள் நீண்டதூரம் கடலில் சென்று மீன்பிடிக்கவும், விரைந்து கரைக்குத் திரும்பி வரவும் ஏதுவாக அம்மீன்பிடிக் கலன்களை நவீன இயந்திரமயமாக்கும் திட்டத்தில், உட்பொருத்தும் மற்றும் வெளிப்பொருத்தும் இயந்திரங்களை மீனவர்களுக்கு அரசு வழங்கி வருகிறது. இத்திட்டச் செலவினத்தை மைய அரசும், மாநில அரசும் சமமாக பகிர்ந்து கொள்கின்றன.

இத்திட்டத்தின்கீழ் இயந்திரங்களின் விலையில் 50 விழுக்காடு மானியமாக உட்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு அதிகபட்சமாக ரூ.12,000 வரையிலும் அல்லது வெளிப்பொருத்தும் இயந்திரம் ஒன்றுக்கு ரூ.10,000 வரையிலும் வழங்கப்படுகிறது. இயந்திரத்தின் விலையில் மீதமுள்ள 50 விழுக்காட்டினைப் பயனடையும் மீனவர்கள் தமது பங்காகச் செலுத்த வேண்டும். 2002-2003-ல் 604 இயந்திரங்கள் பாரம்பரிய மீனவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**2.2. கடல் மீன்வளங்களை பாதுகாத்தலும் மேலாண்மை செய்தலும்**

**2.2.1. தமிழ்நாடு மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ல் சில திருத்தங்கள் செய்தல்**

அண்மைக்கடல் பகுதியில் மீன்வளம் குறைந்து வருவதன் காரணமாக நாட்டுப்படகு மற்றும் விசைப்படகு மீனவர்களிடையே தகராறுகள் ஏற்பட்டு சட்டம்-ஒழுங்குப் பிரச்சினை ஏற்படுகிறது. தற்போதுள்ள மீன்பிடிப்பு முறைகளுக்கு ஏற்றவாறும் மீன்பிடிப்பின்போது ஏற்படும் தகராறுகளைத் தீர்க்கவும் தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் மற்றும் விதிகளில் சில திருத்தங்கள் மேற்கொள்ள அரசு உத்தேசித்துள்ளது.

[2003 மே 6

### 2.2.2. அண்மைக்கடல் மீன்வள ஆதாரங்களை மேம்படுத்துதல்

**(அ) கடலில் மீன் இறால் குஞ்சுகளை இருப்பு செய்தல்**

அண்மைக்கடலில் அதிக அளவு மீன்பிடித்தல் மட்டுமின்றி நகர்ப்புற தொழிற்சாலைகள் மற்றும் வேளாண்மைக் கழிவுகள் கடல் நீரை மாசுபடுத்துகின்றன. மேலும் நீர் நிலைகள் தூர்ந்து போதல், நதிகளின் நீரோட்ட தடுப்பு, சதுப்பு நிலக் காடுகளின் அழிவு மற்றும் வண்டல் படிதல் ஆகியவை மீன்வளம் குன்றுதலுக்கான பிற முக்கிய காரணங்களாகும். மேற்சொன்ன நடவடிக்கைகளினால் மீன் இருப்பு பெரிதும் பாதிக்கப்படுவதுடன், புதிய மீன்கள் வருவதும் தடைபடுகின்றன.

எனவே, அண்மைக்கடல் மீன்வள ஆதாரங்களைப் பெருக்குவதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக முக்கிய வகை மீன்கள் மற்றும் இறால் வகைகளை வளர்த்து கடலில் இருப்பு செய்யும் திட்டத்தினை மீன்வள மேம்பாட்டு இயக்கத் திட்டத்தின்கீழ் செயல்படுத்திட முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் ஐந்து ஆண்டுகளில் (2002-2007 வரை) ஆண்டுக்கு 100 மில்லியன் வீதம் இறால் குஞ்சுகள் கடலில் இருப்பு செய்யப்படும். இத்திட்டம் கீழ்க்கண்ட 10 இடங்களில் செயல்படுத்தப்படும்:

(1) பழவேற்காடு-திருவள்ளூர் மாவட்டம்
(2) முட்டுக்காடு-காஞ்சிபுரம் மாவட்டம்
(3) மரக்காணம்-விழுப்புரம் மாவட்டம்
(4) கிள்ளை-கடலூர் மாவட்டம்
(5) பழையாறு-நாகப்பட்டினம் மாவட்டம்
(6) முத்துப்பேட்டை-திருவாரூர் மாவட்டம்
(7) காரங்காடு-இராமநாதபுரம் மாவட்டம்
(8) வேதாளை-இராமநாதபுரம் மாவட்டம்
(9) தருவைக்குளம்-தூத்துக்குடி மாவட்டம்
(10) குலசேகரன்பட்டினம்-தூத்துக்குடி மாவட்டம்



2003 மே 6]

**(ஆ) செயற்கை மீன் உறைவிடங்கள் அமைத்தல்**

செயற்கை மீன் உறைவிடங்கள் என்பது கடல் உயிரினங்கள் அவற்றுக்கு ஏற்ற சூழ்நிலையில் உற்பத்திப் பெருக்கம் செய்ய உதவும் மறு சுழற்சி அமைப்புகளாகும். பாரம்பரிய மீனவர்களால் குறைந்த நேரத்தில் உழைப்பு விரயமின்றி மீன்பிடிப்பு மேற்கொள்ள இவ்வகை உறைவிடங்கள் பெரிதும் பயனளிக்கும் என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் செயற்கை முறையில் தற்பொழுது உருவாக்கப்படும் இவ்வகை உறைவிடங்கள் பல ஆண்டுகளுக்கு பயனளிக்கும். எனவே, தமிழகத்தில் தெரிவு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிட்டுள்ள 10 அண்மைக்கடல் பகுதிகளில் 10 முதல் 25 மீட்டர் ஆழத்தில் செயற்கை மீன் உறைவிடங்கள் அமைக்க மீன்வள மேம்பாட்டு இயக்க காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (1) பனையூர் பெரியகுப்பம் | - | காஞ்சிபுரம் மாவட்டம் |
| (2) கடப்பாக்கம் | - | காஞ்சிபுரம் மாவட்டம் |
| (3) தாழங்குடா | - | கடலூர் மாவட்டம் |
| (4) கோடியக்கரை | - | நாகப்பட்டினம் மாவட்டம் |
| (5) கோடிமுனை | - | கன்னியாகுமரி மாவட்டம் |
| (6) மந்திரிபட்டினம் | - | தஞ்சாவூர் மாவட்டம் |
| (7) வாலிநோக்கம் | - | இராமநாதபுரம் மாவட்டம் |
| (8) புன்னக்காயல் | - | தூத்துக்குடி மாவட்டம் |
| (9) மணப்பாடு | - | தூத்துக்குடி மாவட்டம் |
| (10) பெருமணல் | - | திருநெல்வேலி மாவட்டம் |

### 2.2.3. வழிகாட்டும் விளக்குடன் கூடிய ஒளிரும் மிதவைகள் நிறுவுதல்

பாக் விரிகுடா பகுதியில் கண்ணுக்குத் தெரியாத சர்வதேச கடல் எல்லைக் கோட்டினை தெரியாமல் கடக்க நேரிடும் மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகின்றனர். நாகப்பட்டினம் முதல் தூத்துக்குடி வரையிலான 240 கடல் மைல் தூரத்திற்கு ஒளிரும் மிதவைகள் அமைக்க கருத்துரு மத்திய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. ஒப்புதல் பெற்றபின் நிறுவப்படும்.

[2003 மே 6

### 2.2.4. உலகளாவிய சுற்றுப்புறச்சூழ்நிலை மேம்பாடு மற்றும் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் மன்னார் வளைகுடா கடலோர பல்வகை உயிரின விரிவாக்கம் குறித்த பாதுகாப்பு மற்றும் நிலையான பயன்பாடு

தமிழ்நாட்டில் மன்னார் வளைகுடா இந்தியாவின் தென் கிழக்கு முனைப் பகுதியில் அமைந்துள்ளது. இவ்வளைகுடா வளமை மிகுந்த பல்வகையான கடல் உயிரினங்கள் வாழ்கின்ற பகுதியாக உலக முக்கியத்துவம் பெற்றுள்ளது. சுமார் 3,600 வகை தாவர, விலங்கின, உயிரினங்களுடன் இந்தியாவின் வளமை நிறைந்த ஒரு கடலோரப் பகுதியாக விளங்குகிறது.

1989 ஆம் ஆண்டில் இந்திய அரசும், தமிழக அரசும், மன்னார் வளைகுடா கடற்கரைப் பகுதியை தேசிய உயிரின பாதுகாப்புப் பகுதியாக அங்கீகரித்துள்ளன. மன்னார் வளைகுடா உயிரின பாதுகாப்புப் பகுதி 560 சதுர கி.மீ. பரப்புடைய பவளத் தீவுகள் மற்றும் ஆழங்குறைவான கடல் பகுதியையும், அதனைச் சுற்றி 10 கிலோ மீட்டர் அகலம் மற்றும் 160 கிலோ மீட்டர் நீளத்தைக் கொண்ட இடைப் பகுதியையும் கொண்டுள்ளது. இது இந்தியாவில் மட்டுமல்லாது அனைத்து தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசியாவில் முதலாவதாக அமைக்கப்பட்ட கடல் உயிரின பாதுகாப்புப் பகுதியாகும். இப்பகுதி உலக நாடுகளின் தன்மைகளின் அளவீடு உயிரியல்-நோக்கு, சுற்றுப்புறச் சூழல் தனித்தன்மை, பொருளாதார, சமூக, கலை, அறிவியல் முக்கியத்துவம், தேசிய மற்றும் உலக அளவிலான முக்கியத்துவம் ஆகியவற்றை அடிப்படைகளாகக் கொண்டு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

வளமிக்க இப்பகுதியைச் சார்ந்த உள்ளூர் சமுதாய மக்கள், அவர்களது வாழ்க்கையை நடத்திட நிலையான மாற்று வேலை வாய்ப்புகளை ஏற்றுக்கொள்வதன் மூலம் இவ்வுயிரினப் பூங்கா மீதான தாக்கம் குறையும். எனவே மீன்வளத் துறை, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையுடன் இணைந்து ஆலோசித்து நிலையான மீன்பிடிப்பு தொழில் நுட்பங்களையும், மீன்பிடிப்போர்களின் வாழ்க்கைக்கு ஏற்ற நிலையான மற்றும் தேவையான அடிப்படை மாற்று வழிகளுக்கான செயல்முறை திட்டங்களையும் வடிவமைக்கும். மீன்பிடிப்போர்களுக்கு குறிப்பாக மீனவ மக்களுக்கு கடல்வளப் பாதுகாப்பு முயற்சிகளுக்கான கூடுதல் பொறுப்பு உள்ளதை உணர்த்திட முறையான பயிற்சி மற்றும் விழிப்புணர்வு அளிக்கப்படும்.



2003 மே 6]

## 2.3. உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்

### 2.3.1. மீன்பிடித் துறைமுகம் மற்றும் மீன் இறங்கு தளங்கள் கட்டுதல்

மத்திய மாநில அரசு சமவிகித நிதியுதவியுடன் ரூ.6.84 கோடி செலவில் கன்னியாகுமரி மாவட்டம் சின்னமுட்டத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டப்பட்ட மீன்பிடித் துறைமுகம் தற்போது மீனவர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. கூடுதலாக விசைப் படகுகளை நிறுத்திட ஏதுவாக இரண்டாம் கட்ட விரிவாக்கப் பணிகளைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மத்திய அரசு கோரியவாறு இராமநாதபுரம் மாவட்டம், இராமேசுவரத்தில் புதிதாக மீன்பிடித் துறைமுகம் அமைத்தல் தொடர்பாக திருத்திய திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. சுற்றுச்சூழல் தடையின்மை சான்று பெற அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மேலும் ரூ.10.60 கோடி செலவில் பழையாறு மீன்பிடித் துறைமுகம் இரண்டாம் கட்ட விரிவாக்கம் மத்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்திட தேவையான நிலத்தினை வனத் துறையிடமிருந்து மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டம், பூம்புகாரில் மத்திய மாநில அரசுகளின் நிதியுதவி பெற்று ரூ.40.00 கோடி செலவில் புதிய மீன்பிடித் துறைமுகம் அமைக்க மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கன்னியாகுமரி மாவட்டம், தேங்காய்ப்பட்டிணத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கும்பொருட்டு சாத்தியக்கூறுகள் குறித்து மாதிரி ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அதன் முடிவறிக்கை பெறப்பட்டுள்ளது. முடிவறிக்கையின் அடிப்படையில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க திட்ட மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும் கன்னியாகுமரி மாவட்டம் முட்டம் கிராமத்தில் புதிதாக மீன்பிடித் துறைமுகம் ஒன்று BOOT (Build, Operate, Own and Transfer) முறையில் அமைத்திடும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

[2003 மே 6

## 2.3.2. மீன் இறங்கு தளங்கள்

தமிழகத்தின் 10 இடங்களில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய மீன் இறங்கு தளங்கள் ரூ.1323.20 இலட்சம் செலவில் அமைத்திட மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. ஒப்பளிக்கப்பட்ட 10 இடங்களில் 7 இடங்களில் கட்டுமானப் பணி நடைபெற்று வருகிறது. மாற்று இடம் தேர்வு செய்யப்பட்ட 2 இடங்களில் பணி மேற்கொள்ளவும், ஒரு இடத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் செய்துகொள்ளவும் மத்திய அரசின் திருத்திய நிர்வாக அனுமதி எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.4. மீனவர்கள் கடல் பாதுகாப்புத் திட்டம்

### 2.4.1. கடல் மீனவர்களுக்கு நிவாரணம்

மீனவர்கள் கடலில் மீன்பிடித் தொழில் செய்யும்போது புயல், வெள்ளம், கடலின் நீரோட்டம் மற்றும் படகின் இயந்திரக் கோளாறு போன்ற காரணங்களினால் மீன்பிடி விசைப் படகுகள் கடலில் திசை மாறி சர்வதேச எல்லைக் கோட்டினைக் கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று விடுகின்றன. இவ்வாறு படகுகள் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து செல்லும்போது மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்படுகின்றனர். மீனவர்களின் குடும்பங்களில் குடும்பத் தலைவர் இல்லாத நிலையில், அவர்களின் குடும்பங்களை நடத்துவதில் மிகவும் இன்னலுக்கு ஆளாகின்றனர். இக்காலங்களில் அம்மீனவர்களின் குடும்பத்திற்கு உதவும் வகையில் மீனவர்கள் கைது செய்யப்பட்ட நாள் முதல் மீனவர் சிறையிலிருந்து திரும்பி வரும் நாள் வரை நாளொன்றுக்கு ரூ.50/- வீதம் அக்குடும்பத்திற்கு உதவியாக வழங்கப்படுகிறது. இந்நேர்வுகளில் சம்பந்தப்பட்ட மீனவர் தமிழக மீன்பிடித் தளத்திலிருந்து கடலில் மீன்பிடிக்கச் சென்ற நாளிலிருந்து அண்டை நாட்டில் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டு தாயகம் திரும்பும் நாள் வரை உடனடியாக நிவாரணம் வழங்கிட வேண்டி நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் நிதி ஒதுக்கீடு வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது. தமிழக மீனவர்கள் இவ்வாறு அயல் நாடுகளில் கைது செய்யப்படும்பொழுது அவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் இத்திட்டம் இந்த நிதியாண்டிலும் தொடரப்படும்.



2003 மே 6]

### 2.4.2. இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு இறக்கும் மீனவர்கள் குடும்பத்தினருக்கு நிதியுதவி அளித்தல்

நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள மீனவர்கள் இந்திய கடற்பகுதிக்குள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுகின்றனர். படகின் இயந்திரக் கோளாறு மற்றும் மோசமான வானிலை போன்ற சில காரணங்களினால் தவறுதலாக இவர்கள் சர்வதேச கடல் எல்லையைக் கடந்து இலங்கைக் கடற்பகுதிக்குள் சென்று விடுகின்றனர். இந்திய மீனவர்கள் இவ்வாறு சர்வதேச கடல் எல்லையைத் தாண்டிச் செல்லும்போது இலங்கைக் கடற்படையின் தாக்குதலுக்கு ஆளாகின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் அனைத்தும் இலங்கை அரசிடம் எடுத்துரைப்பதற்காக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்படுகிறது. இலங்கை கடற்படையால் சுடப்பட்டு இறக்க நேரிடும் தமிழக மீனவர்களின் குடும்பங்களுக்கு ரூ.1.00 இலட்சம் நிதியுதவியினை உடனடியாக வழங்குவதற்கு ஏற்ற வகையில் நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய எட்டு கடலோர மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தலா ரூ.5.00 இலட்சம் வீதம் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் சுழற்சி நிதி ஏற்படுத்தியுள்ளது. பின்னர் இத்தொகையை மீளப் பெற்றுக் கொள்ளவும் அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டம் 2003-2004 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

### 2.4.3. மீனவர்களுக்கு உயிர்காப்பு கவச உடைகள் வழங்குதல்

கடல் மீன்பிடிப்பின்போது நிகழும் விபத்துக்களினால் நாளுக்கு நாள் மீனவர்களின் உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. எனவே மீனவர்களுக்கு உயிர்காப்பு கவச உடைகள் வழங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

## 3. உள்நாட்டு மீன்வளம்

பெரும் நீர்த்தேக்கங்கள், பெரிய மற்றும் சிறுபாசன குளங்கள், கிராம குளங்கள், குட்டைகள் ஆகிய உள்நாட்டு நீர்நிலைகளைப் பயன்படுத்தி அறிவியல் முறை நீர்த்தேக்க மீன்வளப் பராமரிப்பு மற்றும் தரமான மீன்குஞ்சு உற்பத்தி செய்தல் ஆகியவற்றின் மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்பது உள்நாட்டு மீன்வளக் கொள்கையின் முக்கிய நோக்கமாகும்.

[2003 மே 6

நீர்த்தேக்க மீன்பிடிப்பின் 45 நீர்த்தேக்கங்களை தமிழ்நாடு மீன் துறையும், 8 நீர்த்தேக்கங்களை தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகமும் நிர்வகித்து வருகின்றன. துறை மூலம் 32,000 ஹெக்டேர் நீர்ப்பரப்புள்ள பெரிய மற்றும் சிறிய பாசன குளங்களில் பெருங்கெண்டை மீன்குஞ்சுகளை இருப்பு செய்து உள்ளூர் மீனவர்களைக் கொண்டு மீன்பிடித்து வருகின்றனர். மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மூலம் கூட்டு இன மீன்வளர்ப்பு தொழில்நுட்பத்தைக் கொண்டு ஊரக குளம், குட்டைகளில் சுமார் 5000 ஹெக்டேரில் மீன்வளர்ப்பு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**3.1. மீன்குஞ்சுகள் உற்பத்தி**

இருப்பு செய்வதற்கான கட்லா, ரோகு, மிர்கால் மற்றும் சாதா கெண்டை ஆகியவற்றின் மீன்குஞ்சுகள் தேவையினை துறையின் மீன்பண்ணைகள் பூர்த்தி செய்கின்றன. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்தின் தேவைகள் அவர்களாலேயே பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன. துறையின் மீன் பண்ணைகளில் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு, இருப்பு செய்யும் அளவு வரை அவை வளர்க்கப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டு (31-12-2002 வரை) 428.090 இலட்சம் மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இது தவிர ஆண்டுதோறும் 600 இலட்சம் மீன்குஞ்சுகள் மாநிலத்திலுள்ள 84 தனியார் மீன்குஞ்சு உற்பத்தி பண்ணைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, தனியார் பண்ணைகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களுக்கு வழங்கி அவற்றின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்றன.

தமிழ்நாட்டில் தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவ காற்றின் மூலம் மழை கிடைக்கிறது. அதில் முதல் பருவமழை மீன்குஞ்சு உற்பத்திக்கு உகந்தது. வடகிழக்குப் பருவமழையினால் மட்டுமே நீர்நிலைகளில் அதிக அளவில் தண்ணீர் கிடைக்கின்றது. மீன்குஞ்சு உற்பத்தி செய்தல் மற்றும் இருப்பு செய்தல் ஆகியவற்றில் உள்ள பொருந்தா சூழ்நிலையைத் தவிர்த்திட, வற்றாத கால்வாய்கள், ஆறுகள் ஆகியவற்றில் தண்ணீரின் நீரோட்டம் பாதிக்காமல் கூண்டுகளில் நன்னீர் மீன்குஞ்சுகளை வளர்க்கும் முறையை மீன் பண்ணையாளர்களிடம் பரப்புவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் தேவையான மீன்குஞ்சு உற்பத்தி செய்வது மட்டுமல்லாமல், உள்நாட்டுப் பண்ணையாளர்கள் நிலையான கூடுதல் வருவாய் பெறவும் உதவும்.



2003 மே 6]

**3.2. மீனள மேம்பாட்டு இயக்கத்தில் உள்நாட்டு மீனள அபிவிருத்தி**

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 10 விழுக்காடு அளவுக்கு மீன் உற்பத்தி அளவு அதிகரிக்கப்படவேண்டும். இக்குறியீட்டினை அடைய மீனள மேம்பாட்டு இயக்கத்தினை அரசு அமைத்துள்ளது. மீனள மேம்பாட்டு இயக்கம் ஒருங்கிணைந்த நீர்த்தேக்க மீன் வளர்ச்சி மேம்பாடு, குளங்கள் குட்டைகளில் மீன்வளர்ப்பைப் பரவலாக்குதல் போன்ற திட்டங்களைச் செயல்படுத்தும் உத்திகளை உருவாக்கும்.

**3.3. மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள ஆறுகள் மற்றும் நீரோடைகள் ஆகியவற்றில் மீன் இனங்களைப் பாதுகாத்தலும், அதிகரித்தலும்**

தமிழகத்திலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியிலுள்ள ஆறுகள் மற்றும் நீரோடைகளில் அதிக அளவில் பலவகையான மீன் இனங்கள் உள்ளன. உயிரியல் தன்மையிலும், பொருளாதார வகையிலும் மீன் வளர்ப்புக்கு உகந்த பல மீன் இனங்கள் இப்பகுதியில் உள்ளன. இவற்றுள் சில வகை மீன்கள் அலங்கார மீன் வளர்ப்புக்கு ஏற்றனவாக உள்ளதால், அவை ஏற்றுமதிக்கு உகந்ததாக உள்ளன. இந்தப் பகுதியிலுள்ள மீன் இனங்கள் நெடுங்காலமாக கவனிக்கப்படாமல் விடப்பட்டுள்ளன. சில வகை மீன்கள் நன்னீர் மீன் வளர்ப்புக்கு உரியதாகவும், கெண்டை மீன் வளர்ப்புக்கு மாற்றாகவும் உள்ளன.

எனவே மாநிலத்திலுள்ள ஆராய்ச்சி மற்றும் கல்வி நிறுவனங்கள் துணையுடன் இவ்வகை மீன் இனங்களைப் பாதுகாத்து அதிகரிக்க உரிய திட்டங்களை மேற்கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

**3.4. கடலோரப் பகுதியில் நீர்வாழ் உயிரின வளர்ப்பு**

தமிழ்நாட்டில் 56,000 ஹெக்டேர் பரப்புள்ள கழிமுகப் பகுதிகளில் வளமான இறால் பண்ணைகளை அமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இறால் வளர்ப்பிற்காக மாநிலத்தில் மொத்தம் 4455 ஹெக்டேர் மேம்படுத்தப்பட்டிருந்தாலும், 2900 ஹெக்டேர் பரப்புள்ள இறால் பண்ணைகள் மட்டுமே இறால் வளர்ப்பிற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

உச்ச நீதிமன்ற ஆணையின்படி இறால் பண்ணைகளை ஒழுங்குபடுத்த நீர்வாழ் உயிரின குழுமம் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இதற்கு உதவிட அரசு, மாவட்டக் குழுக்கள் மற்றும் மாநிலக் குழுவை அமைத்துள்ளது. தமிழகத்தில் 2778 இறால் பண்ணைகள் உள்ளன.

[2003 மே 6

அவற்றில் 1846 பண்ணைகளில் இறால் வளர்ப்பு நடைபெறுகிறது. இறால் பண்ணைகளுக்கு உரிமம் வழங்க மாநிலக் குழு, மாவட்டக் குழுக்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை ஆய்வு செய்து உரிய பரிந்துரைகளுடன் நீர்வாழ் உயிரின குழுமத்திற்கு பரிந்துரை செய்யும். இதுவரை 1271 பண்ணைகளுக்கு உரிமம் பெற விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன. அவற்றில் 297 இறால் பண்ணைகளுக்கு உரிமம் வழங்கப்பட்டுள்ளன. 269 விண்ணப்பங்கள் நீர்வாழ் உயிரின குழுமத்திடம் நிலுவையில் உள்ளன. மாநிலக் குழு, அரசு புறம்போக்கு நிலங்களில் அமைந்துள்ள 99 இறால் பண்ணைகளுக்கான விண்ணப்பங்களைத் தள்ளுபடி செய்துள்ளது. 606 விண்ணப்பங்கள் மாவட்டக் குழுவின் ஆய்வில் உள்ளன. மீன் துறை மீன்வள மேம்பாட்டு இயக்கத்தின்கீழ் ஆண்டுக்கு 1000 ஹெக்டேர் வீதம் ஐந்தாண்டுகளுக்கு கரையோர உவர்நீர் நிலத்தில் பண்ணைகள் அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**4. ஆராய்ச்சி**

தமிழகத்தில் சென்னை மற்றும் தூத்துக்குடி ஆகிய 2 இடங்களில் ஆராய்ச்சி நிலையங்கள் உள்ளன. மாநில மீனள ஆராய்ச்சிக் குழு ஜூன் 1998-ல் இறுதி செய்த 15 திட்டங்களுக்கு ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆராய்ச்சியின் முக்கிய நோக்கம் செயல்முறை சார்ந்த ஆராய்ச்சி மூலம் மீன்வளம் பெருக உதவுவதாகும். மத்திய நன்னீர் மீன்வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம், மத்திய கடல் மீன் ஆராய்ச்சி நிலையம் ஆகிய மைய அரசின் ஆராய்ச்சி நிலையங்கள் மற்றும் தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் போன்ற அமைப்புகளுடன் மீன் துறை ஒருங்கிணைந்து செயல்படும். மீன் துறையில் மேற்கொள்ளப்படும் சில முக்கிய ஆராய்ச்சிப் பணிகள் வருமாறு:—

1) கெண்டை மீன்களின் இனப்பெருக்கத்தை அதிகரித்தல்.

2) தனி வளர்ப்பு/பல்வகை வளர்ப்பு மூலம் நன்னீர் இறால் வளர்ப்பு.

3) சுற்றுச்சூழல் தாக்கத்தின் மதிப்பீடு.

4) மாதிரி கடல் மீன் வளர்ப்பு.



2003 மே 6]

5) நன்னீர் மீன்/அலங்கார மீன் மற்றும் நன்னீர் இறால் ஆகிய வர்த்தக ரீதியில் முக்கியத்துவமான மீன்களுக்கு உரிய உணவு அளவை மதிப்பீடு செய்தல்.

அரசு மாநில மீனள ஆராய்ச்சிக் குழுமத்தை 2001-ல் திருத்தி அமைத்துள்ளது. நடைபெற உள்ள ஆராய்ச்சிக் குழுக் கூட்டத்தில் ஆராய்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்யப்பட்டு, அடுத்த 3 ஆண்டுகளுக்கான புதிய ஆராய்ச்சித் திட்டங்கள் முடிவு செய்யப்படும்.

**5. விரிவாக்கம் மற்றும் பயிற்சி**

மைய அரசு பங்கேற்கும் திட்டத்தின்கீழ் (80:20) மத்திய அரசு 2001-2002 ஆம் ஆண்டில் ரூ.70.55 இலட்சம் மதிப்பீட்டில் விரிவாக்கம் மற்றும் பயிற்சித் திட்டத்திற்கு நிர்வாக ஒப்புதல் அளித்தது. மத்திய அரசு முதல் தவணையாக ரூ.20.00 இலட்சம் விடுவித்தது. மாநில அரசு அதற்கு இணையாக ரூ.5.00 இலட்சம் விடுவித்தது. இத்திட்டத்தின் கீழ், 2002-2003 ஆம் ஆண்டு 420 மீன்வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. இத்திட்டத்தின்கீழ் காஞ்சிபுரம் மாவட்டம் நீலாங்கரையில் ஒரு விழிப்புணர்வு நிலையமும், காஞ்சிபுரம் மாவட்டம், வாணியஞ்சாவடி, கடலூர் மாவட்டம் கிள்ளை, திருநெல்வேலி மாவட்டம் மணிமுத்தாறு ஆகிய இடங்களில் இறால் வளர்ப்போர் மற்றும் உள்நாட்டு நீர் நிலைகளில் மீன்வளர்ப்போருக்கு பயிற்சி அளிக்க 3 பயிற்சி நிலையங்கள் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நவீன மீன்பிடிக் கலன்களை இயக்குவதற்கும், மீன்பிடி விசைப் படகுகளைப் பராமரிப்பதற்கும், போதிய பயிற்சி அளிக்கப்பட்ட நபர்களை உருவாக்குவதற்கும், தமிழ்நாட்டில் நாகப்பட்டினம், மண்டபம், தூத்துக்குடி மற்றும் குளச்சல் ஆகிய 4 இடங்களில் மீனவ இளைஞர்களுக்கு 10 மாத பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி நிலையங்கள் ஒவ்வொன்றிலும் 50 முதல் 60 மீனவ இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இவை தவிர இப்பயிற்சி நிலையங்களில் இளநிலை கம்மியர் சான்றிதழ்கள் படிப்பும் நடத்தப்படுகிறது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் ரூ.200/- மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகிறது.

6. மீன்வளத்தில் கூட்டுறவு

31-3-2002 வரை 3,56,307 உறுப்பினர்கள் அடங்கிய 742 கடல் மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 64,623 உறுப்பினர்களைக் கொண்ட 329 உள்நாட்டு மீனவர்/மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களும், 846 உறுப்பினர்கள் கொண்ட 11 மாவட்ட மீனவ கூட்டுறவு இணையங்களும் செயல்பட்டு வருகின்றன. 471 உறுப்பினர்கள் அடங்கிய ஒரு மாநில மீனவக் கூட்டுறவு இணையமும், 85 உறுப்பினர்கள் அடங்கிய 4 கடல் மீனவர் கூட்டுறவு ஒன்றியமும், 2783 உறுப்பினர்கள் அடங்கிய 15 இதர வகை மீனவக் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் யாவும் இம்மாநிலத்தில் வாழும் மீனவர் மற்றும் மீனவ மகளிரின் சமுதாய முன்னேற்றத்திற்காக உழைப்பதையே முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன.

7. மீனவர் நலன்

தமிழ்நாட்டில் மீனவர் நலம் மீன்துறையில் முதன்மையான கோட்பாடாகக் கொண்டு நடப்பு ஆண்டில் கீழ்க்காணும் மீனவர் நல மேம்பாட்டுத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதற்கு அரசு ஊக்கமும், ஆக்கமும் அளிக்கும்—

1. மீனவர் இலவச வீடு கட்டும் திட்டம்
2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்
3. மீனவர் குழு விபத்து காப்புறுதித் திட்டம்
4. மீனவர் தனி நபர் விபத்து காப்புறுதித் திட்டம்

7.1. மீனவர் இலவச வீடுகட்டும் திட்டம்

1996-97 முதல் 2000-2001 வரையிலான காலத்தில் 20,000 வீடுகள் ஒப்பளிக்கப்பட்டிருப்பினும் 31-3-2001 முடிய மொத்தம் 15,164 வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளன. கட்டப்படாமல் நிலுவையில் இருந்த வீடுகளில் 3318 வீடுகள் 1-4-2001 முதல் 31-3-2003 வரை இரண்டாண்டுகளில் ரூ.1174.45 இலட்சம் நிதி வழங்கப்பட்டு கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மீதம் நிலுவையில் உள்ள வீடுகளைக் கட்டி



முடிக்க ரூ.239.00 இலட்சம் நிதி இந்நிதியாண்டில் ஒப்பளிக்கப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டில் மத்திய மாநில நிதியுதவியுடன் மாதிரி மீனவ கிராம திட்டத்தின்கீழ் 2000 வீடுகளும், மாநில திட்டத்தின் கீழ் 2000 வீடுகளும் கட்டிக் கொடுத்திட ஆணையிடப்பட்டு கட்டுமானப்பணி நடைபெற்று வருகிறது.

இனிவரும் காலங்களில் ஆண்டுதோறும் மத்திய அரசின் நிதியுதவியுடன் 4000 வீடுகள் கட்டிக் கொடுக்க இவ்வரசு முடிவெடுத்துள்ளது.

7.2. தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்

கடல் மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்ல இயலாத காலங்களில் அவர்களின் துயர்களைத் துடைப்பதற்காக தேசிய மீனவர் மற்றும் நிவாரணத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது.

இத்திட்டத்திற்கு மைய அரசு நிர்ணயித்துள்ள விதிகளின்படி, ஒவ்வொரு மீனவரும் ஒரு மாதத்திற்கு ரூ.75/- செலுத்த வேண்டும். நடப்பு ஆண்டில் இத்திட்டத்தின்படி ஒவ்வொரு மீனவரிடமிருந்தும் மாதமொன்றுக்கு ரூ.75/- வசூலிக்கப்பட்டு, அத்துடன் மாநில அரசின் பங்காக மாதம் ஒன்றுக்கு ரூ.37.50-ம், மைய அரசின் பங்காக ரூ.37.50-ம் ஆக மொத்தம் ரூ.150/-வீதம் 8 மாதங்களுக்கானத் தொகை ரூ.1200/-ஐ, மாதம் ரூ.300/- வீதம் கடலில் மீன் பிடிக்கச் செல்லாத நான்கு மாதங்களுக்கு மீனவர்களுக்கு வழங்கப்படும். இதனால் தமிழகத்தில் 1,97,000 மீனவர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

7.3. மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டம்

மீனவர் குழு விபத்துக் காப்புறுதித் திட்டத்தின்கீழ் மீனவரின் ஆண்டுச் சந்தாத் தொகையான ரூ.14/-ஐ மாநில மற்றும் மைய அரசுகள் சமமாக பகிர்ந்து கொள்கின்றன. எவ்வித சந்தாத் தொகையும் மீனவர்களிடமிருந்து வசூல் செய்யப்படுவதில்லை. இத்திட்டத்தின் கீழ் விபத்தினால் இறக்க நேரிடும்/நிரந்தர முழு ஊனமடையும் மீனவர் குடும்பத்திற்கு ரூ.50,000/-மும், பகுதி ஊனமடையும் மீனவருக்கு ரூ.25,000/-மும் வழங்கப்படுகிறது.

## 7.4. மீனவர் தனிநபர் விபத்துக் காப்புறுதித் திட்டம்

கீழ்க்காணும் காப்புறுதித் திட்டங்களும் தமிழக அரசால் மீனவர்களுக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதற்கான சந்தாத் தொகையை (பிரிமியம்) மீனவர்/மீனவ மகளிரே செலுத்த வேண்டும்.

| வ. எண் | மீனவர்/மீனவ மகளிர் செலுத்த வேண்டிய ஆண்டு சந்தாத் தொகை. | இறந்தால்/முழு ஊனமடைந்தால் வழங்கப்படும் நிவாரணம். |
|---|---|---|
| (1) | மீனவர் ரூ.24/-<br>மீனவ மகளிர் ரூ.20/- | ரூ.1 இலட்சம் |
| (2) | மீனவர் ரூ.60/-<br>மீனவ மகளிர் ரூ.50/- | ரூ.2.5 இலட்சம் |

மேற்குறிப்பிட்ட இரு திட்டங்களிலும் மீனவர்/மீனவ மகளிர் சேர்ந்து பயன் பெறலாம்.

## 8. புதிய திட்டங்கள்

கீழ்க்கண்ட 5 திட்டங்களை 2003-2004-ன் பகுதி 2 திட்டத்தின்கீழ் ரூ.31.70 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டங்களின் விவரம் மற்றும் நிதி ஒதுக்கீடு கீழே தரப்பட்டுள்ளன:

(1) தமிழ்நாட்டில் உள்ள துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்நிலைகளில் இருப்பு செய்திட 367.60 இலட்சம் மீன் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. அனைத்து நீர்நிலைகளிலும் மீன் குஞ்சு உற்பத்தி செய்ய மிதவைக் கூடுகள் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதனால் மீன் வளர்ப்புக்குத் தேவைப்படும் மீன் குஞ்சுகளை உற்பத்தி செய்ய இயலும். 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவில் 100 மிதவைக் கூடுகள் வாங்கி நிறுவுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(2) 2003-2004-ல் பரிசோதனை முறையில் பவானிசாகரில் உள்ள தேசிய மீன் குஞ்சு உற்பத்திப் பண்ணையில் ரூபாய் 8.00 இலட்சம் செலவில் நன்னீர் இறால் வளர்ப்பு மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேற்படி மீன் உற்பத்திப் பண்ணைகளைப் பழுதுபார்த்து மாற்றியமைக்கவும், நன்னீர் இறால் வளர்ப்பை செய்வதற்கான நடைமுறைச் செலவுக்காகவும் மேற்குறிப்பிட்ட ரூ.8.00 இலட்சம் செலவிடப்படும்.



(3) கொடுவா மீன் வளர்ப்பு தொழில்நுட்பம் ஏற்கெனவே மிக சிறந்த அளவில் இருந்தபோதிலும், அவை அடிப்படை பயன்பெறுவோருக்குச் சென்றடையவில்லை. எனவே ஒரு முன்னோடித் திட்டமாக காஞ்சிபுரம் மாவட்டம் வாணியஞ்சாவடி மற்றும் கடலூர் மாவட்டம் பரங்கிப்பேட்டை ஆகிய இரு இடங்களிலுள்ள உவர் நீர் இறால் பண்ணைகளில் 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.3.70 இலட்சம் செலவில் வணிக ரீதியான கொடுவா மீன் வளர்ப்பு மாதிரி பண்ணைகளாக அமைத்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(4) தேங்காய்ப்பட்டிணம் மற்றும் அதன் சுற்றுப்புற மீனவ கிராமங்களைச் சேர்ந்த மீனவர்கள் தங்களின் மீன்பிடிப் படகுகள் நிறுத்துவதற்கு ஏற்றவகையில் மீன்பிடித் துறைமுகம் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொண்டுள்ளனர். பூண்டி நீரியியல் மற்றும் நீரேற்று ஆய்வு மையம் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துடன் சேர்ந்து மாதிரி ஆய்வு செய்து அறிக்கை அளித்துள்ளது. அவ்வாய்வு அறிக்கையைத் தொடர்ந்து, மண் பரிசோதனை, அளவை செய்தல், தளம் அமைத்தல், சவுண்டிங் எடுத்தல் போன்ற முன்னோடி ஆய்வுகளை மேற்கொள்ள 2003-2004 ஆம் ஆண்டில் ரூ.5.00 இலட்சம் செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(5) சுகாதாரமான முறையில் மீன் விற்பனை செய்வது மிகவும் அத்தியாவசியமானது. பொதுவாக மீன்கள் பிடிக்கப்பட்டு ஒன்றிலிருந்து எட்டு மணி நேரத்திற்குள் தரம் கெடுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. எனவே மீன்களை எட்டு மணி நேரத்திற்குள் உடனடியாக சமைத்துப் பயன்படுத்த வேண்டும் அல்லது உரிய முறையில் பாதுகாக்க வேண்டும். பிடித்த மீன்கள் உடனடியாக குளிரூட்டப்படாவிட்டால், விநியோகிக்கப்படும்போது கெட்டுவிடும். பிடிக்கப்படும் மீன்களில் பெருமளவு மீன்பிடி இறங்கு தளங்களிலும், அருகிலுள்ள இடங்களிலும், தெருவோர மீன் விற்பனையாளர்களால் சுகாதாரமற்ற முறையில் விற்கப்படுகின்றன. நுகர்வோர்கள் மீன்களின் தரம் இல்லாததால் அவற்றை வாங்க தயக்கம் காட்டுகிறார்கள்; தவிரவும் மீன் பிடிப்போருக்கும், . விற்பனை செய்வோருக்கும் குறைந்த விலையே கிடைக்கிறது. எனவே, விற்கப்படும் மீன்களின் தரம் குறித்த விழிப்புணர்வினை மீன் விற்பனையாளர்களிடம் ஏற்படுத்தி விற்பதற்குத் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தி சுகாதார முறையில் மீன்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற வகையில் ரூ.10.00 இலட்சம் செலவில் 250 குளிர்காப்பு மீன் பெட்டிகள் சாலையோர மீன் விற்பனையாளர்களுக்கு வழங்க 2003-2004 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**9. தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் 1974 ஆம் ஆண்டு அரசு நிறுவனமாக ஆரம்பிக்கப்பட்டது. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ.500 இலட்சமாகும். 31-3-2002 முடிய செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ.445.52 இலட்சமாகும்.

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகம் தற்போது கீழ்க்கண்ட திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது:—

அ. கழகத்தின் கட்டுபாட்டிலுள்ள நீர்த்தேக்கங்களை பராமரித்துத் தரமான மீன்குஞ்சுகளை இருப்பு செய்து மீன்பிடித்தல் மற்றும் வணிக முறைப்படி விற்பனை செய்தல்.

ஆ. தூண்டுதல் முறை இன விருத்தி மூலம் தரமான மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்து, கழக நீர்த்தேக்கங்கள், தனியார் மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமை ஆகியோருக்கு விநியோகித்தல்.

இ. மண்டபம், தூத்துக்குடி, சென்னை ஆகிய இடங்களில் மீன்களைப் பதப்படுத்தும் வசதிகளைக் கொண்ட குளிர்பதன நிலையங்கள் மற்றும் பனிக்கட்டி நிலையங்களைப் பராமரித்தல்.

ஈ. மீன்பிடிப்பு துறைமுகங்களில் மற்றும் துறைமுக அணைக்கரைகளில் அமைக்கப்பட்டுள்ள டீசல் வழங்கு நிலையங்கள் மூலம் மீன்பிடி விசைப்படகுகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்குதல்.

உ. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருவண்ணாமலை மற்றும் இதர முக்கிய நகரங்களில் பொதுமக்களுக்குத் தரமான மீன்களை நியாயமான விலையில் விற்பனை செய்தல்.

ஊ. மீனவர்களுக்கு தரமான மீன் வலைகளைத் தயாரித்து விற்பனை செய்யும் பொருட்டு இராயபுரத்தில் மீன் வலைத் தயாரிப்பு நிலையம் நிர்வகித்தல்.

எ. இறால் மீன்குஞ்சுகளை உற்பத்தி செய்யும் நிலையத்தின் கட்டமைப்பு வசதிகளை நிர்வகித்தல் மற்றும் தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துக்குக் கடல்வாழ் உயிரின அதிகரிப்புத் திட்டம் நிறைவேற்றிட வசதி செய்தல்.





ஏ. வளர்ப்பு முத்து மற்றும் முத்துச்சிப்பி தயாரிப்பினை நிர்வகித்தல்.

ஐ. காரங்காடு மாதிரி இறால் பண்ணை நிர்வகித்தல்.

ஒ. வண்ண மீன் உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல் மற்றும் நன்னீர் மீன்காட்சியகம் நிர்வகித்தல்.

ஓ. மதிப்பூட்டிய மீன் பொருட்கள் விற்பனை.

ஔ. நாட்டுப்படகுகளை இயந்திரமயமாக்கும் திட்டத்தில் வெளிப்பொருத்தும் / உட்பொருத்தும் இயந்திரங்கள் மானிய விலையில் வழங்குதல்.

**9.1. உள்நாட்டு மீன்வளம் – நீர்த்தேக்கங்கள்**

தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகப் பராமரிப்பில் உள்ள கீழ்க்கண்ட நீர்த்தேக்கங்களில் முறையாக மீன் குஞ்சுகள் இருப்பு செய்யப்பட்டு 1/3 (மூன்றில் ஒரு பங்கு) என்ற அடிப்படையில் உள்ளூர் மீனவர்களை பணியமர்த்தி தினசரி மீன் பிடிப்பு நடத்தப்படுகிறது.

1. சாத்தனூர் அணை
2. பவானிசாகர்
3. அமராவதி
4. ஆழியார்
5. திருமூர்த்தி
6. உப்பாறு
7. பாலாறு-பொறந்தலாறு
8. பெரும்பள்ளம்.

மேற்கண்ட நீர்த்தேக்கங்களிலிருந்து 2002-2003 ஆம் ஆண்டு 270 டன் மீன்கள் பிடிக்கப்பட்டு, ரூ.142.39 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது (குத்தகை வருவாய் உட்பட). மேற்கண்ட எட்டு நீர்த்தேக்கங்களில் பவானிசாகர் மற்றும் பாலார்-பொறந்தலாறு நீர்த்தேக்கங்கள் தனியாருக்குக் குத்தகைக்கு விடப்பட்டுள்ளன. அமராவதி, திருமூர்த்தி, பெரும்பள்ளம் மற்றும் உப்பார் ஆகிய நீர்த்தேக்கங்களை குத்தகைக்கு விடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[2003 மே 6

### 9.2 மீன்குஞ்சு உற்பத்தி

இக்கழகம் சாத்தனூர் அணை மற்றும் ஆழியார் அணையில் மீன்குஞ்சு உற்பத்தி மற்றும் வளர்ப்பு நிலையத்துடன் அமராவதி, திருமூர்த்தி, பாலாறு-பொறந்தலாறு மற்றும் உப்பார் ஆகிய இடங்களில் மீன்குஞ்சு வளர்ப்பு பணிகளையும் செயல்படுத்தி வருகிறது. இப்பண்ணைகளில் உற்பத்தி செய்யப்படும் மீன்குஞ்சுகளில் பெரும்பகுதி கழகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள நீர்த்தேக்கங்களில் இருப்பு செய்யப்படுவதோடு மீன்துறை மற்றும் மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமைகளுக்கும் மற்றும் தனியார் மீன் வளர்ப்போர்களுக்கும் மீன்குஞ்சுகள் விற்பனை செய்யப்படுகிறது. 2002-2003 ஆம் ஆண்டு 129 இலட்சம் மீன் குஞ்சுகள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

### 9.3 மீன் பதனீட்டு நிலையங்கள்

இக்கழகத்தின் கட்டுப்பாட்டில் நான்கு பனிக்கட்டி/மீன் பதப்படுத்தும் நிலையங்கள் உள்ளன. அவற்றில் மண்டபம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் உள்ள பனிக்கட்டி நிலையங்கள் தனியாருக்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளன.

### 9.4 டீசல் வழங்கும் நிலையங்கள்

இக்கழகம் சென்னை, மல்லிப்பட்டினம், தூத்துக்குடி மற்றும் பழையாறு போன்ற மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் துறைமுக அணைக்கரைகளில் 20 டீசல் வழங்கு நிலையங்களை மீன்பிடி விசைப்படகு இயக்குபவர்கள் மற்றும் மீனவர்கள் நலன் கருதி இயக்கி வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டு மொத்தம் 19,384 கிலோ லிட்டர் டீசல் மற்றும் மசகு எண்ணெய் விற்பனைச் செய்யப்பட்டு, ரூ.74.32 இலட்சம் தரகுத் தொகையாக ஈட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு மீனவர்களிடையே இருக்கும் வரவேற்பினைப் பொறுத்து திருமுல்லைவாசல், பழவேற்காடு போன்ற மீனவ கிராமங்களிலும் புதிய டீசல் வழங்கு நிலையங்கள் அமைத்திட உத்தேசமுள்ளது.

### 9.5 மீன் விற்பனை

இக்கழகம் சென்னை, மதுரை, கோவை மற்றும் திருவண்ணாமலை போன்ற நகரங்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாக பச்சை மீன்களையும், பொரித்த மீன்களையும் விற்பனை செய்து வருகிறது. 2002-2003 ஆம் ஆண்டு 489 டன் மீன் விற்பனை செய்யப்பட்டு,



2003 மே 6]

ரூ.229.27 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

### 9.6 மீன்வலை பின்னும் நிலையம்

சென்னை-இராயபுரத்தில் செயல்பட்டு வரும் மீன் வலை பின்னும் நிலையம் ஆண்டொன்றுக்கு 75 டன்கள் வலை தயாரிக்கும் திறன் கொண்டதாகும். 2002-2003 ஆம் ஆண்டு 33.50 டன் நைலான் வலைகள் உற்பத்தி செய்யப்பட்டு ரூ.76.57 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

### 9.7. நீலாங்கரை இறால் மீன்குஞ்சு பொரிப்பகம்

சென்னைக்கு அருகிலுள்ள நீலாங்கரையில் இயங்கி வரும் இறால் குஞ்சு பொரிப்பகத்தில் ஒரு பகுதி கட்டமைப்பு வசதிகள், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிலையத்துக்கு கடல்வாழ் உயிரின அதிகரிப்பு திட்டம் நிறைவேற்றிடும்பொருட்டு வழங்கப்பட்டுள்ளன. இறால் குஞ்சு பொரிப்பகத்தின் பிற பகுதிகள் கடல் பொருள் ஏற்றுமதி அபிவிருத்தி ஆணையத்தின் கட்டுப்பாட்டிலுள்ள ராஜீவ் காந்தி நீர்வாழ் உயிரின மையத்துக்கு நீர்வாழ் உயிரினங்கள் உற்பத்தி செய்திடும்பொருட்டு ரூ.3.00 இலட்சத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

### 9.8. முத்து வளர்ப்பு மற்றும் முத்துச்சிப்பி உற்பத்தி செய்தல்

மண்டபத்தில் உள்ள முத்து வளர்ப்புப் பணி மற்றும் முத்துச்சிப்பி பொரிப்பகம் தனியாருக்கு ரூ.3.41 இலட்சத்திற்கு வருட குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

### 9.9. மாதிரி இறால் வளர்ப்புப் பண்ணை மற்றும் செயல்முறை விளக்கத்துடன் கூடிய பயிற்சி மையம், காரங்காடு

காரங்காட்டில் ஒரு மாதிரி இறால் பண்ணை நிறுவப்பட்டுள்ளது. இந்த இறால் பண்ணை தனியாருக்கு ரூ.5.05 இலட்சத்திற்கு குத்தகைக்கு விடப்பட்டுள்ளது.

### 9.10. வண்ண மீன் உற்பத்தி மற்றும் விற்பனை

தமிழ்நாடு அரசு அளித்த நிதியுதவியின்கீழ் மீன்வளர்ச்சிக் கழகம் ஆழியார் மற்றும் திருமூர்த்தி ஆகிய இடங்களில் வண்ண மீன் உற்பத்தி நிலையங்களை அமைத்துள்ளது. மேலும் ஆழியாரில் அலங்கார மீன் விற்பனையுடன் கூடிய அருங்காட்சியகம் ஒன்றினை நிறுவிப்

[2003 மே 6

பராமரித்து வருகிறது. சென்னையில் இரண்டு வண்ண மீன் விற்பனை நிலையங்கள் இயங்கி வருகின்றன. 2002-2003 ஆம் ஆண்டு வண்ண மீன் மற்றும் உபகரணங்கள் விற்பனை செய்த வகையில் ரூ.11.22 இலட்சம் வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**9.11. மதிப்பூட்டிய மீன் பொருட்கள் விற்பனை**

மத்திய அரசிடமிருந்து பெறப்பட்ட நிதி உதவியுடன் குறைந்த மதிப்புள்ள மீன்களை மதிப்பூட்டிய மீன் பொருட்களாக மாற்றி விற்பனை செய்யும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**10. தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம்**

தமிழ்நாடு மாநிலத் தலைமை மீன்வள கூட்டுறவு இணையம், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன்கீழ் 6-11-1991-ல் பதிவு செய்யப்பட்டு, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது. இவ்விணையத்தில் 566 தொடக்க கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களும், 9 மாவட்ட கூட்டுறவு இணையங்களும் உறுப்பினர்களாக உள்ளன. இவர்களிடமிருந்து ரூ.88.96 இலட்சம் பங்குத் தொகையாக பெறப்பட்டுள்ளது. பாரம்பரிய மீனவர்களின் சமூகப் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடும் நோக்குடன் ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம், தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக நிதியுதவியுடன் முதல் கட்டமாக பகுதி ஒன்று திட்டம் ரூ.1699.047 இலட்சத்தில் 5 கடலோர மாவட்டங்களில் 78 மீனவ கிராமங்களில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுவரை இத்திட்டத்தில் ரூ.1361.35 இலட்சம் மதிப்புள்ள 2108 மீன்பிடி இடுபொருட்கள் 4234 மீனவர்களுக்கு 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது. மீன் விற்பனைக்காக இத்திட்டத்தின் மூலம் 19 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 118 இரு சக்கர வாகனங்கள் வாங்கிட 25 விழுக்காடு மானியத்துடன் கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்கள் பயனடைந்திட, தாங்களாகவே மீன் விற்பனை, இயந்திர உதிரி பாகங்கள், டீசல் விற்பனை போன்ற சுய தொழில் செய்திட, இதுவரை ரூ.19.5 இலட்சம் வட்டியில்லா மூலதனக் கடன், 24 தொடக்க மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.



2003 மே 6]

**10.1. ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டம் - இரண்டாம் கட்டம்:**

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் தொடர்ச்சியாக இரண்டாம் கட்டத் திட்டம் 1-4-1998 முதல் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள 100 மீனவ கிராமங்களில் ரூ.4506.25 இலட்சம் மதிப்பில் 3565 மீன்பிடி இடுபொருட்கள் வழங்கிட அரசு ஆணை வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் முதலாம் ஆண்டில் ரூ.800.620 இலட்சம் அரசு அனுமதித்ததின் பேரில் இதுவரை 57 கடல் மீனவர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த 1416 மீனவர்களுக்கு ரூ.562.850 இலட்சம் மதிப்பில் 522 மீன்பிடி இடுபொருட்கள், 25 விழுக்காடு மானியத்துடன்கூடிய கடனாக வழங்கப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த கடல் மீன்வள மேம்பாட்டுத் திட்டத்தின் இரண்டாம் ஆண்டில் திட்டங்கள் ரூ.953.919 இலட்சத்தில் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. இரண்டாம் கட்டத்தில் இரண்டாம் ஆண்டில் மீனவர்களுக்கு மானியத்துடன்கூடிய கடன் வழங்க ரூ. 500.00 இலட்சம் விடுவிக்கப்பட்டுள்ளது.

VZ4,31'002 803+467.2
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
226056